காந்தீய நவநீதம்



மஷ்ருவாலா

காந்தீய நவநீதம்

கிசோரலால் க. மஷ்ரூவாலா

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)
தஞ்சாவூர்

முதற் பதிப்பு—செப். '46—1000
2-ஆம் ,, ஆக. '48—2000
3-ஆம் ,, ஏப. '56—1000

எவளது அன்பும் சிந்தையும் கலந்த பணியின்றேல் இந்நூலை வரைந்து முடித்தல் அரிதாயிருக்குமோ, அந்த என் அன்புமிக்க மனைவி, சௌபாக்கியவதி

கோமதிக்கு

மொழிபெயர்ப்பு :
கோ. கிருஷ்ணமூர்த்தி

விலை ரூ. 1-8-0

Kabeer Printing Works, Madras (3167)

ஒப்பம்

இந்த 'விசார தோஹனே' (நவநீதத்தை)ப் படித்தேன். சகோதரர் கிசோரலாலுக்கு என் கருத்துக்களில் உள்ள பழக்கம் அபூர்வமானது; பழக்கத்தைப் போலவே அவருக்கு அறிவாற்றல்களும் அமைந்துள்ளன. ஆகவே, இதில் மிகச் சில விடங்களையே சிறிது சிறிது மாற்ற நேர்ந்தது. பல விஷயங்களிலும் எங்களிருவரிடையே கருத்தொருமை யுண்மையால் இதை எழுதியவர் சகோதரர் கிசோரலாலாயினும் இதிலுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஒப்பமளிப்பது எனக்கு சிரமமாயில்லை. மிகப் பரந்த விஷயங்களை சகோதரர் கிசோரலால் சுருங்கக் கூறி விளக்கியிருப்பது இந்த 'விசார தோஹனி'ன் சிறப்பாகும்.

போர்சாத்,
25—5—35

மோ. க. காந்தி.

பொருள் அடக்கம்

பக்கம்

I மதம் ... 1–18

(1) பரம்பொருள் (2) சத்தியம் (3) அஹிம்சை (4) பிரம்மசரியம் (5) நாவடக்கம் (6) கள்ளாமை (7) வெளவாமை (8) உடலுழைப்பு (9) சுதேசி (10) அஞ்சாமை (11) அடக்கம் (12) விரதம் (நோன்பு) (13) உபாசனை – பிரார்த்தனை (14) நோன்பு நோற்றல்.

II சமய வழி ... 19–23

(1) சர்வ சமய சமரசம் (2) தர்மமும் அதர்மமும் (3) சத்தியாக்ரஹம் (4) ஹிந்து மதம் (5) கீதையும் ராமாயணமும்.

III சமூகம் ... 24–39

(1) வர்ணச்சிரமம் (2) வர்ணதர்மம் (3) ஆச்சிரமம் (4) பெண் சமூகம் (5) தீண்டாமை (6) உணவு–விதியும் விலக்கும் (7) மணம் (8) மக்கட் பேற்றைக் கட்டுப்படுத்தல் (9) சதிபதிகளின் பிரம்மசரியம் (10) கைம்பெண் மணம் (11) கலப்பு மணம்.

IV சத்தியாக்ரஹம் ... 40–65

(1) சத்தியாக்ரஹியின் கடமை (2) சத்தியாக்ரஹியின் வரம்பு (3) சத்தியாக்ரஹத்தின் மூலதத்துவம் (4) சத்தியாக்ரஹத்தின் பொது இலட்சணங்கள் (5) சத்தியாக்ரஹத்திற்கு உரிய சந்தர்ப்பங்கள் (6) சத்தியாக்ரஹத்தின் முறைகள் (7) போதனை (8) உபவாசம் (உண்ணுவிரதம்) (9) உதவி மறுத்தல் (ஒத்துழையாமை) (10) சாத்வீகச் சட்ட மறுப்பு (11) கோர்ட்டில் சத்தியாக்ரஹியின் நடத்தை (12) சிறையில் சத்தியாக்ரஹியின்

பக்கம்

நடத்தை (13) சத்தியாக்ரஹியின் விதிகள் (14) சத்தியாக்ரஹியின் யோக்யதாம்சங்கள் (15) பொதுஜன சத்தியாக்ரஹம்.

V சுயராஜ்யம் ... 65– 75

(1) ராம ராஜ்யம் (2) ஆட்சிமுறைத் திருத்தமும் ஆட்சித்திட்டத் திருத்தமும் (3) சமய ஒற்றுமை (4) ஆங்கிலேயருடன் தொடர்பு (5) சுதேச சமஸ்தானங்கள் (6) தேசப் பாதுகாப்பு.

VI வாணிபம் ... 76– 93

(1) மேலை நாட்டுப் பொருளாதார சாஸ்திரம் (2) இந்தியப் பொருள் நூல் (3) கிராம நோக்கு (4) பொருளாசை (5) வியாபாரம் (6) வட்டித் தொழில் (7) முழுக்கூலி (8) தொழிலாளர் பிரசினைகள் (9) சுயதேவைப் பூர்த்தியும் தொழில் பாகுபாடும் (10) ராஜீய சுதேசி (11) இயந்திர சாதனங்கள் (12) நாடுகளிடையே வியாபாரம்.

VII தொழில் ... 93–104

(1) உழவு (2) உதவித் தொழில்கள் (3) பூரண சுதேசி (4) விசேஷத் தொழில்கள் (5) தீய தொழில்கள் (6) உபயோகமான வேலைகள் (7) கலைகள்.

VIII பசுப் பாதுகாப்பு ... 104–109

(1) மதநோக்கு (2) இதரப் பிராணிகளை வளர்த்தல் (3) பிராணிகளுக்குக் கொடுமை புரிதல் (4) கோவதை (5) இறந்த கால்நடைகள்.

IX கதர் ... 109–120

(1) ராட்டையின் சிறப்பியல்புகள் (2) ராட்டையைப் பற்றிய முக்கியமான விஷயங்கள் (3) ராட்டையும் மில்லும் (4) ராட்டையும் கைத்தறியும் (5) கதர் உற்பத்தியின் கிரியைகள் (6) சுயதேவைக் கதரும் விற்பனைக் கதரும் (7) வேள்விநோக்குடன் நூற்றல்.

பக்கம்

X சுத்தமும் ஆரோக்கியமும் ... 120–137

(1) உடலின் தூய்மை (2) சுத்தமான பழக்கங்கள் (3) புறத் தூய்மை (4) மலஜல சுத்தி (5) நீர் நிலைகள் (6) நோய் (7) சிகிச்சை (8) உணவு (9) தேகப் பயிற்சி.

XI கல்வி ... 137–157

(1) கல்வியின் நோக்கம் (2) நாட்டுக்கு உதவாக் கல்வி (3) தேசீயக் கல்வி (4) தொழில் மூலம் கல்வி (5) சிறுவர் கல்வி (6) கிராமவாசிகளின் கல்வி (7) பெண் கல்வி (8) மதபோதனை (9) போதனைக் கருவி (10) ஆங்கில பாஷை (11) பாஷை யறிவு (12) பொது பாஷை (13) சரித்திரம் (14) போதனைக் குரிய பிற விஷயங்கள் (15) ஆசிரியன் (16) மாணவன் (17) மாணவர் இல்லம் (18) கல்வியின் செலவு (19) முடிவு.

XII இலக்கியமும் கலையும் ... 158–164

(1) பொது விளக்கம் (2) இலக்கியத்தின் நடை (3) மொழி பெயர்ப்பு (4) எழுத்திலக்கணம் (5) செய்திப் பத்திரிகை (6) கலை.

XIII பொது ஜன ஊழியர் ... 164–171

(1) பொதுஜன ஊழியரின் இலட்சணம் (2) கிராம ஊழியரின் கடமைகள்.

XIV ஸ்தாபனங்கள் ... 171–175

(1) ஸ்தாபனத்தின் வெற்றி (2) ஸ்தாபனத்தின் நிர்வாகி (3) ஸ்தாபனத்தின் அங்கத்தினர் (4) ஸ்தாபனத்தின் பொருள் நிர்வாகம்.

காந்தீய நவநீதம்

I மதம்

1. பரம்பொருள்

1. பரம்பொருளைக் காணுதல் வாழ்க்கையின் தலைசிறந்த இலக்காகும். வாழ்க்கையின் மற்ற வேலைகள் இந்த இலக்கை அடைவதற்காகவே நடைபெறவேண்டும்.

2. இந்த இலக்கிற்கு எதிரான வேலைகள்—பார்வைக்கு அவற்றின் பயன் எவ்வளவு வசீகரமாயும், லாபமாயும் தோன்றினும்—விலக்கத்தக்கவையே என்று கருதவேண்டும்.

3. இந்த இலக்கிற்கு உதவியளிக்கக்கூடிய முயற்சிகள், எவ்வளவு கஷ்டமாயினும், ஆபத்தானவையாயினும், பார்வைக்குத் தீங்கு செய்பவையாகத் தோன்றினும், அவசியம் செய்யத் தக்கவை.

4. இந்தப் பரம்பொருளின் தன்மை, மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாதது. இதைப்பற்றி நாம் கூறக்கூடியதெல்லாம் இது ஆதி அந்தமற்று எப்பொழுதும் ஒன்றுபோலிருப்பது; சிருஷ்டியின் ஆத்மா அல்லது ஆதாரமும், காரணமும் இதுவே; இது அறிவே உருவாய் அமைந்தது; இதே என்றும் அழியாதிருப்பது மற்றவை எல்லாம் அழியுந்தன்மையன என்பதே. ஆகவே, இதை நாம் ஒரு சிறு சொல்லால் குறிப்பிடும் பொருட்டு 'சத்தியம்' என்று அழைக்கலாம்.

5. இவ்வகையில் பரம்பொருளே சத்தியமும், சத்தியமே பரம்பொருளுமாகும்.

6. இவ்விதம் உணர்தல், சத்தியமாகிய பரம்பொருளின் 'அருவ' உணர்ச்சியாகும்.

7. இன்று தர்மமாகவும், நியாயமாகவும், யோக்கியமானதாகவும் தோன்றுவதால் எதைச் செய்கையிலும், ஏற்பதிலும், வெளியிடுவதிலும் எனக்கு நாணமுண்டாகாதோ, எதைச் செய்தல் எனக்கு இன்றியமையாததோ, எதைச் செய்யாமல் நான் மானத்துடன் வாழ்வதே அசாத்தியமோ, அதுவே எனக்குச்

சத்தியம் ஆகும். அதுவே எனக்குப் பரம்பொருளின் ' உருவ ' மாய் அமையும்.

8. இடையருது சத்தியத்தைத் தேடிக்கொண்டிருந்து, அது தோன்றிய வகையிலும், தோன்றிய அளவுக்கும் அதை ஊக்கத்துடன் அனுஷ்டிப்பதே சத்தியாக்ரஹம்; இது பரம் பொருளைக் காண்பதற்குரிய சாதனை முறை.

9. சத்தியம் இறுதியற்றது; சிருஷ்டியோ எல்லையற்றது; ஆகவே இந்தச் சோதனைக்கு முடிவே இல்லை. இவ்வகையில் பரம்பொருளை முழுமையும் காண்பது சாத்தியமில்லை. சாதனை புரிவோன் இத்தகைய சந்தேகம் கொள்வதும், அந்த எல்லை யற்ற பொருளை நினைத்தவிடத்தில் காண முயலுவதும் கூடாது. அவன் தன் வாழ்க்கையில் செய்ய நேரும் பெரிதும், சிறிதும், பெருமை யுள்ளதும், இழிந்ததாய்க் காண்பதுமான வேலைகளி லேயே சத்தியத்தைச் சோதிக்கவும், அனுஷ்டிக்கவும் வேண்டும். அப்பொழுது ' யதா पिण्डे, तथा ब्रह्माण्डे ' (யதாபிண்டே ததா பிரம் மாண்டே - பிண்டத்திற் போலவே, பிரம்மாண்டத்திலும்) என்ற நியாயப்படி அவனுக்குச் சத்தியம் கிட்டும்.

10. தன் அக்கம்பக்கத்தில் தோன்றும் அசத்தியம், அநியா யம், அதர்மம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாதிருப்பவன் சத்தியத்தைக் காணமுடியாது. சத்திய சோதனை செய்வோன் இந்த அசத்தியம், அநியாயம், அதர்மம் ஆகியவற்றைப் போக்கு வதற்குப் பெரு முயற்சி செய்யவேண்டும். இவற்றைச் சத்தியம் முதலிய கருவிகளால் போக்க முடியாதவரை அவனது சத்திய வழிபாட்டைப் பூரணமானதாகக் கருத இயலாது. ஆகையால் அசத்தியம், அநியாயம், அதர்மம் ஆகியவற்றை எதிர்ப்பதும் சத்தியாக்ரஹத்தின் இன்றியமையாத பகுதியே.

11. ஹிம்சை ஆகியவற்றுடன் சேர்ந்த கருவிகளால் இந்தச் சத்தியத்தைத் தேடல் அசாத்தியமென்று எல்லா மதங்களும் கூறுகின்றன; சரித்திரம் சான்று பகர்கின்றது; அனுபவமும் அதுவே. அவ்வாறே புலனடக்கம், விரதம், உபாசனை ஆகிய வற்றினுல் சித்தத்தைச் சுத்தி செய்ய முயலாதபொழுதும் இதை அறிய முடியாது. ஆகையால் இனிக் கூறப்போகும் விரதம் முதலியவை பரம்பொருளைக் காண்டற்கு இன்றியமையாத சாதனங்களெனக் கருதப்பட்டிருக்கின்றன.

2. சத்தியம்

1. சத்தியமே பரம்பொருள் என்பது சத்தியத்தின் உயர்ந்த பொருள். இதன் சாதாரணப் பொருள்களோ, உண்மையில் ஊக்கம், உண்மைக் கருத்து, உண்மை மொழி, உண்மைச் செயல் என்பவையாம்.

2. உண்மை எதுவோ, அதுவே இறுதியில் நன்மையும் சிறந்ததும் ஆகும். ஆகையால் சத்தியம் அல்லது 'சத்' என்றால் சிறந்தது என்ற பொருளும் உண்டு. உண்மை ஊக்கம், உண்மைக் கருத்து, உண்மை மொழி, உண்மைச் செயல், ஆகியவையே நல்லூக்கம், நற்கருத்து, நன்மொழி, நற்செயல் என்பவையுமாகும்.

3. எந்த உண்மையும் நிலையுள்ளவையுமான விதிகளின் மூலமாகச் சிருஷ்டியின் சட-சேதன ஏற்பாடு நடைபெறுகிறதோ, அவற்றை அறிய இடையறாது முயலுதலும், அவற்றையொட்டித் தனது வாழ்க்கையை அமைத்தலும், அசத்தியத்தைச் சத்தியம் முதலிய கருவிகளைக்கொண்டு எதிர்த்தலும் சத்தியாக்ரஹமாகும்.

4. எந்தக் கருத்து, நமது விருப்பு வெறுப்பற்ற, பக்ஷபாதமில்லாத, சிரத்தை-பக்தியுடன் கூடிய புத்திக்கு எப்பொழுதும், அல்லது நாம் பார்க்கக்கூடிய எல்லைக்குள் அதிக நேரத்திற்கு, உசிதமாகவும் நியாயமாகவும் தோன்றுகிறதோ அது நமக்கு உண்மைக் கருத்தாகும்.

5. எந்தப் பேச்சு, கடமை தூண்டவும், தனக்குத் தெரிந்த உண்மையை உள்ளபடியும் வேறு கருத்துத் தோன்றும்வகையில் கூட்டவோ குறைக்கவோ முயலாமலும், வெளியிடுகிறதோ, அது உண்மை மொழியாகும்.

6. உண்மைக் கருத்தை விவேகத்துடன் செய்தல் உண்மைச் செயலாகும்.

7. உயர்ந்த சத்தியமான பரம்பொருளை அறிவதற்குச் சாதாரண சத்தியமான உண்மை ஊக்கம், உண்மைக் கருத்து, உண்மை மொழி, உண்மைச் செயல் ஆகியவை கருவிகளென்றோ, இவற்றைப் பூரணமாகக் கடைப்பிடித்தலே பரம்பொருளைத் தரிசிப்பதாகுமென்றோ கூறினாலும் ஒன்றையே குறிக்கும். சாதனை செய்வோனுக்கு இவை இரண்டினிடை வேறுபாடில்லை.

3. அஹிம்சை

1. சாதாரணமாக, ‘சத்தியம்’ என்ருல் ‘உண்மை மொழிதல்’ என்றே ஸ்தூலமாகப் பொருள் கொள்கிருர்கள். ஆனுல், உண்மைப் பேச்சிலேயே சத்தியத்தை அனுஷ்டிப்பது முழுமையும் அடங்கிவிடவில்லே. இதுபோலவே ‘அஹிம்சை’ என்பதற்கும் உயிர்களேக் கொல்லாமை என்ற சாதாரணப் பொருளேயே கொள்கிருர்கள்; ஆனுல் உயிர்களேப் போக்காமை யினுல் மட்டும் அஹிம்சை பூர்ணமாக நிறைவேருது.

2. அஹிம்சை செயலேப் பொறுத்த விதி மட்டுமல்ல, மனசைப் பற்றியதுமாகும். எந்த மனப்போக்கில் வெறுப்பின் வாடையுமில்லேயோ, அதுவே அஹிம்சை.

3. இத்தகைய அஹிம்சை சத்தியத்தைப் போன்றே பரந்து விரிந்ததொன்று. இந்த அஹிம்சை சித்தி பெருவிடில் சத்தியமும் சித்திபெற வியலாது. ஆகையால் சத்தியத்தை மற்ருெரு வகையில் நோக்கும்பொழுது, அது அஹிம்சையின் எல்லேயாகிறது. பூர்ணமான சத்தியத்துக்கும், பூர்ணமான அஹிம்சைக்கும் வேற்றுமை யில்லே. ஆயினும், சுலபமாகப் புரிந்து கொள்வதற்காக சத்தியத்தை இலட்சிய மென்றும், அஹிம்சையை அதை எய்துவதற்காகும் கருவி யென்றும் கருதுகிருேம்.

4. இந்த சத்தியம், அஹிம்சை ஆகிய இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களேப்போல் ஒன்றும், என்றுமுள்ளது மான பொருளின் இரு முகங்களே யொக்கும்.

5. பல சமயங்களில் ‘கடவுள் அன்புருவினன்’ என்று கூறக் கேட்கிருேம். அந்த அன்பும் இந்த அஹிம்சையும் வெவ்வேறல்ல.

6. அன்பின் தூய, பரந்த தன்மையே அஹிம்சை. ஆனுல், எந்த அன்பில் விருப்போ, மயக்கமோ சிறிதாவது கலக்கிறதோ அது அஹிம்சையாகாது. விருப்பும், மயக்கமும் உள்ள இடத்தில் வெறுப்பின் விதையும் இருக்கும். அன்பில் பல சமயங்களில் விருப்பு - வெறுப்புக்கள் காணப்படுகின்றன. ஆகையால் உண்மையை உணர்ந்தோர் அன்பு என்ற சொல்லே விடுத்து ‘அஹிம்சை’ என்ற சொல்லே ஏற்று, அதையே தலே சிறந்த தர்மம் என்றும் கூறினர்.

7. பிறருடைய உடல் அல்லது உள்ளத்தைப் புண்படுத்தாமையே அஹிம்சை தர்மம் அல்ல. சாதாரணமாக, இதை அஹிம்சை தர்மத்தின் புற இலக்கணம் என்று கூறலாம். பிறருடைய உடல் அல்லது உள்ளத்திற்கு, வெளிப்படையாகப் புண்ணுண்டானதாகத் தோன்றிய விடத்தும், தூய அஹிம்சை தர்மம் நிறைவேறி யிருக்கக்கூடும். இதற்கு மாருக, இவ்வகைப் புண்ணுண்டானதாகக் குற்றம் சாட்டக்கூடிய வகையில் ஏதும் செய்யாதபொழுதும், ஹிம்சை செய்திருத்தல் கூடும். அஹிம்சையென்பது கண்ணுக்குப் புலனுகும் பயனில் மட்டுமில்லை; விருப்பு வெறுப்பற்ற உள்ள நிலையிலேயே இருக்கிறது.

8. ஆனுல், தெரியும் அறிகுறிகளை அலட்சியம் செய்யலாகாது. ஏனெனில் இவை ஸ்தூலமான கருவிகளாயிருப்பினும், தன் மனத்திலும், பிறர் மனத்திலும் அஹிம்சை எந்த அளவிற்கு மலர்ந்திருக்கிறது என்பது இவைகளினுல் சாதாரணமாக வெளியாகிறது. மற்றொருவனுக்கு ஆத்திரம் உண்டாக்காத சொல்லையும் செயலையும் கொண்டே, ஒருவனுடைய சாதாரண வாழ்க்கையில் அஹிம்சை எந்த அளவிற்குத் தளிர்த்திருக்கிறது என்று நேரிடையாக அறிய முடியும். அஹிம்சைமயமான, துக்கத்தைத் தரும் சந்தர்ப்பங்கள் வரலாம்; ஆனுல், அப்பொழுதும் அவற்றில் ஒளிரும் அஹிம்சை தெளிவாகத் தெரியும். சிறிதேனும் சுயநலத்தின் வாடை கலந்திருக்குமானுலும், பூர்ண அஹிம்சை சாத்தியமில்லை.

9. இத்துடன் அஹிம்சையின் அனுஷ்டானம் முடிந்ததாகக் கருதலாகாது. அஹிம்சையின் பக்தன் உயிர்களுக்கு ஆத்திர மூட்டக்கூடிய சொற்களைக் கூருமலும், செயல்களைப் புரியாமலும், மனத்திலும் அவற்றிடம் வெறுப்புக் கொள்ளாமலும் இருப்பதுடன் திருப்தியுறமாட்டான். அவன் உலகில் பரவியுள்ள துக்கங்களைப் பார்த்து அவைகளின் காரணங்களைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருப்பான்; பிறர் நலத்தின் பொருட்டு தான் சந்தோஷமாக இன்னலை ஏற்பான். அதாவது, அஹிம்சை யென்பது துறவை யொத்து வேலையின்றி வாளாயிருத்தலல்ல; ஊக்கத்துடன் பணி புரியச் செய்வதொன்ருகும்.

10. அஹிம்சைக்கு, காரியத்தை ஊக்கத்துடன் நிறைவேற்றும் ஆற்றல் உண்டு. இதில் பொதிந்துள்ள அளவற்ற சக்தி முழுதும் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ‘அஹிம்சையின் அருகில் விரோதமெல்லாம் அடங்கிவிடுகின்றன’ என்ற சூத்திரம் சாஸ்திரங்களின் வெற்றுப் புலம்பலல்ல; அது

ரிஷியின் அனுபவ வாக்காகும். தெரிந்தோ, தெரியாமலோ இயற்கையின் தூண்டுதலினால் எல்லா உயிர்களும் ஒன்று மற்றொன்றின் பொருட்டு கஷ்டப்படுதல் என்ற கடமையை உணர்ந்திருக்கின்றன; அதை அனுஷ்டித்து உலகை நடத்தி வருகின்றன. ஆயினும் இந்தச் சக்தி முற்றிலும் வளர்க்கப் படவில்லை. எல்லா வேலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் இதை உபயோகிக்கும் வகைகள் சாஸ்திர முறையில் ஆராயவோ, நிர்ணயிக்கவோ படவுமில்லை. ஹிம்சை முறையை ஆராய்வதிலும் வகுப்பதிலும், மனிதன் செய்திருக்கும் நீண்ட கால முயற்சியின் பயனாக, அதைப் பற்றிய சாஸ்திரம் பெரும்பாலும் திருப்திகரமாக அமைந்து விட்டதைப்போல், அஹிம்சையின் சக்தியையும் ஆராய்ந்து, பிரயோக முறையைத் திட்டம் செய்தால் மனித சாதியின் துக்கங்களைப் போக்க, அது ஒரு விலை மதிக்கவொண்ணாததும், சிறிதும் வீணாகாததும், பயனை நோக்கு மிடத்து இரு சாராருக்கும் நன்மை பயப்பதுமான கருவியாவது திண்ணம்.

11. ஊக்கத்தினாலும், முயற்சியினாலும் இயற்கையின் சக்திகளை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து அதன் விதிகளை பல வகையில் அனுபவத்தில் பயன்படுத்துவது போலவே, அஹிம்சையின் சக்தியை ஆராயவும் அதன் விதிகளை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சி செய்யவும் வேண்டும்.

4. பிரம்மசரியம்

1. அஹிம்சை யின்றிச் சத்தியத்தை எய்துதல் அசாத்தியமானதுபோல, பிரம்மசரியம் இன்றேல் சத்தியம், அஹிம்சை இரண்டுமே கைகூடுவது சாத்தியமில்லை.

2. பிரம்மசரியம் என்றால் பிரம்மத்தின் (பரம்பொருளின்) வழியில் நடத்தல் ஆகும்; அதாவது மனத்தையும் இந்திரியங்களையும் பரம்பொருளின் வழியில் நிறுத்துதல்.

3. விருப்பு முதலான விகாரங்களின்றேல் அப்பிரம்மசரியம் அல்லது புலன் வழி நடத்தல் இல்லை. விகாரங்களுள்ள மனிதனால் சத்தியத்தையும் அஹிம்சையையும் காக்கவியலாது. அதாவது பூரண ஆன்மீக வாழ்வு எய்த வியலாது.

4. ஆகையால் பிரம்மசரியம் என்றால் வீரியத்தை அடக்குதல் அல்லது காம வெற்றி மட்டுமல்ல; எல்லாப் புலன்களையும் அடக்குதல் இன்றியமையாதது.

5. ஆனால், பொதுவாகச் சத்தியத்துக்குப் பொய் பேசாமையும் அஹிம்சைக்குக் கொல்லாமையும் பொருள் என்று கொள்ளப்படுவது போல, 'பிரம்மசரியம்' என்பதற்குக் காமத்தை அடக்கல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இதன் காரணம், மனிதனுக்குக் காமத்தை அடக்குவது பிற புலன்களை அடக்குவதைவிடக் கடினமாய் இருப்பதே.

6. உண்மையில், வாழ்க்கையை இன்பமாக நடத்துவதற்கு மற்றப் புலன்களின் நுகர்ச்சி ஓரளவுக்கு வேண்டியேயிருக்கிறது. ஆனால் பிரம்மசரியத்தினாலோ வெனில், வாழ்க்கைக்குக் குந்தகம் ஒன்றுமில்லாதது மட்டுமல்ல, அதனால் வாழ்க்கை சீரும் சிறப்பும் எய்துகிறது.

7. ஆயுள் முழுமையும் **நைஷ்டிக** பிரம்மசாரியாயிருப்பவருக்கு வாழ்க்கையின் நிறைவையும், பேரானந்தத்தையும் எய்துவதற்கு உள்ள நம்பிக்கையும் வசதியும், மற்றோருக்கு இரா. இத்தகைய ஆண்-பெண் பாலாரின் வாழ்க்கை, மற்ற மணம் ஆனவருக்கும் ஆகாதவருக்கும், குன்றின் மேலிட்ட விளக்கை யொக்கும்.

8. ஆனால், மற்றப் பிராணிகளைக் காட்டிலும் ஆகார-இன்ப நுகர்ச்சியில் மனிதனுக்கு அதிகச் சுதந்திரம் இருக்கிறது; இதனால் அவன் எல்லா இந்திரிய நுகர்ச்சியிலும் அதிகமாகவே ஈடுபடுகிறான். இதன் பயனாக வருஷத்தில் குறிப்பிட்ட சில தினங்களில் மட்டும் காம வேட்கை யுண்டாவதற்கு பதிலாக, இடைவிடாமல் அதை வளர்த்துக்கொண்டே இருக்கிறான். இதனால் காமவேட்கை என்றும் அகலாத நோயாகி விட்டதால் அதை அடக்கி வெற்றி காணுதல் மிகமிக அரிதாகி விட்டது.

9. ஆனால், பிற இந்திரியங்களைப் போஷிக்காவிடில் காமத்திற்கு அதிக உணவு கிட்டுவதில்லை என்றும், பிற இந்திரியங்களை அடக்காவிடில் காமத்தை அடக்கவியலாதென்றும் அறிவாளிக்குத் தெரியும்.

10. இவ்விதமாக முயலும் ஆண் - பெண்பாலாருக்கு, பிரம்மசரியத்தை அனுஷ்டித்தல் பொதுவாக மக்கள் கருதும் அளவுக்குக் கஷ்டமல்ல.

5. நாவடக்கம்

இத்தகைய ஒரு விரதம் பிற விரதங்களைக் கூவி அழைக்கிறது.

1. எந்தப் புலனையும் அது போனவழிச் செல்லவிட்டால், மற்றப் புலன்களின் கட்டுப்பாடும் குலையும். அவற்றில் பிரம்மசரியத்துக்கு மிகவும் முக்கியமானதும், கட்டுப்படுத்துவதில் மிகவும் சிரமம் தருவதும் நாவாகும். இதைக் கவனத்தில் இருத்திவைப்பதற்காக, விரதங்களுள் நாவடக்கத்துக்கு முக்கியமான இடம் வழங்கப்பட்டிருக்கிறது.

2. உடலிலிருந்து செலவாகும் சத்துக்களை அதில் மீண்டும் சேர்த்து அதை இயங்கிச் செயலாற்றும் நிலையில் வைத்திருப்பதற்கு உணவு தேவை. ஆகையால், இந்த நோக்குடன் எந்த அளவில், எவ்வகை உணவு தேவையோ அதையே உட்கொள்ள வேண்டும். நாவைத் திருப்தி செய்யும் நோக்குடன் எதையும் உண்பதும், உணவில் எதையும் சேர்ப்பதும், நாவடக்கம் என்ற விரதத்தை மீறுவதாகும்.

3. நாவடக்கத்தை மதித்து நடத்தப்பெறும் பொது போஜன சாலையிற் சென்று, அங்குள்ள உணவுகளில் நமக்கு உகந்தவைகளை மட்டும், ஆண்டவன் அருட்பயன் எனக் கருதி, மனத்திலும் குறைக்கு இடந்தராது, திருப்தியுடன், உடலுக்குத் தேவையான அளவு உட்கொள்ளுதல், நாவடக்க விரதத்திற்கு மிகவும் உதவும்.

6. கள்ளாமை

1. கள்ளாமை என்றால் பிறருக்குச் சொந்தமான பொருளை எடாதிருத்தல் மட்டுமல்ல; தன்னுடையதாகக் கருதப்படினும், ஒரு பொருள் தனக்கு இன்றியமையாததாயில்லாதிருக்கையில் அதை உபயோகித்தலும் திருட்டே. பிறர் பொருளைக் கண்டு ஆசைகொள்ளுதல் உள்ளத்திருட்டாகும். பிறருடைய கருத்துக்களையும், பிறர் கண்டுபிடித்தவைகளையும் தெரிந்தே தன்னுடையதென்று வெளியிடுதல் கருத்துக்களவாம்.

2. நாம், உலகிலுள்ள பொருள்களெல்லாம் கடவுளின் அதிகாரத்திலிருப்பதாயும், உயிர்களெல்லாம் அவனுடைய ஆட்சிக்குட்பட்ட ஒரு பெருத்த குடும்பம் என்றும் எண்ணுவோ

மானுல், உலகில் உள்ளவற்றில் மிகத் தேவையானவைகளை மட்டும் உபயோகிக்கும் உரிமையே நமக்குக் கிட்டும் ; இதைவிட அதிக உரிமை கொண்டாடுவது திருட்டேயாகும்.

7. வெளவாமை

1. கள்ளாமைக்கும் வெளவாமைக்கும் இடையே யுள்ள வேற்றுமை சிறிதே. இன்று தேவையில்லாத பொருளை நாளைக்கு வேண்டியிருக்குமோ வென்ற எண்ணத்தினுல் வைத்திருத்தல் வெளவுதல் எனப்படும். கடவுளை நம்புகிறவன், நமக்கு மிகவும் அவசியமா யிருக்கும்பொழுது எந்தப் பொருளும் தவருமல் கிட்டும் என்று நம்புவான். ஆகையால் அவன் எதையும் சேமித்து வைக்க வீண்பாடு படுவதில்லை.

2. சக்தியிருந்தும் உழைக்காதவனுடைய தேவைகளைக் கடவுள் பூர்த்தி செய்கிருர் என்பதல்ல இதன் பொருள். எவனுக்கு உழைக்க விருப்பமில்லையோ, எவன் உழைப்பை ஆபத்தானதென்று கருதுகிருனே, அவன் கடவுள் எல்லாம் தருவார் என்பதையே நம்புவதில்லை. அவன் தன் வெளவும் ஆற்றலையே நம்புகிருன். எவன் சக்தி யிருப்பதால் நன்கு உழைக்கிருனே, உழைப்பையே கௌரவமெனக் கருதி வாழ்கிருனே அவனுடைய ஜீவனத்தையே கடவுள் கவனித்துக்கொள்கிருர்.

3. மேலும், சமூகத்தில் வாழ்ந்துகொண்டே இந்த விரதத்தை நடத்த விருப்பங் கொண்டவன் தன்னிடம் வந்த பொருள்களைத் தெருவில் வீசி எறிந்துவிட வேண்டுமென்பதோ, கெடச் செய்யவேண்டு மென்பதோ இதன் பொருளல்ல. அவன் அந்தப் பொருள்களின் பாதுகாப்பாளனுகத் தன்னைக் கருதி அவைகளை நன்கு காக்கவேண்டும். ஆகையால் அவைகளினுல் பயன் உண்டென்று கருதுகிறவர்கள் அவைகளை உபயோகிப்பதைத் தடுக்கக்கூடாது. தனக்கோ தன் பிள்ளைகளுக்கோ உபயோகமாயிருக்கும் என்ற கருத்தினுல் ஒரு கந்தல் துணியையும் சேர்த்து வைத்திருந்து, பிறருக்குத் தேவையாயிருந்தும் அதை உபயோகிக்க விடாதவன் வெளவுவோனே. இந்தத் தன்மையில்லாதவன் இலட்சம் ரூபாய் முதல் உள்ளவனுய் இருந்தாலும் வெளவாதவனே.

8. உடலுழைப்பு

1. வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களை உண்டாக்கும் பொருட்டு தானே உழைத்தல் என்பது கள்ளாமை, வெளவாமை என்பவைகளிலிருந்து நேரிடையாகப் பிறக்கும் விதியாகும். உழைப்பில்லாது விளையாத எந்தப் பொருள்கள் இல்லையேல் வாழ்வு நடவாதோ, அவைகளை உழைக்காமலே பெற்று அனுபவித்தால், நாம் உலகின் பொருள்களைத் திருடியவராவோம்.

2. ஆன்மீக உணர்ச்சியுடன் இவ்வாறு உழைப்பதே வேள்வி (யஜ்ஞம்) எனப்படும். தனது உழைப்பினுல் உண்டான பொருளைத் தானே நுகரும் விருப்பம் கொண்டிருத்தல் பற்றுடன் புரியும் பணியாகும். அத்தகைய விருப்பமில்லாமல் உலகுக்கு நாம் உண்டாக்கும் பொருள் தேவை யென்ற எண்ணத்திஞல் செய்யும் வேலை, பற்றற்ற பணி அல்லது வேள்வியாகும்.

3. மலம், குப்பை-கூளம் முதலிய தீமை செய்யும்பொருள்களைத் தகுந்த முறையில் அடக்கம் செய்தலும், ஒருவகை வேள்வி யென்றே கூறப்படும். இத்தகைய உழைப்பு ஒவ்வொருவரும் செய்யவேண்டியதாகும்.

4. இம்முறையில் கவனிக்கும்பொழுது படித்தவர்களென்று அழைக்கப்படும் நாம், நமது உழைப்பினுல் உண்டாக்கக் கூடியதைவிட மிகவும் அதிகமான பொருள்களை உபயோகித்து வீணுகச் சேமித்து வைக்கிறேம். இதைத் தவிர, தீமை விளைவிக்கும் பொருள்களை அடக்கம் செய்வதற்காக நாம் உடலுழைப்பே புரிவதில்லை. இதனுல் பல உயிர்கள் வறுமையிலும், அவசியமில்லாத துன்பத்திலும் உழல நேருகிறது. மொத்தத்தில், நாம் கள்ளாமை, வெளவாமை என்ற நோன்புகளை அடிக்கடி மீறுகிறேம்.

5. ஆகவே, நாம் கள்ளாமை முதலிய நோன்புகளை நோற்பதில் வெற்றிபெற வேண்டுமானுல், நமது தேவைகளையும் வெளவுதலையும் ஆனவரையில் குறைத்துக்கொண்டு தேவையான பொருள்களை உண்டாக்கவும், தீமை செய்யும் பொருள்களை அடக்கம் செய்யவும், பற்றற்ற மனத்துடனும் வேள்வி மனப்பாங்குடனும் முறையாக நடைபெறும் உழைப்பில் கலந்து கொள்ளவும் வேண்டும்.

6. இதற்காக இந்தியாவில் தற்பொழுதைய நிலையில்

நூற்பும், மல, மூத்திரத்தைச் சுத்தி செய்து அடக்கம் செய்த லும், ஆச்ரமத்தில் வேள்வி யென்று கருதப்பட்டிருக்கின்றன. இது பற்றிப் பின்னர் விரிவாக ஆராயப்படும்.

9. சுதேசி

1. உடலுழைப்புத்தத்துவத்தின் அடியாக சுதேசி என்ற தத்துவம் எழுகிறது.

2. கள்ளாமை, வெளவாமை என்ற லட்சியங்களைக் கடைப் பிடிப்பவன், வேறு புகலற்ற நிலையிலேயே பிறருடைய உழைப் பின் பயனை நுகருவான். உணவு சமைத்தல், துணி துவைத் தல், மலஜலம் கழுவுதல், பாத்திரம் தேய்த்தல், க்ஷவரம் செய்து கொள்ளல், வீடு பெருக்கல் முதலிய சொந்த தினசரி வேலைகளைத் தாமே செய்யாமல் பிறரைக் கொண்டு செய்விப்பதே கௌரவ மானது என்ற எண்ணத்தினால் அன்றி, தமது சக்தியின்மையி னாலோ, அன்பினாலோ, தோழர்களிடையே ஒப்பிச் செய்யப் பெற்ற வேலைப் பாகுபாட்டினாலோ செய்விக்க நேர்ந்தால், அந்தச் சேவையை ஏற்கலாம். இதிலும் ஒரு வேலை பெரிது, மற்றது சிறிதென்றோ, ஒன்றைச் செய்பவன், அதனாலேயே மதிப்பிற்குரியவன், மற்றொருவன் இழிந்தவன் என்றோ சிறிதும் எண்ணக் கூடாது.

3. மேலே கூறப்பட்ட தத்துவம் ஆதர்சமாகும். தோழமை யின் இக்கருத்தைப் பெருக்குவதாலும், உலகில் நம் கண்முன் நடைபெறுபவைகளை ஆராய்வதாலும், நமக்குத் தேவையான பல பொருள்கள் கிடைப்பதற்கு நமது குடும்பமும், நண்பர் களும் தம்மிடையே பாகுபாட்டு முறையில் உண்டாக்குவது மட்டும் போதாதென்றும், அக்கம்பக்கத்தவர், கிராமத்தவர் ஆகியவருடனும் உழைப்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டி யிருக் கிறதென்றும் தெரிகிறது. இதிலிருந்து சுதேசி தர்மம் எழு கிறது.

4. சுதேசி விரதம் தேசாபிமானத்திலிருந்து மட்டும் எழுந்ததல்ல, தர்மமும் அதன் விளை நிலமாகும். உலக மனைத் தையும் உற்றாராகக் கருத முயன்றுகொண்டே, எந்த மக்க ளிடையே நாம் வாழ்கிறோமோ, எவர்களுடன் நாம் பிணிப்புண் டிருக்கிறோமோ, அவர்களை முதலில் கவனிப்பது உசிதமாகும்.

இந்த முதற் கடமையை அசட்டை செய்தால் உலக நட்பு கைகூடாது ; வீண் ஏமாற்றமாகவே முடியும்.

5. ராஜீய ஆவேசத்தில் பிறந்த சுதேசி, பிற தேசங்களின் நன்மையைப் புறக்கணிக்கலாம், அவற்றிற்குத் தீங்கு விளைவிக்கவும் தருணம் பார்ப்பதாயிருக்கலாம். தர்மத்தில் எழுந்த சுதேசியோ, சொந்த நாட்டின் நன்மைக்கு அடிகோலினாலும், மற்ற நாடுகளின் தீமையைக் கருதாது, அவைகளுக்குத் தீங்கு செய்யவும் முயலாது.

10. அஞ்சாமை

1. தன் மனத்தின் அழுக்கைத் தவிர்த்துப் பிற இடையூறுகளை அஞ்சுவோன் அஹிம்சையை அனுஷ்டிக்க வியலாது. ஆகையால் அஞ்சாமை யென்பது தெய்வீகப் பேறுகளுள் முதலிடம் பெறுவதற்குரிய சிறப்பு வாய்ந்ததாகும்.

2. பொதுவில் ஒருவன் அஞ்சும் பொருள்களுக்குக் கணக்கில்லை. சாவு, நோய், பொருட் சேதம், அடிதடி, அநியாயம், மானநஷ்டம், உலகத்தாரின் தூற்றல், ஆதாரமற்ற புரளி, குடும்ப வருத்தம், இல்லறமே துக்கமானது என்ற எண்ணம் என்று எத்தனையோ ! அஞ்சுவோனுக்கு தர்மம் எது, அதர்மம் எது என்று ஆழ்ந்து சிந்திக்கவே மனோதிடமிருப்பதில்லை. அவன் சத்தியத்தைத் தேடுவதில்லை ; தேடிக் கண்டாலும் அதைப் பற்றியொழுக அவனால் இயலுவதில்லை; இதனால் அவனால் சத்திய வழியில் நிற்கவும் முடிவதில்லை.

3. ஒருவன் ஒன்றினிடமே அஞ்சவேண்டும் ; அது அவனது கறைபடர்ந்த உள்ளமே. கடவுளுக்கு அஞ்சுவதும், அதர்மத்துக்கு அஞ்சுவதும், மனவழுக்கென்ற பகைக்கு அஞ்சுவதும்—மூன்றும் ஒன்றே. மனவழுக்கொழிந்தால், அதர்மமும் அழியும். அதர்மம் அழிந்தவிடத்து ‘கடவுளச்சம்’ என்ற சொற்றொடரே பொருத்தமற்றதாகிவிடுகிறது.

11. அடக்கம்

1. அடக்கத்தை அஹிம்சையின் ஒரு பகுதி என்று கூறலாம். ஆணவம் உள்ள இடத்தில் அடக்கம் இராது. ஆணவம் உள்ளவன் அனைத்தும் ஒன்றேயென்று கருதமாட்டான் ; ஆகையால் அவனது அஹிம்சை குறைபாடுள்ளதே.

2. தன்னை 'பூஜ்யம்' என்று கருதுதல் அடக்கத்தின் எல்லையாகும். நான் சாதாரணமல்ல, என்னிடம் சிறப்பிருக்கிறது—சிறந்த உடல், மனம், புத்தி, கல்வி, கலை, ஆற்றல், தூய்மை, ஞானம், பக்தி, தாளாண்மை, தவம், அடக்கம் முதலியவை உள்ளனவென்று கருதலும், இதனால் குணங்களின் சுமையைச் சுமந்து கொண்டிருப்பது போன்ற எண்ணமும் ஆணவமாகும். நோயற்ற உருப்புகளைப் பற்றி நாம் நினையாதிருப்பதுபோல், நமது குணங்களைப் பற்றியும் எண்ணுமையே சூன்ய நிலை அல்லது அடக்கமாகும்.

3. இந்த அடக்கம் பழக்கத்தினால் கிட்டுவதன்று. பல நற்குணங்களின் சேர்க்கையால், சிந்தித்து நடத்தும் வாழ்க்கையிலிருந்து தானாகவே உண்டாவது. அடக்கமுள்ள ஒருவனுக்கு தன்னிடம் அடக்கமிருப்பதே தெரியாது.

4. பலவிடங்களில் அடக்கப்போர்வையின்கீழ், நுண்ணிதேயாயினும் கொடிய ஆணவம் குடிகொண்டிருப்பதுண்டு; இது அடக்கமாகாது.

5. தன் வரம்பை யுணர்ந்து அதனுள் அடங்கி யிருத்தலும், அடக்கத்தின் முக்கியமான அறிகுறியே.

6. அடக்கமுள்ளவன் உலகிலுள்ளவை அனைத்தையும் செய்துவிட வேண்டுமென்று ஆசை கொள்ளமாட்டான்; தனது ஆற்றலின் வரம்பையுணர்ந்து அதையொத்து ஏற்ற வேலையை நிறைவேற்றுமல் மேலே அடியெடுத்துவையான்.

7. சத்தியம், அஹிம்சை, பிரம்மசரியம் ஆகிய விரதங்களை ஏற்றவன், இவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆற்றலுக்கும், தனது சக்திக்கும் உள்ள வேற்றுமையை உணர்வானுயின் தானே அடங்குவான்.

8. சத்தியம், அஹிம்சை ஆகியவைகளில் நிறைந்துள்ள சக்தியில் தனக்குள்ள நம்பிக்கையைக் குறையவிடாமலும், இவைகளை முழுதும் எய்துவதற்குத் தன்னிடம் ஆற்றல் இல்லாமையைக் குறித்து மனம் தளராமலும் இருந்துகொண்டு, தன் வரம்பை யுணர்ந்து, அடக்கமாக இவைகளை வாழ்க்கையில் நடத்திக்காட்டும் பொருட்டு இடையருது முயற்சி செய்ய வேண்டும்.

9. தன் குறைகளையுணர்ந்து அடங்கியவன், இலட்சியத்தை எய்துவதில் அலட்சிய புத்தி காட்டுவதில்லை. குறைகளை

அவன் திறந்த உள்ளத்துடன் ஏற்கிறுன் ; அவற்றைக் குணங்க ளென்று நிலை நிறுத்த வீண் ஆசை கொள்வதில்லை.

12. விரதம் (நோன்பு)

1. தனக்கு எது சத்தியத்தை யொட்டியதாகத் தோன்று கிறதோ, அதை என்றும் கைவிடாதிருக்கவும், அதற்கு எதி ரான எதையும் செய்யாதிருக்கவும் கொள்ளும் உறுதியே விரத மென்பது.

2. இவ்வுறுதியில் எவ்வளவு தளர்ச்சி வருகிறதோ, அவ் வளவுக்குச் சத்தியத்தைக் காண்பதும் அரிதாகிறது.

3. எப்பொழுதும் சத்தியரூபியான பரம்பொருளிலேயே ஆழ்ந்திருப்பதற்கு—மனம், வாக்கு, காயத்திஞல் சத்தியத்தை அனுசரிப்பதற்கு—இந்த விரதங்கள் இன்றியமையாதவை யாகும்.

4. அசாக்கிரதை, தீயார் சேர்க்கை, பழைய கெட்ட பழக் கங்கள் ஆகியவைகளிஞல் மனம், தான் செய்துகொண்ட உறுதி யைக் கடைப்பிடித்து ஒழுகுவதில்லை; இதனுல் விரதம் என்ற கயிறுகொண்டு பிணித்தல் அதை நிலைக்கச் செய்வதற்கு நல்ல முறையாகும்.

5. உண்மையான ஆக்ரஹம், கருத்து, சொல், செயல் ஆகியவைக்காகவே விரதம் ஏற்கலாம் என்பது தெளிவு. பொய்ப் பிடிவாதம், பொய்க் கருத்து, பொய்ச் சொல், பொய்ச் செயல் ஆகியவைகளுக்காக விரதம் ஏற்க வியலாது; ஏற்றிருந்தாலும் விட்டுவிடவேண்டும். விரதத்தில் ஏற்றமுண்டு, உழைப்புண்டு; அவை பொய்யிலும் போகத்திலும் இல்லை. ஆகையால் போகத் திற்கென விரதம் ஒன்றிருக்க முடியாது.

6. பொய்க்கலப்பில்லாத வரையில் ஏற்ற விரதத்தைக் கைவிடலாகாது; இதை அனுஷ்டிக்கும்பொழுது வரும் துன் பங்களை ஏற்க வேண்டியதே.

13. உபாசனை—பிரார்த்தனை*

1. உபாசனை யென்றால் பரம்பொருளின் அருகில் அமருதல், பெரியோரின் அருகமர்தல் அல்லது அதுவேயாதல் என்பதாம். பரம்பொருள் என்பது சத்தியமே. ஆகவே சத்தியரூப மெய்துவதற்கே உபாசனை யென்று பெயர். சத்தியரூப மெய்துவதற்கு அதீத விருப்பமும், அற்காகக் கடவுளை வேண்டுவதுமே பிரார்த்தனையாகும்.

2. சத்தியரூப மெய்துதல் என்பது அழுக்கற்ற உள்ளப் பேறே. அழுக்கற்ற உள்ளம் வேண்டுமாயின், தீய எண்ணங்களை எழவே விடலாகாது. மனமோ சும்மாவிராது; அது தீய கருத்துக்களைக் கொள்ளும், இல்லையானால் சத்தியத்தை நாடிச் செல்லும். ராமர், கிருஷ்ணர் முதலியவர்கள் சத்தியத்தின் அவதாரங்களாகும். ஆகையால் இவர்களின் பெயரைச் செபிப்பது சத்திய செபமாகும். உள்ள ஒருமையோடு நாமத்தைச் செபிப்பவன் தானும் அதாகவே ஆவதில் ஐயமில்லை.

3. உபாசனை புத்தியாலாவதன்று, நம்பிக்கையுடன் ஆற்ற வேண்டுவதொன்று. உபாசனை செய்யச் செய்ய தூய்மை கிட்டுவது உறுதி. இந்த நம்பிக்கையுடன் தினமும் உபாசனை புரிய வேண்டும். உடலை உணவு முதலியவை வளர்ப்பதைப் போல ஆன்மாவை வளர்ப்பது உபாசனையே.

4. சத்திய ரூபியான கடவுள் எங்கும் உள்ளார். ஆகையால் எல்லா உயிருடனும் தொடர்பு பெறவேண்டும். ஆகவே ஏகாந்த உபாசனையும், சமுதாய உபாசனையும் செய்யவேண்டும்.

5. உயிர்களுடன் தொடர்பு பெறுவதென்பது, அவைகளுக்குச் சேவை புரிதலே. இதனால் பயனைக் கருதாப் பணியும் உபாசனை யென்றே கருதப்படும்.

14. நோன்பு நோற்றல்

1. பசுவைக் காக்கும் பொருட்டு பொய் பேசலாமா, கூடாதா, பாம்பு முதலிய விஷ செந்துக்களைக் கொல்லலாமா, கூடாதா, பெண்ணை பலாத்காரம் செய்யும் துஷ்டனை பலப்பிரயோகத்தினால் தடுப்பதா, வேண்டாமா - என்ற தர்க்கங்களில் சிக்குண்டால், நோன்புகளை நோற்க முடியாது. இந்தச்

*இந்தப் பகுதி காந்தியடிகளே எழுதியது—ஆசிரியர்.

சிக்கல்களைப் புத்தியினால் பிரிக்க வேண்டுமானால் பிரிக்கலாம்; நாம் வாழ்க்கையின் சாதாரண சமயங்களில் விரதங்களை நன்கு நடத்திப் பழகி யிருந்தால், கஷ்டமான சமயங்களிலும் செய்ய வேண்டியது தானே சுலபமாக விளங்கும்.

2. தினமும் எழும் சில சாதாரண சந்தர்ப்பங்களுக்கு உதாரணம் :

(க) பொய் நடத்தை: கெட்டவனென்று தெரிந்த ஒருவனை நல்லவனென்று கூறல், நல்லவனென்றும், பெரிய மனிதன் என்றும் அழைக்கப்படும் ஆசையினால் தம்மிடமில்லாத குணங்கள் இருப்பதாய் நடித்தல், மிகைபடக் கூறல், தனது குறைகளை வெளியிடவேண்டிய இடத்தில் மறைத்தல், தோழர் அல்லது பெரியோரின் கேள்விக்குத் தெளிவில்லாத பதிலளித்தல், வெளியிட வேண்டியதை மறைத்தல், நம்பிக்கைத் துரோகம், வாக்கு மீறல் முதலியவை.

(ங) ஹிம்சை: பிறரை அவமானப் படுத்தல், அலட்சியம் செய்தல், கெட்ட பொருளைப் பிறருக்களித்து நல்லதைத் தனக்கெனக் கொள்ளல், தனது வேலையைச் செய்யாது நண்பன்மீது சுமத்தல், அக்கம் பக்கத்தவன், தோழன் ஆகியோரின் துக்கத்திலும், நோயிலும் அனுதாபம் காட்டத் தவறல், தன்னிடம் உணவிருந்தும் பசியால் வருந்துவோனுக்குத் தராமை, விருந்தை உபசரியாமை, கூலியாளிடம் அலட்சியமாகப் பேசல், சிந்தனையின்றி அவனது சக்திக்கு மீறிய வேலை யளித்தல், பிராணியை தார், தடி, திட்டு முதலியவைகளினால் துன்புறுத்தல், உணவிடையே சோறு வேகவில்லை, பருப்பில் உப்பதிகம், கறி ருசியாய் இல்லை என்பது போன்ற சிறு விஷயங்களுக்காக ஆத்திரமும் கோபமும் கொள்ளல் முதலியன.

இவ்வாறே பிற விரதங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

3. பிரம்மசரியத்தை அனுசரிப்பதில் கீழ்க்கண்ட குறிப்புக்கள் உபயோகமா யிருக்கும் :

(க) சிறுவர் - சிறுமிகளை எளிய இயற்கைக்கொத்த முறையில், ஆயுள் முழுமையும் தூய்மையுடன் வாழ்வதற் குதவும்படி வளர்த்தல்.

(ங) எவரும், மிளகாய், மசாலை முதலிய கார உணவுகளும், சுலபமாய்ச் சீரணமாகாத சித்திரான்னங்களும், மிட்டாய்களும், பொறியல் வகைகளும் உட்கொள்ளாமை.

(ச) புருஷனும் மனைவியும் தனியறைகளில் தூங்குதலும், தனிமையைச் சகித்தலும்.

(ஞ) உடலையும், உள்ளத்தையும் இடைவிடாமல் நற்கருமங்களில் ஈடுபடுத்தல்.

(ட) இரவில் சீக்கிரம் தூங்கி, காலையில் சீக்கிரம் எழும் முறையை உறுதியுடன் அனுசரித்தல்.

(ண) அருவருக்கத் தக்கவைகளைப் படியாமை; தீய எண்ணங்களுக்கு மாற்று தூய எண்ணங்களே.

(த) மனத்தின் விகாரங்களைத் தூண்டக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும் பாராதிருத்தல்.

(ந) சொப்பன தோஷமுண்டானால் பீதி அடையக்கூடாது. ஆரோக்கிய முள்ளவரா யிருந்தால் உடனே எழுந்து குளிர்ந்த நீரில் மூழ்குவது மிகச் சிறந்த மருந்தாகும். இடையிடையே ஸ்திரீ சம்போகம் செய்தல் சொப்பன தோஷத்திற்குப் பரிஹாரமாகுமென்ற எண்ணம் தவறு.

(ப) எல்லாவற்றிலும் முக்கியமான விஷயம்—புருஷனும் மனைவியும், போகத்தை விலக்குதல் அசாத்தியம் என்றும், அதனால் உடலுக்கும், மனத்துக்கும் தீங்கு விளையும் என்றும் போகம் தேக ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என்றும் வழங்கும் அபிப்பிராயங்களைச் சிறிதும் நம்பலாகாது. புலனடக்கத்தை இயற்கைக்கு உகந்த சாதாரண நிலையென்றே கருதி யாவரும் நடக்கவேண்டும்.

(ம) தினமும் எழுந்ததும் தூய்மையை வேண்டி மனவொருமையோடு கடவுளைத் துதித்தலும், ராமநாமம் போன்ற மந்திரத்தைச் செபித்தலும், புலனிச்சையை அடக்குவதற்குரிய தலைசிறந்த முறையாகும்.

4. (க) பிரார்த்தனையில் தூக்கம், சோம்பல், பேச்சு, கவனமின்மை, மனசைச் சுற்ற விடுதல் முதலியவை பிரார்த்தனையை விடுவதை யொக்கும். நாம் விரும்பாமலே இந்த நிலை யுண்டானால் இதை அகற்றும் பொருட்டு, பிரார்த்தனைக்குச் செல்லு முன்னரே விழித்தல், எழுந்து பல் துலக்கல், தெளிந்த மனசுடன் இருக்க முயலல் ஆகியவை பயன் தருவனவாம். பிறகும் உடல் வசமாகாவிடில்—நாம் வயதிற் பெரியோரா யிருப்பினும், சிறியோராயினும்—வெட்கப்படாமல் எழுந்து நிற்கவேண்டும்.

(ங) பிரார்த்தனையில் ஒருவரோடொருவர் உராய்ந்து

கொண்டு அமரக்கூடாது. கம்பைப்போல் நிமிர்ந்திருந்து, மெள்ள சுவாசிக்கவேண்டும்.

(ச) பிரார்த்தனையின் சுலோகங்கள், கீர்த்தனங்கள் ஆகியவற்றின் சுத்தமான உச்சரிப்பையும், மெட்டையும் கற்க முயல வேண்டும். இவற்றைப் பழகும் வரையில் வாய்க்குள் சொல்லி வருதல் வேண்டும். இதுவும் முடியாவிடில் ராமநாமத்தை மட்டும் கூறல் நலம்.

(ஞ) பிரார்த்தனையில் சொல்லுவதன் பொருளை அறிந்து கொண்டு அதைச் சிந்திக்கவேண்டும்.

(ட) ஏகாந்தமான பிரார்த்தனையும், கோஷ்டியாகச் செய்வதும்—இரண்டும் பெருமை யுள்ளவையேயாகும். இரண்டும் ஒன்றுக்கொன்று உதவக்கூடியவை. ஏகாந்தப் பிரார்த்தனையின் பெருமையை உணராமையால் கோஷ்டிப் பிரார்த்தனையில் ஆனந்தம் உண்டாவதில்லை; கோஷ்டிப் பிரார்த்தனையின் பயன் தனி மனிதனுக்குக் கிட்டுவதில்லை. ஆகையால் ஒவ்வொருவரும் முறையாக ஏகாந்தப் பிரார்த்தனை புரியவேண்டும்.

(ண) இதற்கு முக்கியமாக இரண்டு நேரங்கள் உண்டு—ஒன்று எழுந்ததும், மற்றென்று இரவில் தூங்குமுன்னர். ஏகாந்தப் பிரார்த்தனைக்கு இரண்டே சமயங்கள்தான் என்று கருதவேண்டாம். ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு கணத்திலும் கடவுளைச் சாட்சியாக மதித்தல் ஏகாந்தப் பிரார்த்தனையாகும். இதற்கு மந்திரமோ, கீர்த்தனமோ தேவையில்லை. இதில் எந்தப் பெயரினாலும், எந்த முறையிலும், எந்த நிலையிலும், கடவுளை நினைக்க வேண்டியதே. ஒவ்வொரு மூச்சிலும் ராமநாமத்தை வெளியிடும் நிலையை எய்துவதே ஆதர்சமாகும்.

(த) ஆயினும், இதற்கு நேரம் அதிகமாகுமோ வென்று கருதவேண்டாம். இதற்கு நேரம் தேவையில்லை. மெய் மறந்திராமல், எப்பொழுதும் விழிப்புடன் சாக்கிரதையா யிருப்பதும், அழுக்கை நீக்குவதுமே முக்கியம்.

* இவ்விஷயத்தைக் குறித்து மேலும் அறிய விரும்புவோர் காந்தியடிகளின் ‘अनीति की राह पर’ (‘அநீதிப்பாதையில்’) என்ற நூலைப் படிக்கவும்.

II சமய வழி

1. சர்வ சமய சமரசம்

1. ஒவ்வொரு யுகத்திலும், ஒவ்வொரு நாட்டிலும், உண்மையைத் தேடிக் காண்பதில் ஊக்கம் கொண்டவர்களும், மக்களின் நன்மையில் மிக்க நாட்டங்கொண்டு உழைப்பவர்களுமான பெரியாரும், மகாத்மாக்களும் பிறக்கின்றனர். அந்த யுகத்தின் பிற மக்களைவிடச் சிறிது அதிகமாக அவர்கள் சத்தியத்தை உணர்கிறார்கள். அவர்கள் கண்டவற்றில் சில எக்காலத்திற்கும் பொதுவாயும் சில அக்காலத்திய நிலையிலிருந்து எழுந்தவையாயும் இருக்கின்றன. இதைத் தவிர, எத்தனையோ தத்துவங்கள் எக்காலத்திற்கும் ஏற்றவையாயினும், நடத்தத் தொடங்குங்கால், தமது காலதேசத்திற்கு உகந்த வகையில் அவற்றை எல்லைப்படுத்துகின்றனர். இவைகளிலிருந்தே உலகின் பல்வேறு சமயங்கள் தோன்றி யிருக்கின்றன.

2. இவ்வாறு சிந்திப்பவன் எந்த மதத்திலும் சத்தியமே இல்லையென்று கூறுவது போலவே எந்த மதத்திலும் பூரணமாய் இருப்பதாகவும் ஒப்புவதில்லை. அவனுக்கு எல்லாச் சமயங்களும் மாற்றமும் வளர்ச்சியும் பெறத் தக்கவை யென்றும், பகுத்தறிவுடன் பின்பற்றினால் ஒவ்வொரு சமயமும் தன்னைச் சார்ந்தோருக்கு நன்மை யளிக்க வல்லது, வேட்கை கொண்டவருக்குச் சத்தியத்தைக் காட்டிச் சாந்தி யளிக்கக் கூடியது என்று தெரியும்.

3. இத்தகையவன், தனது மதமே தலை சிறந்ததென்றும், மனிதன் கடைத்தேற வேண்டுமாயின் அதையே ஏற்கவேண்டுமென்றும் ஆணவம் கொள்ளான். அவன் அதைத் துறவான், அதன் குறைகளைப் பொருட்படுத்தாமலும் இரான். அவன் தனது மதத்தை கௌரவிப்பதைப் போலவே, பிற சமயங்களையும், அதைச் சார்ந்தவர்களையும் மதித்து, ஒவ்வொருவனும் தன் தன் மதத்தின் தலைசிறந்த தத்துவங்களை ஆனவரையில் பின்பற்ற வேண்டுமென்று விரும்புவான்.

4. தூஷிக்கும் மனப்பான்மை, பிற மதங்களில் குறைகளையே காணும். உண்மையைத் தேடுவோன் ஒவ்வொரு சமயத்திலும் காணப்படும் சத்தியத்தை ஏற்பான். ஆகையால், உண்மையைத் தேடுவோனைக் கண்டால், ஒவ்வொரு மதத்தவ

னும் அவனைத் தன்னைச் சார்ந்தவனாகக் கருதுவான். இவ்விதமாக, சத்தியத்தைத் தேடுவோன் சொந்த மதத்தைத் துறவாமலே, எல்லா மதங்களையும் பின்பற்றுபவன்போன்று காட்சியளிப்பான்.

2. தர்மமும் அதர்மமும்

1. சத்தியத்தைத் தேடுவோன் எல்லாச் சமயங்களையும் சமமாகக் கருதினாலும், அதர்மத்தை எதிர்ப்பான். அந்த அதர்மம் தனது மதத்தில் நடந்தாலும், பிற மதங்களில் நடந்தாலும், வெளியே நடந்தாலும், அவனுக்கு ஒன்றே.

2. எல்லாச் சமயங்களிலும் குறைகளிருப்பதால், தர்மத்தின் பெயருடன் அதர்மங்கள் கலந்து கொள்கின்றன. இந்தக் கலப்பு தர்மத்தின் பெயரால் ஏற்படுவதால், தர்மத்தையும், அதர்மத்தையும் பிரித்தறிதல் சிரமமாகிறது ; ஆயினும் இந்தப் பாகுபாடு செய்தே யாகவேண்டும்.

3. ஒரு மதத்தின் பெரியாரின் சரித்திரத்தில் காணும் குறையைச் சுட்டிக் காட்டி அம்மதத்தை தூஷிப்பது, நிந்திப்பவரின் முறை. ஆனால், இந்தக் குறைகளைப் பிறரும் பின்பற்ற வேண்டிய உண்மைகள் என்று கருதுதல் அதர்மமாகும் ; அவற்றை எதிர்க்கலாம்.

4. பொதுவாக, சத்தியம் முதலிய மூலதத்துவங்களுடன் பொருந்தாத அனுஷ்டானங்கள், அந்த தர்மத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, அதற்குத் தீங்கு செய்பவை யாகையால், அவை அதர்மமாகுமென்று கூறலாம். இதை நிர்ணயம் செய்வது கடினம். ஆனால் பக்தியும், விவேகமும் உள்ள சத்திய சோதகர்கள் இதை நிச்சயம் செய்யக்கூடும்.

5. சத்தியத்தைத் தேடுவோன் எங்கும் அதர்மத்தை எதிர்த்து நிற்பான் ; ஆனால் அதர்மம் வேறு, அதைப் புரிவோன் வேறு என்று பாகுபாடு செய்துகொள்வான். அதர்மத்தை எதிர்த்தாலும், அதர்மம் புரிவோனை வெறுக்கமாட்டான். அதாவது அவன் அதர்மம் புரிவோனை அஹிம்சை - சத்தியம் ஆகியவற்றுடன் முரண்படாத முறையிலேயே எதிர்ப்பான். அதர்மத்தை எதிர்க்கும்பொருட்டு, பொய் ஹிம்சை முதலிய தீய சாதனங்களைக் கையாண்டு அதர்மம் புரியான்.

3. சத்தியாக்ரஹம்

1. இவ்விதமாக நாம் சத்தியாக்ரஹ தத்துவத்திற்கு வந்தோம். 'சத்தியாக்ரஹம்' என்ற சொற்றொடருக்கு 'சத்தியம் முதலிய தர்மங்களைத் தாமே அனுசரிப்பதில் உறுதியும், அதர்மத்தை சத்தியம் முதலிய கருவிகளினால் எதிர்த்தலும்' என்று சுருக்கமாக விளக்கம் கூறலாம்.

2. எதிர்க்கும்பொழுது, முக்கியமாக அஹிம்சையை மீறுவதற்குக் காரணமுண்டாகும்; ஆகையால் அஹிம்சையை வற்புறுத்தும் நோக்குடன், அதர்மத்தை அஹிம்சைக் குகந்த முறையில் எதிர்த்தலே சத்தியாக்ரஹம் என்று கூறப்படும். 'சத்தியாக்ரஹம்' என்ற பெயருடன் வழங்கும் போர் முறையின் தத்துவத்தை இவ்வகையில் பொதுவாக விளக்கலாம்.

3. அதர்மத்தை யெதிர்க்கும்பொருட்டு நடத்தவேண்டிய சத்தியாக்ரஹத்தைப் பற்றி, பின்னர் விரிவாகக் கூறப்படும். இங்கோ, சத்தியம் முதலிய தர்மங்களைத் தாமே அனுசரிப்பதில் நமக்குக் கிட்டியுள்ள வெற்றியை யொட்டியே அதர்மத்தை எதிர்த்து சத்தியாக்ரஹம் செய்வதற்கு வேண்டிய ஆற்றல் இருப்பதுடன், அதற்குத் தேவையான முறைகளும் தோன்றும் என்று மட்டும் சொல்வது போதுமானது.

4. ஆனால் இத்தகைய ஆற்றல் கிட்டுவது, சத்தியாக்ரஹ வாழ்க்கையின் இரண்டாவது நிதரிசனப் பயன் என்று கருதப்படும். இந்த இரண்டாவது பயன் கிட்டினாலும் கிட்டாவிட்டாலும் இவ்வாழ்க்கையின் பயனாகக் கிட்டும் சத்திய மயமான பரம்பொருள் உணர்ச்சியே இதன் முக்கியமான பயனாகும்.

4. ஹிந்து மதம்

1. ஹிந்துவுக்கு ஹிந்து மதமே போதுமானது. சத்திய சோதனை செய்வோன் ஆன்மீக மேம்பாடெய்துவதற்கு, இதில் போதுமான உபகரணங்கள் இருக்கின்றன.

2. சனாதன ஹிந்து மதத்தில் சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிஹாசம், ஸம்ஸ்கிருதத்திலும் பிராகிருதத்திலுமுள்ள மகான்களின் வாக்கு முதலிய மத நூல்கள் இருக்கின்றன. இந்நூல்களில் பல ரிஷிகளும், முனிவரும், கவிகளும் சிந்தனைசீலர்களும்,

மதத்தின் பல்வேறு பகுதிகளையும், பல வகைகளில் விளக்கி யிருக்கின்றனர். இவை யெல்லாம் ஒரே மதிப்புள்ளவை யென்று கருத முடியாததுடன், பல விலக்கத் தக்கவையாயு மிருக்கின்றன. ஆயினும் குணத்தை மட்டும் ஏற்கும் நோக்கோடு பார்ப்போருக்குத் தம் மதஅறிவு வேட்கையைத் திருப்தி செய்வதற்குத் தேவையானவை யெல்லாம் இவற்றில் கிடைக்கும்.

3. சனாதன ஹிந்து மதம், சச்சிதானந்தமான ஒரு பரம் பொருளை ஏற்று, அதை மனசுக்கும், சொல்லுக்கும் எட்டாத தென்று கூறுகிறது. ஆயினும் 'சர்வம் ஈச்வர மயம்' என்ற தத்துவப்படி ஈச்வர சக்தி பலவகையில் வெளிப்படுவதை ஒப்புவதற்கும், வழிபடுவோர் தம்தம் ருசிப்படி வெவ்வேறு லட்சியங்களைக் குறிக்கும் தேவதைகளையும், அவதார புருஷர்களென்று மகான்களையும், சத்குருவையும் வழிபட அதில் சுதந்திர மிருக்கிறது. சனாதன ஹிந்துமதம் இத்தகைய இருவகை வழிபாடுகளிடையே முரண்பாட்டைக் காணாது, பொருத்தத்தையே பார்க்கிறது. இதனால் சனாதன ஹிந்து மதத்தில் விக்ரஹ ஆராதனை விலக்கப்படவில்லை. சனாதன ஹிந்துமதம், மறுபிறவி, மோட்சம் என்ற தத்துவங்களை ஏற்று, மோட்சம் அல்லது வீட்டைத் தலைசிறந்த இறுதிப் பேறாகக் கருதுவதுடன் அதை எய்துவதற்கு யம - நியமங்களையும், விரத - ஒழுக்கங்களையும், ஸ்தல யாத்திரையையும் கருவிகளாகக் கருதுகிறது.

4. சனாதன ஹிந்துமதத்தில் வர்ணாச்சிரம ஏற்பாட்டிற்கு மிகுந்த மதிப்புண்டு; இதையே அதன் சிறப்பென்றும் கூறலாம். ஆகையால் ஹிந்துமதத்தை வர்ணாச்சிரம தர்மம் என்ற பெயரால் அழைப்பது தவறாகாது. இவ்வாறே 'கோபாலனம்' (பசு வளர்த்தல்) இம்மதத்தின் தலைசிறந்த புறப்பண்பாகும். இவை இரண்டும் தனித்தனியாகப் பின்னர் ஆராயப்படும்.

5. "वैष्णव जनतो तेने कहीये" (வைஷ்ணவன் யாரெனில் சொல்வேன்) என்று தொடங்கும் (குஜராத்திப்) பாட்டில் விவரிக்கப் பெற்றுள்ள இலட்சணங்கள், சனாதன ஹிந்து மதத்தின் உண்மையான அறிகுறிகளாகும்.

5. கீதையும் ராமாயணமும்

1. ஹிந்து மதத்தில் பல மதிப்பிற்குரிய நூல்கள் இருப்பினும், தினமும் பாராயணம் செய்யவும், ஆழ்ந்த ஆராய்ச்சி செய்யவும், வடமொழியில் கீதையும், ஹிந்தியில் துளசிதாசருடைய ராமசரித மானஸமும் (ராமாயணம்) இரண்டும் தலை சிறந்த நூல்களென்றும், பொதுவாக யாவருக்கும் போதுமானவை யென்றும் கூறலாம்.

2. நுண்ணிய தத்துவ ஆராய்ச்சிக்குக் கீதையும், காவ்ய ரசத்துடன் கலந்த கதையின் மூலமாக, பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய பேறுகளின் மகிமையைச் சாதாரண மக்களும் உணரும்படிச் செய்வதில் துளசீ ராமாயணமும்—ஹிந்து மதத்தின் இரு ஒப்பற்ற நூல்களாகும்.

3. அனாஸக்தி யோகம் (பற்றற்றுப் பணியாற்றல்) என்பது கீதையின் போதனையின் மத்திய பிந்துவாகும்; அதாவது பயனை விரும்பாது, இடைவிடாமல் கடமையை ஆற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்ற அதனுடைய போதனையை என்றும் மறத்தலாகாது. இதில் காரியங்களெல்லாம் விலக்கப்படவில்லை; காரியத்தைச் செய்ய பகுத்தறிவு தேவையில்லை யென்றும் கூறவில்லை. இதில் தீய செயல்களை விலக்கி, நற்செயல்களையே பயன் கருதாது புரியும்படிப் போதிக்கப்பட்டிருக்கிறது. சத்தியம் அஹிம்சை ஆகியவற்றைப் பூர்ணமாக அனுசரித்தால் அல்லது, இந்த முறைப்படி நடப்பது சாத்தியமில்லை.

4. கீதையை எவ்வளவு படித்தாலும், கேட்டாலும், சிந்தித்தாலும் அது பழைமைப் படுவதில்லை. இதைச் சிந்தித்துக் கொண்டே யிருந்து, இதையொட்டி நடக்கவும் தொடங்கி விட்டால், இதைப் படிக்குந்தோறும், புதிய புதிய போதனைகள் தோன்றிக்கொண்டே யிருக்கும். இது மட்டுமின்றி கீதையில் வரும் 'பெருஞ் சொற்களின் * பொருள் ஒவ்வொரு யுகத்திலும் மாற்றமும், விரிவும் எய்திக்கொண்டே இருக்கும்.

---

* பெருஞ் சொற்கள் என்றது यज्ञम् (யக்ஞம்), योगम् (யோகம்) போன்றவைகளை.

III சமூகம்

1. வர்ணாச்சிரமம்

1. முன் கூறியபடி ஹிந்து மதத்திற்கு வர்ணாச்சிரம தர்மம் என்ற பெயர் பொருத்தமானது. வர்ணாச்சிரம முறை, இந்த மதத்தின் சிறப்பைப் புலப்படுத்துகிறது. இதற்கு வேதத்தி லேயே ஆதாரம் காணப்படுகிறது.

2. ஒவ்வொரு மதத்திலும் ஒரு சிறப்பு இருக்கும். ஹிந்துக்கள் வளர்த்த தர்மத்திற்குப் பொருத்தமான சிறப்புப் பெயர், **வர்ணாச்சிரம தர்மம்** என்பதாகும்.

3. இதனால் எந்த ஹிந்துவும் வர்ணாச்சிரமத்தை மதியாதிருக்க வியலாது. இந்த முறையை அறிந்துகொண்டபின், இதில் குறை யிருப்பதாய்க் கண்டால், இதைத் துறக்கலாம். அன்றி, இதுவே மதத்தின் தனிச் சிறப்பென்று தெரிந்தால் (இதுவே உண்மையாகும்) இதற்குப் புத்துயிரளித்து வளர்க்க வேண்டும்.

4. வர்ணாச்சிரம முறை யென்பது சமூக அமைப்பைப் பற்றிய நிலையற்ற ஏற்பாடல்ல. தத்துவ உணர்ச்சி இதற்கு ஆதாரமாகும். அதாவது மனித சமுதாயத்திற்கே பொருத்த முள்ள விதிகளின் அறிவு இத்துடன் இணைந்திருக்கிறது.

5. இவ்வாறு வர்ணாச்சிரமத்தைக் கண்டு பிடித்தது ஹிந்து மதமாயினும், இதன் தத்துவங்கள் ஹிந்து மதத்திற்கு மட்டுமே யல்லாது, பிற மதங்களுக்கும் பொருந்துபவையே. இன்று உலகம் அதை ஏற்காவிடில், அந்த அளவுக்கு நஷ்டம் அதற்கே. இன்று இல்லையேல் நாளை உலகம் அதை ஏற்றே தீரும்.

6. ஆனால் வர்ணம், ஆச்சிரமம் இரண்டும் இன்றே மறைந்தே போய்விட்டன. ஆச்சிரமத்தின் பெயரும், செயலும் போயின. வர்ணத்தின் பெயர் அழியவில்லை யென்றாலும், செயல் மறைந்துதான் போயிருக்கிறது.

இரண்டையும் முறையே கவனிப்போம்.

2. வர்ண தர்மம்

1. வர்ணம் என்பது தொழில். வர்ண தர்மத்தின் தத்துவத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்: தான் பிறந்த குடியின் தொழிலை—அது நியாயத்துடன் முரண்படவில்லையானால்—ஒவ்வொருவனும் கடமையுணர்ச்சியுடன் புரிந்து, அதிலிருந்து கிட்டும் பொருளில், தன் சீவனத்திற்குத் தேவையானதை வைத்துக்கொண்டு எஞ்சியதைப் பொது நன்மைக்குச் செலவு செய்யவேண்டும்.

2. வர்ணம் என்பது கடமையே யன்றி, உரிமை யல்ல. இதன் பொருள், ஒவ்வொரு வர்ணமும் தன் தொழிலைக் கடமையென்று கருதிச் செய்யவேண்டும் என்பது. ஜீவனோபாயம் என்பது அதனால் விளையும் பயனின் ஒரு பகுதியே; அது கிட்டினாலும் கிட்டாவிடினும், அறிவாளி தன் கடமையில் உறுதியுடன் இருக்கவேண்டும்.

3. இதைத் தவிர, வர்ணங்களிடையே, ஏற்றத் தாழ்வென்ற வேற்றுமை கூடாது. எல்லா வர்ணங்களும் சமமாகவே கருதப்பட வேண்டுமென்பதும் இதன் பொருளாகும்.

4. ஒருவனுடைய வர்ணம், பொதுவாகப் பிறப்பினாலும், ஓரளவுக்குச் செயலினாலும் தீர்மானிக்கப்படும். சாதாரணமாகத் தன் பரம்பரைத் தொழில், மனிதனுக்கு இயற்கையிலேயே அமைவதொன்று. இது யாவருக்கும் பொருந்தும் ஒரு விதியாகும்; இதைத் தெரிந்தோ தெரியாமலோ யாவரும் ஏறக்குறைய அனுசரிக்கிறார்கள். பண்டை ஹிந்துக்கள் அரிய தவத்தின் மூலமாக இந்தப் பெருமை மிக்க விதியை ஆராய்ந்து, ஆனவரையில் அனுசரித்தார்கள். உலகம் இந்த மதம் அல்லது விதியைப் பின்பற்றினால், எங்கும் திருப்தி நிலவும், பொய்ப் போட்டிகள் பறந்து போம், பொறாமை போனவிடம் தெரியாது, யாரும் பசியால் வாடவேண்டி யிராது, பிறப்பும் இறப்பும் சமமாகி, நோய் நொடிகள் மடிந்து போம்.

5. இந்த தர்ம முறையில் பிராம்மணன் பிரம்மத்தை அறிந்து பிறருக்கு அறிவிப்பதில் தன் நேரத்தைக் கழித்துக் கொண்டு தன் சீவனத்தின் பொறுப்பைக் கடவுளிடம் ஒப்புவித்திருப்பான். க்ஷத்திரியன் குடிகளைப் பாதுகாக்கும் தர்மத்தைப் புரிந்து, அதன்பொருட்டு சீவனத்திற்கு குறிப்பிட்ட பொருளை எடுத்துக்கொள்வான். வைசியன் மக்களின் நன்மை

யின் பொருட்டு உழவோ, பசுப் பாதுகாப்போ, வாணிபமோ புரிவான்; அதிலிருந்து கிட்டும் பொருளில் தன் ஜீவனத்திற்குத் தேவையானதை மட்டும் வைத்துக்கொண்டு, மீதியைப் பொது நலத்திற்குச் செலவு செய்வான். இவ்வாறே, சூத்திரன் ஊழியம் செய்வான்; அதையும் கடமை யென்று எண்ணிச் செய்வான்.

6. மேலும், இந்த ஏற்பாட்டின்படி எவனிடம் பொருள் சேர்ந்திருக்கிறதோ, அவன் அந்தப் பொருளுக்கு, எல்லா மக்களின் சார்பிலும் தன்னைக் காப்பாளனாகக் கருதுவானே யல்லாது, சொந்தக்காரனாக ஒருபொழுதும் கருதான். அரசன் தன் அரண்மனைக்கும், குடிகளிடமிருந்து பெற்ற வரிப்பணத்திற்கும் காப்பாளனே யன்றி சொந்தக்காரனல்ல. தன் சீவனத்திற்குத் தேவையானதை மட்டும் பெற்றுக்கொண்டு, எஞ்சியதைக் குடிகளின் பொருட்டுச் செலவு செய்ய அவன் கடமைப்பட்டவன். அதாவது, தன் ஆற்றலினால் அதைப் பெருக்கி, எவ்விதத்திலாவது குடிகளுக்குத் திருப்பித் தருவான். இதுவே வைசியனுக்கும் ஒக்கும்.

7. சூத்திரனைப் பற்றி என்ன சொல்ல? அவனிடம் என்றும் பொருள் இருக்கப் போவதில்லை. ஆகையால் கடமையுணர்வோடு ஊழியம் புரிந்துகொண்டு, எசமானனாகும் ஆசை சிறிது மில்லாதிருக்கும் சூத்திரன் ஆயிரமாயிரம் வணக்கங்களுக்குரியவன்; அவனே தலைசிறந்தவன்.

8. ஆனால் இந்த மூன்று வர்ணங்களும், தம்மை மக்களின் ஊழியராகக் கருதி, தம்மிடமுள்ள பொருளுக்குத் தம்மைப் பொது நலத்தின் பொருட்டுப் பாதுகாப்பாளராக மதிக்கும் பொழுதே, சூத்திரனுடைய கடமையின் பெருமையைப் பற்றிப் புகழுரை கூறுவது பொருந்தும்; இந்த தர்மத்தை யாரும் ஒருவர்மீது சுமத்துவ தென்பது ஆகாது.

9. வர்ணத்தைக் கண்ட பெரியார் அதைத் தர்மம் என்ற பெயரால் அழைத்து, அதை அனுசரிப்பதில் நிர்ப்பந்தத்தின் வாடையும் வரலாகாதென்று வெளியிட்டிருக்கின்றனர். அதை அனுசரிப்பதாலேயே உலகம் நடைபெற வியலும், அதைப் பின்பற்றினால்தான் உலகம் கடைத்தேறும் என்று உணர்ந்து ஒவ்வொருவனும் தன்தன் வர்ணதர்மத்தை யனுசரித்தே தீர வேண்டும்; நிர்ப்பந்தத்தினால் பிறரை அனுசரிக்கச் செய்யலாகாது.

10. அறிவாளிக்கு இதை அனுசரித்தல் சுலபம்.

11. இத்தகைய வர்ண தர்மம் சமத்துவத்தைக் குறிக்கும் தர்மமாகும்; வெறும் சமத்துவ (பொது உடமை) வாதமல்ல. உலகில் பரவியுள்ள வேற்றுமைகள் நீங்கிச் சமத்துவத்தின் ஆட்சி நிலவவேண்டும். எல்லாத் தொழில்களும், கௌரவத்திலும், மதிப்பிலும் சமமாகக் கருதப்படவேண்டும். அரசன், அவனுடைய மந்திரி ஆகியோரிலிருந்து, தோட்டிவரையில் ஒரே வருமானமுள்ளவ ராகவேண்டும். மூன்று வர்ணங்களும் பெருவாரியாகச் சம்பாதிக்க, சூத்திரன் குறைவாய்ச் சம்பாதிப்பதும், க்ஷத்திரியன் அரண்மனையில் வீற்றிருக்க, பிச்சையெடுத்துப் பிழைப்பவன் ஆகையால் பிராம்மணன் குடிசையில் வாழ்வதும், வைசியன் பெரிய தோட்டமும் கோட்டமும் அமைக்க, சூத்திரன் வீடு வாசலற்று அடிமையா யிருத்தலும் ஆகிய பரிதாப நிலை, வர்ண தர்மம் நடைபெறும் இடத்தில் அறவே இராது, இருக்கவும் கூடாது.

12. இத்தகைய வர்ண தர்மம் இன்று அழிந்துவிட்டது. எத்தனையோ பேர் தம்மைப் பிராம்மணர் என்றும், க்ஷத்திரியர் என்றும், வைசியர் என்றும் கூறிக்கொள்கிறார்கள் என்பது உண்மையே; ஆனால் தம்மைச் சூத்திரர் என்று சொல்ல யாவரும் நாணுகின்றனர். இவ்விதமாக, உண்மையில் வர்ணம் பெயரளவில்தான் எஞ்சி யிருக்கிறது. ஆயினும் அனுஷ்டானத்தை யொட்டி வர்ணத்தின் பெயரை நாம் ஏற்பதெனில் நாம் யாவரும் சூத்திரர் என்றே அழைக்கப்படுவோம். ஆனால், உண்மையில் நம்மைச் சூத்திரர் என்றழைப்பதும் சரியாகாது. ஏனெனில் சூத்திர வர்ணமும் ஒரு தர்மமாகும், ஆகவே நாமே விரும்பி ஏற்பதற்குரியது; அதில் நாணப்படுவதற்கு இடமே யிருக்கமுடியாது; இவ்வாறில்லையாயினும் காலப்போக்கினால் நாம் சூத்திரத்தன்மையை அல்லது அடிமைத்தனத்தை எய்தி யிருக்கிறோம்.

13. வர்ணங்கள் செய்யவேண்டிய பணிகள்தான் நடந்துகொண்டிருக்கின்றனவே; ஆகவே, ஒவ்வொரு மனிதனும் புரியும் பணி எந்த வர்ணத்தைச் சார்ந்ததோ, அதுவே அவனுடைய வர்ணம் என்று கூறினால் வர்ண தர்மம் கேடுறுமாவென்று கேட்கலாம். ஆனால் இவ்வாறு கூறுவது சரியல்ல. ஏனெனில், தொழில்களில் மாறுபாடுகள் உண்டாகி, அவரவர் இஷ்டப்பட்ட தொழிலைச் செய்வதென்றால், வர்ணக் குழப்பம் உண்டாகுமே யன்றி, வர்ண தர்மம் நடைபெறாது.

14. வர்ண தர்மங்களுக் கிடையே உயர்வு - தாழ்வு என்ற

கருத்துக்களுக்கு இடமேயில்லை. ஆனால் வெகுகாலமாக ஹிந்து மதத்தில் ஏற்றம் - தாழ்வு என்ற வேற்றுமைகள் புகுந்துவிட்டன. அது வர்ண தர்மத்தின் கோணலான, விகார உருவாகும். உலகில் இன்று பரவியுள்ள கலகங்களுக்கு முக்கியமான காரணம், ஏற்றம் - தாழ்வென்ற வேற்றுமைகளே. வர்ண தர்மத்தைப் பின்பற்றினால் இப்போர் ஒழியும்.

15. ஆனால், மூன்று வர்ணத்தார்தான் உயர்ந்தவர் என்றும், சூத்திரர்கள் இழிந்தவரென்றும் கருதும்பொழுது, சூத்திரர் அவர்களிடம் பொறுமை கொள்வதிலும், மூன்று வர்ணத்தாரும் சேர்த்துவைத்துள்ள பொருளில் தமக்கும் பங்கு கிடைக்க வேண்டுமென்று கோருவதிலும் புதுமையோ, விசனிக்கத் தக்க விஷயமோ ஏதுமில்லை.

16. இன்று உண்டி - மணம் ஆகிய இரண்டிலேயே வர்ண தர்மத்தின் அனுஷ்டானம் அடங்கிவிட்டது. நடைமுறையில், உணவில் சிலவற்றை விலக்கி மற்றவைகளைக் கொள்வதும், பெண் - பிள்ளை ஆகியவர்களைக் கொடுத்து வாங்குவதில், வரையறைக் குட்பட்டு நடப்பதும் அவசியமே. ஆனால் வர்ண தர்மம் இவை யிரண்டையுமே பொறுத்திருக்கவில்லை. இவற்றை வர்ண தர்மத்துடன் இணைத்ததால் ஹிந்து மதத்துக்குப்பெருத்த தீங்கு விளைந்திருக்கிறது.

17. வர்ணத்திற்கும், இன்றைய சாதி வேற்றுமைகளுக்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள வேற்றுமையுண்டு. இன்றைய ஜாதிகளும் குட்டி சாதிகளும் இடிந்தழிந்த வர்ணமாளிகையின் பாழை ஒத்திருக்கின்றன. அவற்றினுள் வர்ணவேற்றுமையை யொத்த பரந்த முறையொன்றையுங் காணோம். ஆனால் அது தற்செயலாய் எழுந்த காரணங்களிலும், குருட்டுப் பழக்கங்களிலும் முளைத்த வழக்கமாகும். இது வர்ண ஏற்பாடல்ல, சாதிக் கட்டாகும். இதனால் ஹிந்து சமூகத்துக்குத் தீங்கு விளைவதால், இது அழிந்தொழியவேண்டும்.

18. சாஸ்திரங்களில் நான்கு வர்ணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் நான்கே யிருக்க வேண்டுமென்பது வர்ண தர்மத்தின், தவிர்க்க வியலாத பகுதியல்ல. வர்ண தர்மத்தைப் புதுப்பிக்கத் தொடங்குங்கால், வர்ணங்கள் நான்கை அதிகமாக்குவதோ குறைப்பதோ அவசியமாகலாம்.

3. ஆச்சிரமம்

1. ஆச்சிரம முறையும், இயற்கையின் விதிகளை ஒழுங்கான முறையில் அனுஷ்டானத்துக்குக் கொணரும் முயற்சியினின்றும் எழுந்ததே.

2. எல்லா வர்ணத்தாருக்கும், எல்லா ஆச்சிரமங்களையும் ஏற்க உரிமையுண்டு.

3. ஒன்றின்றி மன்றென்றை அனுசரிக்க வியலாத வகையில், நன்கு ஆச்சிரமங்களும் தம்மிடையே இணைந்திருக்கின்றன.

4. மனிதன் பிறவிமுதலே பிரம்மசரிய ஆச்சிரமத்திலிருக்கிறன்; இதனல் இந்த ஆச்சிரமத்தைத் தவிர்க்க வியலாததென்று கூறலாம். இந்த ஆச்சிரமத்தை என்றும் விட விரும்பாதவனுக்கு, ஆயுள் முழுமையும் பிரும்மசாரியாகவே வாழ விரும்புவோனுக்கு அவ்வாறே செய்ய உரிமை யுண்டு. இந்த ஆச்சிரமத்தை குறைந்தது 23 வயதுவரையில் ஆணும், 18 வயது வரையில் பெண்ணும் தூய்மையுடன் அனுசரிக்க வேண்டும்.

5. இந்த ஆச்சிரமத்தைத் தூய்மையுடனும், புலனடக்கத்துடனும் நடத்துவதையே, பிற ஆச்சிரமங்கள் சிறப்புற்றேங்குவது பொறுத்திருக்கிறது. ஆகையால் பாரமார்த்திக நோக்குடன் கவனித்தால், இந்த முதல் ஆச்சிரமமே முக்கியமான ஆச்சிரமமுமாகும். இவ் வாச்சிரமத்தின் மறைவினல் ஹிந்து மதத்துக்கும் சமூகத்துக்கும் பெருத்த தீங்கு விளைந்திருக்கிறது. இந்த ஆச்சிரமத்தை ஒளி பெற்றேங்கச் செய்வது ஒவ்வொரு ஹிந்துவினுடைய கடமையாகும். ஆனல் இந்த ஆச்சிரமத்தை அனுசரிப்பவர் இன்று அரிதிலும் அரிதாகிவிட்டனர்.

6. இல்லறத்தின் விவாஹ - தர்மம் மற்ருெரு பகுதியில் ஆராயப்படும். தர்ம முறையில் மக்கட்பேற்றை விருத்தி செய்யும் தனிப் பொறுப்பு இவ்வாசிரமத்தைச் சார்ந்தது.

7. இல்லறம், சுகபோகத்திற்கு உரியது என்ற எண்ணம் தவருகும். ஹிந்துமதத்தின் திட்டங்களெல்லாமே புலனடக்கத்தை வளர்க்கவென்று அமைந்தவை. ஆகையால் சுக போகங்கள் ஹிந்துமதத்தில் என்றும் இன்றியமையாதவை ஆகமாட்டா. இல்லறத்தில் எளிமையும் அடக்கமும் குணங்களே யன்றி, குற்றங்களாகா. ஆனல், புலனடக்க மென்ற குறிக்கோளை ஆதரித்தபோதிலும், சுகபோகங்களில் உள்ள

ஆசையைப் பலரால் அடக்க முடிவதில்லை. இல்லறம் இந்தப் போகங்களை வரையறுத்து நுகரும் முறையை அமைத்துத் தருகிறது.

8. ஆயினும், இன்று யாவரும் அனுசரிப்பது இல்லறத் தொழிலே—மக்களைப் பெறும் வேலையே—யன்றி இல்லறம் அன்று. இதனால் வெகுவாக, மனம்போனபடி வாழ்வதும், பிறன்மனை விழைவுமே வலுத்திருக்கின்றன.

9. பிறன்மனை விழைவோ, மனம்போன வாழ்வோ நடத்திய பிறகு, வானப்பிரஸ்தனாகவோ, சந்நியாசியாகவோ, ஆவதை அசாத்தியமென்றே கருதவேண்டும்.

10. சுக போகங்களைக் குறைத்துக்கொண்டே சென்று, இறுதியில் அவற்றின்மீதுள்ள பற்றைத் துறக்கும் ஆற்றல் கிட்டிய பின்னர், கணவனும் மனைவியும் பிரம்மசரியத்தை ஏற்றோ, அதை மீண்டும் புதுப்பித்துக் கொண்டோ வானப் பிரஸ்த ராகின்றனர். தனது விருப்பு வெறுப்புக்களை முற்றிலும் அடக்க முடியாவிடினும், புலன்களை வயமாக்க முடிந்து, அவ்விதம் ஆக்கியவனையே வானப்பிரஸ்தன் எனலாம். இந்த ஆச்சிரமத்தை இன்று அழிந்துபட்ட தொன்றென்றே கருத வேண்டும்.

11. விருப்பு - வெறுப்புக்களை முழுதும் வென்று, மனோ-வாக்குக் காயங்களினால் சத்தியம், அஹிம்சை, பிரம்மசரியம் ஆகிய தத்துவங்களைப் பின்பற்றுகிறவனைத் துறவியெனக் கூற லாம். இத்தகைய துறவி, பற்றற்ற பணியாற்றிக் கொண்டு தனது சீவனத்தைப் பிச்சை யெடுத்தே நடத்துகிறான்.

12. ஆச்சிரமங்களுக்கும், புறவேஷங்களுக்கும் சம்பந்த மில்லை.

4. பெண் சமூகம்

1. பெண் சமூகத்தை இழிவாகக் கருதுதல், ஹிந்து சமூகத்தில் புகுந்த ஒரு குறைப்பாடேயன்றி, அதன் அங்கமல்ல. மதத்தை யொட்டி யொழுகும் மனிதனுக்கும் இந்த அலட்சிய புத்தி இருப்பது, இக்குறையின் வேர் எவ்வளவு ஆழத்திற்கு ஓடி யிருக்கிறது என்பதையே காட்டுகிறது.

2. பெண்ணுக்கும், ஆணுக்கும் இயற்கையிலேயே வேற்றுமை யுண்டு. இதனால் தினசரி வாழ்க்கையில் அவர்கள் புரிய

வேண்டிய கடமைகளும் வேறுபட்டே யுள்ளன. ஆயினும் இருவரிடையே யாரும் உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ அல்ல; இருவரும் சமூகத்தின் ஒரே வகைத்தான கௌரவத்திற்கும், மதிப்பிற்குமுரிய உறுப்பினரே.

3. ஆண் மகன் ஒரு புறத்தில் பெண் சமூகத்தை அமுக்கி அறியாமையில் ஆழ்த்தி, அசட்டைப்படுத்தி அவதூறு செய்கிறுன்; மற்றெரு புறத்தில் தனது இன்ப வேட்கையைப் பூர்த்தி செய்வதற்குரிய கருவியாகக் கருதி, இதே நோக்குடன் பதுமையைப்போல் அவளை அலங்கரித்து, முகஸ்துதியும் செய்வதுடன், இவ்வகையில் அவளுடைய இன்பவாசையை எழுப்ப முயலுகிறுன். இவ்விரு வகையிலும், பெண் சமூக மட்டுமின்றி, அவனும், முழுச் சமூகமுமே பெருத்த வீழ்ச்சி அடைந்திருக்கின்றன.

4. வளர்ப்பு, கல்வி பயிற்றல் ஆகியவைகளில் பெண்ணுக்கும், பிள்ளைக்கு மிடையே வேற்றுமை பாராட்டி, பெண்களின் விஷயத்தில் குறைந்த கடமை யுணர்ச்சியுள்ள தாய் தந்தையர் பாவம் புரிகிருர்கள்.

5. வயது வந்த ஆணுக்குள்ள சுதந்திர உரிமை பெண்ணுக்கு முண்டு.

6. பெண் அபலை (பலமற்றவள்) அல்ல. தன் ஆற்றலை யுணர்ந்தால் ஆணைவிட அதிகமான சக்தி யுள்ளவளே. அவள் தாயாயிருந்து பிள்ளையை ஆக்குவதையும், மனைவியாயிருந்து கணவனை நடத்துவதையும் ஒட்டியே பெரும்பாலும் ஆண் அமைகிறுன்.

7. பெண்களிடம் அமைந்துள்ள எல்லையற்ற ஆற்றல், அவர்களுடைய புலமையையோ, உடல் வலிமையையோ பற்றியதல்ல; அவர்களுடைய அதீத நம்பிக்கையும் உணர்ச்சிவேகமும் பெருத்த தியாக சக்தியுமே அதற்குக் காரணமாகும். அவள் இயற்கையிலேயே நெகிழ்வும், தர்மப் பற்றும் கொண்டவள். ஆண் மகன் நம்பிக்கை யிழந்து சோரும்பொழுதும், தவருன இலட்சியங்களில் சிக்கி உழலும் பொழுதும், பெண் நம்பிக்கை கொண்டு நேர் பாதையில் உறுதியுடன் முன்னேறுகிருள்.

8. உலகில் முக்கியமாகப் பெண் சமூகத்திலுலேயே தர்மம் காக்கப்பெற்று வருகிறது.

9. பெண் தனது பலத்தையும், தனிப்பணியின் தன்மையையும் நன்கு உணர்ந்துவிட்டால், தன்னை ஆணை யண்டிப்

பிழைக்க வேண்டியவள் என்றே, அவனையோ, அவனுடைய செயல்களையோ பின்பற்றுவதே தனது குறிக்கோள் என்றே கொள்ளாள். அவள் புருஷனை மகிழ்விக்கவோ, தன்னிடமிழுக்கவோ வேண்டித் தன் உடலை அலங்கரித்துக் கொள்ளாள்; தன் உள்ளத்தின் ஒளியினாலேயே விளங்க விரும்புவாள்.

10. பொதுக்காரியங்களில், பெண்ணும், ஆணையொத்தே பங்கு பெற வேண்டும். கள்ளொழிப்பு, வீழ்ச்சியுற்ற பெண்களைக் கைதூக்கி விடுதல் முதலிய எத்தனையோ பணிகளைப் பெண்கள் அதிகச் சிறப்புடன் செய்ய வியலும்.

11. பெண்களுக்கு மணம் செய்துதான் ஆகவேண்டுமென்பது தவறு. அவர்களுக்கும் ஆயுள் முழுமையும் பிரம்மசாரியா யிருக்க உரிமையுண்டு.

12. மனைவி தன் இஷ்டத்திற் கெதிராகக் கணவனின் போக விச்சையைப் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டவள் அல்ல. அவ்வாறு செய்யும்படி வற்புறுத்தும் கணவன் பரதாரத்தைப் புணர்ந்த பாவம் புரிந்தவனாகிறான்.

5. தீண்டாமை

1. தீண்டாமை, ஹிந்து மதத்தின் அங்கமல்ல, அதில் புகுந்துள்ள ஒரு கறை, குறை அல்லது பாவம் ஆகும். அதைப் போக்குவது ஒவ்வொரு ஹிந்துவின் தர்மமும் சிறந்த கடமையுமாகும்.

2. தீண்டாதார் என்று கருதப்படுவோரும் நான்கு வர்ணங்களைச் சேர்ந்தவர்களே.

3. பிறப்பிலேயே எழுந்ததாகக் கருதப்படும் இந்தத் தீண்டாமையினால் அஹிம்சையும், மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதல் என்ற உயர்ந்த தத்துவமும் மீறப்படுகின்றன. இதற்கு ஆதாரம் அடக்கமல்ல, உயர்வு பற்றிய செருக்கேயாகும். ஆகையால் இது அதர்மம் என்பதில் சந்தேகமே யில்லை. இது மதத்தின் பெயரினால், லட்சமல்ல, கோடிக்கணக்கானவர்களை அடிமைகளை யொத்த நிலையில் ஆழ்த்திவிட்டது.

4. பொதுத் திருவிழா, கடைவீதி, கடை, பள்ளி, சத்திரம், கோயில், கிணறு, ரயில், மோட்டார் முதலியவைகளைத் தடையின்றி உபயோகிக்க மற்ற ஹிந்துக்களுக்குள்ள உரிமை நிச்சயமாகத் தீண்டாதாருக்கும் உண்டு. இதை அவர்களுக்குத் தர

மறுப்போன் அநியாயம் செய்கிறுன். இதைத் தருவோர் அவர்களிடம் கருணை காட்டுவதாக அர்த்தமில்லை ; அவர்கள் செய்வதெல்லாம் தம் குற்றத்தைத் திருத்திக்கொள்வதேயாகும்.

5. நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகக் கொடுமைக்குள்ளாகி, பண்புற்ற வர்ணத்தாரின் சேர்க்கை யின்றி வாழ்ந்தமையால், தீண்டாதாரின் நிலை மிகவும் பரிதாபமாக இழிவுபட்டுப் போயிற்று ; அவர்களைக் கைதூக்கிவிட்டு மற்ற வர்ணத்தாருடன் சேர்க்கும் பொருட்டு, பண்புற்ற ஹிந்துக்கள் பெரிதும் முயலுதல் அவசியம். ஆகையால் தீண்டாதார் முதலிய மற்ற தாழ்த்தப்பெற்ற, முன்னேற்ற மெய்தாத சமூகங்களின் ஊழியத்தின் பொருட்டுத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தலும், அப்பணியில் தாராளமாக உதவுதலும், இந்த யுகத்தில், பண்பாடுள்ள ஹிந்துக்களின் மிகத்தூய கடமையாகும்.

6. இவ்வகையில், தாழ்த்தப்பெற்ற ஜாதிகளுக்கு பிரத்தியேகமான ஸ்தாபனங்களும் வசதிகளும் தேவை. ஆனல் அத்தகைய தனி ஸ்தாபனங்களும் வசதிகளும் அமைத்துத் தருவதால் பொது ஸ்தாபனங்கள் - வசதிகள் ஆகியவைகளினுல் பயன்பெறுவதற்கு அவர்களுக்குள்ள உரிமை போய்விட்டதாகாது.

7. தீண்டாதாரின் நிலையைச் சீர்திருத்தும் பொருட்டு, அவர்களைத் தம் பரம்பரைத் தொழிலை விட்டு விடச் செய்வதோ, தம் தொழிலை வெறுக்கும்படிச் செய்வதோ அவசியமில்லை. இத்தகைய பயனைக் கருதிச் செய்யப்படும் முயற்சி அவர்களுக்குச் செய்யப்பட்ட தீங்கே யன்றி, பணியாகாது. நெய்வோன் நெய்து கொண்டும், சக்கிலி தோல் பதனிட்டுக் கொண்டும், தோட்டி சுத்திசெய்து கொண்டு மிருக்கையிலேயே, அவர்களைத் தீண்டாதோர் என்று கருதாதிருந்தால்தான் தீண்டாமை விலகிற்றென்று கருதலாகும்.

8. தோட்டி சமூகத்தின் கழுவடைகளைப் போக்கி அதைச் சுத்தமாக்கும் தூய பணியாற்றுகிறுன். இது முறையாக நடைபெருவிட்டால் சமூகமே சாகுந்தறுவாயை எய்திவிடும். அவர்கள் தம் தொழிலின் காரணமாகப் பண்பாடுருமலும் பல மற்றும் இருக்கிருர்கள் என்ற கூற்று உண்மை யல்ல. இத்தொழில்களை மற்றைத் தொழில்களுக்குச் சரி சமமாகவே கருத வேண்டும். மற்றைத் தொழில்களைப்போல், இதிலும் சீர்திருத்தங்களுக்கு இட மிருக்கிறது ; ஆனல் அது முற்றிலும் வேறு

விஷயம். பண்பாடுள்ள ஹிந்து இத்தொழிலேயேற்று, இதை மிகவும் சிறப்புறச் செய்யலாம்.

9. மரித்த பிராணியின் மாமிசத்தைப் புசிக்கும் வழக்கம் தீண்டாதாரிடையே புகுந்திருப்பதிலிருந்து அவர்களுடைய ஏழைமை எவ்வளவு பரிதாபமானதென்று தெரிகிறது. இந்த ஏழைமையைப் போக்கி அவர்களுக்கு நற்போதனை செய்தால், இந்த வழக்கம் ஒழிந்துவிடும்.

10. தன் நடத்தையை மட்டும் நன்கு கவனித்துக்கொள்வதால் ஒருவன் பண்பாடு பெறவியலாது. நாம் ஒன்றைத் தீய வழக்கமென்று கருதும்பொழுது, அதையே நம் காரணமாகவே வேறு புகலின்றிப் பிறர் செய்ய நேரிடுமானுல் நமது பண்பாடு பண்பாடே யல்ல வென்பது வெளிப்படை. தம்மைப் பண்பாடுள்ளவரென்று கருதும் வர்ணத்தார் தீண்டாதாருக்கு எச்சில், பழையது, கழிவு முதலிய அசுத்தமான பொருள்களைத் தருவதும், அவர்களுக்கு மிருகங்களையும் விட அதிகக் கொடுமை புரிவதும் பண்பாடில்லாமையும் பாவமுமாகும்.

6. உணவு—விதியும் விலக்கும்

1. மனிதன் எதையும் உண்ணும் பிராணியல்ல. அவன் உண்ணக்கூடிய பொருள்களுக்கு வரம்புண்டு. ஆனுல் வர்ண தர்மத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இதில் தீண்டலும் தீண்டாமையும் கொண்டாடுவது குற்றமாகும்.

2. சுத்தம் முதலியவற்றின் விதிகளை அனுசரித்து, உண்ணத் தக்கது தகாதது என்பதைப் பகுத்தறிவை யொட்டி கவனித்துக் கொண்டால், எல்லா வர்ணத்தாரும் ஒரே வரிசையில் உண்பதில் குற்றமொன்றுமில்லை. குறிப்பிட்ட வர்ணத்தைச் சேர்ந்தவனே உணவு தயாரிக்க வேண்டுமென்று கூற அறவே தேவையில்லை.

3. உணவருந்துவதற்கு இன்று அளிக்கப்படும் முக்கியத்துவம், தீண்டாமைக்கு பலம் அளிக்கிறது. அது நாவடக்கத்திற்குப் பதிலாக போக விச்சையைத் தூண்டவே உதவுகிறது.

4. ஆகையால், சாதி, குலம், மதம் ஆகிய வேற்றுமை காரணமாக அனுஷ்டிக்கப்படும்—குறிப்பிட்ட ஒருவர் சமைத்ததை உண்ணுமை, குறிப்பிட்ட ஒருவருடன் இருந்து உண்

ருமை என்ற—வேற்றுமைகள், மதத்தின் அறிகுறிகளல்ல. இவ்வேற்றுமை யுணர்ச்சியினால் ஹிந்து மதத்துக்குத் தீமை விளைந்திருக்கிறது.

7. மணம்

1. மணம் செய்துகொள்வதால் மனம் போனபடி போகத்தை நுகர்வதற்குச் சுதந்திரம் கிடைத்து விடுகிறது என்று கருதுவது பாவமாகும். பெண்ணும் ஆணும் மக்கட் பேற்றை விரும்பிக் கூடும்பொழுதுதான், கூடல் தர்மமொப்புவ தாகிறது. இந்த விருப்பத்தை ஈடேற்றுவதற்குரிய தூய முறை மணம் புரிதலாகும்.

2. மணத்தைக் கோரும் பெண்ணோ ஆணோ, தானே ஆண் அல்லது பெண்ணைத் தேர்ந்துகொள்வது, சாதாரணமாக விரும்பத்தக்கதல்ல. இதில் அடிக்கடி உள்ளத்தால் வியபசார மும், சில சமயம் உடல் வியபசாரமும் நடப்பதற்குச் சந்தர்ப்ப முண்டாகும். தவிர, அனுபவம் குறைவாயுள்ள வாலிபமாகை யாலும் போக ஆசையாலுண்டாகும் வெறியாலும், செய்யப் படும் முடிவு அறிவுக்கு உகந்ததாயிருத்தல் ஓரளவுக்கே சாத்திய மாகும்.

3. ஆகையால் மணத்தைக் கோருவோர் தம் விருப்பத் தையும் மணத்தைப் பற்றிய தம் நிபந்தனைகள் அல்லது தாம் செய்துள்ள (விதவையை மணத்தல், சாதிக்குப் புறத்தும் பணம் கொடுத்தல் வாங்கல் இல்லாமலும் மணத்தல் முதலிய) தீர்மானங் களைத் தமது பெரியோர் அல்லது அவரை யொத்த நண்பர் களிடம் தெரிவித்து, அவற்றின்படித் தமக்குத் தேர்ந்து உதவும் படிக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

4. பெரியோர், பெண் - ஆணின் சுபாவம், குணதோஷங் கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர் களுக்குத் தகுந்த சோடியைத் தேட முயல வேண்டும். இரு வரும் மற்றவரின் குணதோஷங்களை உணருமாறு செய்ய வேண்டும். இருவரின் வாழ்க்கையிலும், முக்கியமாக அறிய வேண்டிய நிகழ்ச்சிகள் ஏதேனும் நடந்திருந்தால் அவற்றை வெளியிட வேண்டும். தேர்ந்தெடுப்பதில் மிகவும் முக்கியமான அம்சத்தை மறைத்தல் ஆகாது.

5. எல்லா விஷயங்களையும், அறிவித்த பின்னர், ஆணும்

பெண்ணும் சந்தித்து ஒருவர் மற்றவரை அறிதலோ, ஒருவர் மற்றவருடன் சம்பாஷித்தலோ தேவை யென்று தோன்றினுல் மரியாதையாக அவ்வாறு செய்வதற்குப் பெரியோர் வசதி செய்தும் தரவேண்டும்.

6. இதன் பயனுக, அவர்கள் ஒருவர் மற்றவரை ஏற்ப தென்ற முடிவுக்கு வந்தால், அவர்களைக் கூட்டி வைத்துவிட வேண்டும். இருவரில் ஒருவர் முடிவு செய்யாமலோ, சம்மதம் தராமலோ இருக்கும் வரையில், சம்பந்தம் செய்தல் கூடாது. அப்பொழுது பெரியோர் வேறிடத்தைப் பார்க்க வேண்டும்.

7. நிச்சயம் ஆனதற்கும் மணம் நடைபெறுவதற்கும் இடையில், உடல் சேர்க்கையை உசிதமான வரம்புக்குள் வைத்துக்கொண்டு, பிரும்மசரியத்தில் உறுதியுடன் கடிதப் போக்கு வரத்து நடத்துவதோ, சந்திப்பதோ குற்றமாகாது. அடக்க முள்ள பெண்ணும் ஆணும் இந்த இடைக்காலத்திலும் தம் வர விருக்கும் கணவர் அல்லது மனைவியுடன் போகத்தைப் பற்றிய பேச்சோ, கற்பனைகளோ செய்யாது இருவரும் உயர்வதற்குரிய விஷயங்களைப் பேசிக் கற்பனைகளும் செய்வார்கள்.

8. மணத்துக்குப் பிறகும், அவர்கள் மணத்தை ஒரு தர்ம மென்றே கருதுவார்கள். தர்மத்தில், வரம்பு, பகுத்தறிவு ஆகிய வையும் அடங்கியவையே. ஆகையால் வரம்பை யுணர்ந்து, பகுத்தறிவுடன் வாழ்க்கை நடத்தும் சதிபதிகள் இல்வாழ்க்கையை முறைப்படி நடத்துவோராவர். வரம்பை மீறுவோர் தர்மத்தைப் பாதுகாப்பவரல்ல, மனம்போனபடி வாழ்வோரே.

9. மக்கட்பேற்றை விரும்பாதபொழுது மணம் புரிதல் தகாது. ஆனுல் மணம்புரிந்த பிறகு இருவரும் புலனடக்கத்துடன் வாழ விரும்பினுல், மணத்தை வீணுனதாகக் கருதத் தேவையில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து இயற்றவேண்டிய வேலைகள் சமூகத்தில் எத்தனையோ உண்டு. அவைகளில் ஒருவருக்கொருவர் தர்மத் தோழமையுடன் இருந்து தமது நெருங்கிய சம்பந்தம், ஊழியத்தில் பயன்பெறும்படிச் செய்யலாம்.

10. பிள்ளைப்பேற்றில் விருப்பமில்லாதிருந்தாலும், இருவரில் ஒருவருக்கு அதற்குரிய தகுதியோ ஆற்றலோ இல்லாதிருந்தாலும், இருவரிடையிலும் மனவொருமை யில்லாத பொழுதும், கணவனும் மனைவியும் கூடுவாராயின், அதைப் பாவமென்று கருதவேண்டியதே.

8. மக்கட்பேற்றைக் கட்டுப்படுத்தல்

1. ஆலோசனையின்றி மக்களைப் பெற்றுக்கொண்டேயிருப்பதும், பெற விரும்பிக்கொண்டே யிருப்பதும் மடமையின் அறிகுறிகளே.

2. இன்றோ ஆலோசனை யில்லாமல் மக்களை விருத்தி செய்துகொண்டிருப்பதைத் தடுப்பது அவசியமாகும்; ஆனால் இதற்கு உதவும், தர்மம் ஒப்பும் முறை, பிரும்மசரியம் ஒன்றே.

3. பிள்ளைப்பேற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, செயற்கை முறைகளைக் கைக்கொள்ளுதல் தர்மத்தோடும், நியாயத்தோடும் பொருந்தாததோடு, தீய பயன் விளைவிப்பதும் ஆகும். இதனால் எல்லா வகையிலும் சமூகத்திற்கு வீழ்ச்சி உண்டாகிறது.

9. சதிபதிகளின் பிரம்மசரியம்

1. மனைவியும் கணவனும் ருதுகாலங்களுக்கிடையில் கூடவே வேண்டுமென்ற எண்ணம் தவறானது. ஒருவருக்குக் கூட விருப்பம் இல்லாதபொழுதும், மற்றவரின் ஆசையை நிறைவேற்றும்பொருட்டுக் கூடுவதற்கு இசைய வேண்டுமென்ற கருத்தும் தவறே.

2. இதிலிருந்து இருவருள் ஒருவரின் போகவாசை குறைந்து விடவே, இந்திரியத்தை அடக்க முடிந்தால் பிரம்மசரியத்தை அனுஷ்டிக்க அவருக்கு உரிமையுண்டு. அப்பொழுது அவர் தமது துணைவர் அல்லது துணைவியின் ஒத்துழைப்பை விரும்புவாரேயன்றி, அதை இன்றியமையாததாகக் கருத மாட்டார்.

3. கணவனுக்கு விருப்பம் இல்லாதிருக்க மனைவி இவ்வாறு முடிவு செய்வதால், கணவனுடைய நிலை நிச்சயமாய்க் கஷ்டமாகி விடுவது சாத்தியமே. தனது கடமையைத் தெளிவாக உணரும் மனைவி இந்தக் கஷ்டத்தைச் சத்தியாக்ரஹத்தின் உதவி கொண்டு பொறுத்து, வரும் துக்கத்தை ஏற்க வேண்டியதே.

4. கணவன் இவ்வாறு முடிவு செய்யும்பொழுதும், போக வாசை அதிகமுள்ள மனைவியின் நிலை கஷ்டமாகிவிடும். ஏனெனில், இரு சந்தர்ப்பங்களிலும் சட்டமும், மக்களின் அபிப்பிராயமும் மனைவிக்கு விரோதமாகவே இருக்கின்றன. ஆனால்,

இவ்வாறு தர்ம நோக்கத்தினுல் பிரம்மசரியத்தை ஏற்கும் கணவன், தன் மனைவியின் எதிர்காலத்தைச் சுளுவாக்குவான். அவன், சட்டத்தைப் பொருட்படுத்தாமல், அந்த ஸ்திரீயுடன் தனக்கு முறைப்படி மணம் நடந்திருப்பதாகவே கருதி, சட்டத்திலும் சமூகத்திலும் விளையும் துன்பங்களை ஏற்பதற்குச் சம்மதமுள்ள ஒரு புதிய கணவனைத் தேடுவதில் அவளுக்கு உதவி செய்வான்; இவ்விதமாகச் சட்டத்தைத் திருத்துவதற்கும் உதவி செய்வான். இத்தகைய கணவன் கிடைக்கும் வரையில் அவளை மரியாதையுடன் வைத்திருப்பான்.

10. கைம்பெண் மணம்

1. ஹிந்துக் கைம்பெண், தியாகமும் தூய்மையுமே உருவெடுத்தவள். தாய்போல எல்லோருடைய வழிபாட்டையும் பெறத் தகுதியுள்ளவள். அவளை 'அமங்கலி' யென்று கருதும் ஹிந்து சமூகம் பெருத்த குற்றம் செய்கிறது. சுபகாரியங்களில் அவளை இருக்கச் செய்யவும், அவளுடைய ஆசி பெறவும் முயல வேண்டியது அவசியமாகும். தூய கைம்பெண்ணை சமூகத்தின் அணியென்று கருதி, அவளுடைய மதிப்பையும் மரியாதையையும் பாதுகாக்கவேண்டும்.

2. ஆனுல் பெண் சமூகத்தைக் குறித்து வழங்கும் அலட்சிய புத்தி, கைம்பெண்ணுக்கு அநீதி செய்யவும் தவறவில்லை. இதனுல் ஹிந்து விதவையின் நிலை தீண்டாதவர்களைப்போலவே பரிதாபமானதாகி விட்டது.

3. கைம்பெண் தியாகமே உருவெடுத்தவள்தான்; ஆனுல் ஒருவளை நிர்ப்பந்தித்துக் கைம்பெண்ணுகவே யிருக்கச் செய்தல் தகாது. நிர்ப்பந்தத்தினுல் செய்யப்படும் தியாகமானது தன்னிடமுள்ள தெய்வத் தன்மையை இழந்து, தன்னை வழி பாட்டிற்குரிய ஆதர்ச நிலையென்று கருதுவதற்கு இடமில்லாது, இரக்கத்திற்கு உரியதாகச் செய்துகொள்கிறது.

4. இதனுல், மனைவியை இழந்த ஆடவனுக்கு மீண்டும் மணம் புரிவதற்குள்ள உரிமை, கைம்பெண்ணுக்குமுண்டு.

5. பாலவிதவை, பாலிகை மணத்தின் விளைவாகவே 15-16 பிராயத்துக்குமுன் பெண்ணுக்கு மணம் நடத்தவே கூடாது. இத்தகைய மணத்தினுல் உண்டான கைம்மை கைம்மையே அல்ல. இத்தகைய கைம்பெண்ணை, மணமாகாதவளைப்

போலவே கருதி, மணமாகாதவளுக்கு தாய் தந்தையர் மணம் முடிக்கக் கவலைகொள்வதைப் போலவே இவள் விஷயத்திலும் கொண்டு, மணம் செய்துவைக்க வேண்டும்.

6. மணத்தை நாடும் ஹிந்து யுவர்கள் இத்தகைய பாலிகைக் கைம்பெண்களையே மணப்பதென்று உறுதிசெய்து கொள்ளுதல் நலம் என்று கூறலாம். மனைவியை இழந்த யுவர் மீண்டும் மணப்பதெனில், விதவையை மணப்பதே, தர்மமென்று கருதவேண்டும்.

11. கலப்பு மணம்

1. மணத்தில், அடக்கம், சுகம், வர்ணம் (தொழிலைப் பற்றிய பாகுபாடு) ஆகியவற்றை கருத்தில்கொண்டு, தனது வர்ணத்தையே மணத்தின் வரம்பென மதித்தல் சாதாரணமாக விரும்பத்தக்கதே. ஆனால் வர்ணமுறை இன்று சின்னபின்னமாகிக் கிடக்கிறது. இந்நிலையில் தர்மத்தைச் சார்ந்தோரிடையே குணத்தையும் தொழிலையும் கவனித்து மணம் செய்தல் சரியே. இவ்வாறு பிற வர்ணத்தவரை மணம் புரிதல் குற்றமாகாது.

2. விதேசத்தவர், வேறு மதத்தார் ஆகியோரை மணக்கும்பொழுது மதத்தின் நிர்ப்பந்தமில்லை. ஆனால், அதில் பல இடைஞ்சல்கள் குறுக்கிடக் கூடுமாகையால் விதிவிலக்காகவே இத்தகைய மணம் புரிதல் நலம்; அதற்கும் காரணம் பாரமார்த்திகமா யிருத்தல் வேண்டும்.

IV சத்தியாக்ரஹம்

1. சத்தியாக்ரஹியின் கடமை

1. மேலே படிக்குமுன் வாசகர்கள், இரண்டாம் அத்தியாயம், மூன்ருவது பகுதியில் சத்தியாக்ரஹத்தைப்பற்றித் தரப்பட்டிருக்கும் சாதாரண விளக்கத்தை மீண்டு மொருமுறை படித்தல் நலம்.

2. தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமுள்ள சம்பந்தம் எத்தகையதெனில், எந்தச் சமூகத்திலிருந்து ஒருவன் உண்டாயிருக்கிருனே, அது தர்மத்தில் பொதுவாக அடைந்திருக்கும் முன்னேற்றத்தைவிட மிகவும் அதிகமாக அவன் முன்னேறியிருக்கவியலாது. சென்ற காலத்திய மகாபுருஷர் ஒருவருடன் ஒப்பிடும்பொழுது இன்றைய ஒரு மகான் தர்மக் கருத்துக்களிலும் தர்மானுஷ்டானத்தின் ஒரு பகுதியிலும் முன்னேறியிருந்தால், அதற்குக் காரணம் அநேகமாக அந்த மகாபுருஷர் வாழ்ந்த காலத்திய சமூகத்தைவிட இன்றைய சமூகம் அந்த தர்மக் கருத்துக்களிலும் அனுஷ்டானங்களிலும் முன்னேறியிருப்பதேயாகும். இவ்வாறே மனித சமூகத்தில் மேன்மேலும், தர்மம் தூய்மை பெற்றுக்கொண்டே யிருக்கும் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

3. ஆகையால் எந்த மனிதனும் தன்னைச் சூழ்ந்துள்ள தீமைகளைக் கவனியாது இருந்து கொண்டே தான் ஆன்மீகத் துறையில் வெகுவாக முன்னேற வியலாது.

4. இவ்வகையில், தன் மட்டில் சத்தியம் - அஹிம்சை ஆகியவற்றை அனுசரித்து வெற்றி யெய்துவதெனினும், சமூகத்தில் நடைபெறும் கொடுமையை எதிர்ப்பது அவனது கடமையாகிறது.

5. எந்த அளவுக்கு சத்தியம் முதலான குணங்கள் அவனிடம் வளர்ந்துள்ளனவோ, அந்த அளவுக்கு அதை (கொடுமையை) எதிர்த்தல் தன் கடமையென்று அவனுக்குத் தோன்ற, அவன் அவ்வாறே செய்யக்கூடும்.

2. சத்தியாக்ரஹியின் வரம்பு

1. சத்தியாக்ரஹ தத்துவம் இன்னும் சம்பூர்ணமாக அனுபவத்தில் முதிர்ந்த சாஸ்திரமாகவில்லை. இதன் அனுஷ்டானம் தற்சமயம் ஆரம்ப தசையிலேயே இருக்கிறது. இதைக் கையாண்டு இதன் சக்தியை அறியும் பூர்ண வல்லமை பெற்றவன் இன்னும் தோன்றியதாய்த் தெரியவில்லை.

2. ஆகையால் இதில் எல்லா வகையான அதர்மங்கள், அநியாயங்கள், சச்சரவுகள் ஆகியவைகளைப் போக்குவதற்கு வேண்டிய ஏதோ மந்திரம் அடங்கி யிருப்பதாக யாரும் எண்ண வேண்டாம். சத்தியத்திலும், அஹிம்சையிலும், இந்தச் சக்திகள் நிச்சயமாக உண்டு என்ற நம்பிக்கையுடன், சத்தியாக்ரஹி இவற்றைக்காண முயலவேண்டும்.

3. இதற்கிடையில், பலவகையான அதர்மங்கள், அநியாயங்கள், சச்சரவுகள் ஆகியவற்றைப் போக்குவதற்கு வேண்டிய ஆற்றல் தம்மிட மில்லாதிருப்பதைக் கண்டு, உத்ஸாக மிழப்பதோ, வாளா யிருப்பதோ கூடாது.

4. அதர்மங்களைப் போக்கும் பொருட்டு, சத்தியாக்ரஹ முறையைக் கையாள முடியாதவனுடைய உள்ளத்தில் ஹிம்சை முறைக்கான யோசனைகள் உருப்பெற்றுக் கொண்டிருக்கும். சத்தியாக்ரஹி அம்முறைகளைக் கைவிட்டோ, தான் உடல் பொருள்களினுல் உதவமறுத்து நடு நிலைமை தாங்கியோ, அந்த ஹிம்சையில் தனக்குள்ள நியாயமான பொறுப்பைக் குறைத்துக் கொள்ள வியலாது. தனது அஹிம்சை முறையைத் தெரிவித்து, அதை அனுசரித்து நடவடிக்கையும் எடுத்தால்தான், அவன் அந்தப் பொறுப்பினின்றும் விடுபட்டதாகக் கருதப்படுவான்.

5. இதனுல், சத்தியாக்ரஹி மறுப்பதும் நடு நிலைமை வகிப்பதும் எப்பொழுதுமே தவருகக் கருதப்படும் என்பதல்ல. பல சமயங்களில் இதுவே கடமையும் ஆகலாம்.

6. ஆனுல் ஹிம்சையில் பெரிதும் சிறிதுமான அளவில் நேரிடையாகக் கலந்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் சத்தியாக்ரஹிக்கு வரலாம். உதாரணமாக, குற்றவாளிக்குத் தண்டனை வாங்கித் தருதல், போர் மூண்ட காலத்தில் தனது அரசாங்கத்துக்கு உதவுதல் முதலியன. எந்த அரசாங்கத்தில் அவன் இருக்கிருனே, எதனுடைய காவலில் அவன் வாழ்கிருனே, அதற்கு அவனுல் அஹிம்சை முறையைக் காட்ட முடியவில்லை

யானுல் ஹிம்சையைச் சாதாரணமாக எதிர்ப்பதாலோ, உதவி மறுப்பதாலோ, ஹிம்சையின் பொறுப்பினின்றும் அவனுல் விடுபடவியலாது.

7. ஆனுல் இத்தகைய உதவி செய்துகொண்டே, அந்த உதவியின் தன்மையினுல், தனக்குள்ள சத்தியப்பற்று, தனது அஹிம்சைமுறை ஆகியவற்றைப் புலப்படுத்துவதுடன், அஹிம்சை முறையைக் கண்டுபிடிக்கவும் முயற்சி செய்வான்.

3. சத்தியாக்ரஹத்தின் மூலதத்துவம்

1. மனிதன் எவ்வளவு சுயநலமுள்ளவனுயினும் சரியே, எவ்வளவு கொடியதும் இழிந்ததுமான உபாயங்களைக் கையாள் வதற்குச் சித்தமாயினும் சரியே, சத்தியமே சாலச் சிறந்த தென்ற உண்மையை அவனது உள்ளம் நம்புவதால் அதனிடம் அவனுக்கு மரியாதையும் அச்சமும் இருந்து கொண்டே யிருக்கிறது. எல்லா மனிதர்களின் உள்ளங்களிலும் உறைந் துள்ள சத்தியத்தைப்பற்றிய இவ்வுறுதியும் மரியாதையும் அச்சமுமே சத்தியாக்கிரஹ சாஸ்திரத்தின் வித்தாகும். இதையே மனிதனின் உள்ளத்தெழும் 'ஒலி' என்று அழைக் கலாம்.

2. சுயநலத்தில் சிக்கிய மனிதன் சிறிது காலத்துக்கு இந்த 'உள்ளக்குரலை' மதியாதிருக்கவும், அடக்கவும் முயலுகிறுன். ஆனுல் அவனை யெதிர்ப்போன் உண்மையான சத்தியாக்ரஹி யென்பது உறுதியாயின் இறுதியில் அக்குரலைக் கேளாமல் அவனுல் இருக்கவியலாது.

3. இக்குரல் பலவகையாக அவன் முன் எழும். தனது அநியாயத்தை யுணர்ந்து, அதற்காக வருந்துவது இதன் தலை சிறந்த தன்மையாகும். இதற்கே மனமாற்றம் என்று பெயர்.

4. ஆனுல், இதிலும் குறைந்த வேகத்துடன் இக்குரல் எழுவதுமுண்டு; உதாரணமாக, உலகத்தார் எள்ளி நகை யாடுவாரோ வென்றும், தாம் முற்றிலும் அழிந்துபடுவோமோ வென்றும் ஐயுறுதல்.

5. சத்தியாக்ரஹியின் எதிரி ஒரு தனி மனிதனு யிராமல், ஒரு நாடோ, சாதியோ, ஸ்தாபனமோ ஆகுமானுல், அதைச் சார்ந்த நேர்மையுள்ள மனிதனெருவனுக்கு அக்குரல் முதலில்

கேட்க, அவனது மனம் முதலில் மாற்றமெய்தும்; பிறகு தான் கேட்டதை அவன் தன்னைச் சார்ந்த பிறருக்கு அறிவிக்கிறன்; உண்மையைக் காக்கும்பொருட்டு அவர்களை எதிர்க்கவும் செய்கிறன்.

6. எதிரியின் மனத்தை, 'உள்ளக்குரலை'க் கேட்கும்படி தூண்டுவது ஒவ்வொரு சத்தியாக்ரஹத்திற்கும் குறிக்கோளாகும். அநியாயத்தைப் போக்கும் பொருட்டு, எதிரி புரிய வேண்டிய செயல்களெல்லாம் இந்த இலட்சியத்தினின்றும் பின்னர் தாமே கிளைத்தெழும்.

4. சத்தியாக்ரஹத்தின் பொது இலட்சணங்கள்

1. சத்தியம் - அஹிம்சை ஆகிய கருவிகளினுலேயே அதர்மத்தை எதிர்க்கக்கூடும்—என்ற பொது விதி எல்லாவிடங்களுக்கும் பொருந்தும்.

2. அதர்மத்தை அழிப்பதற்குத் தர்ம மொப்பும் வழியொன்று நிச்சயமாக இருக்கவேண்டும் என்ற உறுதியுடன் ஆழ்ந்து சிந்திக்கும் சத்தியாக்ரஹிக்கு எதிர்க்கும் முறை கைவரும்.

3. சத்தியாக்ரஹத்தில், சத்தியாக்ரஹியே துன்பமேற்க வேண்டுமே யன்றி எதிரியைத் துன்புறுத்தும் எண்ணத்திற்கு இடமில்லை. ஆகவே, சத்தியாக்கிரஹி பிழைபுரிவானுனல் தேவைக்கதிகமான துன்பத்தை அவனே ஏற்க நேரும்.

4. ஆனல், இதனல் சத்தியாக்ரஹத்தின் பயனுக எதிரியைக் குறித்து மனம் கைப்புறுவதற்குப் பதிலாக, உள்ள வெறுப்பும் குறையவே, சத்தியாக்ரஹத்தின் இறுதியில் இருசாராரும் நண்பர்கள் ஆகின்றனர்.

5. சத்தியாக்ரஹத்திற்கு உகந்த முறையைக் கண்டு தெளியுமுன்னர், அதர்மத்தை எதிர்ப்பதற்கு, சத்தியாக்ரஹி நடவடிக்கை யொன்றும் தொடங்கான். அமைதியாக ஆண்டவனை வேண்டிக்கொண்டும், மக்களுக்கு வேறு வகையில் ஊழியம் செய்துகொண்டு மிருப்பான். இவ்வாறு செய்துகொண்டிருந்தால் ஒருநாள் தானே வழி புலனுவதுடன், அதில் முன்னேறுவதற்குரிய ஆற்றலும் கிட்டுமென்ற உறுதிகொண்டிருப்பான்; அதாவது, கடவுள் தமது எண்ணிலடங்காத சக்திகளின் மூலமாக அவனுக்கு வழியைக் காட்டுவார்.

6. சத்தியாக்ரஹம் என்ற கருவி கோஷ்டி பலத்தைப்பற்றி நிற்பதன்று. ஆயினும் கோஷ்டியினால் அதன் ஆற்றல் பெருகக் கூடும். உண்மையான சத்தியாக்ரஹத்திற்கும் பிழைப்பட்ட சத்தியாக்ரஹத்திற்குமுள்ள வித்தியாசத்தை உணர்வதற்கு இது ஒரு கருவியாகும். சத்தியாக்ரஹம் புரிவதாகக் கூறியவன், தான் தனியாயிருப்பதால் சத்தியாக்ரஹம் புரியவில்லை யென்று கூற முற்படுவானாயின், அவன் உண்மையான சத்தியாக்ரஹி யல்லவென்று கூறிவிடலாம். உண்மையான சத்தியாக்ரஹி தனக்குச் சங்கையின்றி புலனாகும் பாதையில் தனித்தே நடக்க முற்படுவான்.

7. ஆனால், தனியே ஒருவன் சத்தியாக்ரஹம் செய்ய முற்படுவதிலிருந்தே அவனது முறை எப்பொழுதும் சரியான தென்று கருதலாகாது. ஆயினும் அத்தகைய பிழையின் பயன் 3—4 ஆம் பாராக்களில் கூறப்பட்டவாறு அமையும்.

8. சத்தியாக்ரஹி பொய்யான மதிப்புக்கு ஆசைப்படான். அவன் தனது கருத்துத் தொடரிலோ, காரியவகையிலோ, பிழையிருப்பதை உணர்வானானால் வெகுவாக முன்னேறி யிருப்பினும் அங்கேயே நிற்கவோ, பின்னால் திரும்ப வேண்டு மானால் திரும்பவோ, தன் பிழையை ஒப்பவோ, நேர்ந்த தீங்கை ஏற்கவோ, மாற்றுகப் பிராயச்சித்தம் புரியவோ வெட்க மடைய மாட்டான். ஏனெனில் வேறெந்தக் கருத்தையும் காரணத்தை யும் அவன் சத்தியத்தைவிடக் குறைவாகவே மதிக்கிறான். இதனால் அவனுடைய நோக்கம் நிறைவேறுகிறதே யன்றி தடைப்படுவதில்லை; பிறகு பார்க்கும்பொழுது அவனது 'பிற்போக்கெ'ல்லாம் 'முன்னேற்ற'மாகவே ஆயிற்றென்பது உறுதியாகிறது.

5. சத்தியாக்ரஹத்திற்கு உரிய சந்தர்ப்பங்கள்

கீழே காணும் விதிகளை வழி துலக்கிகளாக மட்டுமே கருத வேண்டும்:

1. தன் விஷயத்தில் இழைக்கப்பட்ட தீங்குக்காக சத்தி யாக்ரஹி உடனே சத்தியாக்ரஹம் செய்யான். இத்தகைய தீமைகளைச் சாதாரணமாகச் சகித்துக்கொண்டேயிருந்து எதிரியை அன்பினால் தன் வசமாக்க முயல்வான். தனக்கிழைக் கப்பெறும் தீங்கில் சமூகத்தின் தீங்கும் இணைந்திருக்குமானால், அதைச் சாதாரணமான சத்தியாக்ரஹத்தினால் எதிர்ப்பான்.

2. இவ்வாறே, தனி மனிதன் இழைக்கும் தீங்கையும் ஒரு சமூகமோ, அதிகாரியோ செய்யும் தீமையையும் சத்தியாக்ரஹி வேறுபடுத்தி நோக்க வேண்டும். குறைகள் மலிந்த இந்த மனித சமூகத்தில் வலியோனால் எளியோன் துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கலாம். இத்தகைய ஒவ்வொரு சிக்கலிலும் தலையிடு வது சத்தியாக்ரஹிக்குச் சாத்தியமாகாது. அங்கே அவன், தன் ஆற்றல், வரம்பு, அநீதியின் தன்மை அதன் அப்பொழுதைய மதிப்பு, மாற்றுவதற்குரிய சட்ட ரீதியான பொதுமுறை ஆகிய வற்றைச் சிந்திக்கவேண்டும். இவ்வளவுக்குப் பிறகும், அவசிய மென்று தோன்றுமானால் தன் உயிரைக் கொடுத்தேனும் தீமையை யெதிர்க்க முயலுவான்.

3. சமூக, ராஜீயத் தீங்குகள் நடைபெறும்பொழுதும் பகுத்தறிவால் ஆராய்ந்து செயல் தொடங்கவேண்டும். சட்டத் தில் சிறிது தீங்கோ, அநீதியோ இல்லாதிருப்பினும் அதை நடத்தும் வகையில் தீமையும் அநீதியும் சேர்ந்துகொள்வதென் பது ஒருவகை அநீதியாகும்; அதை நடத்துவோன் தன் அநியா யத்தை சட்டத்தினால் மறைக்கிறான், அல்லது சட்டத்தைத் தன் கருவியாக்குகிறான்; இதில் அவன் நியாயம் அல்லது தர்மப்படி நடப்பதாக நடிக்க நேருகிறது. இதுவும் குறைகள் மலிந்த மனித சமூகத்தில் நடைபெற்றுக்கொண்டு தானிருக்கும். மனித சமூகத்தில் நற்குணங்கள் பெருகி, சமத்துவம் பெருத்த அளவில் பரவப்பரவ இந்த நிலையும் திருந்தும். இதில் நடைபெறும் தர்மம், நியாயம் ஆகியவற்றின் நடிப்பு, வேஷதாரியால் சத்தியதேவ தைக்கு அளிக்கப்படும் காணிக்கையென்று கருதி, ஒருவாறு சமாதானம் செய்து கொள்ளவேண்டியதே. ஆனால் இந்த மோசடி பெருவாரியாக எங்கும் நடைபெறத் தொடங்குமானால் இதை யெதிர்த்து சத்தியாக்ரஹம் செய்ய ஒரு முறையும், சந்தர்ப் பமும் எழலாம். உதாரணமாக, எங்கும் அடக்குமுறை தாண்டவ மாடும்பொழுது, தான் தப்பப் பார்க்காமல் தண்டனையை யேற்பது, தனி முறையில் சத்தியாக்ரஹம் புரிவதற்குரிய விதி யாகும்.

4. ஆனால் அநீதியோ, தீமையோ சிறிதும் தங்கு தடை யின்றி, 'உன்னால் முடிந்ததைச் செய்' என்று சவால் விடுவ தைப்போல் நடைபெற அதுவே தர்மம், நியாயம், சட்டம் என்ற கௌரவமான பெயர்களால் அழைக்கப்படுமானால், அப்பொழுது சத்தியாக்ரஹம் புரிதல் கடமையாகிறது.

ஏனெனில் அத்தகைய அநீதியையோ, தீமையையோ, ஏற்பவனுடைய ஆண்மை அழிவுறுகிறது.

6. சத்தியாக்ரஹத்தின் முறைகள்

1. எவ்வெவ்வகைகளில் சத்தியாக்ரஹம் செய்ய வியலுமென்று வரையறுத்துக் கூறமுடியாது. தீமையின் தன்மை, அதன் அளவு, தீமை புரியும் மனிதன் அல்லது சமூகத்தின் இயற்கை, அவனுக்கும் (அதற்கும்) நமக்குள்ள சம்பந்தம் நமது வாழ்க்கையிலிருந்தும் நாம் ஆதரித்து நிற்கும் மனிதனுடைய வாழ்விலிருந்தும் அத்தீமையை அழிப்பதற்குக்கிட்டும் ஆற்றல் ஆகிய இவற்றையெல்லாம் அனுசரித்து சத்தியாக்ரஹத்தின் முறையும் தன்மையும் அளவும் அமையும்.

2. பொதுவாக ஒன்று கூறலாம். அதாவது, ஒரே குடும்பத்திலுள்ள ஒருவன் தீமைபுரியும் மற்றொருவனுடன் எந்தெந்த வகைகளிலெல்லாம் நடந்துகொள்வானோ, அவைகளை யெல்லாம் சந்தர்ப்பத்திற்கு ஒத்தவகையில் சமூகத்திலும் அனுசரிக்கலாம்.

3. இவ்வாறு நற்போதனையில் தொடங்கி, உபவாசம், உதவிமறுத்தல், அடக்கத்துடன் விதியை மீறல், அந்தக் குடும்பம், சமூகம் அல்லது ராஜ்யத்தைத் துறத்தல், தனக்குள்ள உரிமைகளை அமைதியுடன் அனுபவித்தல், இவ்வாறு நடந்து வருகையில் குறுக்கிடும் சிரமங்களைச் சகித்தல் என்று பலவகைகள் உண்டு.

4. இவைகளுள் சரியான உபாயத்தை அளவு தெரிந்து கையாள்வது, பகுத்தறிவினால் ஆகக்கூடியதாகும். இது பழக்கத்தில் தெரியவரும்; ஆயினும் சில உபயோகமான குறிப்புக்கள் பின்வரும் பகுதிகளில் தரப்படுகின்றன.

5. ஆனால் சத்தியாக்ரஹம் என்பது தற்பொழுது அறைகுறையாக உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தை யொக்கும் என்பது நினைவிருக்கவேண்டும். உள்ளம், உரை, செயல் என்ற வகைகளில் சத்தியம் - அஹிம்சையைப் பின்பற்றுதலாம். தவம் புரியும் ஒருவர் இதனுடைய சக்திகளை ஆராயப் புகுவாரேல், அவருக்குப் பலவகைகள் தோன்ற, இதன் ஒப்பற்ற சக்தியும் வெளியாகும்.

6. சத்தியாக்ரஹத்தில் போரைத் தடுக்கும் ஆற்றல் இருக்க

வேண்டியது இன்றியமையாததாகும். இந்த ஆற்றல் பார்வைக்கு எவ்வாறு தோன்றுமென்று இன்று சொல்வது சாத்தியமல்ல. இதன் பொருள், இன்னும் அதிக நம்பிக்கையுடன் இதன் சக்திகளை யெல்லாம் ஆராய்ந்து உணரவேண்டுமென்பதே.

7. போதனை

1. எதிரிக்கு நற்போதனை செய்து சமாதானமாகக் காரியத்தை நடத்த முயலுதல், சத்தியாக்ரஹியின் முதல் அறிகுறியும், சத்தியாக்ரஹத்தின் முதல் படியும் ஆகும்.

2. போதிப்பதற்கு உதவும் எந்த முறையையும் அவன் கைவிடான். இதில் தன் முழுப் பொறுமையையும், தாராளத் தையும் காட்டுவான். இதன் பொருட்டு நண்பர்கள் தலையிட்டு நடுவு நிலையிலிருந்து நியாயம் வழங்க முயன்றால் அதை அசட்டை செய்யான்; அப்பொழுது, தான் கடைப்பிடித்துள்ள தத்துவங்களுக்குக் குறை நேராமல் விட்டுக்கொடுக்கவும் தயங்கான்.

3. போதனையால் பயனில்லை யென்பது புலனாகி, ஏதேனும் நடவடிக்கை எடுத்தே தீரவேண்டிய சமயம் வந்த பொழுது எதிரிக்கு இறுதியாகச் சமயம் தராமல் முன்னால் அடியெடுத்து வையான். முன் அடியெடுத்து வைத்தபின்னரும் எந்த நேரத்திலும் சமாதானம் செய்துகொள்ளச் சித்தமாகவே யிருப்பான். தான் ஏமாற்றமுறக் கூடுமாயினும், சமாதானத்தில் தனக்குள்ள ஆர்வத்தையும், மீண்டும் தொடக்கத்திலிருந்து கிளம்பிவரச் சித்தமாயிருப்பதையும் புலப்படுத்துவான். ஏனெனில், சத்தியாக்ரஹி உதவி மறுப்பினும், பகைவனாயினும், ஆவேசப் போரிடினும், தனது நரம்பு ஒவ்வொன்றிலும் பரவியுள்ள கூட்டுறவு, நட்பு, சமாதானம் ஆகியவற்றின் பற்றைக் கைவிடான்.

4. எதிரிக்கு மனமாற்ற முண்டாகும்படியாக அவனுள்ளத்துள் 'ஒலி'யெழுந்தாலல்லது, சில அநீதிகள் விலக்கப்பட்டு விட்டதைக்கொண்டு, அவனுள்ளம் புனிதமாகிவிட்டதாகக் கருதக்கூடாது; ஆகவே, சத்தியாக்ரஹம் நிறைவேறிவிட்டதாகவும் கூறவியலாது.

5. இதனால் இந்த நிலைக்குமுன் நடைபெறும் ஒப்பந்தங்களிலெல்லாம் விட்டுக்கொடுத்து, சத்தியாக்ரஹி எத்தனையோ

அநியாயங்களைச் சகித்திருக்க நேரும். இவ்வாறு செய்யும் பொழுது சத்தியாக்ரஹி முக்கிய அநீதியை மறவாது போக்கும் பொருட்டுச் செய்யும் முயற்சியினிடையே, எதிரியால் இழைக்கப் பெறும் தீங்குகளைப் பொருட்படுத்தாது விட்டுவிடுகிறான்.

8. உபவாசம் (உண்ணாவிரதம்)

1. உபவாசத்தை சத்தியாக்ரஹத்தின் கருவியாகக் கையாளுவதில், பெரும்பாலும் அவசரமும் பிழைகளும் நேருகின்றன.

2. தனி மனிதனை எதிர்த்துச் செய்யும் சத்தியாக்ரஹத்தில் உபவாசம் உபயோகமாகும் அளவுக்கு, ஒரு சமூகம் அல்லது ஆட்சி முறையை எதிர்க்கும்பொழுது பயன்படாது.

3. தனி மனிதன் விஷயத்திலும், வேறு வழியில்லாத பொழுதே உபவாச-சத்தியாக்ரஹம் செய்யலாம். உபவாசத்தினால் எதிரிக்கு நியாய புத்தியோ நீதிப்பற்றோ உண்டாகாமல் தயை மட்டுமே எழ, எவ்வகையிலாவது கலகம் ஓயட்டுமென்ற எண்ணத்தினால் சத்தியாக்ரஹியின் 'பிடிவாத'த்தை ஒப்பி நடக்கலாம். ஆனால் இதை சத்தியாக்ரஹத்தின் வெற்றி யென்று கூறமுடியாது.

4. தனி மனிதனைக் குறித்துச் சத்தியாக்ரஹம் செய்யும் பொழுது அந்த மனிதனுடன் தனக்கு முன்பே உறவோ, நட்போ, இருந்தாலல்லது உபவாசத்தைக் கைக்கொள்வது சரியாகாது.

5. சாதாரணமாகக் குடும்பத்தார், நெருங்கிய நண்பர், ஆசிரியர், சீடர், சேர்ந்து படித்தவர் ஆகியோரிடத்திலேயே உபவாச சத்தியாக்ரஹம் புரியலாமென்று கூறலாம். இவ்வாறே ஊழியத்தினால் ஒருவன் தனது சமூகத்தின் மதிப்பைப் பெற்றிருந்தால் அந்தச் சமூகத்தில் நடைபெறும் கொடுமையை எதிர்த்து அவன் உபவாச சத்தியாக்ரஹம் தொடங்கலாம்.

6. தனி மனிதனைக் குறித்துப் புரியும்பொழுது தனக்கு நேர்ந்த தீமைக்காக ஒருபொழுதும் உபவாசம் செய்யலாகாது. அம்மனிதன் தன்னை நமது நண்பனென்று கூறிக்கொண்டு, வேறொரு மனிதனுக்கோ, வர்க்கத்திற்கோ, தனக்கேயோ, தீங்கு விளைத்து வருவானானால், வேறு முறைகளைக் கையாண்டு பார்த்தபின் உபவாசம் புரியலாம்.

7. ஆட்சியை எதிர்த்து சத்தியாக்ரஹம் செய்கையில் உபவாசத்தைக் கடைசி மருந்தாகக் கருதவேண்டும். சத்தியாக்ரஹிக்குச் சுதந்திரம் இல்லாமலிருந்து, வேறுவகையில் சத்தியாக்ரஹம் செய்வதற்கு வகையில்லாதாகிவிட, ஆட்சியார் புரியும் கொடுமைகளை சகித்துக்கொண்டு வாழ்தல் ஆண்மையற்ற கோழையின் வாழ்க்கையாகும்பொழுது, உயிரையே துறக்கும் உறுதியுடன் உணவை மறுக்கத் தொடங்கலாம்.

8. இத்தகைய நிலை யெழுந்துவிட்டதென்று முடிவு செய்யும்பொழுது அவன் தன் உணர்ச்சிக்கு அதிக இடம் தரான்; அந்த ஆட்சியின் அதிகாரிகளுக்குள்ள சிரமங்களையும் அவர்களுடைய வெகுநாட் பழக்கங்களையும் கவனித்து, அவைகளுக்குக் கூடியவரையில் விட்டுக்கொடுப்பான். மேலும், தவிர்க்கவியலாத கொடுமை, எதிர்பாராத கொடுமை, வேண்டுமென்றே இழைக்கப்பட்ட கொடுமை, கொடிய சட்டங்கள்—ஆகியவற்றைச் சீர் தூக்கிப் பார்ப்பான். இதைத் தவிர, இதிலும் தனக்குமட்டும் நேர்ந்த கொடுமைகளை மனவுறுதியுடன் சகித்துக்கொள்வான். ஏனெனில் ஒருவன் நன்கு உணர்ந்துகொண்டே தீமையை ஏற்றால் அவனுடைய ஆண்மை அழிவுறாது; ஆனால் வலியின்மை, பயம், உயிரில் ஆசை ஆகிய காரணங்களினால் கொடுமையை சகித்தால் ஆண்மை அழிவது திண்ணம்.

9. ஒரு பக்கத்தில் சத்தியாக்ரஹ உபவாசத்தைத் தொடங்கி, மற்றொரு பக்கத்தில் தன் கோரிக்கைகளை ஏற்கச் செய்வதற்காக எதிரியின் அதிகாரிகளை அவன்மீது ஏவுதல் ஒன்றுக்கொன்று பொருத்தமற்றவை. இத்தகைய உபவாசம் சத்தியாக்ரஹமாகாது.

10. தன் பிழைக்காகவோ, தன் தோழரின் குற்றத்துக்காக வருந்தியோ, தோழரைத் தமது உறுதியினின்றும் பிறழாதிருக்குமாறு செய்யவோ உபவாசம் புரிதல், இந்தப் பகுதியின் கருத்தையொட்டிய சத்தியாக்ரஹமாகாது; அது தவமாகும். உண்மையறிவாலுணர்ந்து புரியும் இத்தகைய தவத்துக்கு வாழ்வில் இடமுண்டு; ஆனால் அதை ஆராய்வதற்குரிய இடம் இதுவல்ல.

9. உதவி மறுத்தல் (ஒத்துழையாமை)

1. கூட்டுறவுடன் வாழ்ந்துவந்த இருபகுதியினரிடையே உதவி மறுத்தல் என்ற சத்தியாக்ரஹம் கையாளப்படலாம்.

2. இதில் உதவி மறுப்போரின் ஒத்துழைப்பின்றியே மற்ருேரின் வேலை நடைபெறக் கூடுமாயின் உதவிமறுத்தலினுல் உண்டாகும் பயன், மற்ருேரை இழந்தது அல்லது தன்னைச் சுத்திசெய்துகொண்டது என்பதேயாகும். சத்தியாக்ரஹத்தில் இதற்கும் இடமுண்டு. உதாரணமாக, எஜமானனுக்கு வேறு பல வேலையாட்கள் கிடைப்பார்களாயினும், எஜமானனுடைய அக்கிரமங்களில் பங்குகொள்ள விரும்பாத வேலையாள் வேலையை விட்டுவிடுவதும், வேறு பலர் கள்ளுக்கடை வைக்கச் சித்தமா யிருப்பது தெரிந்தும் ஒருவன் அத்தொழிலைவிட்டு விலகுவதும், இந்த உதவி மறுத்தலையே சாரும். இவ்வாறே பிடிவாதமாகக் கொடுமையே புரிந்துவரும் உறவினன் அல்லது நண்பனை விட்டு விலகுவதும் இத்தகைய சத்தியாக்ரஹமே.

3. நமது உதவியின்றி மற்றவரின் வேலைகள் நடைபெருத விடத்தில் உதவி மறுத்தல், மிகவும் தீவிரமான சத்தியாக்ரஹ மாகும். ஆகையால் சத்தியாக்ரஹிக்குத் தன் வழியை தர்மம் முற்றிலு மொப்புமென்று தெரிந்த பின்னரே அதைத் தொடங்க வேண்டும். இதில் என் உதவியின்றி எதிரியின் வேலை நடை பெருது என்பதைச் சத்தியாக்ரஹி மறப்பதில்லை; இந்நிலையில் அவனுக்குத் தன் பலம் புலனுகிறது. இதனுல் எதிரியைத் தொந்தரவுக்குட்படுத்தவும் இதை உபயோகிப்பது சாத்தியம்.

4. எதிரி தனது உதவியை முற்றிலும் தீயவழியில் பயன் படுத்துவது தெரிந்தாலும், அதனுல் நிரபராதிகளுக்குத் தீங்கு விளைவது தெரிந்தாலும், இத்தகைய உதவி மறுப்பு அவசிய மும் நியாயமும் ஆகிறது.

5. உதவி மறுக்கும்பொழுது தனது நேரிடையான உதவி யில்லாமல் எதிரியின் எந்த வேலைகள் நடைபெருவோ அவை களுக்கு உதவியளிப்பதை நிறுத்திக்கொள்வான். தனது நேரிடையான உதவியில்லாதபொழுதும் எதிரிக்குப் பெருமை யளிப்பதும் புகழளிப்பதுமான தன் உதவிகளை நிறுத்துவதால் தன் இலாபம் போனுலும் தயங்கமாட்டான்.

6. சத்தியாக்ரஹம் புரிவோரின் உதவியின்றி, எதிரி தன் திட்டத்தை நிறைவேற்ற வியலாது என்பதை உணர்த்துவதே

இந்த உதவிமறுப்பின் நோக்கமாகும். ஆகையால் சத்தியம்-அஹிம்சை முதலியவற்றின் உதவியால் அத்திட்டம் தடைப்படும் வகையிலெல்லாம் உதவிமறுப்பை நடத்தலாம்.

7. இந்த உதவிமறுப்பை எந்த முறையில், எந்த வேகத்தில் செய்யவேண்டுமென்பது அனுபவத்தில் விளங்கும். ஆனால் உதவி மறுப்பை மேற்கொள்வோனுக்கு, எதிரியின் செயல் அல்லது ஏற்பாடு மிகவும் கொடியதாயிருப்பதால் அது அழிய அதற்கு பதிலாக உடனே வேறு முறையொன்று அமையாவிட்டாலும் பழையது அழிந்தது நலமேயென்ற உறுதி வேண்டும்.

8. உதவிமறுத்தலைத் தவருகக் கையாளவும் கூடும்; ஆகையால் சத்தியாக்ரஹ உதவிமறுப்பு, அசத்தியாக்ரஹ உதவி மறுப்பு ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள வேற்றுமையை நன்கு சிந்தித்து உணர்ந்துகொள்ள வேண்டும். சத்தியாக்ரஹத்தில் கஷ்டத்தை யேற்கவேண்டியிருப்பது தெரிந்ததே. ஆகவே உதவி மறுப்போருக்குச் சிறிதும் கஷ்டமில்லாதிருக்குமாளுல், அந்த உதவிமறுப்பு சத்தியாக்ரஹ வகையைச் சாராதிருத்தல் பெரிதும் சாத்தியமாகும்.

10. சாத்வீகச் சட்டமறுப்பு

1. இருவகையில் சாத்வீகச் சட்டமறுப்புச் செய்யலாம். ஒரு குறிப்பிட்ட அநீத உத்தரவு அல்லது சட்டத்தை மாற்றும் நோக்கத்தோடு மட்டும் செய்தல் என்பது ஒன்று; மற்றதோ, உதவி மறுப்பின் இறுதி முறையைப்போலவே தீமை புரியாமலும், எந்தக் கட்சியிலும் சேராமல் நடுவுநிலைமையிலுள்ளவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஓர் அளவுக்கதிகமான தொந்தரவு நேராமலும் பார்த்துக்கொண்டு மீறக்கூடிய எல்லாச் சட்டங்களையும் மீறல்.

2. சட்டத்துக்கு அஞ்சி மனிதன் திருட்டிலிருந்து விலகியிருக்கவில்லை. அதை ஒரு குற்றமென்று கருதியே புரியாதிருக்கிறுன். ஆகையால் சாத்வீகச் சட்டமறுப்பில் இத்தகைய சட்டங்கள் மீறப்படலாகாது.

3. வண்டியைச் சாலையின் தவருன ஓரத்தில் செலுத்தாமை, சாலையில் போக்குவரவை ஒழுங்காக்குவதற்காக நியமனம் பெற்றுள்ள போலீஸ்காரனுடைய கட்டளைப்படி நடத்தல்,

இரவில் அகாலத்தில் கூச்சலிடாமை, முக்கியமான காரண மின்றி ரயில் சங்கிலியை இழாமை முதலிய விதிகளை மீறுவதால், குற்றமற்றவர்களுக்கும் கட்சிச் சார்பற்றவர்களுக்கும் அவசிய மில்லாத தொந்தரவு நேருவதால், இத்தகைய கட்டளைகளை மீறலாகாது.

4. ஆனால் ராஜ்யத்தினிடம் ஒரு மனிதன் அதிருப்தியைக் காட்டாதிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, ஆட்சியில் அவன் திருப்தியுற்றிருப்பதால் அதனிடம் அவனுக் குப் பக்தி யிருக்கலாம்; இரண்டாவது, சட்டத்தினிடம் அவனுக் குள்ள பயம். சத்தியாக்ரஹி சட்டத்துக்குப் பயந்து அரசாங்கத் திடம் தனக்குள்ள அதிருப்தியை வெளியிடத் தயங்கமாட்டான். சாத்வீகச் சட்டமறுப்புக்குத் தேவை யேற்பட்ட விடத்திலோ, அத்தகைய சட்டங்களை மீறுவது கடமையாகிவிடுகிறது.

5. அவ்வாறே தகுந்த வரம்புகளுக்குட்பட்டுத் தன் நாட் டின் எந்தப் பகுதிக்கும் சென்று வாழ்வதும், அமைதியாக ஊர்வலங்கள், கூட்டங்கள், மக்களின் சேவைக்கான வேலைகள், முதலியன செய்வதும் தவருன செயல்களை அல்லது தீமைகளை எதிர்த்து மறியல் முதலியன செய்வதும், இவைகளுக்கு ஏற்பாடு செய்வதும் மக்களின் சாதாரண உரிமைகளாகும். இந்த உரிமை களுக்குச் சர்க்கார் தடை விதிக்குமானல் அக்கட்டளையை சத்தியாக்ரஹி கீழ்க்கண்ட காரணங்களுக்காக ஏற்கிருன்:

(அ) தடைக்கு சர்க்கார் கூறும் காரணங்கள் அவனுக்கு உசிதம் என்று தோன்றுகின்றன.

(ஆ) இத்தடைகளை மீறப்போகையில் சர்க்காருக்கும், மக்க ளுக்குமிடையே நடைபெறும் போரின் முக்கியமான காரணம் விலகிவிட, வேறு முன்னில்லாத பிரசினைக்கு முக்கியத்துவம் வந்துவிடுவதால் மக்களின் கவனம் முக்கியமான விஷயத்தை விடுத்துச் சில்லறை விஷயங்களில் செல்வதற்கு இடமுண்டாகு மானல்; இத்தகைய காரணம் இல்லாதவிடத்தில் இந்தக் கட்டளையை சாத்வீக சத்தியாக்ரஹ முறையால் மீறலாம்.

6. இதைப்போலவே, சத்தியாக்ரஹி சர்க்காரை நிலைக்கச் செய்வதில் நன்மை யுண்டென்று கருதுவதால் அதற்கு வரி செலுத்துகிருன். இந்த ஆட்சி முறையை அழிக்கவேண்டியதே கடமையென்ற உறுதி யுண்டாகுமானல் அந்த ராஜ்யத்தின் வரிச்சட்டத்தை மீறலாம்; ஆனல் அந்த ராஜ்யத்தினின்றும் எத்தகைய இலாபமும் முயன்று பெறலாகாது.

7. ஜனநாயக ஆட்சி நடைபெறும் இடங்களிலும், சர்க்காரும் மக்களும் சாதாரணமாக ஒத்துவாழும் இடங்களிலும், கடுமையாக இயக்கம் ஒன்றும் நடைபெருதபொழுதும், தனி அதிகாரிகள் அறியாமையாலோ அதிகார மயக்கத்திலோ அநியாயமான கட்டளைகள் பிறப்பிக்கலாம். இத்தகைய தனிப்பட்ட அநியாயமான கட்டளைகளுக்காக எப்பொழுதும் சாத்வீக எதிர்ப்புச் செய்வது சரியல்ல. இத்தகைய அநியாயங்களைப் பொறுத்துக்கொண்டிருப்பதால் தீமையே விளைகிறதென்று நினைக்கலாகாது. இதற்கு மாருக, இத்தகைய சமயங்களில் மக்களும் தலைவர்களும் காட்டும் பொறுமையும், சகிப்பும், மக்களுக்கு நல்ல படிப்பினை தருவனவாகும். எவர்கள் இவ்வாறு, (பயந்தல்ல) வேண்டுமென்றே அநியாயங்களைச் சகித்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அறிவார்களோ அவர்கள் சந்தர்ப்பம் வரும்பொழுது சாத்வீகச் சட்டமறுப்பும் நன்கு செய்யக் கூடும்.

8. சாத்வீகச் சட்டமறுப்பு நடக்கையில் அதனுல் எதிரிக்கோ, நடுநிலைமையிலுள்ளவர்களுக்கோ பொருள், உயிர் ஆகியவற்றின் நஷ்டம் ஏற்படிமானுலும், அவர்கள் குற்றமில்லாதிருந்தும் கஷ்டத்திற்குள்ளானுலும், இவைகளைத் தம்மால் தடுக்க முடியாதிருப்பதை சத்தியாக்ரஹி உணர்ந்தாரானுல், அவர் இயக்கத்தை நிறுத்தித் தம் முழு ஆற்றலையும் அந்த நஷ்டத்தையும் கஷ்டத்தையும் தடுப்பதற்குச் செலவிடுவார்.

11. கோர்ட்டில் சத்தியாக்ரஹியின் நடத்தை

1. சாத்வீக முறையில் சட்டத்தை மீறுவதற்கு உறுதி கொண்ட சத்தியாக்ரஹி, அதன் பயனுகக் கிடைக்கும் தண்டனையை ஏற்பதற்குச் சித்தமா யிருக்கவேண்டியதே.

2. ஆகவே சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டி அவரைக் கைது செய்ய அதிகாரி வந்தால் எவ்வகைத் தயக்கமுமில்லாமல் கைதாகவேண்டும்.

3. சத்தியாக்ரஹி சட்டத்தை மீருதிருக்கையில் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி ஜோடித்து மீறியதாக ருஜு செய்யப்படுகிறது என்பது உண்மையானுல், சத்தியாக்ரஹி நீதிஸ்தலத்தின் நடவடிக்கைகளில் எவ்வகையிலும் கலவாமலும் தன்னைத் தப்புவிக்க முயலாமலும் இருக்க வேண்டும். அந்தச்

சட்டத்தை மீற வேண்டுமென்று அவர் நினைத்தவரே; ஆகவே மீறுதபொழுதே தண்டனை கிடைக்குமானால் அதை வரவேற்க வேண்டும்.

4. சட்டத்தை மீறி யிருந்தால் குற்றத்தை ஒத்துக் கொண்டு தண்டனையை ஏற்கவேண்டும்.

5. தன் நடத்தையை விளக்கவேண்டியதில்லை யென்ற விதிக்குக் கீழ்க்கண்ட விலக்குகள் உண்டு :

(அ) சத்தியாக்ரஹ தத்துவத்துக்கு முரணானமையால் தாம் செய்யவே எண்ணாத குற்றமொன்று தம்மீது சாட்டப்படுமானால் சத்தியத்தைக் காக்கும்பொருட்டு தன் நடத்தையை விளக்கலாம்; இது கொலைக்குற்றத்திற்குப் பொருந்தும்.

(ஆ) சத்தியாக்ரஹிகள் அல்லது அதிகாரிகளின் நடத்தையிலோ, முறையிலோ தத்துவம் அல்லது பொதுநலத்திற்கான பிரசினை எழுவதாயிருந்து அங்கே உண்மை வெளியாவது அவசியம் என்று தோன்றினால் தன் நடத்தையை விளக்க வேண்டி யிருக்கிறது. உதாரணமாக, போலீசுக்காரர் கொடுமை செய்திருக்கிறார்; சத்தியாக்ரஹி மனத்திடத்துடன் நடந்ததை வெளியிட்டபொழுது அதைப் பொய்யென்று கூறி, பொய்க் குற்றம் சாட்டியதாக சத்தியாக்ரஹியின்மீது வழக்குத் தொடரப் படும்பொழுதும், வெட்டு, கொலை, கொள்ளை, கலகம் ஆகியவற்றைச் செய்யத் தூண்டியதாகச் சத்தியாக்ரஹியின் மீது குற்றம் சாட்டப்படுகையிலும்.

(இ) எங்கே அதிகாரிகளின் அதி உத்ஸாகத்தினாலோ, தவறினாலோ சர்க்கார் சில உத்தரவுகளைப் பிறப்பிக்க, அவைகளைப் பிறப்பிப்பது சர்க்காரின் நோக்கமல்லவென்று நம்புவதற்குரிய காரணங்கள் உள்ளபொழுதும், எந்தச் சட்டங்களின் ஆதாரத்தின் மீது அவ்வுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டனவோ அவை அதிகாரிகளுக்கு அத்தகைய அதிகாரம் தரவில்லையென்று தெரியும்பொழுதும், அந்த உத்தரவுகளின் காரணமாக சத்தியாக்ரஹம் புரியும் நோக்கமில்லாத சாதாரண மக்கள் பெருத்த கஷ்டங்களுக்குள்ளாக நேரும்பொழுதும் நடத்தையை விளக்கி அறிக்கை வெளியிடுவது அவசியமாகிறது.

6. சத்தியாக்ரஹி நீதிஸ்தலத்தின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டாமென்றதின் கருத்து, அவர் நீதிஸ்தலத்தை அலட்சியம் செய்யவோ, அவமதிக்கவோ வேண்டுமென்பதோ சத்தியத்திற்கு எதிராக நடக்க வேண்டுமென்பதோ

அல்ல. ஆகையால் அவர் எந்த அதிகாரியையும் அவமானப் படுத்தவோ கேலிசெய்யவோ கூடாது; அலட்சியமான பதில் தருவதும் ஆகாது. மேலும், தனது பெயர் முதலிய விவரங்களை மறைக்கக் கூடாது. ஆனால் வழக்குடன் சம்பந்தமில்லாதவை களையும், பிற குற்றவாளிகள் அல்லது நபர்களைப் பற்றிய விஷயங்களையும் கேட்டால், அவைகளுக்குச் சத்தியாக்ரஹி விடைதர வேண்டுமென்பதல்ல. இத்தகைய விடைகள் தர முடியாதென்று மரியாதையாகக் கூறிவிடவேண்டும்.

7. சத்தியாக்ரஹி போலீஸ் கொட்டடியில் இருக்கும் வரையில் அவருடைய குளி - உணவு முதலியவைகளுக்கு ஏற் பாடு செய்து நண்பர்கள் - ஆலோசகர்களைக் கலந்து பேசுதல் முதலிய வசதிகள் அளித்து, அவரை நேரியமுறையில் நடத்து தல் போலீஸின் கடமையாகும். அவ்வாறே போலிசாருடன் நேர்மையாக நடந்துகொள்ளுதல் சத்தியாக்ரஹியினுடையவும் கடமையாகும். போலீஸ்காரர் தொந்தரவு செய்தாலும், கஷ் டப்படுத்தினலும், அநாகரிகமாக நடந்தாலும், அடித்து ஹிம்சை செய்தாலும், சத்தியாக்ரஹி இவற்றை மேல்போலீஸ் அதிகாரிக்கு (அவர் கிடைத்தால்) தெரிவிக்கவேண்டும்; கிடைக்கவில்லை யானாலும் கிடைத்தும் பரிகாரம் செய்யவில்லையானாலும் மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவிக்கவேண்டும். அவரும் ஒன்றும் செய்யவில்லையானால் இந்த எல்லாக் கஷ்டங்களும் சர்க்காரின் சம்மதத்துடன் நேருகின்றனவென்பதை யுணர்ந்து எல்லா வற்றையும் தமது ஆலோசனையாளரிடம் தெரிவித்துவிட்டு நிம்மதியாயிருக்கவேண்டும்.

8. சத்தியாக்ரஹிக்கு அபராதம் விதிக்கப்பட்டால் தாமே ஒருபொழுதும் அபராதம் செலுத்தக்கூடாது என்பது மன்றி, யாரையும் செலுத்தும்படிக் கூறவும்கூடாது; செலுத்த விரும்பு கிறவர்களுக்குச் செலுத்தாதிருக்கவேண்டியதின் அவசியத்தைப் போதித்து அதற்குப் பதிலாகச் சிறைவாசத்தை யனுபவிக்க வேண்டும்.

9. அபராதத்தை வசூலிப்பதற்காக அவருடைய வீட்டுக்கு ஜப்தி வாரண்டு வந்தால், பொருள்களை ஜப்தியாக விட வேண்டியதே; அதனல் நஷ்டம் ஏற்படுவதா யிருந்தாலும் ஏற்கவேண்டியதே; ஆயினும் தாமாக அபராதம் செலுத்தக் கூடாது. ஏனெனில், தமது உரிமையைக் காக்கும்பொருட்டு சட்டத்தை மீறியவர், அதன்பொருட்டு தமது எல்லாவற்றையும் தியாகம் புரியச் சித்தமாயிருக்கவேண்டியதே. இதனல் தன்

கையால் அபராதத்தைச் செலுத்தி உரிமைக்குக் குந்தகம் விளைவிக்க மாட்டார்.

10. சத்தியாக்ரஹி உயர்ந்த வகுப்புப்பெற முயற்சி செய்யார். வகுப்புகளாகப் பிரிக்கும் விதிகளின் நோக்கம் ஓரளவுக்கு சத்தியாக்ரஹிக்கும் சாதாரணக் கைதிகளுக்கும் இடையிலும் சத்தியாக்ரஹிகளிடையிலும் வேற்றுமையை யுண்டாக்குவதாகும். அதில் பொருமை, அச்சம், ஆசை ஆகியவையும் கலக்கின்றன. மேலும் இதை மனம் போனபடி கையாள்வதையும், கீழ்வகுப்புத் தந்து அதிகத் தொந்தரவு கொடுப்பதையும் அடிக்கடி காண்கிறோம். ஆகையால் வகுப்புக்களாகப் பிரிவினை செய்யும் இந்த முறையே சரியல்ல. ஆயினும் கிடைத்த வகுப்பின் வசதிகளை சத்தியாக்ரஹி நுகர்ந்தாரானல் அது சத்தியத்தை மீறியதாகாது.

12. சிறையில் சத்தியாக்ரஹியின் நடத்தை

1. சிறையிலும் சத்தியாக்ரஹி தம் நேர்மையையும், அடக்கத்தையும் கைவிடலாகாது.

2. சாதாரணமாகச் சிறையின் விதிகளை மீருமல் அவைகளையொட்டி நடந்துகொள்வதே முறையாகும்; ஆனல் உயர்ந்த தத்துவத்தையோ சுயமரியாதையையோ காக்கவேண்டுமானல் விதிகளை எதிர்க்கலாம். இவ்வகையில் சிறைக்குள் திருட்டுத்தனமாக எந்தப் பொருளும் கொண்டுவரச் செய்வதோ, யாருக்கும் லஞ்சம் தருவதோ, விதிகளுக்குப் புறம்பான எந்த வசதியும் பெறவேண்டி யாரையும் முகஸ்துதி செய்வதோ கூடாது.

3. உழைப்பு சிறையின் விதிமட்டுமல்ல, இயற்கை அல்லது தர்மத்தின் தத்துவமுமாகும். ஆகையால் சிறையின் விதிப்படித் தரப்படும் வேலையை ஏற்பதிலும், செய்வதிலும் சத்தியாக்ரஹி பின்வாங்கக் கூடாது.

4. எந்த வேலையைக் குறிப்பிட்ட காலத்துக்குள் தமது ஆரோக்யம் கெட்டுவிட்டதாலோ, வேறுகாரணத்தாலோ, செய்ய முடியவில்லையோ, அதைப்பற்றி, அதன் அதிகாரியிடம் மரியாதையாகத் தெரிவிக்கவேண்டும். பிறகும் அந்த வேலை தரப்பட்டால், அதைச்செய்ய முயன்று உண்டாகும் கஷ்டத்தை ஏற்கவேண்டும்.

5. வைத்தியர் சோதனை செய்யும்பொழுது, தமது நோயை உள்ளபடி உரைக்கவேண்டும். தொத்து நோய் ஏதேனுமிருந்தால் அதை மறைக்கலாகாது.

6. கைதி, தமது மதம் அல்லது வழக்கிற்கு மாருக மருந்தையோ, சிகிச்சையையோ ஏற்பதற்குக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால், இந்தக் காரணத்தினால் வேறு வகை மருந்து அல்லது சிகிச்சையை உரிமையுடன் கோரமுடியாது. அம்மை குத்துதல் முதலிய சிகிச்சைகளை ஏற்க மறுப்பதால் அவருக்குத் தண்டனை கிடைக்கவும் கூடும்; கைதிக்கு உண்மையான மதப்பற்று இருந்தால், தண்டனைக்குள்ளாகச் சித்தமாயிருக்கவேண்டும். ஆனால் தண்டனை பெறுவதற்குச் சித்தமாயிருப்பதைக் கொண்டே, பொய்யாக அதற்குச் சித்தாந்தப் பெருமை யளித்து வீண் பிடிவாதம் பிடிக்கவேண்டாம். தமது உடலில் ஏதாவது குறையிருந்து, அதற்கு ஏதேனும் வசதி தேவையாயிருந்தால் அதை அதற்குரிய அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும். அதைப் பற்றித் திருப்திகரமான நடவடிக்கை யொன்றும் நடைபெருவிடில் அதையும் சத்தியாக்ரஹத்தின் சிரமங்களில் ஒன்ருக மதித்து அனுபவிக்கவேண்டும். இரகசியமாகச் சௌகரியங்களைப் பெற்று உடல் நலத்தைக் காக்க முயலலாகாது. இவ்விதமாக உடல் நலத்தைக் காப்பதைக் கண்டு, அவருடைய வேண்டுகோள் தவருனதென்று அதிகாரி எண்ணுவான்.

7. சிறையிலும் அனுஷ்டிக்க வேண்டிய ஏதேனும் விரதம் முதலியன இருந்தால், அதைச் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கூறி அதற்கு வேண்டிய வசதிகள் பெறலாம். இத்தகைய விசேஷமான விரதம் உள்ளவர் சிறையின் செலவிலேயே தம் விரதத்தை நடத்த வேண்டுமென்று பிடிவாதம் செய்யலாகாது; ஆகையால் சொந்தச் செலவில் தேவையான சௌகரியங்கள் கிட்டுமாஞல் திருப்தியடைய வேண்டியதே. வசதி கிட்டவில்லையாஞல் விரதம் அனுஷ்டிப்பதில் உண்டாகும் சிரமங்களை ஏற்க வேண்டியதே.

8. சிறையில் மட்டும் அனுஷ்டிப்பதற்கென்று எந்த விரதத்தையும் சத்தியாக்ரஹி மேற்கொள்ளலாகாது.

9. அடி, திட்டு ஆகியவற்றை ஏற்பதோ, எச்சில், அசுத்தமானது, வேகாதது, அழுகியது, புழுத்தது ஆகிய உணவை உட்கொள்வதோ கைதியின் கடமையல்ல. ஆகையால் இவற்றை அவர் பொறுத்துக் கொண்டிருக்கக்கூடாது. அடி, உதை, திட்டு

இவைகளுக்குப் பரிகாரம் கிட்டாவிடில் அதிகமான அடி - உதையும், திட்டும், தண்டனையும் கிடைப்பதாயிருந்தாலும் அதற்கும் அஞ்சாமல், அவ்வேலையைச் செய்ய மறுக்கலாம்; அவசியமுண்டானால், உபவாசம் புரியலாம்.

10. உண்பதற்குத் தகுதியில்லாத உணவை ஏற்க மறுத்து, அதற்காகக் கிடைக்கும் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

11. சத்தியாக்ரஹி தனக்கோ, தன் வகுப்பைச் சார்ந்த வர்களுக்கோ, சிறையில் அனுகூலமோ வசதிகளோ கிடைக்க வேண்டி சத்தியாக்ரஹம் புரியக்கூடாது. ஆம், கொடுமை அவர் விஷயத்திலோ அவருடைய வகுப்பின் விஷயத்திலோ மட்டும் நடைபெற்றால், அது வேறு விஷயம். ஆனால் சிறையின் சட்டதிட்டங்களையே மாற்றி யமைக்க வேண்டியிருந்தால், அதற்காகவே, தகுந்த சந்தர்ப்பமும் காரணமும் எழும்பொழுது, சத்தியாக்ரஹத்தின் உதவியைப் பெறலாம்.

12. சிறையின் வேலைகள் சரிவர நடைபெறும்படி நடந்து கொள்ளுதல் தவறல்ல; ஏனெனில் ஒத்துழைப்பது சத்தியாக்ரஹ தத்துவத்துக்கு விரோதமல்ல; ஆகையால் இவ்விதமான எல்லா உதவியும் சிறை அதிகாரிகளுக்களிப்பது சத்தியாக்ரஹியின் கடமையாகும். ஆனால் சிறைக் காவலோ 'வார்டர்' வேலையோ சத்தியாக்ரஹி ஏற்கக்கூடாது.

13. விடுதலைநாளை சத்தியாக்ரஹி ஆசையுடன் எதிர் பார்த்தலாகாது.

14. சுயராஜ்யத்திற்காக நடைபெறும் சத்தியாக்ரஹம், ஆட்சி முறையை அடியோடு மாற்றும் நோக்கம்கொண்டது. ஆகையால் சிறை நிர்வாகத்தைத் திருத்தும் நோக்கத்துடன் சிறைக்குள் அதுவே தனிப்போராகும்படியாக, எந்த இயக்கமும் சத்தியாக்ரஹியால் தொடங்கப்படலாகாது. ஆனால் மன்னிக்க வியலாத மிருகத்தனமான நடத்தையையும், விதிக்குப்புறம் பான செயலையும் எதிர்த்துச் சமயம் வரும்பொழுது போரிட வேண்டும்.

13. சத்தியாக்ரஹியின் விதிகள்

'கூறியது கூறல்' என்ற குற்றம் உண்டென்றாலும் 'நவஜீவனில்' (23-2-'30) வெளியான 'சத்தியாக்ரஹியின் விதிகளை' இங்கு எடுத்துத் தருவதால் இப்பகுதி நன்கு முடிவு பெறும்; இப்பகுதி இதனால் அழகுபெறப் பூர்த்தியாவதற்கும் ஏதுவாகும்.

1. சத்தியாக்ரஹம் என்பதன் பொருள் சத்தியத்தில் உறுதி யென்பதாகும். இந்த உறுதியால் மனிதனுக்கு இணை யற்ற பலம் கிட்டுகிறது. இந்தப் பலத்தை நாம் சத்தியாக்ரஹம் என்று அழைக்கிறோம்.

2. சத்தியத்தில் உள்ள உறுதி உண்மையானதானால் அதைத் தாய்—தந்தை, மனைவி மக்களை எதிர்த்தும், அரசு குடிகளை எதிர்த்தும், இறுதியில் அகில உலகையும் எதிர்த்தும் கையாளமுடியவேண்டும்.

3. இத்தகைய பரந்த ஆக்ரஹம் செய்யும்பொழுது தம்மைச் சேர்ந்தோர் - சேராதோர், சிறுவர் - முதியோர், ஆண் - பெண் என்ற வேற்றுமைகள் இருப்பதில்லை. ஆகையால் யாரையும் உடல்வலி கொண்டு எதிர்த்தலாகாது. ஆகவே, எஞ்சிய பலம் அஹிம்சை அல்லது அன்பின் பலமேயாகும். இந்த பலத்திற்கே ஆன்ம பலம் என்பது மற்றொரு பெயர்.

4. அன்பின் தீ பிறரை எரிப்பதில்லை, தானே எரியும். ஆகவே மரணம் உள்ளிட்ட எல்லாக் கஷ்டங்களையும் மகிழ்ச்சியுடன் ஏற்கும் ஆற்றல் சத்தியாக்ரஹிக்கு இருக்கவேண்டும்.

5. சத்தியாக்ரஹி, எதிரியை மிகவும் தீவிரமாக எதிர்த்தும் கூட, மனம், வாக்கு, உடலினால் எதிர்க் கட்சியின் எந்த நபருக்கும் தீங்கு புரியவோ, எண்ணவோ கூடாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இந்தக் கருத்துத் தொடரிலிருந்தே ஒத்துழையாமை, சாத்வீகச் சட்டமறுப்பு முதலியவை கிளைத்தன.

6. சத்தியாக்ரஹம் பிறந்த இந்த வரலாற்றை நினைவிலிருத்துகிறவர்கள் கீழ்க்கண்ட விதிகளைச் சுலுவாகப் புரிந்து கொள்வார்கள்:

(அ) சத்தியாக்ரஹி யாரிடமும் கோபம் கொள்ளார்.

(ஆ) அவர் எதிரியின் கோபத்தைப் பொறுத்துக்கொள்வார்.

(இ) கோபத்தைப் பொறுத்துக்கொண்டு எதிரி அடித்தாலும் பொறுப்பாரேயன்றி, அவரைத் திரும்ப அடிக்கவே மாட்டார்; இவ்வாறே கோபத்தில் தரப்பட்ட சரியானதோ தவறுனதோ ஆன உத்தரவையும், அடி அல்லது வேறெந்த பயத்திலுலும் ஏற்கமாட்டார்.

(ஈ) போலீசு பிடிக்க வந்தால் மகிழ்ச்சியுடன் கைதியாவார். தமது பொருளைப் பறிமுதல் செய்ய வந்தால் அதைத் தடையில்லாது அனுமதிப்பார்.

(உ) பிறருடைய பொருள் தமது பார்வையில் இருந்தால், தன் உயிர் போனுலும் அதைக் கைநழுவ விடார்; ஆனுல் பறிக்க வருவோரை அடிக்கமாட்டார்.

(ஊ) அடியாமையில் வசை பேசாமையும் அடங்கும்.

(எ) இவ்வகையில் சத்தியாக்ரஹி எதிரியை அவமானப் படுத்தமாட்டார். இக்காலத்தில் வழங்கும் எத்தனையோ கோஷங்கள் ஹிம்சை மயமானவை; ஆகவே சத்தியாக்ரஹியால் முழுமையும் விலக்கப்பெற வேண்டியவையாகும்.

(ஏ) சத்தியாக்ரஹி பிரிட்டிஷ் கொடிக்கு வணங்கமாட்டார்; அதை அவமானமும் செய்யார். அதிகாரியையும் எந்த ஆங்கிலேயரையும் அவமானம் செய்யார்.

(ஐ) இயக்கம் நடக்கும்பொழுது யாரேனும் ஓர் ஆங்கிலேயனையோ சர்க்கார் உத்தியோகஸ்தனையோ அவமானப் படுத்திலுலும், பலாத்காரம் செய்தாலும், தன் உயிருக்கே ஆபத்து நேரிட்டாலும் பொருட்படுத்தாமல் அவனைக் காக்க வேண்டும்.

சிறையைப் பற்றியவை

(ஒ) கைதியான பின் சத்தியாக்ரஹி சுயமரியாதைக்கு உகந்த எல்லா விதிகளையும் அனுசரித்து நடப்பார்; அதிகாரிகளுடன் நேர்மையாக நடந்துகொள்வார். உதாரணமாக அவர் அதிகாரிக்குச் சாதாரணமாக வந்தனம் செய்வாரேயன்றி, மூக்கைத் தரையில் தேய்க்க வேண்டுமென்று அதிகாரி கூறினுல் அவ்வாறு செய்யமாட்டார். 'சர்க்காருக்கு ஜயம்' என்று கூவ மாட்டார். சிறையில் தரப்படும் சுத்தமானதும், தனது மதத்திற்குகந்ததுமான உணவை ஏற்பார். அழுகியதும் மண்ணும் அழுக்கும் கலந்ததும், அசுத்தமான பாத்திரத்தில் தரப்படு

வதும் அவமானத்துடன் அளிக்கப்படுவதுமான உணவை ஏற்கமாட்டார்.

(ஓ) சத்தியாக்ரஹி கொலைக் கைதிக்கும் தமக்கும் வேற்றுமை யிருப்பதாக மதியார். ஆகையால் அவனைவிடத் தம்மை உயர்ந்தவராக எண்ணியோ, கூறியோ, தனக்கென ஏதும் சலுகைகள் கோரமாட்டார். ஆனால் உடல் ஆன்மா—இவற்றின் நலனுக்கு அவசியமான வசதிகளைக் கோர அவருக்கு உரிமை யுண்டு.

(ஔ) சுயமரியாதைக்குக் குந்தகம் விளைவியாத வசதிகள் கிட்டாதபொழுது சத்தியாக்ரஹி உபவாசம் முதலியன செய்ய வேண்டாம்.

படையைப் பற்றியவை

(க) தன் படைத் தலைவனின் கட்டளைக்கு—அவை தமக்குப் பிடித்தமாயினும், இல்லையாயினும்—சத்தியாக்ரஹி மகிழ்ச்சி யுடன் கீழ்ப்படிவார்.

(ங) கட்டளை அவமானம் விளைவிப்பதானாலும், துவேஷத்தால் எழுந்ததானாலும், முட்டாள்த்தனமானதா யிருந்தாலும், அதை நிறைவேற்றிய பிறகு மேலதிகாரியிடம் முறையிடுவார். படையில் சேருவதற்கு முன், சேருவதைப்பற்றிய விதிகளை நன்கு சிந்தித்துப் பார்க்கும் உரிமை சத்தியாக்ரஹிக்கு உண்டு. ஆனால் சேர்ந்த பின்போ, சிரமமான விதிகளை அனுசரிப்பதும், கட்டுப்பாட்டுக்கு உட்படுவதும், கடமையாகி விடுகின்றன. படையின் முழு நடவடிக்கைகளுமே நியாயத்துக்கு முரணானதாகத் தோன்றினால், சத்தியாக்ரஹி அதிலிருந்து விலகிவிட வேண்டும்; ஆனால் அதிலிருந்துகொண்டே விதிகளை மீற அவருக்கு அதிகாரமில்லை.

(ச) எந்த சத்தியாக்ரஹியும் தன்னை யண்டினோரை வேறெவரேனும் காப்பாற்றுவர் என்று நினைத்தலாகாது. எவருக்காவது ஏதாவது ஏற்பாடு ஆகுமானால் அதை எதிர் பாராததாகவே கருதவேண்டும். சத்தியாக்ரஹி தம்மையும், தம்மை அண்டினோரையும் கடவுளிடம் ஒப்புவித்துவிட வேண்டும். இலட்சக்கணக்கில் போரிடும் உடல்-போரிலேயே வீரர் யாரையும் நம்பி இறங்குவதில்லை; பின், சத்தியாக்ரஹ யுத்தத்தைப்பற்றிக் கேட்பானேன்? இத்தகையோரை ஆண்டவன் பட்டினியிருக்கச் செய்வதில்லையென்பது அகில உலகின் அனுபவமாகும்.

மதச் சச்சரவுகளில்

(ஞ) சத்தியாக்ரஹி, மதச்சண்டை சச்சரவுகளுக்கு எப்பொழுதும் வேண்டுமென்றே காரணமாகக் கூடாது.

(ட) மதச் சண்டை தொடங்கினுல், சத்தியாக்ரஹி எந்தக் கட்சியிலும் சேரக்கூடாது; நியாயமுள்ள பகுதிக்கு உதவி செய்யவேண்டும். அவர் ஹிந்துவானுல், முஸ்லிம்கள் முதலிய பிற மதத்தாரிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டு ஹிந்துக்களால் அவர்களுக்குத் துன்பம் நேராமல் பார்த்துக்கொள்ளும் முயற்சியில் தம் உயிரையும் அளிப்பார். முஸ்லிம்கள் ஹிந்துக்கள்மீது போர் தொடுத்தால், ஹிந்துக்களைத் தம் உயிரை அளித்தும் காப்பாரேயன்றி, பதிலுக்கு முஸ்லிம்கள்மீது நடைபெறும் போரில் கலக்கவேமாட்டார்.

(ண) எந்தக் காரணங்களினுல் மதச் சண்டை தொடங்குகிறதோ, அவைகளிலிருந்து ஆனவரையில் விலகியிருக்க முயலுவார்.

(த) ஏதேனும் ஊர்வலம் நடத்த நேர்ந்தால், எந்த மதத்தாரின் மனமும் புண்படும்படி ஏதும் செய்யார்; எந்த மதத்தாருக்கும் வருத்தமுண்டாக்கக்கூடிய ஊர்வலம் பிறரால் நடத்தப் பெற்ருலும் அதில் கலந்துகொள்ள மாட்டார்.

14. சத்தியாக்ரஹியின் யோக்யதாம்சங்கள்

'ஹரிஜனபந்து' (26-3-'39) வில் காந்தியடிகள் சத்யாக்ரஹியிடம் குறைந்தது கீழ்க்கண்ட யோக்யதாம்சங்கள் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிருர் :—

1. அவருக்குக் கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை இருக்க வேண்டும்; ஏனெனில் அவர் ஒருவரே பூரணமான ஆதாரமாவார்.

2. அவருக்கு சத்தியத்திலும் அஹிம்சையிலும் மதத்தில் போன்ற உறுதி வேண்டும்; ஆகவே மனிதனிடம் இயற்கையிலேயே உள்ள நற்குணத்தில் நம்பிக்கை யிருக்கவேண்டும். இந்த நற்குணத்தை சத்தியம்-அஹிம்சையின் மூலமாக தாம் துன்பமேற்றும் எப்பொழுதும் தூண்டமுடியுமென்ற நம்பிக்கை யிருக்கவேண்டும்.

3. அவர் தூய வாழ்க்கையைக் கடைப்பிடித்து, தமது

லட்சியத்தின் பொருட்டு உடல் பொருள் ஆவியெல்லாம் தியாகம் செய்யச் சித்தமாயிருக்க வேண்டும்.

4. அவர் வழக்கமாக கதர் உடுத்துவோராகவும், நூற்போராகவும் இருக்கவேண்டும். இந்தியாவுக்கு இது இன்றியமையாதது.

5. அவர் துர்ப்பழக்கங்கள் இல்லாமலும், போதைப் பொருள்களை விலக்குவோராகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் புத்தி தெளிவாகவும், மனம் உறுதியாகவும் இருக்கும்.

6. இடையிடையே வெளியிடப்படும் கட்டுப்பாட்டிற்கான விதிகளுக்கு மகிழ்ச்சியுடனும் முழுமனதுடனும் ஒத்து நடக்க வேண்டும்.

7. அவரை அவமானத்திற்கு உள்ளாக்கும் நோக்கத்துடன் அமைக்கப் பெற்றுள்ள விதிகளைத் தவிர, மற்றச் சிறையின் விதிகளுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

15. பொதுஜன சத்தியாக்ரஹம்

பொதுஜன சத்தியாக்ரஹம் நடத்த வேண்டுமானல் கீழ்க் கண்ட வசதிகள் இருக்கவேண்டும். இவை இல்லாத விடத்தில் பொதுஜன சத்தியாக்ரஹம் தொடங்கினல், அடிதடிகளும், தமக்குள்ளும், எதிரிகளிடத்தும் விரோதமும் வளர இடமுண்டு. இறுதியில் பலாத்காரம் அல்லது அடக்குமுறைக்குள்ளாகி மக்கள் பயந்து நடுங்கி ஒடுங்கிவிடவும் கூடும் :

1. சத்தியாக்ரஹம் தொடங்க விரும்பும் தலைவர்களிடையே பரஸ்பரம் பூர்ண நம்பிக்கையும், கருத்தொருமையும் இருத்தல் வேண்டும். ஒருவர் மற்றவருடைய நாணயத்தை நம்பாமலோ, தலைவருடைய கருத்தில் நம்பிக்கையில்லாமலோ, குருட்டு நம்பிக்கையுடனே யிருந்தால், அதைப் பொதுஜன சத்தியாக்ரஹத்திற்குத் தீங்கு விளைவிக்கும் நிலையென்று கருதவேண்டும்.

2. சத்தியாக்ரஹம் நடத்தும் கருத்துள்ள தலைவர்களிடையே வேறு வேறு ராஜீயக் கருத்துள்ளவர்கள் இருந்தால், சத்தியாக்ரஹம் அப்பொழுது தொடங்கப்பட்ட காரணத்தை அவர்கள் தம்முள் தெளிவாக்கிக்கொண்டு, இடையில் வெவ்வேறு ராஜீய விவாதங்கள் நடத்துவதையும், அத்தகைய ஆராய்ச்சிகளையும் மனமொத்து நிறுத்திவைக்க வேண்டும்.

3. தாம் இடும் கட்டளைகளை மகிழ்ச்சியுடனும் உறுதியுடனும் நிறைவேற்றக்கூடிய வகையில் சத்தியாக்ரஹம் புரியும் தலைவர்களுக்கு மக்களிடையே செல்வாக்கு இருக்க வேண்டும். தலைவர்கள் தடுக்கும் எதையும் மக்கள் செய்யலாகாது.

4. விரோதிகள், தலைவர்களைப்பற்றி எந்தப் புரளியைக் கிளப்பிவிட்டாலும் அவற்றினால் மக்களின் மனம் பிறழாதிருக்கும்படியாக மக்களுக்குத் தலைவர்களிடம் நம்பிக்கை வேண்டும்.

5. சுயராஜ்யம் அல்லது பொறுப்பாட்சி பெறும் பொருட்டு சத்தியாக்ரஹம் புரிவதானால், அதற்கு முன்பே முக்கியமான மதப்பிரச்னையில் உடன்பாடு ஏற்பட்டுவிட வேண்டும். எதிரிகள் இதைக்கொண்டு மக்களிடையே மனத்தாங்கலைக் கிளப்ப இடமிருத்தலாகாது.

6. 'சத்தியாக்ரஹியின் யோக்கியதாம்சங்கள்' என்ற பின் பகுதியில் கூறப்பட்ட நிபந்தனைகளில் நம்பிக்கையிருப்பினும் அவற்றை நிறைவேற்ற முடியாதவர்கள் சத்தியாக்ரஹத்தின் தீவிரமான நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாகாது; அவர்கள் வெளியிலிருந்துகொண்டே மக்களின் நிர்மாணத் திட்டத்தை நன்கு நடத்தட்டும்; அதன் பொறுப்பை ஏற்கட்டும். பொது மக்களுக்கு அவர்கள் முற்றிலும் உதவட்டும்.

7. சத்தியம், அஹிம்சை—இவற்றின் மூலமாக சுயராஜ்யம் பெறுவதற்கு, மத ஒற்றுமை, தீண்டாமை யொழிப்பு, பரந்த அளவில் கதர்ப் பிரசாரம், கள்ளொழிப்பு ஆகியவற்றைப்பற்றி மிகப் பெரும்பாலான மக்களிடையே தீவிர உத்ஸாகமும், சத்தியாக்ரஹத்தில் ருசியுள்ளோரிடையே கருத்தொருமையும் இல்லையானால் பொதுஜன சத்தியாக்ரஹத்திற்கு அனுகூலமான சூழ்நிலையில்லையென்று கருதவேண்டும். அதுவரையில் உண்மையான சுயராஜ்யமும் சாத்தியமில்லை.

8. எந்தச் சத்யாக்ரஹப் போருக்கும், முன்னரும், இடையிலும், எதிரி ஸ்தாபனத்தையோ, அதிகாரியையோ, மக்கள் அசட்டையுடன் கருதக்கூடாது; அத்தகைய கருத்தை வெளியிடும் வகையில் பேசலாகாது. அவ்விதம் செய்யும் பிரசாரகர்களைத் தடுக்கவில்லையானால் அதைச் சத்தியாக்ரஹத்திற்கு உதவும் நிலையென்று கருதலாகாது.

9. இரகசியமான ஏற்பாடுகளில்லாமல், சத்தியாக்ரஹம் நிலைப்பது சந்தேகமானால், அது அனுகூலமான நிலையல்ல.

10. அனுகூலமான நிலையுண்டாகும்வரையில் நான்கு வகை நிர்மாண வேலைகளையும், மக்களுக்கு உபயோகமான வேறு பணிகளையும் செய்தலே சுயராஜ்யத்திற்கான ஏற்பாடாகும். பலவாண்டுகள் வரையில் இவ்வாறு செய்யவேண்டி யிருந்தாலும் இதில் நஷ்டமொன்றுமில்லை. இதை முன்னேற்றமென்று கூறவேண்டுமேயல்லாது பிற்போக்கெனலாகாது.

V சுயராஜ்யம்

1. ராம ராஜ்யம்

1. ராம ராஜ்யம், சுயராஜ்யத்தின் ஆதர்சமாகும். இதன் பொருள் தர்ம ராஜ்யம், நியாயவாட்சி அல்லது அன்பாட்சி, அஹிம்சா சுயராஜ்யம் அல்லது மக்களாட்சியாகும்.

2. மக்களின் சுய ஆட்சியெனில், ஒவ்வொரு நபரின் சுய ராஜ்யத்தினால் உண்டாகும் மக்களாட்சியாகும். இத்தகைய ஆட்சி, ஒவ்வொரு மனிதனும் தனது பிரஜா உரிமையின் காரணமாகப் புரியவேண்டிய கடமையைச் செய்வதால் அமைகிறது.

3. (க) இந்தச் சுயராஜ்யத்தில் யாரும் தமது உரிமைகளைப்பற்றி எண்ணுவதேயில்லை. அவசியம் நேரும்பொழுது உரிமை தானாகவே ஓடிவரும். இதில் மக்கள் தம் உரிமைகளை அறிந்திருக்க வேண்டியதில்லை; ஆனால் தமது கடமைகளை உணரவும், அவற்றைச் செய்யவும் வேண்டும். ஏனெனில் உரிமையை விளைவியாத கடமையே இல்லை. உண்மையான அதிகாரம் அல்லது உரிமையென்பது நிறைவேற்றப்பட்ட கடமையினின்றும் உண்டாவதே.

(ங) சேவையைக் கடைப்பிடிப்போனுக்கே உண்மையான பிரஜா உரிமை கிடைக்கும்; அவனாலேயே அதைச் சமாளிக்க வியலும்.

(ச) அவ்வாறே, ஒருவர் பொய்யாமை (சத்தியம்) அடி-தடி புரியாமை (அஹிம்சை) என்ற தர்மங்களைப் பின்பற்றுவதால் கிடைக்கும் சிறப்பிலிருந்தும், எத்தனையோ உரிமைகள் கிடைக்கின்றன; அவர் தமக்குக் கிடைத்துள்ள உரிமைகளையும், பணியில் செலவு செய்கிறாரேயல்லாமல், தனக்கென ஒருபொழுதும் உபயோகிப்பதில்லை.

4. ராம ராஜ்யத்தில் ஒருபுறம் அளவற்ற செல்வமும், ஒரு பக்கம் பரிதாபமான ஏழைமையும் இருக்கவியலாது ; ஒருவனும் பசியால் வாடி இறக்கமாட்டான். அந்த ராஜ்யத்துக்கு ஆதாரம் மிருகபல மல்ல. அது மக்கள் அன்புடன் அறிந்து அச்சமின்றி அளிக்கும் உதவியையே ஆதாரமாகக் கொண்டது.

5. அதில் பெருந்தொகையினர் அல்லது பெரிய சாதியினர் சிறு தொகையினர் அல்லது சிறு சாதியினரை அமுக்குவதில்லை ; சிறுதொகையினரும் பெரும்பான்மையோரை யொத்தே சுதந்திரமாக வாழ்வர் ; பெரிய சமூகத்தார் சிறுபான்மையோரின் நன்மைக்கானவைகளைப் புரிவது தமது கடமையென்று கருதுவர்.

6. அது கோடிக்கணக்கானவர்களுடையதும், கோடிக் கணக்கானவர்களின் நன்மைக்கென நடைபெறுவதுமான ஆட்சியாகும். அதன் அமைப்பில் எவருக்கு பிரதான அதிகாரியின் பதவி கிடைத்திருக்கிறதோ அவர் ராஜாவென்றோ தலைவர் என்றோ வேறு எவ்வாறு அழைக்கப்பட்டாலும் சரியே, அவர் குடிகளின் உண்மை ஊழியர் என்ற காரணத்தாலேயே அந்த இடத்தில் இருப்பார். குடிகளின் அன்பைக் கொண்டு அங்கிருப்பார், அவர்களின் நன்மைக்கான முயற்சிகள் புரிந்துகொண்டேயிருப்பார். அவர் குடிகளின் பணத்தைக்கொண்டு வாணம் விட்டு வேடிக்கை பார்க்கமாட்டார் ; அதிகார பலத்தினால் மக்களைத் துன்புறுத்தமாட்டார். ஆனால் ராஜாவென்றோ, வேறு எவ்வாறோ அழைக்கப்பட்டபோதிலும் துறவியையொத்து வாழ்வார்.

7. ராமராஜ்யமென்றால் குறைந்த அளவில் ஆட்சி யென்று பொருள். அதில் மக்கள் தமது பெரும் பகுதி நடவடிக்கைகளைத் தம் கூட்டுறவைக் கொண்டே நடத்துவார்கள். புதிய புதிய சட்டங்கள் இயற்றுவதும் தண்டனையின் பயத்தைக் காட்டி அவற்றின்படி அதிகாரிகள் மக்களை நடக்கத் தூண்டுவதும் பெரும்பாலும் இராது. அதில் சீர்திருத்தம் செய்யவேண்டி மக்கள் சட்டசபையையோ அதிகாரிகளையோ எதிர்பார்த்துக் கொண்டிரார். மக்கள் செய்துகொண்டுள்ள சீர்திருத்தங்களை யொட்டிச் சட்டங்களைத் திருத்தியமைக்க சட்ட சபையும் அதிகாரிகளும் முயலுவார்கள்.

8. அதில் பயிர்த்தொழில் செழித்தோங்கும் ; மற்றைத் தொழில்களும் அதையொட்டி வளரும். மக்கள் உணவுக்கும் உடைக்கும் பிறர் கையைப் பாராதிருப்பர் ; சிறப்பான

முறையில் பசுப்பாதுகாப்பு நடைபெறுமாகையால் பசுக்களும் எருதுகளும் செழித்திருக்கும்.

9. அதில் எல்லா மதத்தவரும் வர்ணத்தாரும் சமூகத்தாரும் சரிசமமாக ஒத்து வாழ்வர்; மதப்பூசல்களும் தீய சுயநலமும் எதிர்ப்பு–போட்டிகளும் இரா.

10. அதில் பெண்களின் நிலை ஆண்களையொத்தே இருக்க வேண்டும்.

11. அதில் எந்த மனிதரும் பொருளிருப்பினாலோ சோம்பலினாலோ உழையாமல் வாழமாட்டார்; யாரும் உழைத்தும் பசியால் வாடி இறக்க நேராது; யாரும் வேலையின்மையால் வாளாயிருக்கவேண்டிய நிர்ப்பந்தமும் இராது.

12. அதில் உள்நாட்டுக் கலகமோ வெளிநாட்டாருடன் போரோ நடைபெறாது. அதில் பிறநாடுகளைக் கொள்ளையிடவோ, வெற்றி கொள்ளவோ, வாணிபம் ஆட்சி ஆகியவற்றை அழிக்கவோ உதவும் ஆட்சிமுறை ஒப்பப்படக் கூடாது. அது பிற நாடுகளுடன் நட்புக்கொண்டு திகழும்.

13. ஆகையால் ராமராஜ்யத்தில் சேனைச் செலவு மிகக் குறைந்தே இருக்கவேண்டும்.

14. அதில் மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகமட்டுமிராமல் உண்மையில் கல்வி பெற்றவர்களாயிருப்பர். அதாவது, விடுதலையளிப்பதும் விடுதலையில் நிலைக்கச் செய்வதுமான கல்வி பெறவேண்டும்.

15. இது ஏதோ ஒரு நாடு அல்லது மக்களுக்குமட்டு மல்லாமல், அகில உலகுக்குமே தலை சிறந்த ஆட்சிக்கு ஓர் ஆதர்சமாகும். ஓர் இடத்தில் இது கைகூடினாலும், பின்னர் உலகம் பூராவும் பரவுவதற்கு ஏதுவாகும்.

16. இந்த நிலை எய்திய பிறகு வெவ்வேறு ஆட்சிகளிடையே போருக்குக் காரணமிராது. அதாவது போர் என்ற பெயரே பொய்த்துப்போகும். எல்லாக் கருத்து வேறுபாடுகளும் விரோதங்களும் சச்சரவுகளும் அஹிம்சையின் மூலமாகத் தீர்க்கப் பெறும்.

2. ஆட்சிமுறைத் திருத்தமும் ஆட்சித்திட்டத் திருத்தமும்

1. ஆட்சிமுறையைத் திருத்துவதும், ஆட்சித்திட்டத்தைத் திருத்துவதும் ஒன்றல்ல.

2. ஆட்சிமுறையைத் திருத்துவது என்ருல், அதிகாரம் செலுத்தும் அதிகாரிகள் மக்களிடம் நடந்துகொள்ளும் முறையைத் திருத்துவது என்பது.

3. ஆட்சித் திட்டத்தைத் திருத்துவது என்ருலோ, சட்டங்கள் இயற்றுவது, ராஜ்யத்தின் பல்வேறு இலாகாக்களை மேற்பார்வை யிடுவது, அவற்றை நடத்தும் முறையை நிர்ணயிக்க எத்தனை பேர் கூடி, எங்கே அமர்ந்து, எவ்வாறு பேசி முடிவுசெய்ய வேண்டுமென்பது போன்றவைகளை ஆராய்வதாகும்.

4. சிறிது காலமாக ஆட்சித்திட்டத்துக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதைக் காண்கிருேம்; இதில் நாம் முக்கிய விஷயத்தை மறந்து ராஜ்யத்தின் வெளியுருவைப் பற்றிய ஆராய்ச்சியுள் சிக்குறுகிருேம்.

5. ஆட்சித்திட்டத்தின் நுணுக்கங்களையும் அதைப்பற்றிய பல்வகைப்பட்ட மசோதாக்களின் வேற்றுமைகளையும், மதிப்பையும் நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் உணரக் கூடுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால் தாமே அவற்றைக் குறித்துச் சிந்திக்குமளவுக்கு அவர்கள் அவற்றில் ருசி கொள்ள மாட்டார்கள்.

6. நாட்டின் ஆட்சித்திட்டம் அரசாட்சியா, குடியாட்சியா, பெறுவது குடியேற்ற நாட்டு அந்தஸ்தா, ஸம்பூர்ண சுதந்திரமா, ஆருயிரம் பிரதிநிதிகளால் நடைபெறுவதா, அறுநூறு பிரதிநிதிகள் நடத்துவதா, அவர்களில் ஹிந்துக்கள் அதிகமா, முஸ்லிம்கள் அதிகமா என்ற இந்த விஷயங்களின் முக்கியத்துவத்தை நாட்டின் கோடிக் கணக்கான படிப்பற்ற கிராமவாசிகள் புரிந்து கொள்வது சிரமமானது; இவற்றைப் பற்றிய வாக்குவாதங்களில் அவர்களை இழுப்பதிலும் அதிக நன்மை யிருப்பதாகத் தெரியவில்லை.

7. அவர்களுக்கு முக்கியமானதெல்லாம், அவர்களுடைய கிராமத்தின் மணியம் அல்லது கணக்கன் அவர்களிடம் அதிகாரத்தின் ஜம்பம் செய்யவோ கொடுமை புரியவோ

லஞ்சம் வாங்கவோ வருகிறுனு அல்லது நண்பனுகவும் ஆலோ சகனுகவும் ஆபத்தில் உதவுவோனுகவும் இருக்கிறுனு என்பதே; அவன் இஷ்டப்படி மக்களை இழுத்தடிப்பதற்கென்று நியமனம் பெற்ற சிறிய அல்லது பெரிய அதிகாரி யென்று தன்னைக் கருதுகிறுனு அல்லது மக்களின் ஊழியனுக மதிக்கிறுனு என்பதே.

8. இதைத் தவிர, மக்களுக்கு முக்கியமான விஷயம், தம் தலையில் வரியின் பெருத்த சுமை ஏற்றப்படுகிறதா, குறைந்த சுமையா என்பதே யாகும். இந்த வரியும் எவ்வகையில் எந்த உருவில் எப்பொழுது வசூலிக்கப்படுகிறது, வசூலாகும் வரி எவ்வகையில் செலவு செய்யப்படுகிறது என்பவையுமாகும்.

9. இத்தகைய சீர்திருத்தங்கள் ஒரு சிறப்பான ஆட்சித் திட்டம் அமைத்து விடுவதால் நிறைவேறிவிடமாட்டா; ஆனுல் அதை அமலுக்குக் கொணரும் பொறுப்புள்ளவர்களின் உள் ளத்திலுள்ள தர்மபுத்தியாலும் தம் கருத்தை உருவான வகை யில் வற்புறுத்துவதற்கு மக்களிடமுள்ள ஆற்றலினுலுமே நிறை வேறும். ஆட்சித் திட்டத்தின் அமைப்பு எத்தகையதா யிருந் தாலும் அதிகாரி தர்மபுத்தியுள்ள குடிகளின் ஊழியராகவும், குடிகள் ஆற்றலுள்ளவர்களாகவும் இருந்தால், அரசாங்கம் அங்கே அதிகக் காலத்திற்கு அநியாயம், நிர்ப்பந்தம், கொடுமை முதலியன செய்யவியலாது.

3. சமய ஒற்றுமை

1. நாட்டின் வெவ்வேறு சமயங்களிடையே ஒற்றுமை யுண்டாக்க முடியாதவரையில், சுயராஜ்யம் பெறுவதும் அதை நிலைக்கச் செய்வதும் அசாத்தியமாகும்.

2. இந்த ஒற்றுமை ஏற்படவேண்டுமானுல், யாவரும் உணவு, மணம் ஆகியவற்றில் வேற்றுமை பாராட்டக் கூடா தென்பதோ, வெவ்வேறு சமயங்கள், சம்பிரதாயங்கள், ஆகியவை மறைந்து ஒன்ருக வேண்டுமென்பதோ, ஒரே மதத் தைச் சார்ந்தோ, எதையும் ஏற்காததோ ஆன பண்பாடு பரவ வேண்டுமென்பதோ அவசியமில்லை; விரும்பத்தக்கதுமில்லை. ஒவ்வொரு சாதியும் தன் சிறப்பியல்புகளைக் கைவிடாது ஒத்து வாழவேண்டும்.

3. ஆனுல் இந்த ஒற்றுமை நிலவ வேண்டுமானுல் பெரிய

மதங்கள் சிறிய மதங்களின் அச்சத்தைப் போக்கவேண்டுவது அவசியம்; நியாயம், பொது நன்மை இவற்றுடன் முரண்படாவிடில், சிறிய மதத்தாரின், மதம், பாஷை, இலக்கியம், மதச் சட்டங்கள், பழக்கவழக்கங்கள், கல்வி, பொருள் திரட்டும் சாதனங்கள் ஆகியவற்றில் எந்த இடையூறும் விளையாது பார்த்துக்கொள்ளும் பொறுப்பு தங்களுடையதென்ற உறுதியளிக்கவேண்டும்.

4. சிறிய மதத்தைக் கண்டு அஞ்சக்கூடிய நிலையில் பெரிய மதமிருந்தால், அதற்குக் காரணம், (1) பெரிய மதத்தின் வாழ்வில் ஏதோ பெரிய தீமை இடம் பெற்றிருப்பது, சிறு மதம் மிருக பலத்தின் திமிர்கொண்டிருப்பது (இந்தத் திமிர் அதிகாரத்தினுலோ, சுயமாகவோ உண்டாதல் கூடும்) அல்லது (2) பெரிய மதம் செய்துவரும் கொடுமையினுல் சிறிய மதம் பொறுமையிழந்து, உயிருக்குத் துணிந்து எதிர்க்கத் தொடங்குதல் ஆகியவையாகவே இருக்கவேண்டும். இரண்டிற்கும் வழி ஒன்றே. பெரிய மதம் சத்தியாக்ரஹ தத்துவங்களை வாழ்க்கையில் அனுசரிக்கவேண்டும். சத்தியாக்ரஹியாகி எத்தகைய கஷ்ட நஷ்டத்தையும் பொருட்படுத்தாது தம்மிடமுள்ள தீமையைப் போக்கவேண்டும்; தன் கோழைத்தனத்தை விலக்கிச் சிறிய மதத்தின்மீது சத்தியாக்ரஹத்தின் மூலமாக வெற்றிகொள்ள வேண்டும்.

5. இரண்டு மதங்களிடையே சண்டை நடைபெறும் பொழுது சர்க்கார் அல்லது சட்டத்தின் உதவியைக் கோருதல் மக்களை ஆண்மையற்றவர்களாக்குகிறது. ஒருவர் மற்றவரின் ரத்தத்தைச் சிந்தினுலும், ரத்ததாகம் தணிந்ததும் அமைதியுண்டாகும்; ஆனுல் ஒருவர் மற்றவர்மீது பிராது தொடர ஓடக்கூடாது. இது சிறந்த நிலையல்ல வென்ருலும், அந்நிய சர்க்கார் அல்லது கூலிக்கு வேலை செய்வோரின் உதவிகொண்டு அமைதியைப் பெறுவதைப்போல் அவ்வளவு வருந்தத்தக்கதல்ல.

6. சிறிய மதத்தின் மனத்தில் பெரிய மதத்தின் நேர்மையைப் பற்றிச் சந்தேகமிருக்கும் வரையில், பெரிய மதம் சிறிய மதத்திற்கு உத்தரவாதமளிக்கவேண்டும். இதுவே அதை அனுகூலமாக்குவதற்குரிய தலைசிறந்த வழி. உத்தரவாதம் என்ருல் எந்த நிபந்தனைகளை ஏற்பதால் அவர்களுடைய பயம் நீங்குமோ, அவற்றைக் கூடியவரையில் அதிக அளவில் ஏற்க வேண்டியதே.

7. எங்கே சிறிய மதம், பெரியதைக் காட்டிலும் குறைந்த

முன்னேற்றமடைந்திருக்கிறதோ, அங்கேதான் இந்த விதி கடைப்பிடிக்கத்தக்கது. சிறிய மதம் பெரியதைவிட அதிக பலமும் பொருளும் படைத்திருந்தால், பெரியதைவிட அதிகமாகவோ சிறந்ததாகவோ உரிமைகளைக் கோரக்கூடாது.

8. சிறிய மதத்திடம், அதிகமான அதிகாரம், பொருள், கல்வி, அனுபவம் முதலிய பலம் இருந்து, இதனால் பெரிய மதம் அதைக்கண்டு அஞ்சுவதாயின், தூய மனத்துடன் பெரிய மதத்துக்கு உதவுவதில் தன் சக்தியை உபயோகிப்பது அதன் கடமையாகும். பிறரின் நன்மைக்கு உதவுவதாயிருந்தால்தான் எல்லா சக்திகளும் வளரத் தகுதிபெறும். தவறாக உபயோகிக்கப் பெறுவதால் அவை அழியத் தகுதி அடைகின்றன. அவை இன்றில்லையானால் நாளை அழிந்தேதீரும்.

9. பொதுஸ்தாபனங்களில் ஊழியர்கள், அதிகாரிகள், ஆகியோரை அமர்த்தும்பொழுது மத நோக்குடன் நியமிப்பது அந்த இலாகாக்களின் வேலைத்திறமையை அழிப்பதற்குரிய வழியாகும். சாதி—மதம் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தியாமல் வேலை செய்வோனுடைய ஆற்றலொன்றையே முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

10. இந்த விதி ஹிந்து முஸ்லிம் சீக்கியர் முதலிய சிறிதும் பெரிதுமான மதத்தாருக்குப் பொருந்துவதுபோலவே, பணக்காரர் - ஏழை, ஜமீந்தார் - குடியானவன், எஜமானர் - வேலையாள், பிராம்மணர் - பிராம்மணனல்லாதவர் ஆகிய சிறிய பெரிய சமூகத்தாரின் இடையில் உள்ள சம்பந்தத்திற்கும் பொருத்தமுடையதே.

4. ஆங்கிலேயருடன் தொடர்பு

1. பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இந்தியாவுக்கு எவ்வகைத் தொடர்பு இருக்கவேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் இந்திய மக்களுக்கு உண்டு. இந்த அதிகாரம் கிட்டும் வரையில் சுயராஜ்யம் கிட்டியதாகக் கூறவியலாது.

2. இந்த அதிகாரத்துடன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு இந்தியாவுக்குத் தொடர்பு இருக்குமானால், இது பூரண சுயராஜ்யத்திற்குக் குறைந்ததென்று கருதப்படமாட்டாது. ஏனெனில் அந்நிலையில் இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் சமமான அந்தஸ்துப் பெற்றிருக்கும்; அதாவது தனது பரப்புக்கும்

பெருமைக்கும் உகந்தவகையில் சாம்ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளில் செல்வாக்குடன் திகழும்.

3. இந்தியாவுக்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குமிடையே இத்தகைய தொடர்பு ஏற்பட்டு, இந்தியாவின் வழி சத்தியத்தையும் அஹிம்சையையும் ஆதாரமாகக் கொண்டிருக்குமானல், இன்றுள்ளதுபோல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கண்டு யாரும் அஞ்சவேண்டியிராது; எல்லா ராஜ்யங்களுக்கும் அதனல் தைரியம் பிறக்கும்.

4. ஆனல் இந்த நிலையை அடைவதற்குமுன் இந்தியா நெடுந்தூரம் நடந்தாகவேண்டும். அது தனது சக்தியையும் பண்பாட்டையும் புரிந்துகொண்டு, அவைகளில் உறுதிகொண்டு, அவைகளில் தன் பயிற்சியையும் பூர்த்திசெய்து கொள்ள வேண்டும். அது பலமின்றி கோழையாயிருக்கும் வரையில் இது சாத்தியமில்லை.

5. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அசுரசக்தி நிருமித்ததாகையால் அது அழியவேண்டியதே என்பது சரியே. ஆனல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும், பிரிட்டிஷ் சாதியும் ஒன்றல்ல. பிரிட்டிஷ் சாதியிடத்தில் உலகிலோ அல்லது ஐரோப்பாவிலோ உள்ள பிற ஜாதியாரைவிட அதிகக் குறைகளோ, குறைந்த குணங்களோ இல்லை. இந்தச் சாதியாரிடத்தில் அநேகம் மதிப்பிற் குரியவையும், பின்பற்றத் தக்கவையுமான குணங்களுண்டு; இன்றைய விபரீதமான சம்பந்தத்தினல் நாம் அவைகளை மதிக்கவியலாதிருப்பதை துர்ப்பாக்கியமென்றே கருதவேண்டும்.

6. சுயராஜ்ய இந்தியாவில் வசிக்கும் ஆங்கிலேயர், மற்றச் சிறுபான்மைச் சாதிகளையும், சமூகங்களையும்போல் வாழலாம். அவர்கள் இந்தியாவின் பிற சாதிகளைப்போல் இந்தியர்களாகி நாட்டின் சேவையில் தம் பகுதியைப் பூர்த்தி செய்யலாம். சென்ற பகுதியில் கூறப்பட்ட தத்துவத்தையொட்டி நாட்டின் பிற சாதிகளுடன் அவர்களுடைய சம்பந்தம் இருக்கும். ஆனல் விதேசிகளாகவே வாழ விரும்பினல் இந்தியாவின் நன்மைக்கான நிபந்தனைகளை யொட்டியே இந்தியாவில் வேலை பார்க்கமுடியும்.

5. சுதேச சமஸ்தானங்கள்

1. சுதேச சமஸ்தானங்கள், இன்று தமது பலத்தினுல் நடக்கவில்லை; பிரிட்டிஷ் ஆட்சியின் பலத்தைக்கொண்டே நிற்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சி இல்லையானுல் தாமும் நிலைக்க வியலாதென்ற பயம் அவைகளுக்கு உண்டு. ஆகையால் அவை, பிரிட்டிஷ் ஆட்சியை நிலைக்கச் செய்யவும், அதனிடம் இந்திய மக்களைவிட அதிகப்பக்தி காட்டவும் முயலுகின்றன.

2. ஆகையால் இந்தத் தீவிரப்பற்று, அதிக அடிமைத் தனத்தின் அறிகுறியே. இதற்குக் காரணம், சுத்தமான பக்தி யல்ல, சந்தேகம் நிறைந்த, அருவருக்கத்தக்க சுயநலமேயாகும்.

3. ஆகையால் சுதேச சமஸ்தானங்களின் குடிகளின் நிலையை இரட்டை அடிமைத்தனமெனலாம். அடிமைகளின் நாட்டில் அடிமைகளிடம் வேலைவாங்கும் பெரிய அடிமை எஜமானனைவிட அதிக நிர்ப்பந்தம் புரிவதுபோல், நமது சுதேச அரசர்கள் தம் குடிகளை அதிகத் தொந்தரவு செய்கிருர்கள் என் பதில் புதுமையொன்றுமில்லை.

4. இதற்கு மாற்று, பிரிட்டிஷ் இந்தியா முதலில் சுய ராஜ்யம் பெறுவதே யாகும்; பிரிட்டிஷ் இந்திய மக்கள் சுதந்திரம் பெறும்வரையில், சுதேச சமஸ்தானங்களின் குடிகளின் கஷ்டங் களைப் போக்கும் ஆற்றல் அவுர்களுக்கு வாராது. தமது முயற்சி யால் சுதந்திரம் பெற்றதால், பிரிட்டிஷ் இந்திய மக்களிடையே உண்டாகும் சக்தி, சுதேச சமஸ்தானங்களை விழிக்கச் செய்யும்; அப்பொழுது சுதேச மன்னர்களும், பிரிட்டிஷ் துப்பாக்கி பலத்தைக்கொண்டு தமது குடிகளை அடக்கி சிறிது அதிகாரம் பெறுவதையும் போக வாழ்க்கை வாழ்வதையும் விட உறுதி யுடன் குடிகளுக்குச் சேவை புரிந்து, அவர்களுடைய இன்ப துன்பங்களையும் ஏழைமையையும் பகிர்ந்துகொண்டு, அன்பி னுல் அவர்களது உள்ளங்களில் இடம் பெறுவதில் அவர் களுக்கும் தமக்கும் அதிக நன்மை யுண்டென்று உணர்வார்கள்.

5. எந்த சுதேச மன்னர்கள் இத்தகைய விழிப்பெய்து வார்களோ அவர்கள் தாமாகவே தமது ராஜ்யங்களில் சீர்திருத் தங்கள் செய்யத் தொடங்குவார்கள். அப்பொழுதும் விழித் தெழாத அறிவற்ற, உணர்ச்சியற்றவர்களுடைய ராஜ்யங்கள் நிலைக்கமாட்டாவென்று கூறத்தேவையில்லை. இத்தகைய புத்தி யில்லாத ராஜாக்களும் இப்பொழுதுபோல மனம் போனபடி

நிச்சயமாக நடக்கவியலாது. ஏனெனில் சுதந்திரமெய்திய பிரிட்டிஷ் இந்தியா, சீர்திருந்திய சுதேச ராஜ்யங்கள் ஆகிய வற்றின் கூட்டுப் பொதுமக்களின் சக்தியின் முன் துஷ்டர் களுக்கும் தமது துஷ்டத்தனத்தை யடக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியிராது.

6. ஆற்றல்மிக்க சுதந்திர மக்களின் பொது வாக்கிற்கு எவ்வளவு பலமுண்டு என்பதைச் சமூக விஷயங்களில் நாம் அனுபவித்திருந்தும் இன்று மறந்துவிட்டோம். மிருகபலத்தை ஆதாரமாகக்கொண்ட ஆட்சிகளும்கூட பொதுஜன வாக்கு உருப்பெற்றெழாதிருக்கும் வரையில்தான் வாழமுடியும். பொது ஜன வாக்கு உறுதியுடன் எழுந்தோங்கவும் அதன்முன் மிகமிகச் சக்திவாய்ந்த ஆட்சியும் தலைவணங்கியே தீரவேண்டும்.

7. இந்தப் பொது மக்களின் கருத்துக்கு எவ்வளவு பல முண்டென்பதைப் புலப்படுத்துவதும், என்றும் தோல்வியுருதது மான ஆயுதம் ஒன்றுண்டு; அதுவே சத்தியாக்ரஹம் என்பது. தமது கருத்துக்காக உயிரைத் திருணமாகக் கருதும் மக்களுக்கு முன் மாபெரும் சக்கரவர்த்திகளும் தலைவணங்கியே தீர வேண்டும்.

6. தேசப் பாதுகாப்பு

1. சுயராஜ்யத்தில் இந்தியாவிடம் நாட்டுப் பாதுகாப் புக்கு வேண்டிய பலமிராது என்ற எண்ணம் தவருகும்.

2. அஹிம்சை தர்மத்தையுணர்ந்து அதைச் சரிவர அனு சரிக்கும் மக்களுக்கு, நாட்டுப் பாதுகாப்புக்கு உதவும் கருவி களான பீரங்கி, துப்பாக்கி, போர்க் கப்பல் முதலியவை தேவையேயில்லை. ஆனல் இன்று இந்நிலையை ஒரு கற்பனையா கவே கருதவேண்டும்.

3. ஆயினும் சுதந்திரம் எய்தி, பிற நாடுகளுடன் நட் புரிமை பூண்டு, அவர்களின் வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களை அபகரிக்க விரும்பாது வாழும் இந்தியாவுக்கு இன்றுபோல் அவ்வளவு போர்ச் சாதனங்களோ படையோ தேவையா யிராது.

4. சுயராஜ்யத்தில் ஒரு வரம்புக்கும் கட்டுக்கும் உட்பட்டு, ஒவ்வொரு நேர்மையுள்ள மனிதனுக்கும் ஆயுதம் வைத்திருக்க

உரிமையுண்டு. பிறரின் படையெடுப்புப் பயம் உள்ள பொழுது தான் இந்த (சுயராஜ்யம்) ஏற்பாடு நடைபெறுது. ஆகையால் எதிர்பாராத படையெடுப்புப் போன்ற நிலைமையில் அதைத் தடுக்கவோ, பின்னர் தேவையானுல் சீக்கிரத்தில் நாட்டை ஆயத்தப்படுத்தவோ வேண்டிய அளவுக்குப் படையும் பிற சாதனங்களும் இருக்கும்.

5. சட்டத்தையும் அதிகாரிகளையும் எதிர்பார்த்துக் கொண்டிராமல் நாட்டின் பல காரியங்களையும் தாமாகவே சாக்கிரதையாகச் செய்துகொள்ளும்படி நாட்டு மக்களுக்குப் போதித்து அதில் வெற்றி பெற்ருேமானுல், அந்நிலையில் மக்களுக்குச் சேவை புரிவதும், அவர்களுக்காகத் தம்மை அர்ப்பணம் செய்வதுமே முக்கிய நோக்கமாகக் கொண்ட தொண்டர்களின் கோஷ்டிகள் அமைந்திருக்கும். இவைகள் போர்புரியத் தெரிந்த படைகளாக மட்டுமிராமல், மக்களுக்குக் கல்வி யறிவு புகட்டுவதாகவும், அவர்களிடையே கட்டுப்பாடு, ஒழுங்கு, சௌக்கியம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் செய்பவைகளாகவும் இருக்கும். நாட்டுக்கு ஏதேனும் ஆபத்து வருமானுல் அதை முதலில் இவைகளே ஏற்கும்.

6. சுயராஜ்யத்தில் நாட்டின் படையைக் கண்டே மக்கள் பயப்படவேண்டியிருந்தால் அவர்கள்மீதே அவர்கள் (சேனை) குண்டு பொழிவதானுல், அது சுயராஜ்யம் அல்லது ராமராஜ்யமல்ல; சைத்தானின் இராட்சத ஆட்சியே ஆகும். அந்த ராஜ்யத்தை எதிர்ப்பதும் சத்தியாக்ரஹியின் கடமையாகும்.

7. நாட்டின் சிப்பாய் குடிகளின் நண்பனுயிருந்து மக்களுக்கு ஆபத்து நேர்ந்தபொழுது அதைத் தடுக்கும் பொருட்டுத் தன் உயிரையும் அளிப்பானுனல், அவன் க்ஷத்திரியனுவான். ஆனுல் குடிகளை அச்சுறுத்தி, உடல் வலிமையாலோ ஆயுத பலத்தாலோ துன்புறுத்துவானுனல் அவன் கொள்ளைக்காரனே. ராஜ்யம் அவனை ஆதரிக்குமானுல் அது கொள்ளைக்காரரின் ராஜ்யமே யாகும்.

VI வாணிபம்

1. மேலை நாட்டுப் பொருளாதார சாஸ்திரம்

1. மேலை நாட்டுப் பொருளாதார சாஸ்திரம் தவருன நோக்கங்களுடன் அமைக்கப்பெற்றிருக்கிறது; ஆகவே அது பொருள் நூலாயில்லாது மருள் நூலாகிவிட்டது.

2. அந்தத் தவருன நோக்கங்கள் இவை :

(அ) அது போக வஸ்துப் பெருக்கத்தையும் புதுமைகளை யும் பண்பாட்டின் உயிர் என்று மதித்திருக்கிறது.

(ஆ) அது எல்லாத் தேசங்களுக்கும், எல்லாக் காலத்திற்கும் ஒருங்கே பொருந்தும் தத்துவங்களைத் தாங்கி நிற்பதாக உரிமை கொண்டாடியபோதிலும், உண்மையில் ஐரோப்பாவின் சிறிய குளிர்ந்த பயிர்த் தொழிலுக்குப் பெரிதும் உதவாத நாட்டின் அதிக ஜன நெருக்கமிருந்தும், ஒரு சிலருக்கே பொருந்துவ தாகவோ குறைந்த ஜனத்தொகை யுள்ளதும் செழித்துப் பரந் ததுமான கண்டத்தின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டதா கவோ அமைந்திருக்கிறது.

(இ) நூல்களில் மறுக்கப்பட்டிருப்பினும் திட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் அது (க) தனி மனிதன், வகுப்பு அல்லது மிகவும் அதிகமாளுல் தனது சிறிய நாட்டின் பொருள் லாபத்தை முக்கியமானதாகக் கருதி அதன் நன்மைக்கானவைகளைச் செய் யும் முறைகளே பொருள் நூலின் மாருத சாஸ்திரீய தத்துவங்க ளென்று நம்புவதுடன் பிறரையும் நம்பச் செய்கிறது; (ங) விலை யுள்ள உலோகங்களுக்கு அபரிமிதமான மதிப்பளிக்கும் பழைய சம்பிரதாயத்தை இன்றும் அது விட்டபாடில்லை.

(ஈ) அதன் கருத்துப்படி பொருளுக்கும் அறத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லை; ஆகவே பொருளைவிட அதிக மகத்துவம் வாய்ந்த விஷயங்களுக்கு வாழ்க்கையில் மதிப்புத் தராதிருக்க மக்களுக்குப் பழக்க முண்டாகி விட்டது.

3. இதன் பயனுக,

(அ) இந்தப் பொருள் நூல் இயந்திரங்களையும், நகரங்களை யும் (பயிர்த்தொழிலைவிட அதிகமாகக்) கைத்தொழில்களையும் குருட்டுத்தனமாக ஆதரிக்கத் தொடங்கி விட்டது.

(ஆ) இது மக்களின் வெவ்வேறு பகுதிகளிடையிலும்,

தனித்தனி நாடுகளிடையிலும் இணக்கத்தை யுண்டாக்குவதற்கு பதிலாக விரோதத்தை யுண்டாக்கி, எல்லாருக்கும் இன்பமளிப்பதற்கு பதிலாக சிலருக்கு மட்டும் சிறிது காலத்திற்கு இலாபம் அளித்திருக்கிறது.

(இ) இது பிற்போக்கானவை யென்று கருதப்படும் நாடுகளைச் சுரண்டி, அங்குள்ளவர்களைத் தீய பழக்கங்களில் சிக்க வைத்து, அவர்களின் நடத்தையைக் கெடுத்து தான் செழிப்புற வழி தேடுகிறது.

(ஈ) இப்பொருள் சாஸ்திரத்தை ஏற்கும் மக்கள் மிருக பலத்தை நம்பியே வாழ்கிறார்கள்.

(உ) சாஸ்திரீய தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு வழங்கும் பொய்கள், மதத்திலும், பூதம் - பிசாசு ஆகியவற்றிலும் ஏற்படுவதாய்க் கூறப்படும் குருட்டு நம்பிக்கைகளைவிடக் குறைந்த உறுதியுள்ளவையல்ல.

2. இந்தியப் பொருள் நூல்

1. மற்ற விஷயங்களை விட்டுவிட்டாலும் இந்தியா மிகப் பரந்த நாடு; இதன் சீதோஷ்ண நிலை பல தரப்பட்டது; இதன் நிலம் பலவகையானது; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உழப்படுவதாலும் மக்களின் ஏழைமையினாலும் இதன் செழுமை குறைந்திருக்கிறது. இதன் ஜனத்தொகை உலகின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியாகும். இது சிறிய கிராமங்களாகப் பகுக்கப் பெற்றிருக்கிறது. இதில் பற்பல மதங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், தன்மைகள் ஆகியவை உள்ளன. இந்த ஸ்தூலமான காரணங்களே இந்தியப் பொருளாதாரத்தை மேலை நாட்டு முறையினின்றும் பிரித்துக் கவனிக்க வேண்டும் என்பதை வற்புறுத்தப் போதுமானவை.

2. இந்தியப்பொருள் சாஸ்திரத்தின் சிறப்பியல்புகளென்று கீழ்க்கண்டவைகளைக் கூறலாம் :—

(அ) அது கிராம நோக்குடன் ஆராயப்படுவது.

(ஆ) அதில் பயிர்த் தொழிலும் கைத்தொழிலும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடன் சாதாரணமாக ஒரே கூரையின் கீழ் வாழும்.

(இ) வெவ்வேறு மதங்கள், பண்பாடுகள், தன்மைகள்

ஆகியவையுள்ள மக்களிடையே தீமையும் கலகமும் தவறான போட்டியும் ஏற்படாதபடி இந்தப் பொருளாதார அமைப்பு இருக்கும்.

(ஈ) ஆகையால் நியாயத்தை எங்கும் மறவாது எல்லோரும் இன்புற்றிருக்கவே முயன்று கொண்டிருக்கவேண்டும்.

3. கிராம நோக்கு

1. இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருக்கிறது; ஆனால் இந்தியாவின் இன்றையப் பெரும்பாலான பொருளாதாரத் திட்டங்கள் கிராமங்களின் நன்மைக்கென அமைக்கப்படாமல் நகரங்கள், வெளி நாடுகள் ஆகியவைகளின் நன்மையைக் கோரி நிறுவப்பெற்றிருக்கின்றன.

2. இதன் பயனாகக் கிராமங்களின் மூலப்பொருள்களை நகரங்களுக்குக் கொணர்ந்து அங்கிருந்து வெளி நாடுகளுக்கு அனுப்பவும், நகரங்களிலும் விதேசங்களிலும் செய்யப் பெற்ற பொருள்களை கிராமங்களில் புகுத்தவும் முயற்சி நடைபெறுகிறது. இதனால் மிகுந்த மூலப்பொருள்களை விற்பதில் கிடைக்கும் சிறிய தொகையை சிறிது வேலைப்பாடுள்ள பொருள்களை வாங்குவதில் செலவு செய்வதால் கிராமவாசியின் கையில் காசு தங்குவதேயில்லை.

3. இதைத் தவிர, கிராமங்களின் வயல்களிலும் காடுகளிலும் விலையில்லாமலே கிடைக்கும் வாழ்க்கைக்குத் தேவையான பல பொருள்களைத் தேடி மக்களுக்கு அளிப்பதால் பல ஏழைகளுக்குச் சாதாரணமாக சீவனம் நடைபெற்று வந்தது போய், நகரங்களிலும் வெளி நாடுகளிலும் செய்யப்பட்டு, பார்வைக்கு உபயோகமுள்ளதாய்த் தோன்றினாலும் பெரும்பாலும் வெளிப் பகட்டுள்ள பயனற்ற பொருள்களை உபயோகிக்கும் துர்ப்பழக்கம் ஏற்பட்டு விட்டதால் கிராமங்களின் பல தொழில்கள் அழிந்து போய்விட்டன, அழிந்துகொண்டிருக்கின்றன.

4. இத்தகைய கவர்ச்சியுள்ள பொருள்கள் ஆரோக்கியத்திற்கும் சுத்தத்திற்கும் தீங்கு விளைவிப்பவையாயும் அசுத்தமாயும் இருப்பதோடன்றி செலவுள்ளவையாயும் இருக்கின்றன; இதனால் மக்களுக்கு வீணான செலவுள்ள பழக்கங்கள் உண்டாவதே விளையும் பயன். உதாரணமாக, பல் குச்சிக்கு பதிலாக

விதவிதமான தந்த மஞ்சனம், பேஸ்டு, புருஷ் ; வெல்லத்திற்கும் பழுப்புச் சர்க்கரைக்கும் பதிலாக, மில்லின் மணலான வெள்ளைச் சீனி ; கயிற்றினால் வேய்ந்த மூங்கில் அல்லது மரக்கட்டிலுக்குப் பதிலாக இரும்புக் குழாய் அல்லது சட்டத்தினாற் செய்த கட்டில் ; ஓலை அல்லது ஓடு வேய்ந்த கூரைக்குப் பதிலாகத் தகரக் கூரை ; சணல் - புளிச்சை - தென்னை நார்க்கயிற்றுக்குப் பதிலாக கம்பிகள் ; கோரைப் பாய்க்குப் பதிலாக சீனா அல்லது ஜப்பானியப் பாய் ; கிராமங்களில் மூங்கில் அல்லது கொடிகளால் பின்னிய கூடைகள், முறங்கள், தட்டுகள் முதலியவைகளுக்குப் பதிலாக இரும்புத் தகட்டினால் செய்த கூடைகள், தட்டுகள், முறங்கள் முதலியவை ; கிராமத்துக் கொல்லன் செய்த சங்கிலிகள், கொக்கிகளுக்குப் பதிலாக, மெஷினில் செய்த உறுதியில்லாதிருந்தும் கண்ணைக் கவரும் பொருள்கள் ; கிராமத்தட்டான் செய்த நகைகளுக்குப் பிரதியாக நகரத்தில் மெஷினில் செய்த ஆபரணங்கள்; கிராமத்துப் பெண்கள் செய்த விசிறிகள், பாய்கள், பீடங்கள் ஆகியவைகளுக்குப் பதிலாக ஜப்பானியக் காகித விசிறிகளும், மில்களில் வேலைப்பாடுடன் செய்த ஆசனங்களும் பீடங்களும் ; இலுப்பைப் பிண்ணாக்கு, சிகைக்காய் முதலிய இயற்கைத் திரவியங்களுக்குப் பதிலாக, வாசனை சோப்புகள் ; இறகு பேனாவுக்குப் பதிலாக விதவிதமான பௌண்டன் பேனாக்களும் ஸ்டீல் பேனாக்களும் ; அதனால் கிராமத்தில் செய்த மைக்குப் பதிலாக செயற்கை மை வகைகள் ; கைக்காகிதத்துக்குப் பதிலாக மில் காகிதம் ; வீட்டில் செய்த புதிய கஷாயங்களுக்கும் அர்க்கங்களுக்கும் பதிலாக புட்டிகளில் தயாராகி வரும் மருந்து வகைகள் முதலியன.

5. இவையெல்லாம் கிராமத்துப் பொருள்களைவிட மலிவாயிருக்கின்றனவோ வென்றால் அதுதான் இல்லை. பொருள்களின் மாயவனப்பும், பணக்காரர்களிடையே சிந்தனையில்லாதோரால் தொடங்கப்பெற்ற புதுப்பழக்கத்தை அனுசரிப்பதிலேயே நாகரிகம் இருக்கிறதென்ற எண்ணமும், மனிதருள்ளத்தில் மடமையை நிலை நாட்டும் சோம்பல், அறியாமை ஆகியவையும் சேர்ந்து தமது பொருளாதார நிலைக்குப் பொருத்தமில்லாததாயிருந்தும் இப்பொருள்களை வாங்கத் தூண்டுகின்றன.

6. மேலும், ஆலோசனை யில்லாத யந்திரவாதமும் கிராமங்களை ஓட்டாண்டியாக்குவதில் பெரிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது ; உதாரணம், பஞ்சு அரைத்தல், மாவு அரைத்தல், நெல்

குத்தல், எண்ணெய் ஆட்டுதல் முதலியவற்றைச் செய்யும் ஆலைகளும், மோட்டார், லாரி முதலியவைகளும்.

7. இதைத்தவிர, தரகர்களின் குறுகிய நோக்கும், சீக்கிரத்தில் பொருள் சேர்த்துவிட வேண்டுமென்ற குறுகிய சுயநலமும் காரணமாக, பல கிராமப் பொருள்கள், மெஷின் சாமான்களையும் விதேசிப் பொருள்களைவிட அடக்கம் குறைவாயிருந்தும் வாங்குகிறவர்கள் அதிக விலை தரவேண்டியிருக்கிறது. இதனால் கிராமத்தின் கையில் இருக்க வேண்டிய வியாபாரம், தொழிற்சாலைகளின் கைக்கும், அந்நிய நாட்டார் வசத்திற்கும் மாறிவிட்டது.

8. பொருள் நூலிலும் வாழ்க்கையிலும் 'கிராம நோக்கு' இடம் பெற்றால், கிராமத்தில் செய்த பொருள்களை அதிகமாக உபயோகிக்க வேண்டுமென்று மக்கள் கருதுவார்கள், தம் வாழ்வுக்குத் தேவையான பொருள்களை கிராமங்களில் உண்டாக்க வேண்டுமென்று கருதுவார்கள்; இதன் பயனாகக் கிராமங்களின் தொழில்களையும் சாதனங்களையும் சீர்திருத்தவும், கிராமவாசிகளுக்குக் கல்வியறிவுண்டாக்கவும், கிராமத்தின் காடு-புலங்களின் விளைவைப் பெருக்கவும், உபயோகிக்கும் முறை தெரியாதாகையால் வீணாகும் அநேக இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி அதனால் இலாபம் பெறவும் ஆராய்ச்சிகள் செய்யவும் தோன்றும்.

9. இன்று செல்வம் கிராமங்களிலிருந்து நகரங்களின் வழியாக வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இந்த ஓட்டத்தை நிறுத்த வேண்டும்; அதனால் கிராமத்தின் செல்வம் அங்கேயே நிலைக்கவே அது தன் தேவைகளுக்குப் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டியிராது; அதுமட்டுமின்றி, நகரத்தாரின் தேவைகளில் பெரும் பகுதி கிராமத்திடமிருந்தே கிடைக்கும்.

4. பொருளாசை

1. மக்களில் பெரும் பகுதியினர் பொருளாதார நிலையிலும் வாழ்க்கை வசதிகளிலும் சீர்திருத்தமும் விருத்தியும் கோருகின்றனர். பொதுவாக இவ்வாறு கூறினாலும், மனிதர்களின் பொருளாசைக்கும் இன்பவேட்கைக்கும் வரம்பேயில்லையென்றும், யாவரும் இலட்சாதிபதிகளாகவும் ஜமீன்தாரர்களாகவும் ராஜாக்களாகவுமாகி, தோட்டங்களுக்கிடையில் மாடமாளிகை

களில் வாழ விரும்புகிருர்கள் என்று பொதுப்படையாகக் கூறு வதும், இதை ஸ்தாபிக்கக் காரணங்கள் காட்டுவதும், சாதாரண மக்களை அறிந்துகொள்ளாமையையும், அவர்களை அலட்சிய மாகக் கருதுவதையும், அவர்களுக்கு இழிவான லட்சியங்களுண் டாக்க முயலுவதையும் காட்டும்.

2. மக்களில் பெரும் பகுதியினர் பொருளை அசட்டை செய்வதுமில்லை, அதற்காக அளவு கடந்த ஆசை கொள்வது மில்லை. வருஷ முடிவில் இரண்டு காசு எஞ்சியிருந்தால் நலமே என்று அவர்கள் எண்ணுவதுண்டு; அதுவும் தலைகால் வலித் தால், நன்மை தீமை ஏற்பாட்டால், முதுமை யெய்தி யுட்கார்ந் தால் உதவுமேயென்றும், விசேஷ தினங்களிலும், ஸ்தல யாத் திரை, தானம், தர்மம் முதலியவைகளுக்கு உதவுமேயென்ற நோக்கத்துடனுமேயேயாகும். மதத்தில் ஊறிய மக்கள், பொருள்-போகம் ஆகியவற்றின் ஆசையை வரம்பு மீறிப் போகாதிருக்கும் படிச் செய்ய மிகவும் முயன்றுகொண்டேதான் இருக்கிருர்கள்.

3. எல்லா ராஜாக்களுக்கும் சிக்கந்தர் அல்லது நெப் போலியனைப்போலவோ, பர்த்துருஹரி அல்லது கோபீசந்தைப் போன்ருே ஆவதற்கு ஆசையோ, அதற்குரிய ஆற்றலோ இல்லாதிருப்பது போலவே கோடிக்கணக்கான மக்களுக்குச் சீமான்களாக ஆசையோ, ஒட்டாண்டிகளாகத் தைரியமோ இருப்பதில்லை.

4. ஆனல் ஒவ்வொரு ஜன சமூகத்திலும் ஒரு சிலர் மிகப் பெரிய ஆசைகளுள்ளவர்களாய், அதையொத்தே பேராற்றல் படைத்தும் விளங்குகிருர்கள். ஒரு சிலர் பரதேசிகளாகத் திரிய மனமொப்பினல், இன்னும் சிலர் இலட்சம் இலட்சமாகத் திரட்ட விரும்புகிருர்கள்.

5. சமுதாயத்தின் அமைப்பும் திட்டமும் மக்களுக்கு இன்றியமையாத சுகவசதிகளுக்கும் பொருளாசைக்கும் குந் தகம் விளைவியாமல் அத்தகையோரின் சீரிய முயற்சிகளுக்குச் சந்தர்ப்பம் கிட்டும்படி அமையவேண்டும்; இதுவுமன்றி, இதன் பயனுக அவர்களுடைய ஓங்கிய ஆவல்களுக்கு ஆதரவு கிடைத் தாலும் கடைசியில் அதனல் சமுதாயத்திற்கு நன்மையே விளைவதாயிருக்கவேண்டும்.

6. சமுதாய அமைப்பில் இத்தகைய சீரிய முயற்சிகளுக் குத் தக்க இடமில்லையானல், அவர்களுடைய பேராவல், அவர் களது முயற்சிகளைத் தவருன பாதைகளில் புகுத்திச் சமுதாயத் திற்குத் தீங்கு விளைவிக்கும்.

7. தொழில்களிலும் சமூக சேவைக்கான காரியங்களிலும் பல சமயங்களில் பலவகையில் துணிவுடன் ஆபத்தையேற்க நேருகிறது. அவைகளில் வெற்றி கிட்டுவதோ சந்தேகமாயிருக் கிறது. அவைகளைச் செய்து பரீட்சை பார்ப்பதற்குப் பொது ஸ்தாபனங்கள் அமைப்பதைக் காட்டிலும், சொந்தப் பொறுப் பிலோ, சொந்த ஸ்தானங்களின் மூலமாகவோ, வேலை செய் வதால் அதிகப் பயன் கிட்டுகிறது. இதற்கு வசதியிருக்கும் படியாக சமுதாயம் அமைக்கப்பட வேண்டும்.

5. வியாபாரம்

1. பெரிய தொழில்களை விருத்தி செய்வதும், தேவையான பொருள்களை மக்களுக்குக் கொணர்ந்து கொடுப்பதும், வியா பாரத்துள் அடங்கும். இதில் சிரமமேதுமின்றி உண்டாகும் மிச்சமே இலாபம் எனப்படும்.

2. 'சிரமமின்றி உள்ள மிச்சம்' என்பது தொழில் அல்லது வியாபாரத்தில் ஆகும் செலவை பொருள்களுக்கு விலையாக இடும்பொழுது, நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகச் சேர்க்கப்படும் பகுதியினுல் உண்டாகும் மிச்சமே. இந்த மிச்சம் சில்லறை வியாபாரத்தில் சிறிதாக இருப்பினும், பெருத்த அளவில் செய் யும் தொழில்களிலும் வியாபாரத்திலும் அதிகமாக இருக்கக் கூடும்.

3. இவ்வாறு வளரும் பொருளை அத்தொழிலில் உள்ள தொழிலாளரின் நன்மைக்கான பணிகளிலும், அந்தத் தொழி லையோ வேறு உபயோகமான தொழில்களையோ வளர்ப்பதிலும், பொதுநலத்திற்கான பெரும்பணி யேதேனும் செய்வதிலும் உபயோகிக்கவேண்டும்.

4. இத்தகைய பொருளை உடையவன் தன்னை அதன் பாதுகாப்பாளனுக மதித்து, இவ்வகையில் அதை உபயோகிப் பதைக் கடமையென்று கருதுவானுனுல் அவன் முதலாளியென்று கருதப்பட்டாலும், அவனுல் மக்களுக்கு நன்மை யுண்டாவதால் வெறுக்கப்படமாட்டான்.

5. ஆனுல் இதனுல் அவன் தன் நன்மைக்கானவைகளை மட்டும் செய்தால், பணத்தையும் தன் சுகபோகங்களைப் பெருக்கு வதையுமே நோக்கமாகக் கொண்டால், தன்னை அவன் ஏளனத் திற்குரியவனுக்கிக் கொள்வதுடன் இதன் பயனுக எஜமான் -

வேலையாள் இருவரிடையேயும் வேற்றுமையைப் பெருக்கிக் கலகத்தை விளைவிப்பவனும் ஆவான்.

6. தனவான் தன்னுடைய தோட்டம், மாளிகை, குதிரை-வண்டி, விருதுகள், பாத்திரங்கள், விரிப்பு-கம்பளங்கள் முதலிய தம்மிடமுள்ள பொருள்களை, தம்மிடம் வேலை செய்வோருடைய விவாகம் முதலிய சந்தர்ப்பங்களில் உபயோகிக்க உதவினால், தன்னையண்டியிருப்போருடைய சமயசந்தர்ப்பங்களில் உதவி அவர்களைத் திருப்தி செய்வது தமது கடமை யென்று கருதினால், இத்துடன் ஏழைகளின் வாழ்க்கை துன்பமயமாயில்லாதிருக்குமானால், தனவான் அதிக இன்பங்களை நுகர்வதைக் கண்டு ஏழைகள் பொறாமைப்பட மாட்டார்கள்; பெரும்பாலானவர்கள் ஆடம்பரத்திற்கான பொருள்களைப் பாதுகாக்கும் தொந்தரவு தமக்கில்லாதிருப்பதையே விரும்புவார்கள்.

7. இம்மாதிரி நடந்துகொள்ளும் தனவான், தன்னிடமுள்ள பொருளுக்குக் காப்பாளனாகவே இருப்பதாகவே கருதப்படுவான். இதில் சிறிதும் பண ஆசையில்லை யென்பதல்ல; ஆனால் இது சமுதாயத்துக்குத் துரோகம் செய்யாததும், அவசியமான பொழுது உதவுவதுமான பணமாகும்.

8. இத்தகைய அறிவு-மணம் கமழும் முதலாளித்துவத்தை அழிப்பதற்கு, பொது உடமை வாதத்தின் எந்த யுக்தியின் வசமான போதிலும், மக்கள் ஆயத்தமாகமாட்டார்கள்.

9. இதைத் தவிர தனவானுடைய சொந்த வாழ்க்கை எளிமையும் அடக்கமும் கலந்ததாயிருக்குமானால், அவர் பணக்காரரென்று கருதப்பட்டாலும் மக்களின் மரியாதைக்குப் பாத்திரராவார்.

6. வட்டித் தொழில்

1. குறைந்த வட்டிக்குப் பணத்தை வாங்கி, அதிக வட்டிக்குக் கொடுப்பது வட்டித் தொழிலாகும். ஆனால் சமுதாயத்தின் நன்மைக்கு இன்றியமையாத வட்டித் தொழில் இதுவல்ல.

2. இன்று உலகில் நடைபெறும் வட்டித் தொழில், வெளிநாட்டு வியாபாரிகளின் தரகுத் தொழிலாகவோ, குடியானவர்கள், பிற தொழிலாளிகள் ஆகியோரின் நிலம்-முதல் ஆகியவற்றையும், இதுவே பெருகினால் பிற நாடுகளையும் சிறிதுசிறிது சிறிதாக விழுங்குவதற்கான தந்திரமாகவோ இருக்கிறது.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும், வட்டி ஆசை யானது தம் நாட்டு ஏழை மக்களின் நன்மையைப் புறக் கணித்து வெளி நாடுகளில் பணத்தை முடக்கும் ஆசையை யுண்டாக்கியிருக்கிறது. இதனுல் பணம் படைத்த நாடுகளிலும் துன்பம் நிலேத்திருக்கிறது.

3. வியாபாரத்தில் பொய் சொல்லுதல் பாவமல்லவென்ற கருத்து கொடிய தவருகும்.

4. படிப்பில்லாதவர், வெள்ளேமனத்தோர், எதையும் நம்பும் குணமுள்ளவர் ஆகியோரையும், சுகபோகங்களில் ஆசை யுள்ள தனவான்கள், ராஜாக்கள் ஆகியோரையும் வீண் செலவு செய்யவும் கெட்ட பழக்கங்களில் இறங்கவும் தூண்டிக் கடன்படச் செய்தலும், கொடுத்தல்-வாங்கல் செய்து அவர்களே ஏமாற்று வதும், பொய் கணக்குகளும் பத்திரங்களும் தயாரித்தலும், 'லேவாதேவி'யல்ல, பெருத்த பாவமும் ஹிம்சையுமாகும்.

5. இத்தகைய தீமைமலிந்த கொடுத்தல்-வாங்கலினுல் பொருள் பெருகுவதற்கு பதிலாகத் தீமையே வளருகிறது.

6. மனிதன் தான் மிச்சம் செய்து சேர்த்த முதலே ஏதே னும் தொழிலுக்கு உதவும் வகையில் பயன்படுத்த வேண்டும்; இதை முதலில் சொந்த நாட்டில்தான் செய்யவேண்டும். தொழில்களுக்குப் போக மிஞ்சுமாளுல் அதை நாட்டின் பொது நலத்திற்கான பணிகளில் செலவு செய்யவேண்டும். முதலேக் காத்து அதன் வட்டியைக் கொண்டே பொதுநலத்திற்கானவை களே செய்யவேண்டுமென்று நினேப்பது எப்போதுமே சரியல்ல. இந்தக் கருத்தினுல் முதலே மிகச்சிறந்த வகையில் பயன்படுத்து வதற்கு பதிலாக அதிக வட்டி பெறும் எண்ணம் உண்டாகி யிருக்கிறது.

7. வட்டிக்குப் பணம் வாங்கிக் குடும்பக் காரியங்கள் நடத்துவதைத் தடைசெய்யவேண்டும். சமூகத்தின் சம்பிரதாய மான சடங்குகள் குறைந்த செலவில் நடைபெறும்படி அவை களேத் திருத்தி அமைக்கவேண்டும். ஆயினும் நோய் முதலிய ஆபத்துக்களிலும் விவாகம் முதலிய சந்தர்ப்பங்களிலும் பண முடை யுண்டாளுல், வட்டியில்லாமல் சமூகத்தினிடமிருந்து நட்பு காரணமாகப் பணம் கிடைக்கவேண்டும். வீட்டு உபயோகத்தின் பொருட்டு கடைக்காரன் கடனுகக் கொடுத்த சாமான்களுக்கும் மேலேகண்ட குடும்பக் காரியங்களுக்காக வாங்கிய கடனுக்கும் வட்டி வாங்குவதைச் சட்ட விரோதமான தாகச் செய்யவேண்டும்.

8. தற்பொழுது இத்தகைய கடன்களுக்கு அதிக வட்டி கிடைக்குமாகையால், பணக்காரர்கள், தம்மிடம் கொடுத்தல்-வாங்கல் செய்வோரை இம்மாதிரியான வீண் செலவுக்கான பழக்கங்களில் சிக்கவைக்கும் நோக்கம் கொள்கிறார்கள்.

9. மற்றொரு புறத்தில் 'கெடு' 'பாபர்' முதலியவற்றைப் பற்றிய சட்டங்கள் மக்களின் நியாயபுத்தியைக் கெடுப்பதில் மிகவும் உதவியிருக்கின்றன. இவற்றின் பயனாக 'பாபர்' என்று கூறித் தப்பும் நோக்கத்துடன் 'நாணயம்' அல்லது திரும்பத்தரும் சக்தியில்லாமலே கடன்வாங்கவும் மக்கள் தூண்டப்பட்டிருக்கிறார்கள்.

10. இவ்விதமாக முதலாளி-கடன் பட்டவன் இருவருக்கும், பூனை-எலியைப் போன்றதும், பரஸ்பரம் ஏமாற்றும் நோக்கம் கொண்ட சத்துருக்களுடையது போன்றதுமான சம்பந்தம் உண்டாகிவிட்டது. தலைமுறை தலைமுறையாக ஒருவர் மற்றவருக்கு உதவிக்கொண்டு, முதலாளி கடன்காரனின் தொழில் செழிக்க உதவுவதும், கடன்காரன் தன் முன்னோர்பட்ட கடனையும் தீர்ப்பது தன் குலத்திற்கு கௌரவம் என்று கருதுவதுமான பழைய சம்பந்தம் போய்விட்டது.

11. முதலாளிக்கும்-கடன்பட்டவனுக்குமிடையே உள்ள சம்பந்தமே, எஜமானனுக்கும் வேலைக்காரனுக்குமிடையில் உண்டாகியிருக்கிறது.

7. முழுக் கூலி

1. மனிதன் எத்தகைய வேலை செய்தாலும் சரியே, அவனுக்குத் தரப்பட்ட கருவிகளையும் படிப்பையும் உண்மையுடன் நன்கு பயன்படுத்தி நாளில் முழு நேரமும் வேலை செய்தால், அவனுக்கு தானும் தன்னைச் சார்ந்துள்ள சக்தியற்ற மற்றோரும் திருப்திகரமாக சீவனம் செய்வதற்குத் தேவையான கூலி கிடைத்தல் வேண்டும்.

2. கிராமங்களின் இன்றைய வசதிகளையும் பழக்க வழக்கங்களையும் கவனித்து, கிராம வாழ்க்கைத் தரத்தைக் கூடியவரையில் உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும் எண்ணி, தற்பொழுது பொருள்களின் விலைவாசிகளையும் கவனத்தில் கொண்டு, ஒருவன் 8 மணி நேரம் வேலை செய்தால் மணிக்கு

ஒரு அணு வீதம் 8 அணு கூலி விகிதத்தை அவசியமானதாகக் கருதவேண்டும் (1935).

3. இந்த நிலையை எய்துவதற்கு ஒரே மூச்சில் அடியெடுத்து வைக்க நாம் துணியாவிட்டாலும், அதை இலட்சியமாகக் கொண்டு இடையருத முயற்சி செய்யவேண்டும்.

4. எல்லாத் தொழிலாளிகளுக்கும் ஒரே மாதிரியான கூலி ஏற்படும்பொழுதுதான் ஆதர்ச நிலையை அடைந்ததாயும், வர்ணாச்ரம தர்மம் நிறைவேறியதாயும் கருதப்படும். ஆனல் சமீபத்தில் இது நடைபெறுவதாகத் தெரியவில்லை. ஆகையால் ஆதர்சத்தைக் குறிக்கோளாகக் கொண்டு முடிந்தவரையில் அதை நோக்கி முன்னேறுவதே முறையென்று கருதப்பட்டிருக்கிறது.

8. தொழிலாளர் பிரசினைகள்

1. வாழ்க்கையின் தவருன இலக்குகள் தொழிலாளரின் பிரசினையைச் சிக்கலாக்கி யிருக்கின்றன.

2. அந்தத் தவருன இலக்குகள் இவையாகும் :

(அ) மனிதன் ஓய்வையே விரும்புகிருன் ; வேலையை வீணெனக் கருதுகிருன்.

(ஆ) மனிதனுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு ஓய்வு தேவை, உடலுழைப்பு அதற்குத் தீங்கிழைக்கிறது.

(இ) குறைந்த அளவில் வேலை செய்து பெருத்த அளவில் சுகம் பெறுவதே தொழில் பாகுபாட்டின் நோக்கம்.

(ஈ) முதலாளி-தொழிலாளி இருவருடைய நலன்களும் தம்மிடையே முரண்பட்டவை.

3. மேலே கூறிய காரணங்களினல் தொழிலாளர்களிடையில் கீழேகண்ட தவருன கொள்கைகளைப் பரப்புவதற்கு முயற்சி செய்யப்படுகிறது :

(அ) இயந்திரங்களை நன்கு விருத்திசெய்து ஒரு சில மணி நேரம் வேலைசெய்தே வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

(ஆ) முதலாளியை ஒழித்துவிட வேண்டும்.

4. இந்த நோக்கங்கள் எப்பொழுதாவது நிறைவேறின

லும், மனித சமூகத்திற்கு அதனால் நன்மையே யுண்டாகு மென்பது நிச்சயமில்லை.

5. உண்மையில் தொழிலாளர்கள் அல்லது பெரும்பாலான மக்களின் நன்மையைக் கோரினால், கீழேகண்ட முறையில் சிந்திக்கவேண்டும் :

(அ) மனிதனிடம் இயற்கையிலேயே உள்ள உழைக்கும் சக்தி குறைந்து, உழைப்பைக் கொண்டு பிழைக்கத் தகுதியற்றவனாக ஆகும்படி புறச்சாதனங்களைப் பெருக்கி அவற்றையண்டி அவனை வாழும்படியாகச் செய்யக்கூடாது.

(ஆ) ஆகையால் மனிதனுடைய உடலின் ஆற்றல் பெருக வேண்டும்; வேலைநேரமும் தொழிலாளரின் உணவும் வீட்டு வசதிகளும் அவனுடைய ஆற்றலைக் காத்துப் பெருக்கும் நோக்கத்துடன் அமையவேண்டும்.

(இ) மிகவும் நுண்ணிய தொழில் பாகுபாடு செய்து மனிதனை உயிரில்லாத இயந்திரத்தைப் போலாக்கி இரண்டு மூன்று மணி நேரம் ருசியற்ற இயந்திர வேலையில் அவனை முடக்குவதும் பிறகு மனோவினோதங்கள், போகங்கள் ஆகியவற்றின் பொருட்டு விட்டுவிடுவதும் மனிதவர்க்கத்தின் நன்மைக்குகந்தவையல்ல. அவன் தான்செய்யும் வேலையிலேயே இன்பம் நுகரும்படியும், அதுவே அவனுடைய வினோதத்திற்கு உதவும்படியும், தன் ஆன்மீக வளர்ச்சிக்கும் அதுவே வழிதுலக்கும்படியும், தொழில் பாகுபாடு செய்வதற்கான முறைகளைக் கண்டு பிடிக்கவேண்டும்.

(ஈ) இதன்பொருள், தன்தொழில் - வேலை இவற்றைத் தவிர மனிதன் வேறு ஏதும் செய்யத் தேவையில்லை, அவனுக்கு ஓய்வும் வேண்டியதில்லை யென்பதல்ல; ஒவ்வொரு மனிதனுக்கும் குற்றமற்ற வினோதத்திற்கான வேலை ஏதேனும் வேண்டியதே; அதற்கான ஓய்வும் அவனுக்குக் கிடைக்கவேண்டும். ஆனால் அதை முக்கியமானதாகக் கருதலாகாது. மனித சமூகத்தின் பெரும் பகுதி தன் ஓய்வுநேரத்தைத் தகுந்த முறையில் கழிப்பதற்கான பண்பாடு இன்னும் பரவியாகவில்லை. இப்பொழுதோ, அந்தப் பெரும்பகுதியின் ஓய்வுநேரம் உறக்கத்திலும் துர்ப்பழக்கங்களிலும் தீய இன்பநுகர்ச்சியிலுமே கழியும் என்று அஞ்ச வேண்டி யிருக்கிறது.

(உ) மனிதன் தன் சீவனத்திற்காக மிகவும் உழைக்க வேண்டி யிருப்பது, இயற்கை அவனிடம்கொண்ட கோபத்தினாலல்ல, கருணையாலேயேயாகும். இத்தகைய உழைக்கும் ஆற்றல்

பெருகவேண்டுமென்பது நோக்கமா யிருக்க வேண்டுமேயல்லாமல் உழைக்காதிருக்க வேண்டுமென்பதல்ல.

(ஊ) முதலாளி தொழிலாளரின் நிர்வாகியாகி அவர்களைத் தமது சக்திக்குகந்த வேலை செய்யச்செய்து முழுக்கூலிக்கும் மற்றச் சௌகரியங்களுக்கும் ஏற்பாடு செய்ய, தொழிலாளி முதலாளியின் வேலையைத் தனது வேலையெனக் கருதி முழு மனத்துடன் உழைத்தால் இருவருக்கும் நன்மை யுண்டாகும்.

(எ) இதற்காகச் சொந்தத்தில் முதல் இருப்பதும் இல்லாமையும் முக்கியமான விஷயமல்ல; தொழில் வாணிபம் ஆகியவைகளின் இலக்கை மாற்றுவதே முக்கியம்.

(ஏ) தொழிலின் நோக்கம், வியாபாரத்தை வளர்க்கும் பொருட்டு புதிய புதிய தேவைகளை யுண்டாக்குவது அல்ல; ஆனால் முன்னரேயுள்ள தேவைகளுக்கும் பழக்கங்களுக்கும் வேண்டியவைகளை மிகச் சிறந்த முறையில் ஆக்கித் தருவதேயாகும். வியாபாரத்தின் நோக்கமும் இதுவே. இப்படிச் செய்யும்பொழுது எத்தனையோ புதிய தேவைகள் உண்டாகலாம்; ஆயினும் இதைக் குறிக்கோளாகக் கொண்டால், வாணிபம் பிற்பட்ட சாதிகளின் தேவைகளைப் பெருக்கி அவர்களை உறிஞ்சுவதைத் தனது நோக்கமாகக் கொள்ளாது. இவ்வாறு நடைபெற்றால் தொழிலாளரும் முதலாளியும் ஒருவருக்கொருவர் உதவுவோராகி வாழ்வர்.

(ஐ) இத்தகைய இலக்கு இல்லையானால் முதலாளியின் இடத்தில் தனி மனிதனுக்கு பதிலாக உயிரற்ற ஸ்தாபனம் வந்து அமரும்; அல்லது ஒரு நாடு முதலாளியாகவும் மற்றொன்று தொழிலாளியாகவும் அமையும். இதனால் மனிதனுடைய சுகம் பெருகாது.

9. சுயதேவைப் பூர்த்தியும் தொழில் பாகுபாடும்

1. சுயதேவைப் பூர்த்தியென்றால் தொழில்-பாகுபாட்டை மறுப்பதோ பிறநாடுகளுடன் உள்ள தொழில் சம்பந்தத்தை விட்டுவிடுவதோ அல்ல. சமுதாயத்தில் வாழும் மனிதன் தன் தேவைகளை முற்றிலும் பூர்த்திசெய்துகொள்வதோ தனக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் தம் உழைப்பினாலேயே அமைத்துக் கொள்வதோ சாத்தியமல்ல. இத்தகைய முயற்சி

வீண் கர்வமாகவும் வீண் உழைப்பாகவும் முடியலாம். அகில உலகுடனும் அன்புபூண்டு அஹிம்சையின் மூலமாக இரண்டறக் கலப்பதை நோக்கமாகக் கொண்டவன் தானே போதுமென்ற வீண் மயக்கத்தில் சிக்கமாட்டான்.

2. ஆயினும் மனிதன் தனது எந்தத் தேவைகளையும் வேலைகளையும் தானே சுலபமாகச் செய்துகொள்ளவியலுமோ, எவைகளில் இதற்குரிய வசதிகள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றனவோ, அவைகளைச் செய்வது குற்றமல்ல, சரியே. இவைகளைப் பிறரைக்கொண்டே செய்விக்கவேண்டும் என்பதோ, அதற்காகப் பணம்கொடுத்து வேலை வாங்கவேண்டு மென்பதோ முறையல்ல. உதாரணமாக, மனிதன் தன் துணிகளை வண்ணானைக் கொண்டுதான் துவைக்க வேண்டுமென்பதும், மலஜலத்தைத் தோட்டியைக் கொண்டுதான் சுத்திசெய்ய வேண்டுமென்பதும், க்ஷவரம் செய்துகொள்ள நாவிதனையே அழைக்கவேண்டுமென்பதும், உணவை ஹோட்டலிலேதான் சென்று கொள்ள வேண்டுமென்பதும் அவசியமல்ல.

3. இதே விதி நாட்டிற்கும் மக்களுக்கும் பொருந்தும். தேவையான தானியங்களும், பருத்தியும் விளையும் இந்தியாவைப்போன்ற ஒரு நாடு, உணவு-உடை விஷயத்தில் சுயதேவைப் பூர்த்திசெய்து கொள்ளுமானால், அதைத் 'தானேபோதும்' என்ற தவறான முயற்சி செய்வதாகவோ, பிறநாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொள்ளவில்லையென்றோ கூறமுடியாது.

4. இதைப்போலவே, எந்தத் தொழில்களுக்கு இந்தியாவில் இயற்கையிலேயே வசதியுண்டோ, அவைகளை வளர்க்க முயற்சி செய்வதும் தவறாகாது. இத்தகைய பொருளாதார முறைகளை அனுசரிக்காவிட்டால் நாட்டைச் சுகம்பெறச் செய்யும் ஆசை வீணாகும்.

5. இந்தியாவின் தானியத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு அங்கிருந்து ரொட்டி தருவித்து உண்பதும், இங்கிருந்த எள்ளையும் கடலையையும் அனுப்பி அங்கே ஆட்டச்செய்து எண்ணெய் வாங்குவதும், பஞ்சையனுப்பித் துணி வாங்குவதுமான முறையை 'உலகத்தொழிற் பாகுபாடு' என்றும் 'உலகக் கூட்டுற வெ'ன்றும் அழைப்பது சரியல்ல; மேலும் 'லங்காஷயரில் இரும்பு-நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன, அங்கு உஷ்ணம் குறைவு; ஆகையால் துணி நெய்ய வசதியுண்டு' என்று கூறுவதும் தொழிற்பாகுபாடு, கூட்டுறவு என்ற தத்துவங்களைத் தவறாக உபயோகிப்பதாகும்.

10. ராஜீய சுதேசி

1. எங்கே மூலப்பொருள் விளைகிறதோ, அங்கேயே அதைப் பயன்படுத்தக் கூடிய தொழிற்சாலைகள் அமைப்பது ஒவ்வொரு நாட்டினுடையவும் பொருளாதார முறையாக இருக்க வேண்டும். பொருளாதார முறைப்படியும் ராஜீய நோக்கினுலும் இதையே 'சுதேசி இயக்கம்' என்று அழைக்கிறோம்.

2. மூலப்பொருளை வெளிநாட்டுக்கு அனுப்பி, பண்பட்ட வஸ்துவாக அதை மீண்டும் பெறுவதில் லாபமிருப்பதாகத் தோன்றுமாஞல், சுதேசத்திலோ விதேசத்திலோ அது சம்பந்த மாக ஏதோ தவரோ, மோசடியோ நடைபெறுகிறதென்றோ, கணக்குத் தயாரிப்பதில் எங்கோ தவறு இருக்கிறதென்றோ தான் எண்ணவேண்டும்.

3. இங்கிலாந்து எதை 'தடையில்லா வாணிபம்' (Free trade) என்று கூறுகிறதோ அது உண்மையில் அத்தகையதல்ல; ஏனெனில் அது தன் தொழிலைக் காத்துப் பிறநாட்டுத் தொழில் களை அழிப்பதற்குத் தன் படைபலத்தையும், ராஜீய சக்திகளை யும், கொடிய முறைகளையும் உபயோகிக்கிறது. சுதேசி முறை யின் இழிந்த, அநியாயமான உருவம் இது.

4. பொருளாதார நோக்குடன் பார்த்தால் சுதேசிக்கும் பகிஷ்காரத்திற்கும் வித்தியாசமில்லை. கோடிக்கணக்கானவர்கள் எந்தப்பொருளை நம்பிவாழ்கிறார்களோ, அதை வெளிநாடுகளி லிருந்து ஒருபொழுதும் வாங்கக் கூடாது; அதாவது அதை பகிஷ்கரித்தே யாகவேண்டும். இந்த பகிஷ்காரம் ஒரு குறிப் பிட்ட நாட்டை மட்டுமின்றி, எல்லா வெளிநாடுகளையும் செய்யப் படுமாகையால், இது 'சுதேசி'யே யாகும்.

5. குறிப்பிட்ட ஒரு நாட்டை பகிஷ்கரிப்பதென்பது ராஜீயக் காரணங்களுக்காக நடைபெறுவதாகையால், இப்பகுதி யில் அதை ஆராயவேண்டியதில்லை.

11. இயந்திர சாதனங்கள்

1. இந்தியப் பொருளாதாரத்தைக் கவனிக்கும்பொழுது, இயந்திரசாதனங்களையும், அவற்றில் ஆக்கப்பெறும் செப்பங் களையும் இருவகையாகப் பிரிக்கலாம் : (1) உழைக்கும் மனிதன், பிராணி ஆகியோரின் தசைகளுக்குள்ள சிரமம் சிறிது குறையும், அவைகளுக்குச் சிறிது ஓய்வு கிடைக்கும் என்ற நோக்கத்துடன்

அமைக்கப்பட்ட இயந்திரங்கள் அல்லது அவற்றின் செப்பங்கள்; உதாரணமாக, சாணைக்கல், இயந்திரம், ராட்டை, சயிக்கள், தையல் மிஷின், ஷட்டில் தறி, வண்டி முதலியவை. உராய்வதில் அதிகச் சேதம் விளையாதிருப்பதற்காகச் செய்யப்பட்ட செப்பங்கள்; உதாரணமாக: ரவையச்சு (Ball-Bearing) உறுதியான சாலை, ரயில் தண்டவாளம் முதலியவை. (2) உழைக்கும் மனிதன் அல்லது பிராணிக்குப் பதிலாக உபயோகிக்கவும், அவர்களின் தொகையைக் குறைக்கவும், தொழிலாளரின் புத்தியையோ உடல் வலிமையையோ பயன்படுத்துவதற்குப் பதிலாக அவர்களை உயிருள்ள இயந்திரங்களாக உபயோகிக்கவும் அமைக்கப்பட்ட இயந்திரங்கள்; உதாரணமாக: மாவுமில், நெல் அரைக்கும் மில், எண்ணெய் மில், சர்க்கரை இயந்திரம், நூல்-துணி மில், மோட்டார், ரயில் முதலிய சாமான்கள் சுமக்கும் சாதனம், யந்திரக் கலப்பை, நீராவி அல்லது மின்சார சக்தியால் இயங்கும் தண்ணீர்க்குழாய், நுண்ணிய தொழிற் பாகுபாட்டினால் விளைந்த இயந்திரங்கள் முதலியவை.

2. முதல் வகையைச் சேர்ந்த இயந்திர சாதனங்களும், அவற்றின் செப்பங்களும் பொதுவாக விரும்பத்தக்கவையே. அவற்றினாலும் தொழிலாளர் பிராணிகள் ஆகியோரின் தொகை குறையலாம்; ஆனால் அது சிறிதாகவே யிருக்கும்.

3. இரண்டாம் வகை இயந்திர சாதனங்களையும், செப்பங்களையும் எச்சரிக்கையாகவும் பகுத்தறிவுடனும் உபயோகிக்க வேண்டும். அதாவது, ஆயுதங்கள் குண்டுகள் முதலியன உற்பத்தி செய்வதையும் உபயோகிப்பதையும் மக்களின் சர்க்கார் எப்படிக் கட்டுப்படுத்துமோ, அப்படியே இந்தச் சாதனங்களையும் செப்பங்களையும் கட்டுப்படுத்தவேண்டும்.

4. இரண்டாம்வகை இயந்திரங்களின் உபயோகம் எந்த நிலையில் குற்றமாகாது என்பதற்குச் சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன:

(அ) வேலை அதிகமாயிருக்க, ஆட்கள் குறைவாயிருந்து அதிக ஆட்கள் கிடைப்பதும் வைத்துக்கொள்வதும் சிரமமாயுள்ளபொழுது; (உ - ம்) கப்பலில்.

(ஆ) எதிர்பாராதுவந்த இடையூறினாலோ, வேறு காரணங்களினாலோ கூடியவரையில் சீக்கிரமாக வேலை செய்தாக வேண்டியிருந்து இயந்திரங்களை உபயோகிக்காமல் அதிக மனிதர்களை உபயோகிப்பதால் குழப்பமும் தாமதமும் ஆபத்தும் வளரு

மாஞல்; (உ - ம்) தீ அணைத்தல், பஞ்சம் முதலிய இயற்கை ஆபத்துக்களிலிருந்து மக்களைக் காத்தல், தானியம் முதலிய வைகளை அனுப்பி உதவுதல் முதலியன.

(இ) எந்த இயந்திரங்களும், செப்பங்களும் உதவித் தொழில் தரும் அல்லது உள்ள தொழிலை விருத்திசெய்யுமே யன்றி உள்ள உதவியைக் கெடுக்காதோ; (உ - ம்) அதிக நூல் நூற்கும் ராட்டை, கயிறு திரிக்கும் சக்கரம் முதலியன.

(ஈ) முதல் வகையைச் சேர்ந்த இயந்திரங்களும், சக்கரங் களும் கருவிகளும் செய்தல்; முக்கியமாக ஒரேமாதிரியான, ஒரே அளவுள்ள இயந்திரம் அல்லது சக்கரங்கள் செய்வதில் நன்மையிருக்கும் இடங்களில்.

(உ) மிகவும் கணக்காக உதவக்கூடிய நுண்ணிய சாதனங் கள் தேவையானபொழுது; (உ - ம்) கடியாரம், டைப் ரைட்டர், சோதனைச் சாலைகளுக்குத் தேவையான கருவிகள் செய்தல்.

(ஊ) மக்களின் பெரும் பகுதியை உபயோகிக்க முடியா ததும், ஆனல் தயாராகும் பொருள் யாவருக்கும் உபயோக மானவையா யிருப்பதும்; (உ - ம்) தண்ணீர்க் குழாய்கள், தகரம், கண்ணுடியால் செய்த வீட்டுச் சாமான்கள் முதலியன.

(எ) தனி மனிதனுடைய துணிவினுலோ, அரசாங்கத்தின் சார்பிலோ, அதன் மேற்பார்வையிலோ நடைபெறும் தொழில் களில்; (உ - ம்) ரயில், கப்பல், சுரங்கம், எண்ணெய்க்கிணறு முதலியன.

5. இன்றியமையாதவையென்று கருதப்படுமளவுக்கு இரண்டாம் வகை இயந்திரக் கைத்தொழில்களுடன் தொடர் புள்ள தொழிற்சாலைகளும் அவசியமானவையென்று கருதப் படும்; (உ - ம்) இரும்பு, கருவிகள், இயந்திரங்கள், கண்ணுடி, மின்சாரம் ஆகியவை செய்யும் தொழில்களும், இவைகளுக்குத் தேவையான கருவிகள் செய்யும் தொழிற்சாலைகளும்.

12. நாடுகளிடையே வியாபாரம்

1. எந்த வஸ்துக்கள் சொந்த நாட்டில் உண்டாவ தில்லையோ, உண்டாக்குவதற்கும் இயற்கை வசதிகளில்லையோ, பெருத்த சிரமத்துடனே அல்லது பிற நாட்டு மக்களை மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கியோ உண்டாக்கவேண்டி யிருக்கிறதோ, எதை உண்டாக்கும் வித்தையை மக்கள் மிகுந்த சிரமத்துடன்

கற்றிருப்பதுடன், அதனால் கிடைக்கும் வருவாயையே பெரிதும் நம்பி வாழ்கிறார்களோ, கொடிக்கணக்கானவர்களுக்கு எதில்லா விட்டால் வாழ்வதே சிரமமாகும்படி அவ்வளவு இன்றியமை யாதது இல்லையோ, பெருமை பொருந்தியதாயினும் தினசரி வாழ்வுக்கு எது அவசியமில்லையோ, எவையில்லாமலே சாதா ரண மக்களின் வாழ்க்கை நடைபெறுமோ அவைகளின் வியா பாரம் நாடுகளிடையே நடைபெறலாம்.

2. இந்த வியாபாரத்தை நடத்தும்பொருட்டு எந்தவித மான நிர்ப்பந்தமும் ஹிம்சையும் ராஜீய அதிகாரத்தை உபயோகிப்பதும் கூடாது.

3. மேலே கூறிய பொருள்களை எவ்வகையிலாவது சொந்த நாட்டிலேயே உண்டாக்கப் பிடிவாதம் செய்வதும் பாவமாகக் கூடும்.

4. சோதனைச் சாலைகளில் உபயோகப்படும் எத்தனையோ கருவிகள், 'எக்ஸ்ரே' யந்திரம், விசேஷரகத்தைச் சேர்ந்த கடியாரங்கள், குங்குமப்பூ, காஷ்மீர் தேசத்தின் கம்பளங்கள், ஏலக்காய்......முதலிய வனஸ்பதிகள் முதலியவைகளை இவ் வகையைச் சேர்ந்தவையென்று கருதலாம்.

VII தொழில்

1. உழவு

1. உழவு இந்தியாவின் உயிர் நாடியான தொழில். கொடிய விதத்தில் தொடர்ந்து சுரண்டப்பட்டு வந்தும் இந்தியா இன்று வரையில் உயிர் வைத்துக்கொண்டிருப்பதற்கு அது உணவுக்குப் பிறர் கை பார்க்கவேண்டி யில்லாதிருப்பதே காரணம். ஆனால் இந்தச் சுயதேவைப் பூர்த்திக்கு இப்பொழுது ஆபத்து வந்து விடவில்லை யென்று கூறவியலாது.

2. இந்தியாவின் பொருளாதார முறையும், ராஜீயப் போக்கும் உழவுத் தொழிலைப் பாழாக்கி வருகின்றன. அதன் பயனாக உழவு இப்பொழுது வருவாயுள்ள தொழிலாயில்லை.

3. பிரிட்டிஷ் ஆட்சி முறையில் நிலவரி சட்டப்படி நிலத்தின்மீதுள்ள முதல் சுமையாகும். சுயராஜ்யத்தில் இது தலைகீழாக மாறவேண்டும். அதாவது, பயிர்த்தொழிலின் முன்னேற்றம் ஆட்சியின் முதல் பொறுப்பாகி, நிலத்தின்வரி

முதலியவை நிலத்துக்குத் தீங்கு விளைவியாதவகையில் அமைக்கப்படவேண்டும். நாட்டுக்குத் தேவையான தானியங்கள் எப்பொழுதும் சேமிக்கப்பட்டிருக்கும்படி சுயராஜ்யத்தின் பொருளாதாரத் திட்டம் அமைக்கப்படவேண்டும்.

4. இந்தியாவில் பழ விருட்சங்கள் பயிராக்குவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை; இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

5. பயிர்த்தொழிலின் முன்னேற்றத்திற்கு மேய்ச்சல் புலங்களின் வசதி இன்றியமையாதது. விவசாய - காட்டிலாக்காக்களின் போக்கு, மக்களுக்கு பசு - எருமை வளர்ப்பதில் ஊக்கமுண்டாக்குவதாய் இருக்கவேண்டியதுடன், அவற்றின் உணவுக்கு உபயோகமான தீவன வகைகள் விளைவிக்கவும் வசதிகள் இருக்கவேண்டும்.

6. பயிர்த்தொழிலைப்போலவே எல்லாத் தொழில்களிலும், உழைப்பின் நோக்கமே தவறுனதாயிருக்கிறது. நிலவரி, பிற வரிகள், கடன் முதலியவற்றைப் பற்றிய கவலை மனிதனுக்கில்லையானல், அவன் தன் உழைப்பினுல் உண்டாகும் பொருளின் விஷயத்தில் எதை விற்பதால் தனக்குக் கூடியவரையில் அதிகப்பணம் கிடைக்குமென்று சிந்தியாது, தனக்கும் தன் குடும்பத்துக்கும் தன் கிராமம் அல்லது சமூகத்துக்கும் எது எத்தனை வேண்டுமென்பதையே சிந்திப்பான்.

7. இவ்வாறு தன்னிடம் தானியமும் தீவனவகைகளும் நிரம்ப இருக்கவேண்டுமென்பதே அவனது முதல் கருத்தாக இருக்கும். ஏறிய விலையை மட்டும் கவனித்துக்கொண்டு பஞ்சு, மணிலாக்கொட்டை, புகையிலை முதலியவைகளை விளைவித்துக் குவிப்பதற்கு முயற்சி செய்யான்.

8. உயர்ந்த விலை பெறும் நோக்கத்துடன் நடைபெறும் 'வியாபாரப் பயிர்களி'னுல் குடியானவனுக்கு இறுதியில் அதிக இலாபம் கிட்டாததுடன், ஒரு புறத்திலிருந்து வரும் பணம் மறுபுறத்தின் வழியாகப் போய்விடுகிறது. இதனுல் பெருத்த அநீதியும் விளைகிறது. நாம் உண்டாக்கும் பொருளினுல் நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் மக்களின் உடல், மனம், நடத்தை ஆகியவைகளுக்கு எத்தனை தீங்கு விளைகிறது என்பதைப் பற்றிச் சிந்திக்க உதவும் தர்ம உணர்ச்சியே கெட்டுவிடுகிறது. புகையிலை, அபின் முதலியவைகளைப் பயிரிடுதல் இதற்கு உதாரணமாகும்.

2. உதவித் தொழில்கள்

1. இந்தியாவில் பயிர்த்தொழிலுக்குப் பல இயற்கையான ஆபத்துக்கள் உள்ளன. அவைகளிலிருந்து தப்புவதற்கான முயற்சிகள் செய்துகொண்டே யிருந்தாலும், பெரும்பாலும் இந்த நிலை இருக்கத்தான் செய்யும். இரண்டாவதாக, இது வருஷம் முழுமையும் செய்யக்கூடிய தொழிலாக முடியாது. உழவுக்காலத்திலும் ஒரேமாதிரியாக உழைக்க வேண்டியிருப்ப தில்லை. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், இதற்குப் பலர் தேவையாயிருக்க, மற்ற நாட்களிலோ நிலத்தின் உடையவனும் அவன் குடும்பத்தாரும்கூட, வேலையற்று வாளாயிருக்கிறார்கள். ஆகையால் இந்தியாவில் உழவையும் தொழிலையும் அறவே பிரிக்கக் கூடாதென்பது மட்டுமல்ல, பயிர்த் தொழிலுடன் ஏதாவது ஒரு தொழில் அவசியம் சேர்ந்திருக்கவேண்டும்.

2. உதவித் தொழில் கீழே கண்ட அனுகூலங்கள் உள்ளதா யிருக்கவேண்டும் :

(அ) அது முக்கியத் தொழிலுக்கு—அதாவது உழவுக்கு—ஒத்ததாயிருக்கவேண்டும் ; அதற்காக உழவைக் கெடுக்க வேண்டியதா யிருக்கக்கூடாது.

(ஆ) முக்கியத் தொழிலில் அதிகமாக உழைக்கும் சமயம் வந்ததும், சிறிதும் நஷ்டமின்றி எடுத்துக் கட்டி வைக்கும்படி யாகவும், அதைக் கவனியாத பொழுதும் தானே நடக்கக்கூடிய தாகவும் இருக்கவேண்டும்.

(இ) தவிர, இது தானே சுதந்திரமாகச் செய்யக்கூடியதா யிருக்க வேண்டுமேயன்றி பிறரிடம் புரியும் ஊழியமாயிருக்கக் கூடாது.

(ஈ) இந்தக் காரணங்களினால் ஏழை மக்களின் சக்திக்குப் புறம்பாக, இயந்திரத்திற்கும் மூலப் பொருளுக்குமென்று அதிக முதல் தேவையாயிருக்கக் கூடாது.

(உ) வயல்களுக் கருகாமையிலேயே தன் வீட்டிலோ கிரா மத்திலோ செய்யக்கூடியதா யிருக்கவேண்டும்.

(ஊ) கோடிக்கணக்கான மக்களை அதை ஏற்கும்படிச் செய்ய வேண்டுமானால், அதனால் உற்பத்தியாகும் பொருள் சுலபமாகச் செலவாகக் கூடியதா யிருக்கவேண்டும்; அதாவது யாவரும் உபயோகிக்கும் வஸ்துவா யிருக்கவேண்டும்.

(எ) அவ்வாறே, கோடிக் கணக்கானவர்களுக்காக அத்

தொழிலை அமைப்பதானால், அது நினைத்த மாத்திரத்தில் சுலபமாகவும் குறைந்த செலவிலும் ஆகக் கூடியதாயிருக்கவேண்டும்.

(ஏ) மேலும், கோடிக்கணக்கானவர் என்றால் படிப்பில்லாதவர், சாதாரண அறிவு படைத்தவர், பலம் பெறாத சிறுவர், முதியோர்—யாவரும் செய்யக்கூடியதாக இருக்கவேண்டும்.

(ஐ) ஆயினும், இயந்திர சாலையைப்போல் மனிதனை வேலையினிடையே உணர்ச்சியற்ற ஓர் இயந்திரமாக்கி, வேலை முடிந்ததும் அருவருப்பும் களைப்பும் விளைவிப்பதா யிருக்கக் கூடாது.

3. இந்த உதவித் தொழில்களுள் ராட்டையும் பசு வளர்த்தலும் முக்கியமானவை. இவ்விரு தொழில்களும் பண்டுதொட்டே உழவுடன் இணைந்து இருந்திருக்கின்றன, நீண்டகால அனுபவம் என்ற உரை கல்லில் உரைக்கப் பெற்றிருக்கின்றன.

4. தந்தி, தபால், ரயில் ஆகியவை அகில இந்திய இலாகாக்களாக மதிக்கப் படுவதுபோல, ராட்டையும் பசு வளர்ப்பும் அகில இந்திய மகத்துவம் பொருந்தியவை. பெருத்த அளவில் மிகவும் அதிகமான மக்களுக்குச் சுலபமாகவும் சௌகரியமாகவும் வேலை தரக்கூடியவை இத்தொழில்களே.

5. இந்த இரண்டு தொழில்களையும்பற்றி தனிப் பகுதிகளில் பின்னர் விசேஷமாகக் கவனிப்போம். ஆனால் பசு வளர்த்தலைவிட ராட்டை ஒருவகையில் சிறந்தது. பசு வளர்க்க ஓரளவு நிலமும் முதலும் வேண்டும்; ஆகையால் சொந்தத்தில் நிலமுள்ள உழவர்களுக்கே அது உதவித் தொழிலாக அமையக் கூடும். சொந்த நிலமில்லாது கூலிக்கு வேலை செய்து வாழும் இலட்சக்கணக்கானவர்களுக்கு அது அவ்வளவு பயன்படாது. இரண்டாவதாக, பசு வளர்ப்பு, உழவுடன் சேராது தனித் தொழிலாகவும் நடைபெறலாகும். ராட்டையோ இவ்விரண்டுடனும் சேரும். இவ்வாறு பசு வளர்ப்பு, ராட்டை இரண்டும் சேர்ந்தும் உழவரின் உதவித் தொழில்களாக இருக்கவியலும்.

6. ராட்டையை வற்புறுத்துவதன் கருத்து, இதைவிடுத்து வேறு எதுவும் உதவித் தொழிலாகக் கூடாதென்பதல்ல. இடம் வசதியாயிருந்து, ராட்டையைவிட அதிக இலாபமாக வேறு தொழில் ஏதேனும் நடைபெறக் கூடுமானால், ராட்டைக்குப் பதிலாகவோ, அத்துடன் சேர்ந்தோ வேறொன்று நடக்கவும் இடமுண்டு. அதை ஆராய்ந்து விருத்தி செய்யவும் பரப்பவும்

வேண்டியது ஸ்தல அதிகாரிகள், லோகல் - போர்டுகள் ஆகியவை களின் கடமையாகும்.

7. இவ்விஷயத்தில் பொதுவாக ஒன்று கூறலாம். எந்தக் கிராமத்தில் மூலப்பொருள் விளைகிறதோ, அதைச் சேர்க்கவும் விற்கவும் உபயோகிக்கத் தக்கதாகச் செய்யவும் என்னென்ன செய்யவேண்டுமோ, அவையெல்லாம் மூலப்பொருள் தயாரிப்பவனுள்ள இடத்திலேயே நடைபெறவேண்டும். உதாரணமாக, வெளி நாடுகளுக்கும் நகரங்களுக்கும் நெல் போகாமல் அரிசியே போகிறது; ஏனெனில் அதையே சாப்பிடமுடியும். கோதுமைக்குப் பதிலாக மாவு அதிகமாகப் போகிறது. அதனால் ஆன ரொட்டி, பிஸ்கோத்துகளும் அதிகமாகச் செலவாகின்றன; கரும்பை வெல்லமாகவோ சர்க்கரையாகவோ செய்தே உபயோகிக்க முடிகிறது; எள்ளின் எண்ணெயே உபயோகப்படுகிறது; பருத்தி துணியாகியே உபயோகமாகிறது; தோல் பதனிடப்பட்டபின் அதனாலான விதவிதமான பொருள்களே உபயோகத்திற்கு வருகின்றன; ஆகையால், நெல் அரைத்தல், மாவு அரைத்தல், ரொட்டி-பிஸ்கோத்து, வெல்லம், சர்க்கரை செய்தல், எண்ணெய் ஆட்டுதல், துணி நெய்தல், தோல் தொழில் முதலியவை கிராமங்களிலேயே நடைபெறவேண்டும். இந்தத் தொழில்களெல்லாம் உழவர் அல்லது கிராமவாசிகளின் உதவித் தொழில்களாக முடியும். இத்தகைய வேறு பல தொழில்களையும் கூறலாம்.

8. இத்தகைய தொழில்கள் உதவித் தொழில்களாக நடைபெறுமானால், உழவனுக்குப் பலவகைகளில் பயனுண்டாகும். உதாரணமாக, நெல்லின் தவிடும் கோதுமை உமியும் கரும்பின் இலை - சக்கையும் எள்ளுப் பிண்ணாக்கும் கடலையோடும், பருத்திக் கொட்டை முதலியவையும், மாடுகளுக்குத் தீவனமாகும். அவற்றை நிலத்திற்கு உரமாகவோ வேறு தொழில்களிலோ உபயோகிக்கலாம்.

3. பூரண சுதேசி

1. சுதேசிப் பொருள்களை ஆதரித்தல் அவசியமாகும். சுதேசி தர்மத்தை அனுசரிப்பதிலேயே இது அடங்கும். ஆனால் சுதேசிப் பொருள்களுக்கு ஊக்கம் தரும் நோக்குடன் நடத்தும் இயக்கத்தில் மிகவும் ஆலோசித்துக் காரியங்களைச் செய்தல் அவசியமாகும்.

2. இந்த ஆலோசனை யில்லாமையால் சுதேசியின் பெயரால் தெரிந்தோ தெரியாமலோ ஒருவகை மோசடி நடைபெறுகிறது; பல ஊழியர்களின் ஆற்றல் வீண் விரயமாகிறது; மனச்சாட்சி வேறு குத்துகிறது.

3. எந்தப் பொருளைப் பரப்புவதற்குத் தனி உதவியும், விளம்பரமும் தேவை யில்லையோ, அதற்காகச் சமூக ஊழியர்கள் கண்காட்சிகள் நடத்தத் தேவையில்லை. ஏனெனில் இதனால் விலை ஏறுவதுடன், போட்டியிடக்கூடிய சொத்துள்ள வியாபாரிகளிடையே விரும்பத்தகாத மனவேற்றுமையும் வளர்கிறது.

4. உதாரணமாக, துணி, சர்க்கரை, அரிசி ஆகியவற்றின் மில்களுக்கு இத்தகைய உதவி தேவை யென்பதை ஒப்பமுடியாது. இதே விஷயம் பெரும்பாலும் நாட்டின் காகித மில்கள், எண்ணெய் மில்கள், மேல்நாட்டு மருந்தின் நாட்டு உற்பத்தி ஸ்தாபனங்கள், சோப்பு-தோல் ஆலைகள் ஆகியவற்றிற்கும் பொருந்தும்.

5. இதன் பொருள், விதேசித்துணி, சர்க்கரை, அரிசி, காகிதம், எண்ணெய், மருந்துகள், சோப்பு, பல் - மஞ்சனம், புரஷ் ஆகியவற்றை உபயோகிப்பதில் தடையில்லை யென்பதல்ல. விதேசிப் பொருள்களுக்குமுன் நிற்க அவைகளுக்குச் சக்தியில்லையானால், அவைகளுக்கு முழு ஆதரவும் கிட்டவேண்டியதே. அவைகளை உபயோகிக்க வேண்டுமென்போர் அவைகளுக்கே ஆதரவளிக்க வேண்டும்.

6. ஆனால் அவைகளுக்குச் சுதேசி இயக்கம் தேவையில்லை. கிராமக் கைத்தொழில்களுக்கே இன்று பாதுகாப்புத் தேவை. அதாவது, கதர், வெல்லம், பழுப்புச் சர்க்கரை, கைக்குத்தரிசி, கைக் காகிதம், மாட்டுச் செக்கில் ஆட்டிய எண்ணெய், வீட்டு மசாலை, பல் பொடி, கிராமத்துத் துடைப்பம், பாய், கூடைகள், கயிறு, தோல் சாமான்கள் முதலிய அழிந்தும் அழிந்ததற்குச் சமமாகவும் உள்ள நூற்றுக்கணக்கான தொழில்களைப் பிழைப்பித்தல் அவசியம்.

7. இவ்விஷயத்தில் நகர வாசிகளும், படித்தவர்களும் கிராமத்தின் விஷயத்தில் மன்னிக்கத்தகாத அலட்சிய புத்தி காட்டி யிருக்கிறார்கள்.

8. சில வருஷங்களுக்கு முன் கிராமத்தவர் தமக்குத் தினம் தேவையான பொருள்களைத் தாமே தயாரித்து வந்தனர்; சிறிய நகரங்களில் வசிப்போரும் தமக்குத் தினம் உதவும் பல பொருள்

களுக்கு அவர்களையே நம்பி யிருந்தனர். இதற்கு மாறுக அவர்கள் இப்பொழுது அவற்றை நகரங்களிலிருந்தோ, வெளி நாடுகளிலிருந்தோ வாங்குகிறுர்கள்; இதனுல் பரம்பரையாகக் கிராமவாசிகள் செய்துவந்த தொழில்கள் அற்றுவிட்டன. ஆனுல் நகரத்தவரும் படித்தவரும் இதைப்பற்றி ஏதும் சிந்திக்க வில்லை.

9. ஆகையால் இன்றைய கிராமவாசி ஏழைமை, பிறர் கை பார்த்த பிழைப்பு, மனச்சோர்வு ஆகியவைகளினுல் பீடிக்கப் பட்டிருக்கிறுன். அவனுக்கு 50 வருஷத்திற்கு முந்திய கிராம வாசியின் புத்தியிலும், ஞானத்திலும் பாதிகூட இல்லை. கிரா மத்தின் தொழிலாளியும், மற்றக் கிராமவாசிகளைப் போலவே அறிவு மழுங்கித் திறமை யில்லாதவனுகி விட்டான்.

10. கிராமவாசிகள் தமது ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை ஏதேனும் உபயோகமான தொழிலில் செலவிட, நகரவாசிகள் கிராமத்தில் உண்டாகும் பொருளை வாங்க எப்பொழுது உறுதி கொள்வார்களோ, அப்பொழுதே கிராமவாசிகளுக்கும் நகரவாசி களுக்குமிடையே அற்ற தொடர்பு மீண்டும் கூடும்.

11. இவ்வேலையில் தேசபக்தர்களுடைய ஒரு பெரிய படைக்கு இடமிருக்கிறது. இன்று பணியாற்றிவரும் சுதேசி சங்கங்களுக்கும் மற்றவைகளுக்கும் வேலை செய்வதற்குப் பரந்த இடம் ஆயத்தமாயிருக்கிறது. இதன் பொருட்டு எத்தனை எத் தனையோ தொழில்களை நன்கு தெரிந்துகொள்வதும், மற்றவை களைப்பற்றி ஆராய்வதும், பல்வகைத் தொழிலாளரின் நன்மை யையும் கவனித்தலும் அவசியம். இதனுல் இன்று வேலையில்லாது பட்டினியால் வாடும் கணக்கற்ற மக்களுக்கு நாணயமாகவும் மரியாதையுடனும் தொழில்செய்து பிழைக்க வழி பிறக்கும்.

12. இது உண்மையான, பயனுள்ள பூர்ண சுதேசி யாகும்.

4. விசேஷத் தொழில்கள்

1. சமூகம் நன்றுக நடைபெற்றுச் சிறப்புடன் ஓங்கிவாழ வேண்டுமானுல், உழவு உடை என்ற தொழில்களைத் தவிர வேறு பல தொழில்களும் தேவையாகும். உதாரணமாக, உலோகங்கள், நிலக்கரி, மண்ணெண்ணெய் முதலியவைகளின் கனிகளும் பிற சுரங்கத் தொழில்களும், உப்பு, மீன் முதலிய கடற்பொருள் களைப் பற்றியவையும், மரம், அரக்கு, ரப்பர், பச்சிலைகள் முதலிய காட்டு விளைபொருள்களைப் பற்றியவையும்.

2. இத்தொழில்கள் உழவையும் உடையையும் போல வாழ்க்கைக்கு இன்றியமையாதவையல்ல; ஆயினும் இன்றைய சமூக வாழ்வில் இத்தொழில்களை அலட்சியம் செய்யவியலாது.

3. இத்தொழில்களில் மக்களின் பெரும் பகுதியினர் ஈடுபடுவதில்லை; ஆயினும் இவைகளினால் உண்டாகும் பொருள்கள் ஒவ்வொருவருக்கும் தேவையா யிருக்கிறது. ஆகையால் இவைகளின் உபயோகத்தைக் கருதும்பொழுது எல்லா மக்களின் நலனும் இவைகளுடன் கலந்திருப்பது தெரியும்.

4. இத்தகைய தொழில்கள் குறிப்பிட்ட சில இடங்களில் நடைபெறுவனவே யன்றி நாடு முழுமையும் நடைபெறுவன வல்ல.

5. இவைகளில் மீன்பிடித்தல், உப்புத் தயாரித்தல் இரண்டும் உழவுத் தொழிலை யொத்தவை. அவற்றின் பொருளாதார முறை, உழவு, ராட்டை ஆகியவைகளைப் போலவே அமையவேண்டும். நூல் நூற்பதற்கு ஒவ்வொரு உழவனுக்கும் உரிமை யிருப்பதுபோல், ஒவ்வொரு கடற்கரை வாசிக்கும் உப்பு உண்டாக்கச் சுதந்திர முண்டென்று கருதப்படவேண்டும்.

6. மேலே கூறப்பட்ட மற்றத்தொழில்களில் பெரும் பாலும், அதிகமுதல், தேர்ச்சி, ஆற்றலுள்ள நிர்வாகம், பெருவாரியாகச் செய்தல் ஆகியவை தேவை. இத்தொழில்கள் தனி நபரின் பொறுப்பில் நடைபெற்றாலும் சரி, ராஜ்யத்தின் மேற்பார்வையில் நடந்தாலும் சரி, இவற்றின்மீது கீழ்க்கண்ட நிர்ப்பந்தங்கள் இருக்கவேண்டும் :

(அ) இவைகளில் தயாராகும் பொருள்கள் குறைந்தவிலையில் மக்களுக்குக் கிடைக்கவேண்டும்.

(ஆ) இவை நல்ல வேலைப்பாடுள்ளவைகளாகவும், உழைக்கக் கூடியவையாகவும் இருக்கவேண்டும்.

(இ) இவை தனி நபரின் பொறுப்பில் நடந்தால், இவைகளில் வரும் இலாபத்தையும், விற்பனை விலையையும் ராஜ்யம் கட்டுப்படுத்தவேண்டும்.

(ஈ) இவற்றில் வேலைசெய்யும் தொழிலாளரின் நன்மைகளை ராஜ்யம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

(உ) இவற்றுள், சிறிய அளவில் குறைந்த முதலைக்கொண்டு குடிசைத் தொழிலாக நடைபெறுவனவற்றைப் பெருக்கும்பொழுது, அவை சிறிய தொழில்களை அழித்து விடாதவாறு

அவைகளை வரம்புக்குட்படுத்தவேண்டும். வீடுகளில் செய்யக் கூடியவைகளை தொழிற்சாலைகளில் செய்யாமல் தடுக்கவேண்டும்.

7. துணி மில்களும், நிலைத்திருக்கும்வரையில், இந்த விதியை யொட்டியே நடைபெறவேண்டும்.

5. தீய தொழில்கள்

1. கள், சாராயம், அபின், பங்கி, கஞ்சா, புகையிலை, வெடிமருந்து, ஆயுதங்கள் முதலிய மக்களின் ஆரோக்கியத் திற்கோ நடத்தைக்கோ தீங்குவிளைவிக்கும் தொழில்களை அர சாங்கம் தனி நபரின் பொறுப்பில் நடைபெறும்படி விடக் கூடாது; விட்டால் வெகு எச்சரிக்கையான மேற்பார்வையின் கிழ் நடைபெறச் செய்யவேண்டும்.

2. அவைகளை நடத்துவதில் அரசாங்கம் பணம் சம்பாதிப் பதை நோக்கமாகக்கொள்ளாமல், மருந்து முதலானவை களுக்குத் தேவையான அளவில் அவைகளை உற்பத்தி செய்து, மக்களுக்குப் பயன்படும்படிச் செய்வதையே முக்கியமாகக் கருத வேண்டும்.

3. இத்தகைய பொருள்களை வெளிநாடுகளில் விற்பதானல், அந்த நாடுகளின் விருப்பத்தை யொட்டியே விற்கச் செய்ய வேண்டும்.

6. உபயோகமான வேலைகள்

1. சமூக வாழ்க்கையில் கைத்தொழிலாளரைத் தவிர இன்னும் எத்தனையோ வேலைகள் செய்வோர் தேவையாயிருக் கிறது. உதாரணமாக, உபாத்தியாயர், சிப்பாய், வக்கில், நியா யாதிபதி, அதிகாரி, டாக்டர், கடைக்காரன், தோட்டி, குமாஸ்தா முதலியோர்.

2. இந்தத் தொழிலாளிகள் நேரிடையாக உபயோகமான பொருள் ஏதும் உற்பத்திசெய்யவில்லை. ஆனல் வேறுவகையில் பொருள்களை உண்டாக்குவதிலும் உபயோகிப்பதிலும் தீங்கு செய்யும் பொருள்களை அழிப்பதற்கும் வெளியேற்றுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்வதிலும் அவர்கள் தேவையாயிருக் கிருர்கள்.

3. இவ்வேலையாளரினால் சமூகத்திற்கு ஆகும் செலவை, நிர்வாகச் செலவு என்று கூறலாம். ஆகையால் இவர்களின் தொகையும் இவர்களுக்காக ஆகும் நிர்வாகச் செலவும், மக்களின் தொகை, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் இரண்டையும் ஒட்டிய ஒரு வரம்புக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

4. இவ்வேலைகள் சேவை நோக்குடன் நடைபெறவேண்டும், பணம் சேர்த்துத் தனவானாகும் நோக்கோடல்ல. ஆகையால், ஒன்று, இவ்வேலை புரிவோருக்குச் சமூகத்தின் நிலை, செழிப்பு இரண்டுக்கும் பொருத்தமாகவும், அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதுமானதாகவும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சம்பளமாக ஏற்படுத்தவேண்டும். இரண்டாவது, அவர்கள் இத்துடன் திருப்தியாயிருக்க வேண்டுமேதவிர இதற்கு மேலும் வேறு வருமானம் பெறக்கூடாது; தம் ஆற்றலைக் கொண்டு சமூகத்திற்கு மேன்மேலும் நன்மையுண்டாகச் செய்ய வேண்டும்.

5. இந்த வரம்புகளுக்குட்பட்டு இத்தொழில்களைச் செய்தால் சமூகத்தின் பூரண முன்னேற்றத்திற்கு உதவியாகும்; மேலும், இத்தொழில்களில் இடம்பெறுவதற்கு மக்களிடையே தவறான ஆசையோ, அந்த ஆசை நிறைவேற வேண்டித் தவறான முறைகளைக் கையாள்வதோ தேவையாக இராது.

6. எவர்களுக்குப் பணம் சேர்க்க வேண்டுமோ, நிலம், வீடு நகை எல்லாம் தேவையோ, எவர்கள் பிரபல மெய்த விரும்புகிறார்களோ, அவர்களுக்குத் தொழில்களே கவர்ச்சியுள்ளதாயிருக்கும்; தொழில்களில் அவர்களுக்கு இடமும் இருக்கும். இந்தப் பகுதியில் கூறிய வேலைகளோ, அத்தகையோரின் நோக்கத்திற்கு உகந்த வருமானமளியாதிருத்தல் வேண்டும்.

7. இதற்குமாறாக, ஒரு குறிப்பிட்ட வருமானம் நிச்சயமாகவும் நீடித்தும் எவருக்கு வேண்டுமோ, அவர்களுக்கு இவ்வேலைகளில் இடமிருக்கவேண்டும். ஆகையால் இவ்வேலைகளில் ஈடுபடுவோருக்கு, தேவையான ஆற்றலோடு நடத்தையும் மிகச் சிறந்ததா யிருத்தல்வேண்டும்.

7. கலைகள்

1. இசை, கதாப்பிரசங்கம், சித்திரம், நாட்டியம், நாடகம், சினிமா முதலிய கலைகள் உசிதமான வரம்புக்கு உட்பட்டிருந்தால், அவைகள் சன சமுதாயத்தின் தீதற்ற மனோ விநோதம், அறிவுவளர்ச்சி, உணர்ச்சிப்பெருக்கு ஆகியவைகளுக்கு உதவும் சாதனங்களாக வியலும். வரம்பை மீறுமானால் சாராயம் அபின் ஆகியவைபோலத் தீங்குசெய்யும் துற்பழக்கங்களாகிவிடும்.

2. சாதாரணமாகக் கலைகளை சீவனத்திற்கான தொழில்களாக்கக் கூடாது; ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும் தன் வாழ்விற்கு உதவும் தொழிலைத் தவிர இவற்றுள் ஏதேனுமொன்றில் ருசியிருக்கும்படி கல்வி யளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. இதனால், மக்களின் மனோ விநோதத்திற்காக இத்தகைய கலைகளின் காட்சிகளையும், திருவிழாக்களையும், மக்கள் தாமாகவும், தொழிலோடு தொடர்பற்ற கோஷ்டிகள் மூலமாகவும் நடத்தவேண்டும்.

4. இக்கலைகளில் உள்ள விருப்பம், வரம்பைமீறி துர் நடத்தையும் தீமையும் விளைவிப்பதாகாதிருக்கும்படி இந்தக் காட்சிகளையும் திருவிழாக்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

5. இந்த விதிகள் பொதுவான முறையையே விளக்குகின்றன. ஆனால் இக்கலைகளின் மூலமாக ஊதியம் பெறுவதைத் தடுப்பது, காரியத்திற்கு உதவுவதாகவோ நன்மை பயப்பதாகவோ இல்லாதிருக்கலாம். ஆகையால் சக்தியுள்ள இடங்களில் இந்தக் கலைகள் குற்றமற்றதாய் அறிவையும் நல்லுணர்ச்சியையும் வளர்க்க உதவும் வகைபுரிவது தமது கடமையென்றெண்ணி, முந்திய பகுதியில் உபயோகமான வேலைகளைப் பற்றிக் கூறியதை யொட்டி, தமது பொருள் நிலையின் வரம்பைக் கடவாது இத்தொழிலாளிகளுக்கு நிரந்தரமான ஊதியத்திற்கு ஏற்பாடு செய்யவும் நன்னடத்தையுள்ள கலா நிபுணர்களைச் சேர்க்கவும் வேண்டும்.

6. தம் பொறுப்பில் சுதந்திரமாய் இந்தத் தொழில்களை நடத்த விரும்புவோரை கொள்கையைப் பற்றிய கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கி, அனுமதி பெறுதல், விசேஷ வரி செலுத்துதல் முதலிய நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கலாம்.

7. இக்கலைகள் தகுந்த முறையில் வளர்ச்சியும் உரமும் பெறும்பொருட்டு, சௌகரியத்தை யொட்டி அரசாங்கம் அவை களில் வல்லுனருக்கு உதவியளிக்கலாம். இதில் சமநிலை கெடா திருந்தால் அவ்வாறு செய்வது சரியே.

8. தன் தொழிலில் கலையுணர்ச்சி காட்டும் ஒவ்வொரு தொழிலாளியும் ஆதரவுபெறத் தகுந்தவனுவான்; இவ்வாறு கலையை வளர்ப்பதில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

VIII பசுப் பாதுகாப்பு

1. மதநோக்கு

1. ஹிந்து மதத்தில் பசுப் பாதுகாப்புக்குத்தான் மிக்க மதிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; அது அரசர்களுக்கும் வைசி யர்களுக்கும் உரிய சிறந்த கடமையென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் இதற்காக லட்சக்கணக்கான ரூபாய் தானமளிக்கப் படுகிறது. இதெல்லாமிருந்தும் சரியான நோக்கமில்லாமை யால் இந்தியாவில் பசுக்களின் நிலை பசுவைப் புசிக்கும் நாடு களைவிடப் பரிதாபமானதா யிருக்கிறது.

2. பசுப் பாதுகாப்பைப் பற்றிய மதக்கருத்துக்கள் கீழ்க் கண்ட வகையில் உருப்பெறவேண்டும் :

(அ) அங்கஹீனமான, பலமில்லாத பசுக்களை வளர்ப்பது மட்டுமே பசு வளர்த்தலைச் சேர்ந்ததென்பதல்ல. பசு, எருது, ஆகியவற்றின் சாதித்தரத்தை உயர்த்துவதும் பசுவை அதிக பலமுள்ளதாய், அதிகப்பால் தருவதாயாக்கி, எருதின் தரத்தையும் உயரச் செய்தலும் பசுப் பாதுகாப்பில் அடங்கும்.

(ஆ) ஆகையால் பசுமடங்கள், மக்களுக்குப் பசுவளர்ப் பைப் பிரத்தியட்சமாகப் போதிக்கும் இடங்களா யிருக்கவேண் டும். பசுக்களை வைத்து வளர்க்கும் இடங்கள், அவைகளுக்குப் புல்லும் தீனியும் தரும் முறைகள், அவைகளினுல் உண்டாகும் பயனைக் குறித்து வைப்பதில் சாஸ்திரீய முறையை அனுசரித் தல், சாஸ்திரப்படி வேலைகளைச் செய்வதில் பழக்கம் ஆகியவை அவைகளில் புலனுகவேண்டும்.

(இ) கிராமத்து மக்கள் பசுக்களின் சாதியைத் திருந்தச்

செய்ய உதவும்படி பசுமடங்களில் நல்ல பொலி காளைகளை வளர்க்கவேண்டும்.

(ஈ) பசுமடங்களில் தோல்பகுதி யொன்று இருக்கவேண்டும். இறந்த மாடுகளின் எலும்பு, மாமிசம், தோல் முதலியவைகளைப் பற்றிய தொழிலை வெறுப்பதற்குப் பதிலாக இறந்த மாடுகளின் எலும்பு, மாமிசம், தோல் ஆகியவைகளை உபயோகிக்கவிடாத அதன் சொந்தக்காரன், அதைக் கொலை செய்ய ஊக்கமளிப்பவனாகிருனைகயால், கருணையுள்ளவனுடைய கடமை, இறந்த மாடுகளின் எலும்பு, மாமிசம், தோல் ஆகியவைகளை உபயோகிப்பதென்று உறுதி கொள்வதே.

(உ) உயிருள்ள பசுவைவிட, கொல்லப்படும் பசுவுக்கு அதிக மதிப்பிருப்பது தார்மீக நோக்குப்படி மிகக் கொடியது என்பதை யெண்ணி, உயிர் வாழும் பசுக்களின் மதிப்பு ஏறுவதற்கான முயற்சி செய்வது, தார்மீகக் கடமையென்று கருதவேண்டும்.

(ஊ) எருதுக்குக் காயடிப்பதைத் தவிர்க்கவியலாது என் பதை யுணர்ந்து, அதற்குரிய வேதனை தராத சாஸ்திரீய முறையைக் கற்று கோமடங்களில் அனுசரிக்கவேண்டும்.

(எ) அங்கஹீனமான பிறகும், உயிர்தப்ப வழியில்லாமலும் சகிக்கமுடியாத கஷ்டத்துக்குள்ளாகியும் இருந்து, நீடித்து வாழ்வதால் நோவால் வாதனைப் படுவதைத் தவிர வேறு நன்மையில்லாதபொழுது, நோவில்லாமல் அதன் உயிர் நீங்குவதற்கான வகை செய்தல் அதனிடம் கருணைபுரிவதாகும் என்பதை ஒப்பவேண்டும்.

2. இதரப் பிராணிகளை வளர்த்தல்

1. பசு என்ற சொல்லில் எல்லாப் பிராணிகளும் அடங்கும் என்பது சரியே ; ஆயினும் அதைக் கையாள்வதில்—அஹிம்சை நோக்குடன் கவனிக்கையிலும்—சிறிது பகுத்தறிவைப் பிரயோகித்தல் அவசியமாகும். ஆலோசனை யில்லாமல் பிராணிகளை வளர்த்தல், ஹிம்சையைப் பெருக்குவதிலேயே முடியும்.

2. இத்தகைய விவேக புத்தியில்லாமையால், எருமையின் பாலையும், நெய்யையும் உபயோகிப்பது, பசு, எருமை இரண்டையும் கொடுமைக்குள்ளாக்குவதில் முடிந்திருக்கிறது. ஏனெனில்,

(க) எருமை குளிர்ச்சியையும், தண்ணீரையும் விரும்பும் பிராணி; அதை உஷ்ணத்திலும் வறண்ட பிரதேசத்திலும் இருக்கச் செய்தல் அதற்குக் கொடுமை புரிவதாகும்.

(ங) எருமைக் கிடாக்களினுல் ஒன்றும் பயனில்லாமையால் அவை கொல்லப்படுகின்றன.

(ச) எருதுக்காகப் பசுவும் பாலுக்காக எருமையும் வளர்க்கப்படுவதால், எருமையைப்போல் பசு வளர்த்தல் லாபமானதாயில்லை. இதனுல் பசுவை அதிகப் பால் தரக்கூடியதாக்க முயற்சி நடைபெறுவதில்லை; அதைக் கொலை புரியவே தூண்டுதல் ஏற்படுகிறது.

3. இதனுல் எருமைப் பால், நெய் முதலியவற்றைக் கொள்ளாது, அதை வளர்ப்பதையும் நிறுத்தவேண்டும். இதன் கருத்து, எருமைகளைக் கொல்ல வேண்டுமென்பதல்ல; அது பெருகுவதைத் தடுக்கவேண்டு மென்பதேயாகும்.

4. இவ்வாறே பகுத்தறிவுடன் சிந்தித்தால், தெருக்களில் திரியும் நாய்களுக்கு உணவளிப்பது தவருன தர்மமாகுமென்பது தெரியும். நாயை வளர்க்க விரும்புவோர் அதை நன்கு கவனித்து வளர்க்க வேண்டியதே. ஆனுல், தெருத் தெருவாய்த் திரியும் நாய்களுக்கு உணவளித்து அவைகளை வளரச் செய்வது அவைகளின் கஷ்டத்தைப் பெருக்குவதாகும். இதனுல் அதன் வர்க்கம் கெடுகிறது; பிறருக்குத் துன்பம் விளைகிறது. அவைகள் பித்துறுவதற்கும் இடமுண்டாகிறது.

5. குரங்கு, புரு, எறும்பு முதலிய உயிர்களுக்குத் தீனியிட்டு வளர்க்கும் தர்மமோ, இன்னும் அதிகத் தவருனது. எந்தப் பிராணி மனிதனையண்டி வாழவில்லையோ, எவைகளினுல் மனிதனுக்கு ஏதும் நன்மையில்லையோ, அவைகளை வளர்த்தல் அறியாமையாகும். இதனுல் இறுதியில் நமக்குத் தொந்தரவுகளும் அவைகளுக்கு ஹிம்சையும் மிகும்.

6. ஜெயினர் - வைஷ்ணவரிடையே வழங்கும் அஹிம்சைத் தத்துவத்தை யொப்பாதவர்கள் மூலமாக, மேற்கூறிய தொந்தரவுகள் காரணமாக, இத்தகைய பிராணிகள் அடிக்கடி கொல்லப்படுவதில் ஆச்சரியமில்லை. கொலையுறுவதற்காக இப் பிராணிகளை உணவிட்டு வளர்ப்பது தர்மமென்று கருதும் சமூகங்களே பெரும்பாலும் இதற்குப் பொறுப்பாளியாகும். ஆகையால் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆத்திரமடைவது பொருத்தமற்றதாகும்.

3. பிராணிகளுக்குக் கொடுமை புரிதல்

1. பிராணிகளை ஒரே வெட்டில் கொல்வதைவிட அவைகளைக் கொடுமையாக நடத்துதல் ஹிம்சையில் குறைந்ததல்ல. இத்தகைய ஹிம்சை, ஹிந்துக்கள் வெகுவாகப் புரிகிருர்கள்.

2. 'பூங்கா' (மலத்வாரத்தில் குச்சியை நுழைத்தல்) தார் கொண்டு குத்துதல், மாட்டின் சக்திக்கு அதிகமான சுமையை ஏற்றல், வயிறு நிரம்பத் தீனி இடாமை, வாலை முறுக்குதல், தீனிக்காகத் தெருவைச் சுற்றவிடுதல், காயமானதும் நோயுற்றதுமான அங்கங்களுக்குச் சிகிச்சை செய்வியாமை, உபயோகமாயில்லாதபொழுது வீட்டைவிட்டுத் துரத்திவிடுதல், குழவி கொண்டு இடித்து வீரியம் இழக்கச் செய்தல் முதலியவை மனிதர் செய்யத்தகாத கொடுமைகளாகும்.

3. இதனல் இந்தியாவின் பசுக்கள், எருதுகள், குதிரைகள், கழுதைகள், பூனைகள் ஆகிய எல்லாப் பிராணிகளும் இருக்கும் நிலையைப் பார்த்தால் மயிர்க்கூச்செரிகிறது.

4. கோவதை

1. ஹிந்துக்களுடைய மத நம்பிக்கையைத் திருப்தி செய்வதற்கு மட்டுமல்லாமல், இந்தியாவின் பொருளாதார நலத்தைக் கருதியும், கோவதையைத் தடுத்தல்வேண்டும்.

2. ஆனல் அவ்வாறு நடைபெறும்வரையில் ஹிந்துக்கள் பொறுமையுடனும், நற்போதனைகளின் மூலமாகவும், சேவை புரிந்து அதைத் தடுக்க முயலவேண்டும்.

3. பசுவதையைத் தடுப்பதற்காக, மனித (முஸ்லிம்) வதை புரிதல் அதர்மமாகும்.

4. பசுவதை புரிதல் கடமையல்ல வென்பதை யுணர்ந்து, முஸ்லிம்கள் பசுவை வதைப்பதை நிறுத்திவிட்டால், அவர்கள் தலை சிறந்த காரியம் செய்ததாகக் கருதப்படும். ஹிந்துக்களின் மனம் புண்படாதவாறு இதையே அவர்கள் மறைத்துச் செய்தால், அதுவும் அதற்கடுத்தபடியான நல்ல காரியமே.

5. ஹிந்துக்களின் மனம் புண்பட வேண்டுமென்ற கருத்துடன் எவன் எல்லாரும் பார்க்கப் பசுவை வதைக்கிருனே, வதைக்கப்போகும் பசுக்களை ஊர்வலம் விடுகிருனே, அவன்

தர்மத்தின்படி நடக்கவில்லை; இந்த நடவடிக்கையைத் தடை செய்யவேண்டும்.

6. விசேஷ தினங்களில் பசுவைக்கொல்லும் முஸ்லிமை விட, தின்பதற்காகத் தினமும் பசுவதை புரியும் ஆங்கிலேயரின் ஆட்சி, ஹிந்துக்களுக்கும் இந்தியாவுக்கும் அதிகத் தீமை புரிகிறது.

5. இறந்த கால்நடைகள்

1. தாம் வளர்த்த பசு இறந்தபின் அதன் எலும்பு, மாமிசம், தோல் ஆகியவைகளை உபயோகிக்க எண்ணுதல் உணர்ச்சியின்மையைக் குறிக்குமென்பது சிலரின் கருத்து. இதனால் அந்தப் பசுவின் எந்த அங்கமும் உபயோகப்படாமல் போகிறது; இல்லையானால் சக்கிலியர்கள் அது முழுவதையுமோ, சில பகுதிகளையோ தவறான முறையில் உபயோகிக்கிறார்கள்; அவர்கள் அதன் மாமிசத்தை உண்கிறார்கள்; அதை இழுத்துப் போய் அதன் தோலைக்கெடுத்து உரிக்கிறார்கள்; எலும்புகளும் வீணாகின்றன.

2. இந்த எண்ணத்தை விடுதல் அவசியமாகும். தன் பசுவை உயிருள்ளபொழுது நன்கு பாதுகாத்து, அது இறந்த பின் மரியாதையுடன் அதை யெடுக்கச்செய்து உரிய இடத்திற்கு அனுப்பவேண்டும். இந்தப் பிராணி இறந்தபிறகும் பயனற்றுப் போவதில்லை யென்பதைக் கருதி, உயிர் வாழ்கையில் அதனிடம் அன்பு காட்டவேண்டும்; உயிருள்ளபொழுது அதன் உதவியை ஏற்றதுபோல், இறந்தபிறகும் அதன் உடலை நன்றியறிவுடன் உபயோகிப்பது தவறாகாது.

3. இறந்த மாட்டை உபயோகியாவிட்டால், பொருட் செலவைக் கவனிக்கும்பொழுது அதன் விலை அதிகமாகிறது. இதன் பயனாக, பசு-எருமை வளர்க்கமுடியாததாகி, கோபாலன தர்மம் முழுமையும் நின்றுவிடுகிறது.

4. இறந்த மாட்டை இழுத்துச்செல்லும்வழக்கம் தவறு. இதனால் தோல் தேய்ந்துவிட, அதன் மதிப்புக் குறைகிறது. அதைத் தூக்கியோ வண்டியிலிட்டோ கொண்டுபோகவேண்டும்.

5. அதன் தோலை முறைப்படி உரித்து எலும்பு மாமிசம் ஆகியவைகளை எருவாக்கி உபயோகிக்கவேண்டும். அதன்

குடலைக்கொண்டும் உபயோகமான பொருள்கள் செய்யப் படலாம்.

6. இத்தொழிலில் விருத்திக்கு எத்தனையோ இடமிருக் கிறது. ஆகையால் படித்தவர்கள் இந்த வித்தையைப் பயிலுதல் இன்றியமையாததாகும்.

IX கதர்

1. ராட்டையின் சிறப்பியல்புகள்

1. ராட்டையில் உள்ளதுபோல உதவித் தொழிலுக்கு வேண்டிய சிறப்பியல்புகள் வேறெந்தத் தொழிலிலும் இல்லை. சுருங்கக் கூறினால் அவை கீழ்க்கண்டவையாகும் :—

(அ) இது சுலபமானது, உடனே செய்யக்கூடியது. எப்படியெனில்,

(1) இதற்குப் பெரிய கருவிகள் ஏதும் தேவையில்லை. வீட்டுப் பஞ்சும், வீட்டிலுள்ள கருவிகளும் போதுமானவை.

(2) இதற்குப் பெரிய அறிவோ, சாமர்த்தியமோ தேவை யில்லை. படிப்பில்லாத கிராமத்து உழவனும் இதைச் சுலபமாகச் செய்யலாம்.

(3) இதற்கு அதிக உழைப்பும் வேண்டியதில்லை. பெண் களும் பையன்களும் முதியோரும் நோயாளிகளும் நூற்கலாம்.

(4) இது பரீட்சையில் தேறிவிட்டது.

(ஆ) நூற்போருக்கு வீட்டிலிருந்தபடியே வேலை கிடைக் கிறது; நூற்றநூல் எப்பொழுதும் விற்கும்; ஏழையின் வீட்டில் எப்பொழுதும் இரண்டு காசு அதிகமாவதற்கு இடமுண் டாகிறது.

(இ) இதற்கு மழை தேவையில்லை; காய்ச்சலிலும் பசித்த வனுக்கு உணவளிக்கிறது.

(ஈ) இதற்கு மதத்தைப் பற்றிய தடையேதுமில்லை; மக்க ளுக்கு அருவருப்பைத் தரும் தொழிலுமல்ல இது.

(உ) மக்களுக்கு வீட்டிலிருந்தபடியே வேலை கிடைக்கிறது; ஆகையால், வீடு வாசலையும் நிலங்களையும் விட்டு மில் கூலிகள்

ஓடவேண்டியிருப்பதுபோலவும் அவர்களுடைய குடும்பம் சித றுண்டு போவதுபோலவும் இதில் ஏதும் இல்லை.

(ஊ) இதனால், இன்று உயிரற்ற நிலையிலுள்ள இந்தியா வின் கிராமப் பஞ்சாயத்துக்கள் மீண்டும் உயிர்பெற்று எழுவது இதைப் பொறுத்திருக்கிறது.

(எ) உழவனைப் போல் நெசவாளனுடைய வேலையும் இதில்லாவிடில் நடைபெறவியலாது. இந்தியாவின் தேவையில் மூன்றில் ஒரு பகுதித் துணியை இன்று நெய்து தரும் நெச வாளர்கள், ராட்டை இல்லையானால் ஒருநாளும் அழியாதிருக்க வியலாது.

(ஏ) இது உயிர்பெற்றெழுந்தால் இன்னும் ஆயிரம் தொழில் கள் தலையெடுக்கும். தச்சன், கொல்லன், பஞ்சு வெட்டி, சாயக் காரன் எல்லாரும் புத்துயிர் பெற்றெழுவார்கள்.

(ஐ) வேறுபாடுகள் மலிந்த பொருட்பாகுபாட்டில் சமத் துவம் உண்டாக உதவக்கூடியது இது ஒன்றே.

(ஒ) இதனாலேயே வேலையின்மை நீங்கும்; உழவனுக்கு ஓய்ந்த நேர வேலையாகும். இன்று படித்தவர்கள் கூட்டம் கூட்டமாக வேலையற்றிருக்கிறார்களே, அவர்களுக்கும் முழு வேலை கிடைக்கும். படித்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு இதை அமைப்பதிலும், நடத்துவதிலும் வேலைகிட்டும்; இத்தொழிலுக் குப் புத்துயிரூட்டும் வேலை அத்தனை பெரியதாகும்.

2. அதன் பின்னர், ராட்டை மீண்டும் சுற்றும் இடங்களில் அதனாலுண்டாகும் பிற பயன்களையும், அதன் இலாபங்களில் சேர்த்துக்கொள்ளலாம். அவை கீழ்க்கண்டவையாகும்:

(அ) ராட்டை எத்தனையோ பேர்களின் வாழ்க்கையையும் உள்ளத்தையும் மாற்றிவிட்டது.

(ஆ) ராட்டையினால் கள் குடி குறைய, உழவன் கடன் சுமையிலிருந்து விடுபட்டு வருகிறான்.

3. பஞ்சத்தில் கஷ்ட நிவாரணத்திற்கு ராட்டை சிறந்த சாதனமென்று ருஜுவாகி யிருக்கிறது.

2. ராட்டையைப்பற்றிய முக்கியமான விஷயங்கள்

1. ராட்டையைப்பற்றிச் சில தவருன கருத்துக்களும் அவற்றிலிருந்து எழுந்த சில தவருன வாதங்களும் வழங்குகின்றன. கீழே கண்ட சமாதானங்களிலிருந்து அக்கருத்துக்கள் யாவை யென்பது புலனுகும்.

2. ராட்டை மில்லுடன் போட்டியிடவில்லை, போட்டியிடவும் முடியாது. ஆனுல் மில்லோ ராட்டையுடன் போட்டியிடுகிறது; அந்த அளவுக்கு அது நிறுத்தப்படத் தகுந்தது.

3. தன் முழுச் சக்தியையும் நேரத்தையும் பலன் தரும் முறையில் செலவழிப்பதற்கான வேலையுள்ள எந்த ஆற்றல் படைத்த மனிதனையும், அவ்வேலையைச் செய்யாது தடுப்பது ராட்டையின் நோக்கமல்ல.

4. மொத்தத்தில், ராட்டை நாட்டின் செல்வத்தைப் பெருக்குகிறது. முழுக்கூலி தரப்பட்டால் அதைச் சுற்றுகிறவனுடைய ஜீவனம் நடைபெறக்கூடும். ஆனுல், ராட்டையைக் கொண்டு யாரேனும் தனவானுக விரும்பினுல் ஏமாற வேண்டியதே. இது ராட்டையின் குறையல்ல, குணமாகும். ஏனெனில் பணத்தின் சமப்பங்கீடு இதன் மூலமாகத் தானே நடைபெற்று விடுகிறது.

5. இன்று இந்தியாவின் குடியானவர்களுக்கு உழவிலிருந்து எஞ்சும் ஆறு மாத காலமும் வீணுகிறது; அதன் பயனுக ஏழைமை, வேலையின்மை யென்ற சிக்கலான பிரசினைகள் எழுந்திருக்கின்றன. இவைகளை உடனே நிலைத்த, காரிய சாத்தியமான முறையில் போக்கும் கருவி ராட்டை யென்பது அதை ஆதரிப்போரின் வாதமாகும்.

6. ராட்டையினுல் ஒன்றிரண்டு காசுகள்தானே கிடைக்கிறது என்ருல், உழவனுடைய ஆறுமாதகாலம் அந்த இரண்டு காசு தரும் வேலையுமின்றிக் கழிவதுடன், வேலையின்மையென்ற நோய்க்கும் அவன் உள்ளாகிருனே என்பதே இதற்கு பதிலாகும். இந்த இரண்டு காரணங்களினுல், இந்தியாவின் பொருளாதாரத் திட்டத்தில் ராட்டைக்கு முக்கியமான இடமுண்டு. மேலே ராட்டையினுல் வேலை யில்லாதாருக்கு பெயரளவிலாவது வருமானம் கிட்டுகிறதே என்று கூறப்பட்டது; அது ராட்டையின் உபயோகத்தை ருஜுப்படுத்தக் கூறியதேயன்றி, அதுவே

போதுமென்ற திருப்தியை யுண்டாக்கும் நோக்குடனல்ல. உண்மையில், ராட்டைத் தொழிலிலோ வேறெந்தத் தொழிலிலோ கிடைக்கும் ஊதியம், கிடைக்காததற்குச் சமமாக இருந்தால் அது திருப்திகரமான நிலையாகாது. இதைப்பற்றிச் 'சுய தேவைக்கதரும் விற்பனைக் கதரும்' என்ற பகுதியில் விரிவாகக் கூறப்படுகிறது.

3. ராட்டையும் மில்லும்

1. ராட்டைக்கும் மில்லுக்கும் போட்டியிருப்பதாகக் கருத லாகாது; சரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் இல்லையென்று தெரியும்.

2. ராட்டை கோடிக்கணக்கானவரின் வீட்டுத்தொழில், ஜீவனோபாயம். ராட்டை அழிந்து போகுமாறு மில்தொழிலை நடத்தினாலும் நடைபெற அனுமதித்தாலும், அவ்வாறு நடத்து வோரும் சரி, அனுமதிப்போரும் சரியே, மக்களின் நலத்தை எண்ணியவராகமாட்டார்கள்.

3. ஆகையால் மில்கள் இருந்தால், அவை ராட்டையின் இடத்தைவிட்டு ஒதுங்கி இருக்கவேண்டும். அதாவது கோடிக் கணக்கானவர்கள் எத்தகைய நூல் நூற்கவும் துணி நெய்யவும் கூடுமோ, அத்தகைய நூலையும் துணியையும் உற்பத்தி செய்யாமல் மில்களைத் தடை செய்யவேண்டும்.

4. தனி மனிதனைப் பற்றியல்ல, ஒரு நாட்டின் பொருள் நிலையை ஆராய்ந்தால், எந்தப் பண்டத்தின் அடக்கவிலையைக் கணக்கெடுப்பதென்றாலும், அதன் மூலப்பொருள், மூலதனம், கூலி ஆகியவற்றில் செலவான பணத்தைக் கணக்கில் சேர்ப்ப தோடு அம்முறையில் அப்பொருளை யுண்டாக்குவதால் வேலை யில்லாதோரின் தொகை வளருமானால் அவர்களுடைய உணவு உடை முதலிய செலவுகளும் மக்களின் தலையையே பொறுக்கு மாகையால் அதுவும் உற்பத்திச் செலவில் சேர்ந்ததாகவே மதிக்கவேண்டும். இவ்வாறு நோக்கும்பொழுது கதரை விட மில் துணி அதிகக் கிராக்கியானதாகத் தோன்றுகிறது.*

* இக்கருத்தை யுணர்வதற்கு, ஸ்ரீ கிரெக்கின் நூலிற்காணும் கீழ்க் கண்ட கணக்கு விவரம் உதவியாகும்: "ராட்டையில் நூற்றுக் கைத்தறி யில் நெய்வதால் ஒருவன் எத்தனை நூல் நூற்று, எத்தனை துணி நெய் கிறனே அதைவிட மில்லில் (1926ஆம் கணக்குப்படி) ஒரு மணிக்கு ஒரு

5. அரசாங்கம் சாதாரண மக்களின் நன்மையைக் கவனிப்பதானல், வேலையின்மையைப் போக்க மிகச் சிறந்த ஏற்பாடு செய்யாமல், மில்லை கதருடன் போட்டியிட விடவே கூடாது.

6. இத்தகைய ஏற்பாடு இல்லாதபொழுது மக்களே ஏழைகளிடம் அனுதாபம் கொண்டு மில்களின் தொழிலைத் தடை செய்யவேண்டும்.

7. மில்லின் ஆபத்தான போட்டியைத் தடை செய்வதற்கு அஹிம்சைக்கு உகந்த உபாயங்கள் இவையாகும்: விதேசித் துணிகளையும், கதருடன் போட்டியிடும் நாட்டு மில்களையும் பகிஷ்கரித்தல், மறியல் செய்தல், கதரே உடுத்துவதென்ற உறுதிகொள்ளுதல், கதருக்காக நன்கொடையளித்தல், நன்கொடைக்காக நூற்றல்.

4. ராட்டையும் கைத்தறியும்

1. ராட்டைக்குப் பதிலாகக் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஊக்கமளித்து, மில்லின் நூலை பகிஷ்காரம் செய்யாமல் நெசவை மட்டும் ஒதுக்கவேண்டும்—என்ற யோசனை ராட்டையைப் பற்றி மக்களிடையே வழங்கும் தவருன கருத்திலிருந்து எழுந்ததாகும். இதற்குக் காரணம்:

மனிதன் 203 முதல் 236 வரை அதிக மடங்கு நூற்கவும் 20 மடங்கு அதிகமாக நெய்யவும் செய்கிருன். அதாவது இரண்டும் சமமான நேரத்திற்கு வேலை செய்தால், மில்லில் ஒருவன் நூற்பு வேலை செய்வதால், 200-க்கு அதிகமான ராட்டை நூற்புக்காரர்களையும், நெசவு மில்லில் வேலைசெய்யும் ஒருவன் 20 கைத்தறிக்காரர்களையும் வேலையில்லாமற் செய்கிருன். இத்தகைய வேலையில்லாதோரின் நேரத்தில் முக்கால் பகுதி வேறு தொழில்கள் செய்வதில் கழிகிறது. எவ்வளவு தாராளமாகக் கணக்குப் பார்த்தாலும் $267\frac{1}{2}$ லக்ஷம் ஜனங்களுக்கு தினம் 3 அணு கூலி நஷ்டமாகிறது. இவர்களின் வாழ்க்கைச் செலவை, விதேசி, சுதேசி இரண்டுவகை மில் துணியின்மீதும் சுமத்தினுல், கஜத்துக்கு $1\frac{3}{4}$ அணுவும், விதேசித் துணிமீதுமட்டும் ஏற்றினுல் கஜத்துக்கு 6 அணு 2 பையும் விலை கூடும்.

தேசீய சர்க்கார் இந்த வேலையில்லாதோரின் நிர்வாகச் செலவை துணி மில்களிலிருந்து நேர்வரியாக வசூலித்தால் மில் துணி மலிவானதல்லவென்பது புலனுகிவிடும். இன்று இந்தச் செலவை மக்கள் வேறு வகைகளில் ஏற்கிருர்கள்; ஆகையால் துணி விலையில் இது தெரியவில்லை.''

2. ராட்டையில் நூற்பது எங்கும் பரவ முடியுமென்பது போல் கைத்தறித் தொழில் பரவுவது சாத்தியமல்ல.*

3. உதவித் தொழிலாகவே ராட்டை இருக்க முடியும்; நெசவையோ, தனித்தொழிலாகத்தான் நடத்தவேண்டும் என்ற விஷயத்தை மேலேகண்ட ஆலோசனை கூறியவர்கள் கவனிக்க வில்லை.

4. சட்டமியற்றி மில்லின் நெசவைத் தடை செய்யாது. மக்களின் பகிஷ்காரத்தினலேயே செய்யவேண்டி யிருந்தால், நெசவாளர், மில்களின் தயவிலேயே வாழவேண்டி யிருக்கும். ஏனெனில் மில்கள் கைத்தறிகளுடன் போட்டியிடுபவையே; அவை நாளுக்குநாள் நெசவைப் பெருக்கிக்கொண்டே யிருக் கின்றன. இந்தப் போட்டி அதிகக் கடுமையாகவும், அதிகத் தீங்கு விளைவிப்பதாயும் ஆகப்போகிறது.

5. இதற்கு மாருக, கைத்தறியும் ராட்டையும் இரட்டைப் பிறவியான சகோதர - சகோதரிகளாகும். ஒன்றைவிட்டு ஒன்று வாழ வியலாது.

6. வீட்டிற்கொரு ராட்டை, (குறைந்த ஜனத்தொகை யுள்ள) 'ஊருக்கொரு தறி' என்பவை வருகிற யுகத்தின் நவ நிர்மானத்திற்கான சூத்திரங்களாகும்.

5. கதர் உற்பத்தின் கிரியைகள்

1. கதர் உற்பத்தியுடன் தொடர்புள்ள - அரைத்தல் முதல் நெசவு வரை - எல்லாக் கிரியைகளும் வீட்டுத் தொழிலாகவே நடைபெற வேண்டும். இவைகளுள் ஏதேனும் ஒன்றின் பொருட்டு இயந்திரசாலையின் உதவிபெற நேர்ந்தால், அது ஒரு காலத்தில் கதர்த் தொழிலுக்கு ஆபத்தாக முடியும்.

* சென்ற ஜனசங்கியைப்படி இந்தியாவுக்கு தினம் இரண்டு கோடி கஜம் துணி தேவையா யிருக்கிறது. (இது முழுமையும் கைத்தறியில் நெய்தாலும்) தினமும் 2 மணி நேரம் வேலை செய்யும் ஒன்று அல்லது ஒன்றரைக் கோடி நெசவாளருக்கு வேலை தரமுடியும். இவ்வளவு நெச வாளருக்கல்ல, இத்தனைக் குடும்பங்களுக்கு வேலை கிடைக்குமென்றல், தினம் கிடைக்கும் இரண்டணுவும் அத்தனை பேர்களிடையே பிரிக்கப் பட்டுப் போகும். ஆகவே, ஒவ்வொருவனுக்கும் கிடைக்கும் கூலி இன்னும் குறைந்துபோம்.—ஆசிரியர்.

2. ஆகையால், பஞ்சரைத்தலையும் வெட்டுதலையும் ராட்டையின் இணைபிரியாத அங்கங்களாக மதிக்கவேண்டும்.

3. பருத்திமணை, வில், ராட்டை, தறி ஆகியவைகளில் சீர்திருத்தங்கள் செய்யும்பொழுது, அவைகளின் வீட்டில் உதவும் தன்மை கெடாதிருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. கதரைச் சிறப்புள்ளதாக்குவதற்கு, பருத்தி எடுப்பதிலிருந்து தொடங்கி நெசவு வரையில் எல்லாக் கிரியைகளையும் இயந்திரங்களையும் நுண்ணிய முறையில் பயின்று எல்லாவற்றிலும் செப்பங்கள் செய்தல் வேண்டும்.

5. இதற்கு முதல் படி, சொந்தத்தில் பருத்திவிளைவிப்போர் தமது தேவைக்கான பருத்தியைச் சேர்த்துவைப்பதாகும். இவ்வாறு செய்யும் உழவன், நல்லவிதை தேட முயலுவான், பருத்தியைச் செடிகளிலிருந்து எடுக்கும்பொழுது சோடை நீக்கி எடுப்பான்; உழவன் இதைத் தானே செய்யத் தொடங்குவானாயினும் இதிலுள்ள நன்மையை எடுத்துக் கூறவும், வழி காட்டவும், ஆலோசனையளிக்கவும் வேண்டும்.

6. கைமணையில், பருத்திக்கொட்டை கெடுவதில்லை, பஞ்சின் இழைகளும் அறுவதில்லை; புதிதாக அரைத்த பஞ்சை வெட்டுவது சுலபம்.

7. நன்ருக நூற்பதென்பது, பெரும்பாலும் திரி (பட்டை) நன்ருயிருப்பதைப் பொறுத்தது. நூற்கத் தெரிந்தவன் நல்ல திரிக்கும் அல்லாததற்கும் உள்ள வேற்றுமையை அறிவான். வெட்டத் தெரிந்தவன் அதன் கிரியைகளின் நுணுக்கங்களை அறிந்திருப்பான். ஆகையால் வெட்டத் தெரிந்தவன் பிறர் தயாரித்த திரிகளை வேறு வழியில்லாதபொழுதே உபயோகிப்பான்.

8. நன்ருக வெட்டிப் போடாத திரி, நூலின் நயத்தை (நெம்பரை)க் குறையச் செய்கிறது; நூல் அறுவதாலாகும் சேதாரத்தை அதிகமாக்குகிறது; ஆகையால் பொருளாதாரத்தைக் கவனித்தால், அதனுல் உண்டாகும் நஷ்டம் வெகு அதிகமாகும்.

9. பஞ்சின் தரத்தைக் காட்டிலும் அதிகப் பருமனுகவோ, மிக மெல்லியதாகவோ நூற்பதால் தீங்கே விளையும். ஆனுல் சாதாரணமாக, நூற்போர் கனமாக நூற்கவே பார்க்கிருர்கள். இதைத் தடுத்தல் வேண்டும். எத்தனை மெல்லியதாக ஒரு குறிப்

பிட்ட வகைப் பஞ்சினுல் நூற்க முடியுமோ, அவ்வளவு மெல்லிய தாக நூற்கச் செய்யவேண்டுமென்பதைக் கதர் உற்பத்தி செய்வோர் கருத்தில் வைக்கவேண்டும்.

10. நூல் முழு முறுக்குடனும், சமமாகவும் இருக்கவேண்டு மென்பதையும் உற்பத்தியாளர் கவனிக்கவேண்டும்.

11. மெல்லிய நூல் என்ருல் குறைந்த பஞ்சில் அதிகத் துணி என்றும், முறுக்குள்ள நூல் என்ருல் உறுதியான துணி என்றும், சமமான நூல் என்ருல் ஒரு மாதிரியான அழகிய துணி என்றும் பொருள். மேலும், நூல் முறுக்குள்ளதாய்ச் சமமாயிருந்தால் நெசவாளி அதைக் குறைந்த கூலியில் செய்யச் சம்மதிக்கிருன். இதனுல், கதரை மலிவாக்குவதில் இவை முக்கியமான அம்சங்களாகும்.

12. கதர் ஊழியர் உற்பத்தியைப் பற்றிய எல்லாக் கிரியை களையும் அனுபவத்துடன் அறிந்திருக்க வேண்டும். இதைத் தவிர, கதர் உற்பத்திக்குதவும் எல்லா இயந்திரங்களின் குண தோஷங்களையும், அவற்றைச் செப்பனிடுவதையும் தெரிந் திருத்தல்வேண்டும். அவர் கிராமத்து உழவர்களுக்கு மட்டுமல்லா மல், தச்சர் கொல்லர் முதலானோருக்கும் வழி துலக்கக்கூடிய வகையில் தேர்ந்த தொழிலாளியாக இருக்க வேண்டும். இதைத் தவிர, கதரின் பொருளாதார சாஸ்திரமும் அவருக்குத் தெரிய வேண்டும்.

6. சுயதேவைக் கதரும் விற்பனைக் கதரும்

1. உழவன் தன் வயலின் பருத்தியைத்தானே அரைத்து, வெட்டி, நூற்று, நெசவுக் கூலி மட்டும் கொடுத்தால் அந்தக் கதர், மில் துணியைவிட அவனுக்கு மலிவாகிறது. இது 'உடை-சுயதேவைப் பூர்த்தி' எனப்படும். இத்துடன் எந்த உழவன் நெசவையும் கற்று நெய்யத் தொடங்குவானே, அவன் பூரண சுயதேவைப் பூர்த்தி செய்வோனுவதுடன், துணியும் அவனுக்கு மிகவும் மலிவாகிவிடும்.

2. ஒருவன் கடையில் (ரெயில் செலவுடன்) பஞ்சு வாங்கி, மேற்கண்ட கிரியைகளைத்தானே செய்தால், இன்று மில் துணியை விடச் சிறிது அதிக விலையாகிறது. ஆனுல் நூலின் முறுக்கிலும் நயத்திலும் (நெம்பரிலும்), முன்னேற்றம் உண்டானுல் இந்த வித்தியாசம் போய்விடும். கதரை உறுதியாக உழைக்கும்படி

எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அதே அளவுக்கு அது மலிவென்று கருதவேண்டும்.

3. விற்பனைக் கதரின் வகைகளிலும், அதன் விலையைக் குறைப்பதிலும் இதுவரையில் உண்டான முன்னேற்றத்திலிருந்து, அதன் விலை விஷயத்திலும், கதர்த்தொழில் ஒரு சரியான முயற்சி யென்பதில் சந்தேகமில்லை யென்று தெரிகிறது.

4. ஆனால் விற்பனைக் கதரை மலிவாக்குவதற்காகச் செய்த முயற்சியெல்லாம், சரியானதிசையில் நடக்கவில்லை யென்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. எந்த ஏழைகளின் நன்மைக்கென இவ்வேலை தொடங்கப்பட்டதோ, அவர்களுக்கு இதன் மூலமாக சீவனத்திற்கு வேண்டிய ஊதியம் கிடைக்கிறதா இல்லையா என்பதைப் போதிய அளவு கவனிக்கவில்லை.

5. கதருக்கும் மற்றக் கிராமக் கைத்தொழில்களுக்கும், புத்துயிரளிப்பதற்காக வேலை செய்யும் ஊழியர்களும் சங்கங்களும் எவ்வகையிலோ ஏதேனும் தொழிலைக் கை தூக்கிவிட்டால் மட்டும் கடமையைச் செய்தோராகமாட்டார்கள் ; அவைகளைச் செய்கிறவர்களுக்கு வயிறு நிரம்பச்சோறு கிடைக்க வகையுண்டாவென்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும். உழைப்பாளிக்கு அவ்வளவு ஊதியம் கிட்டாவிட்டால், அந்தத் தொழிலை நடத்துவதால் ஏழையின் உழைப்பைத் தவருகப் பயன் படுத்துவதாகவே கருதவேண்டும்.

6. இதைத்தவிர, அவர்களுக்கு இத்தனை கூலி கொடுத்தாகிவிட்டது, அல்லது கிடைத்துவிட்டது என்று திருப்தியடையக்கூடாது ; ஒவ்வொரு தொழிலாளியின் வாழ்க்கையையும் உற்றுநோக்கி, அவன் தன் தொழிலில் நல்ல தேர்ச்சி பெறவும், தன் ஊதியத்தைச் சிறந்த வகையில் செலவிடவும் உதவ வேண்டும்.

7. கதரைப் பற்றிக் கீழே தரப்படும் விதிகள் எல்லாக் கிராமக் கைத்தொழில்களுக்கும், ஏறக்குறைய பொருந்துபவையாகும் :

(க) ஒவ்வொரு ஊழியரும் பருத்தி பொறுக்குவதிலிருந்து துணி நெய்தல் வரையில் எல்லாக் கிரியைகளையும் பிறருக்குப் போதிக்கும் அளவுக்கு அறிந்திருக்க வேண்டும்.

(ங) நிர்வாகிகள் தமது எல்லைக்குள் வேலை செய்யும் பஞ்சு

வெட்டுவோர், நூற்போர், நெய்வோர் ஆகியோரின் பெயர்களின் ஜாபிதா வைத்திருக்க வேண்டும்.

(ச) அங்கு நூற்போர் எவ்வகைப் பஞ்சை உபயோகிக்கிறுர் கள் என்பதைக் கவனித்து, பஞ்சின் சக்திக்கு அதிகமான நெம் பருள்ள நூல் நூற்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(ஞ) நூற்போரிடமும், கதர் உற்பத்தியில் உதவும் மற்றத் தொழிலாளரிடமும், அவர்கள் தம் வீட்டில் கதரை உபயோகிக்கா விட்டால், அவர்களுக்கு வேலே கிடையாதென்று தெளிவாகக் கூறிவிடவேண்டும்.

(ட) இந்த எச்சரிக்கையுடன்கூட, அவர்களுக்குக் கூலிக்கு பதிலாகக் கதர் கிடைக்க வசதியும் செய்து தரவேண்டும்.

(ண) கதர் காரியாலயத்திற்கு வரும் நூலின் ஒவ்வொரு குஞ்சத்தின் உறுதியையும், சமதையையும் சோதித்துப் பார்க்கவேண்டும்; வேகாத சோற்றை (ரொட்டியை)த் தின் ஞதைதுபோல், வலுவில்லாததும், கரடுமுறடானதுமான நூலே ஏற்கலாகாது.

(த) சாதாரணமாக ஒவ்வொரு நூற்போரின் நூலேயும் தனி யாகவே வைக்கவேண்டும். துணி நெய்வதற்குத் தேவையான நூல் சேர்ந்ததும் அதைத் தனியாக நெய்விக்கவேண்டும். இத ஞல் கதர் உறுதியுள்ளதாகும்; நெய்தலிலும், வேலேச் சுத்தத் திலும் விருத்தி யுண்டாகாதிராது.

(ந) இவ்வாறு தயாரான ஒவ்வொரு பீஸின் மீதும் அரைப் போன், வெட்டுவோன், நூற்போன், நெய்வோன் ஆகியோர் வெவ்வேருயின், எல்லோருடைய பெயர்களுமுள்ள சீட்டிருக்க வேண்டும்.

(ப) தொழிலாளர் ஒரே குடும்பத்தினராஞல் மேலே கண்ட எல்லாக் கிரியைகளேயும், தமது குடும்பத்திலேயே செய்வதற்குத் தூண்டவேண்டும், ஊக்கமளிக்கவேண்டும். கூலி சமமாகவோ ஏறக்குறைய ஒத்ததாகவோ செய்யப்பட்டு விட்டால் இது மிகவும் சுலபமாகிவிடும்.

(ம) இத்தொழிலாளரின் வாழ்க்கை, அவர்களுடைய வரு மானம் - செலவு ஆகியவைகளே நன்கு அறிந்திருக்க வேண்டும்; தம் வருமானத்தை ஆலோசனேயுடன் செலவு செய்வோருக்கு உதவியளிக்க வேண்டும்.

(ய) விற்பனே குறைந்துவிட்டதால் சங்கத்தில் வேலே செய் வோரின் தொகையைக் குறைக்க நேர்ந்தால், சீவனத்திற்கு

வேறு வழியுள்ளவர்களை முதலில் விலக்கவேண்டும். என் அபிப்பிராயத்தில், இன்றைய நிலை என்னவெனில், எத்தனையோ மாகாணங்களில் நூற்போர் எல்லோரும் சீவனத்திற்கு இதையே நம்பி நூற்கவில்லை; இரண்டு காசு மிச்சம் செய்து சாதாரணமான சாமான்கள் வாங்கும் நோக்கத்துடன் நூற்போரும் இருக்கிருர்கள். இவர்கள் நல்ல உணவுவேண்டு மென்பதையுணர்ந்தோ, கடனைத் தீர்க்கவேண்டுமென்பதாலோ நூற்போரல்ல.

(ர) ஒவ்வோரிடத்திலும் ஊழியர்கள், ராட்டையையும், வில்லையும் கவனித்துப் பார்க்கவேண்டும். முக்கியமாக ராட்டையின் கதிர் முற்றிலும் சுற்றுகின்றதா வென்பதைக் கவனிக்கவேண்டும். ஏனெனில் கூலி விகிதத்தை ஏற்றுவதென்ற யோசனைப்படி, எந்த நூற்போருக்கும் அதிகக் கூலிகொடுக்கவேண்டுமென்பதல்ல. கூலி நிச்சயமாக அதிகமாகும்; ஆனல் நூற்கும் அதே நேரத்தில் இன்றைவிட அதிகமாகவும் அதிக நேர்த்தியாகவும் நூற்போருக்கே கூலி அதிகமாக்கப்படும். தாம் நூற்கும் முறையில் சிறிதும் அபிவிருத்தி செய்யாத நூற்போருக்கு அதிகக்கூலி கிடைக்க இடமில்லை; அதனல் கதரின் கிராக்கி அதிகமாவதைத் தவிர வேறு பயனிராது.

(ல) மேற்கூறியவற்றிலிருந்து வெளியாவது என்னவெனில், ஆரம்பத்தில் சர்க்கா சங்கம் புதிய ராட்டைகளையும் புதிய கதிர்கள், புதிய வீசனங்கள் முதலிய சிறந்த கருவிகளையும் குறைந்த விலைக்குக் கொடுத்து உதவவேண்டும். பல இடங்களிலோ, மாலையையும் கதிரையும் செப்பம் செய்வதாலேயே நூலின் தரம் தானகத் திருந்திவிடும்.

7. வேள்வி நோக்குடன் நூற்றல்

1. வேள்வி நூற்பென்ருல், பொருள் வருவாயைக் கருதாமல் ஏழைகளின் நலனைக் கருதி நூற்றலாகும்.

2. ஏழைகளின் நலத்தையும் நாட்டின் நலத்தையும் கருதுவோர் தினமும் இவ்வாறு வேள்வி நூற்புச் செய்தல் வேண்டும்.

3. இதனல் சிறிது வருமானத்தை விரும்பும் அந்த ஏழைகள் நூற்கத் தொடங்குவார்கள்.

4. இதைத்தவிர, எந்த உற்பத்திக்கான உழைப்பிலும் ஈடு

படாமல் எத்தனையோ பொருள்களை அனுபவிக்கும் நாம் உற்பத்திக்கான உழைப்பின் பெருமையை உணர்வோம்; ஓரளவு தம் பங்கைச் செய்தவருமாவோம்.

5. இவ்வாறு தனவானும் ஏழையும் ஒரே வகையான உழைப்பில் சம்பங்காளிகளாகி, பரஸ்பரம் சரியான தொடர்பு பெறுவார்கள்.

6. இதைத்தவிர, ராட்டையைக் கைவிட்டு விதேசித் துணியை இங்கு கொணர்ந்ததான நமது பாபத்திற்குப் பரிகாரமாகவும் வேள்வி நூற்பைக் கருதலாம்.

7. இதனால் நூற்றல் இன்று பெண்கள் மட்டும் செய்ய வேண்டியதல்ல; ஆண்களும் குழந்தைகளும் கூடச் செய்ய வேண்டிய கடமையாகும்.

8. தமக்கு வேண்டிய நூலைத் தாமே நூற்போர், நாட்டிற்குத் தேவையான துணியை உற்பத்தி செய்வதில் தமக்குள்ள பொறுப்பை ஏற்கிறார்கள்; ஆனால் இதை வேள்வி நூற்பு எனலாகாது.

9. இவ்வாறு நூற்றலில் உள்ள உழைப்பின் நன்கொடை பெருத்த அளவில் நாட்டுக்குக் கிடைப்பதால், ஏழைகளின் கூலியைக் குறைக்காவிட்டாலும் விற்பனைக் கதரின் விலை குறையும்.

X சுத்தமும் ஆரோக்கியமும்

1. உடலின் தூய்மை

1. இந்தியாவின் சில சாதியார் உடலின் சுத்தத்தை நன்கு கவனிக்கிறார்கள்; ஆனால் சாதாரண மக்களிடையே இதுபற்றி இன்னும் மிகுந்த வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

2. அந்தச் சாதியாரிடையேயும், குழந்தைகளின் சுத்தம் வெகு குறைவாகவே கவனிக்கப்படுகிறது. குழந்தை தானே சுத்தமாயிருக்கத் தக்க வயதடையும் வரையில் பெற்றோர் அதை முழுதும் சுத்தமாய் வைத்துக்கொள்வதில் நல்ல கவனம் செலுத்துவதாய்க் காணவில்லை.

3. தினமும் குளிப்பதை ஹிந்துக்களில் பெரும்பகுதியினர், ஒரு விதியைப்போல் அனுசரிக்கிறார்கள்; ஆனால் எல்லா ஹிந்

துக்களும் இப்படி நம்புவதாகக் கூறமுடியாது. மற்ற இந்தியரிடையிலோ தினம் குளிக்கும் வழக்கம் பொதுவாக இல்லை. இந்தியாவில் தினமும் தலைமூழ்குதல், சுத்தத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் அவசியமாகும்.

4. ஆனால், குளிப்பதென்றால் உடலை நனைப்பதென்று மட்டும் கருத்தல்ல. குளிப்போரில் பெரும்பாலோர் இதற்கு அதிகமாக ஏதும் செய்வதில்லை. குளிப்பதென்றால், உடலின் அழுக்கைக் கழுவி தோலின் துவாரங்களைத் திறந்துவிடுதல் என்று பொருள். ஆகையால் குளிக்கும் நீர் குடிதண்ணீரைப் போலவே சுத்தமா யிருக்கவேண்டும். இத்தகைய நீர் போதிய அளவு தினமும் கிடைக்காவிடில், அழுக்கு நீரில் குளிப்பதை விடச் சுத்தமான நீரில் துணியை நனைத்து, அதனால் உடலைத் தேய்த்துத் துடைப்பது எவ்வளவோ சிறந்ததாகும். நமது நாட்டின் குக்கிராமங்களில் மட்டுமின்றி, பெரிய கிராமங்களிலும் மக்கள் குளிக்கும் தண்ணீரைக் குளிக்கத் தகுதியுள்ளதென்று கூறமுடியாது.

5. கண், மூக்கு, காது, பல், நகம், புஜவெளி, இடை முதலிய எந்த அங்கங்களிலிருந்து அழுக்குண்டாகிறதோ, அல்லது எங்கே நிரம்பியுள்ளதோ, அவற்றைச் சுத்தமாக வைப்பதில்—அதுவும் குழந்தைகள் விஷயத்தில்—வெகு அலட்சியம் செய்யப்படுகிறது. சிறிய குழந்தைகளுக்குச் சாதாரணமாக உண்டாகும் கண் நோய்கள், தினமும் கண்களையும் மூக்கையும் சுத்தமான நீரும் துணியும் கொண்டு துடைக்காமையின் விளைவாகும். இவ்விஷயத்தில், சுத்தமான பழக்கங்கள் உண்டாக்குவதிலும் அசுத்தத்தை வெறுக்கப் பழக்குவதிலும் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆகையால் கிராம ஊழியர்களும் ஆசிரியர்களும் இவ்விஷயத்தை மிகவும் நன்கு கவனிக்கவேண்டும்.

6. துணியின் சுத்தமும் உடலின் தூய்மையின் ஒரு பகுதியேயாகும். துணியின் அசுத்தத்திற்கு ஏழைமையைமட்டும் காரணமென்று கூறமுடியாது. அழுக்கின் பெரும்பகுதி, நல்ல பழக்கமில்லாமையாலும், சோம்பலினாலும் உண்டாவதாகும்.

7. ஒட்டுடன் கூடிய துணியினால் நமது ஏழைமை வெளிப்படுவதானால், இதற்கு நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. சூர வீரனுக்குக் காயங்கள் அலங்காரமாவது போல, ஏழைக்கு ஒட்டுக்கள் அலங்காரமாகவும் கருதப்படலாகும். ஆனால் துணிகளைக் கிழிந்தும் அழுக்காகவும் அணிவோன், தன் ஏழைமையை

யல்ல, தனது மடமையையும் சோம்பலையும் வெளியிடுவதால், இது நிச்சயமாக வெட்கத்திற்குரியதே.

8. சுத்தமான துணி பாலைப்போல் வெண்மையா யிருக்க வேண்டுமென்பதல்ல. உழைத்து வேலை செய்யும் ஏழைகள் பாலைப்போல் வெளுத்த உடைகட்டிக் காலம் தள்ள முடியாது. ஆனால் சுத்தமான நீரில் அடிக்கடித் துவைப்பதும், இடையிடையே சோப்பிடுவதும், சோடாவினால் அலம்புவதும், சுடு நீரில் முக்கிக் கிருமிகளைப் போக்குவதும் அவசியமாகும்.

9. உடலில் அணிந்துள்ள துணியைக் கொண்டே மூக்குகை துடைப்பதும், அதிலேயே ரொட்டி முதலான உணவைக் கட்டிப் போவதும் மிகவும் அசுத்தமான பழக்கமாகும். உடலிலுள்ள துணியைத் தவிர வேறு துணியில்லாதவர்களை விட்டு விட்டால், மற்றவரெல்லாரும் பழைய துணிகளிலிருந்து குட்டைகள் கிழித்து இவைகளுக்காக உபயோகிக்க வேண்டும். இதில் செலவு ஒன்றுமில்லை; சுத்தமாகவும் இருக்க முடிகிறது. இதைச் சுத்தமாக வைத்திருப்பது மிகவும் சுலபம்.

2. சுத்தமான பழக்கங்கள்

1. உடல் தூய்மையோடு, சுத்தமான பழக்கங்கள் செய்து கொள்வதும் அவசியமாகும். இல்லையானால் திருந்திய பழக்கங்களுள்ளவருள்ளத்தில் நாம் அருவருப்பையுண்டாக்குவோம்.

2. அசுத்தத்தைக் கண்டு சகித்திருக்க முடியாத ஒரு பழக்கம் நமது கண்களுக்கிருக்க வேண்டும். இதன் பொருள், அசுத்தமுள்ள இடத்திலிருந்து ஓடிவிட வேண்டுமென்பதல்ல, அதை உடனே போக்க முயலவேண்டுமென்பதே.

3. திருந்திய பழக்கமுள்ளவன் உட்காருமிடத்தைச் சுத்தம் செய்யாமல் உட்காரமாட்டான்; எழுந்த பின்னரும் இடத்தை மீண்டும் சுத்தம் செய்துவிடுவான். அவன் நினைத்தவிடமெங்கும் காகிதத்துண்டுகளையோ, குப்பையையோ இடான்; கண்டவிடத்தில் துப்பமாட்டான், பல் குச்சி, பீடித்துண்டு, எரிந்த தீக்குச்சி ஆகியவைகளை நினைத்த விடமெல்லாம் எறியமாட்டான்; இவையெல்லாவற்றிற்கும் தனிக் கூடையோ பாத்திரமோ வைத்து அதில் இடுவான்.

சுத்தமான பழக்கங்கள் ஏற்படும்பொருட்டு கீழேகண்ட விதிகளையும் அநுசரிக்கவேண்டும்:

4. தண்ணீர் எடுத்து வைத்துக்கொள்ளாமல் கக்கூசுக்குள் போகக்கூடாது.

5. கக்கூசிலிருந்து வந்ததும் கை கால்களை நன்ருகத் தேய்த்துக் கழுவவேண்டும். அதற்கெனத் தனிச்செம்பில்லை யானுல், உபயோகித்த செம்பைத் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

6. குடிதண்ணீருள்ள பானையிலிருந்து முக்கி எடுப்பதற் கெனத் தனியான குவளை யிருக்கவேண்டும். எச்சில் குவளையை ஒருபொழுதும் அதிலிடலாகாது. குடிக்கும்பொழுது சிந்தும் தண்ணீர் பானையில் விழும்படி அதனருகில் நின்று தண்ணீர் அருந்தலாகாது.

7. பலர் அருந்துவதற்கு ஒரே குவளை இருக்குமானுல், அதை வாயுடன் சேர்த்து எச்சிலாக்கிக் குடித்தல் சரியல்ல. வாயில் படாது தூக்கிக் குடிக்கப் பழகவேண்டும்; பழக்கமில் லாதவர்கள் தமக்குப் பிரத்தியேகமாகக் குவளை வைத்துக் கொள்ளவோ, குவித்த கையில் வாங்கிக் குடிக்கவோ வேண்டும்.

8. சாப்பிட்ட இடத்தில் உணவுத் துண்டுகள் சிதறிக் கிடந்தால், வீட்டிற்குள்ளானுல், கூட்டிக் கழுவிச் சுத்தம்செய்ய வேண்டும்; திறந்த வெளியானுல் நன்ருகக் கூட்டி நீர் தெளிக்க வேண்டும். இப்படிச் செய்வதற்குமுன் அங்கே குறுக்கும் நெடுக்கும் நடப்பதும், எச்சில் தோய்ந்த கால்களுடன் சுத்த மான பிற இடங்களுக்கும் அறைகளுக்கும் போவதும், அந்த இடத்திலேயே பிறரைச் சாப்பிடச் செய்வதும் சரியல்ல. இதைத் தவிர இத்தகைய இடம் இருப்பது ஈயை வலிந்து அழைப்பதை ஒக்கும்.

9. சாதாரணமாகக் கரண்டி அல்லது முட்டையினுலேயே பரிமாறவேண்டும். கறி, பருப்பு, சோறு முதலியவற்றைக் கையால் இடவே கூடாது. இதைவிட அதிகத் தீயது எச்சில் கையால் பரிமாறுவதாகும். ரொட்டி, பூரி போன்ற கையில் ஒட்டாத பதார்த்தங்களையும் எச்சில் கையால் இடலாகாது.

10. பரிமாறும் பாத்திரம், உண்ணுவோருடைய தட்டு, கிண்ணம் (இலை) ஆகியவற்றைத் தொடும்படி நெருங்கி இடுவது சுத்தமாகாது; ஆனுல் தொட்டுவிடுமோ வென்று பயந்து விலகி நின்று எறிவதும், பக்கத்தில் சிதறி விழச்செய்வதும் அநாகரிக மாகும்.

11. அசுத்தமான பாதங்களுடன் தமது படுக்கையிலேயே

காலை வைத்தலாகாது. பலர் சேர்ந்து படுத்திருக்கு மிடங்களில் நடக்க நேர்ந்தால், யாருடைய படுக்கையையும் மிதித்துத் தேய்க்கக்கூடாது.

12. ஏதாவது வேலை செய்த பிறகோ, சிறுநீர் கழித்த பிறகோ, கை கால் கழுவாமல் உண்ணும் பொருள்களைத் தொட லாகாது; குடிதண்ணீர்ப் பாண்டத்தில் கையை இடவும் கூடாது. வெற்றிலை, புகையிலை, சுருட்டு முதலிய பழக்கமுள்ள வர்கள் இதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அநேகருடைய உடம்பு சதா அரித்துக் கொண்டிருக்கிறது; பலருக்கு அடிக்கடி மூக்கைச் சிந்தவேண்டியிருக்கிறது. இவர்களும் கையைக் கழுவிய பிறகே உண்ணவும் அருந்தவும் உள்ளவற்றைத் தொடலாம்.

13. எந்த வாளியில் துணியை அலசியிருக்கிறோமோ, அதைத் தேய்த்து அதன் பிசுக்கைப் போக்காமல், கிணற்றிலிட லாகாது; குடிக்கவும், சோறு சமைக்கவும் அதில் தண்ணீர் சேந்தக்கூடாது.

14. சிறுநீர் கழித்தல், கொப்பளித்தல், துப்புதல் முதலிய வைகளுக்கு ஜலதாரையை உபயோகித்தல் மிகவும் அசுத்த மான பழக்கமாகும். இத்தகைய ஜலதாரைகள் வீட்டில் இல்லா திருத்தல் நலம். இவற்றிற்காகப் பிரத்தியேகமான பாத்திரம் ஏற்படுத்தி, அதைத் தூரத்தில் கொண்டுபோய்ச் சுத்தி செய்தல் மிகச் சிறந்த முறையாகும். அசுத்தமான நீர் போவதற்கு நல்ல உறுதியான ஓடுகால் இல்லாத கிராமங்களில், ஜலதாரைகளை உபயோகித்தலாகாது.

15. ஆயினும் ஜலதாரையை உபயோகிக்க நேர்ந்தால், அதில் ஜலம் கழிப்போன் தன் நீர்த்துளிகள் பட்டு அசுத்த மாகும்படி அருகில் ஏதும் பாத்திரம் இல்லாதிருக்கிறதாவென் பதை முதலில் பார்க்கவேண்டும். அதன்மீது தெளிக்கும்படிக் கை கழுவவோ, வாய் கொப்பளிக்கவோ கூடாது.

16. அருவருக்குத்தக்க வசைச் சொற்களைச் சொல்வதும் ஒரு வகையில் அசுத்தமேயாகும். எந்த நாக்கினுல் கடவுளின் திருநாமங்களைச் சொல்லுகிறோமோ, அதனுல் அசுத்தமான வசை மொழி பகருதல், குளித்தபின் குப்பை மேட்டிற்கிடந்து புரளு வதைவிட அசுத்தமானது. ஏனெனில் இதனுல் நாக்குடன் மன மும் கறையடைகிறது.

3. புறத்தூய்மை

1. உடல் தூய்மையில், ஒருக்கால், மேல்வகுப்பு மக்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்க முடிந்தாலும், வீடு, முற்றம், தெரு முதலியவற்றின் சுத்தத்திற்குக் கொடுக்கவியலாது. ஆம், இவ்விஷயத்தில் கீழ் இனத்தார் ஓரளவுக்கு விருது பெறலாம். ஆனால் யாவரும் இவ்விஷயத்தில் தம் வாழ்க்கையை வெகுவாகத் திருத்தியாக வேண்டியதே.

2. நினைத்தவிடத்தில் துப்புதல், மலஜலம் கழித்தல், குப்பை கூளத்தை எறிந்து அதைச் சேரவிடுதல் முதலிய பழக்கங்கள் இந்தியாவின் கிராமங்கள், நகரங்கள், க்ஷேத்திரங்கள், சாலைகள், ஆறுகள், குளங்கள், சத்திரங்கள், ஸ்டேஷன்கள், ரயில்கள், கப்பல்கள் ஆகிய யெல்லாவற்றையும் அசுத்தமாக்கி விடுகின்றன.

3. இந்தப் பழக்கத்திற்கு மூலகாரணமாயிருப்பது தீண்டாமை. மனிதன் வாழும் இடங்களில் அழுக்கு - அசுத்தத்திற்குக் காரணங்கள் உண்டாகிக்கொண்டுதானிருக்கும். ஆனால் இந்தியாவின் தீண்டக்கூடிய வகுப்பினர், அழுக்கைச் சுத்தி செய்யும் வேலையை இழிந்ததாக மதித்தும், அந்தப் பரோபகாரமான பணி செய்வோரைத் தீண்டாதாரென்று அழைத்தும், அவர்கள் போகக்கூடாத விடங்களிலிருந்து அசுத்தத்தை முறையாக வெளியேற்றுவதற்கு பதிலாக சேரவிடும் வழக்கம் செய்திருப்பதுடன், தீண்டாதாருடன் ஒத்துழைக்காமல் அவர்களால் சமாளிக்கவியலாத அத்தனை வேலையை அவர்கள்மீது சுமத்தியிருக்கிறார்கள். இதன் பயனாக நாட்டில் பலவகையான உபத்திரவங்களை யுண்டாக்கி, பலரும் உபயோகிக்கும் பொதுவிடங்களைக் கண்டால் மயிர்க்கூச்செரியும்படிச் செய்துவைத்திருக்கிறார்கள்.

4. மேலே கண்ட பொதுவிடங்களில் எச்சில் உமிழ்வதும் மலஜலம் கழிப்பதும் குப்பை கொட்டுவதும் பாவமாகும்; இவற்றைக் குற்றமாகக் கருதவேண்டும்.

5. வெற்றிலை - புகையிலைப் பழக்கமில்லையானால், ஆரோக்கியமுள்ள மனிதனுக்கு பல் துலக்கும் சமயத்தைத்தவிர வேறு எப்பொழுதும் துப்பவேண்டியிராது. பல், மூக்கு, சுவாசப்பை முதலியவைகளில் நோயுற்றவன் அடிக்கடித் துப்பவும் தும்பவும் நேருகிறது. இதனால் வெற்றிலை - புகையிலைப் பழக்கமுள்ளவர்கள், ஆரோக்கியமாயிருந்தும் நோயாளிக்குள்ள கஷ்டம்

உடையவரா யிருக்கிறுர்கள் என்பது தெளிவு. மனிதனுடைய எச்சில் கோழை ஆகியவற்றில் பலவகை விஷக்கிருமிகள் இருக்கின்றன. இவை காற்றில் கலந்து ஆரோக்கியசாலிகளுக்கும் நோயைத் தந்துவிடுகின்றன. ஆகையால் எச்சிலையும் கோழையையும் அழிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

6. ஒவ்வொரு வீட்டிலும் எச்சில் துப்புவதற்கு சாம்பல் நிறைந்த ஒரு குவளை அல்லது சட்டி வைத்து அதிலேயே யாவரும் துப்பவேண்டும். அதைத் தொலைவில் வயலிற் கொண்டு போய்க் கொட்டி, புதிய சாம்பலை அதில் நிரப்பவேண்டும். துப்புவதற்குத் தனியான பாத்திரம் உபயோகிப்பதானுல், அதை நினைத்தவிடத்தில் சுத்தம் செய்யலாகாது. கழிவு நீரோட்டத்திற்கு நல்ல ஏற்பாடுள்ள பம்பாய் போன்ற நகரங்களில் அதை ஜலதாரையில் கழுவினுலும், கிராமங்களில் அதை வயலிற் கொட்டி அதன்மீது உலர்ந்த மண்ணிடவேண்டும்; அல்லது சூடான மணலை அதில் இட்டுவைத்து அந்த மணலை தூரத்திற் கொண்டுபோய்க் கொட்டவேண்டும்.

4. மலஜல சுத்தி

1. சாலையில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே கூடாது. திறந்த இடத்தில் பிறர் பார்க்கும்படி மலம் கழித்தலும் குழந்தைகளைக் கழிக்கச் செய்தலும் அநாகரிகமானவையாகும்.

2. ஆகையால், ஒவ்வொரு கிராமத்திலும் ஒதுங்கிய இடத்தில் குறைந்த செலவில் கக்கூசுகள் கட்டி, அவைகளைத் தினமும் முறையாகச் சுத்தம் செய்விக்கவேண்டும்.

3. வெளியிலேதான் போகவேண்டுமென்ருல், சனங்கள் வசிக்காத, வசிக்குமிடத்திலிருந்து குறைந்தது ஒரு மைல் தூரத்திற்குப் போகவேண்டும். ஒரு குழி தோண்டி அதில் மலம் கழித்து, பின்னர் அதை மண்ணிட்டு மூடிவிடவேண்டும். அறிவாளியான உழவன் தன் வயல்களில் அத்தகைய கக்கூசுகள் அமைத்தோ, வெளியிடங்களில் ஏற்பாடுசெய்தோ, விலையில்லா மலே உரம் சேகரித்துவிடுவான்.

4. இதுவல்லாமல் குழந்தைகள் நோயாளிகள் ஆகியோருக்கு வேண்டியபொழுது உபயோகமாகும்படி ஒவ்வொரு வீட்டையுமொட்டி ஒரு கக்கூசு இருக்கவேண்டும். அதற்காகத் தகரத்தையோ மண் தொட்டியையோ உபயோகிக்கலாம்.

அதிலும் மலம் கழித்தபிறகு மண்ணிட்டு மூடவேண்டும். அதைத் தினமும் வயலில் குழிதோண்டி நல்ல மண்கொண்டு மூடவேண்டும். சட்டி - தகரத்தை துர்நாற்றமில்லாமல் சுத்தி செய்யவேண்டும்.

5. கக்கூசு ஈரமாகாதிருப்பதற்காகச் சிறுநீர் கழிக்கவும் நீர் ஊற்றி உடல் கழுவவும் வேறு தொட்டியோ தகரமோ இருக்க வேண்டும்.

6. மிகவும் ஆழமான கக்கூசுக் குழியால் சிறிதும் பயனில்லை. ஏனெனில் அதிக ஆழத்தில், உரம் செய்ய உதவும் மண்புழுக்கள் இருப்பதில்லை. ஆகையால் அவைகளில் அசுத்தமான வாயு உண்டாகிக் காற்றைக் கெடுத்துவிடும்.

7. தெருக்களில் சிறுநீர் கழித்தலைப் பாவமென்று கருத வேண்டும். ஆகையால், துர்நாற்றம் பரவாமலும், துளிகள் சிதருமலும் இருப்பதற்காக, இதற்கும் மண் நிறைந்த சட்டிகள் வைத்திருக்கவேண்டும்.

8. ஒவ்வொருவரும் தாமே கக்கூசைச் சுத்தம் செய்யக் கற்கவேண்டும். இதனுல் கக்கூசைத் தவருக அமைப்பதாலும் தவருக உபயோகிப்பதாலும் எத்தனை வேலை வளருகிறது என்பதும், சரியாகக் கட்டவும் தொட்டி முதலியவை அமைக்கவும் உபயோகிக்கவும் தெரியும். மேலும், தோட்டிகள் சமூகத்திற்குச் செய்யும் சிரமமான சேவையை உணரமுடியும். சரியாகக் கையாளப்பட்டால் கக்கூசைச் சுத்தி செய்வதில் அருவருப்பிற்குரிய தொன்றுமில்லை யென்றும், தோட்டிகளின் கஷ்டத்திற்குக் காரணம், இந்த வேலையிலுள்ள அசுத்தமல்ல, இதை உபயோகிப்பதில் மக்களுக்குள்ள அலட்சிய புத்தியே யென்றும் தெரியும்.

9. மனிதனுடைய மலஜலத்தைப்போல் மாட்டின் சாணம், மூத்திரம் ஆகியவைகளையும் உரமாகவே உபயோகிக்கவேண்டும். சாணத்தை முட்டை தட்டுதல், 'கரென்ஸி' நோட்டை எரித்துக் குளிர் காய்வதுபோன்ற செயலாகும். மாட்டின் மூத்திரத்தை உபயோகிப்பதில்லை ; அதனுல் பொருள் நஷ்டத்துடன் ஆரோக்கியத்திற்குத் தீங்கும் விளைகிறது.

5. நீர்நிலைகள்

1. குளம், கிணறு, ஆறு ஆகியவற்றின் நீர் சுத்தமாயிருக்கும்படியாகக் கிராமப் பஞ்சாயத்துக்களும் கிராம ஊழியர்களும் கவனித்துக்கொள்ளவேண்டும்.

2. இன்று நீர்நிலைகள் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கின்றன. குளத்திலேயே பாத்திரங்கள் கழுவப்படுகின்றன; அதிலேயே குளிக்கவும் துணி துவைக்கவும் செய்கிறார்கள்; கால் நடைகளும் அந்த நீரிலேயே குளித்து அதிலேயே விழுந்து கிடக்கின்றன; அதில் குழந்தைகளும் பெரியோரும் நீர் கழிக்கிறார்கள். அதன் கரைகளில் மலஜலம் கழிக்கிறார்கள்; அதே நீரைக் குடிக்கவும் சோறு சமைக்கவும் உபயோகிக்கிறார்கள். இதையெல்லாம் பாவமென்று கருதி நிறுத்திவிடவேண்டும்.

3. கிராமத்துக் குளத்தின் நான்கு பக்கங்களிலும் கால் நடைகள் இறங்காதிருக்கும்படிக் கரை கட்டவேண்டும். அதன் அருகில் கால் நடைகள் தண்ணீர் அருந்துவதற்காகப் பெரிய ஓடை அமைக்கவேண்டும்.

4. இவ்வாறே துணி துவைப்பதற்காகக் குளத்தின் அருகில் தொட்டி யிருக்கவேண்டும். அதன் தண்ணீர் குளத்தில் திரும்பிப் போய்ச் சேராமல் தொலைக்குப் போய்விடும்படியாக அதன் பக்கங்களும், கழிவாயும் உறுதியாக அமைக்கப்படவேண்டும்.

5. இந்த ஓடையையும், தொட்டியையும் தினந்தோறும் கிராமத்தாரே நிரப்புவதானால் மிகவும் நலமாகும்; இல்லையென்றால் சிறிது செலவு செய்து நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. எச்சில் பாத்திரங்களை குளத்திலோ கிணற்றிலோ கழுவக்கூடாது. வெளியே தொட்டி அல்லது ஓடையில் கழுவிய பிறகு குளத்தில் அல்லது கிணற்றில் முக்கவேண்டும்.

7. தண்ணீர் எடுப்பவன் தன் கால்களைக் குளத்தில் நனைக்காமல் வெளியே நின்று எடுக்க குளத்தில் வசதியிருக்க வேண்டும்.

8. ஒரே குளம் உள்ள ஊரிலுள்ளவர்கள் அதில் இறங்கிக் குளித்தல் கூடாது. பல குளங்களுள்ள ஊரில் குடிதண்ணீருக்கென ஒன்றை ஒதுக்கிவைக்க வேண்டும்.

9. இடையிடையே சேறு, கும்பி ஆகியவற்றை எடுத்துக்

கிணற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதன் நாற்புறமும் பிடி சுவரிருக்க வேண்டும்; சகதியுண்டாகவிடக் கூடாது. இதற்காகத் தரையை உறுதியாகச் செய்து, தண்ணீர் ஊறி மீண்டும் கிணற்றினுள் வராதிருக்கும்படியும் தூரத்திற் போய் விழும்படியும் ஏற்பாடு செய்யவேண்டும்.

10. இவ்வாறு தண்ணீர் தூரத்திற்போய் விழுவதற்காக அமைந்துள்ள வாய்க்கால்களில், பாசியும் புல் பூண்டும் முளைக்கின்றன; அவற்றினின்றும் துர்நாற்றம் உண்டாவதுடன் கொசு உற்பத்திக்கும் இடமாகிறது. ஆகையால், அந்த வாய்க்கால்களைச் சுத்தம் செய்வதில் இடையருத கவனமிருக்கவேண்டும். அவைகளைத் தினமும் துடைப்பம்கொண்டு தேய்த்துக் கழுவவேண்டும்.

6. நோய்

1. நோய்க்கும் வெளியிற் புலனுகும் அதன் அறிகுறிகளுக்குமுள்ள வேற்றுமையை உணரவேண்டும்.

2. தலை வலித்தல், ஜுரம் காணுதல், பெருமூச்செறிதல் ஆகியவை நோய்களல்ல; உடலில் உண்டாயிருக்கும் விஷம் அல்லது நோயின் வெளிப்படையான விளைவுகளே.

3. உடலிற் புகுந்துள்ள விஷத்தை வெளியேற்றும் பொருட்டு தீவிரமான முயற்சி செய்துகொண்டே யிருக்கும் பரோபகார சிந்தையுள்ள செந்துக்களால் ரத்தம் அமைந்திருக்கிறது. அவற்றின் தீவிர முயற்சியே, காய்ச்சல், மூச்சு, வீக்கம், வலி என்றெல்லாம் வெளிப்படுகின்றன.

4. எந்தக் காரணங்களினுல் இந்த விஷம் உண்டாயிற்றோ அல்லது உண்டாய்க்கொண்டிருக்கிறதோ, அவையே உண்மையான நோய்களாகும்; காய்ச்சல் முதலியவை வெளியில் தோன்றும் அறிகுறிகளே.

5. தவறி விழுதல், காயமடைதல் முதலிய எதிர்பாராது நேர்ந்த சம்பவங்களினுல் விளையும் நோய்களைத் தவிர, மற்ற எல்லா நோய்களுக்கும் பொதுவாக அடக்கமில்லா வாழ்க்கையே காரணமாகும்.

6. உணவு, போகம், உறக்கம், விழிப்பு ஆகியவற்றில் வரம்பை மீறல்; சோம்பல், அதிக உழைப்பு, நாடகம் - சினிமா

முதலிய கேளிக்கைகள் ; வெறுப்பு, வெகுளி, விருப்பு ஆகியவை மிதமிஞ்சிப்போதல் ; இந்த அடக்கமின்மையின் பல வகைகளே நோயை வாவென்றழைப்பவை.

7. இவ்வடங்காமை அறியாமையின் விளைவாலும் சரி, தவறினுலுண்டானுலும் சரி, நிர்ப்பந்தத்தின் விளைவாலும் சரி, தெரிந்தே நடந்தாலும் சரியே - இவை எல்லாவற்றிற்கும் பயனை நோயை உடலே ஏற்க வேண்டியிருக்கிறது.

8. இந்தக் காரணங்களுமிருந்து, இவைகளுடன் கெட்ட காற்றும் அழுக்கு நீரும் அசுத்தமும் சேர்ந்துகொண்டால், நோய்கள் உண்டாகிவிடுகின்றன.

9. தூய அடக்கமுள்ள வாழ்வு வாழ்வோன், தொத்து நோயுள்ளவரிடையே வாழ்ந்தாலும் அவனை நோய் பிடிப்பதில்லை யென்பதைப் பார்த்திருக்கிறோம். இதிலிருந்து மனித ரத்தத்தில் வெளியிலிருந்து புகும் விஷத்தை வெளியேற்றும் சக்தி யிருக்கிற தென்று தெரிகிறது. அடக்கமின்மையால் இந்தச் சக்தி குறைந்துவிடவே, நோய் தொத்துகிறது.

10. நோயின் காரணங்களைத் தடுத்தல் முதல் சிகிச்சை யாகும். இந்தச் சிகிச்சைகளிலும் புலன்கள், மனம் ஆகியவை களின் அடக்கத்துடன், சுத்தமானதும் அளவுக்குட்பட்டதுமான உணவு, இன்பம், போதிய உழைப்பு, உறக்கம் ஆகியவை முதல் இடம் பெறத்தக்கவை ; அதற்கடுத்தாற்போல் சுத்த மான காற்று, தண்ணீர், உடை ஆகியவையும் வீடு, வாசல், தெரு ஆகியவைகளின் சுத்தமும் வரும்.

7. சிகிச்சை

1. உடல் நலமில்லையென்று தெரிந்ததும் நோயைத் தடுக் கும் சிகிச்சைகளை முதல் வேலையாகச் செய்யவேண்டும்.

2. இச்சிகிச்சைகளைச் சரிவரச்செய்தால், நோய் பெரும் பாலும் தானே குணமாகிவிடும். மருந்துகள் பெரும்பாலும் பயனற்றவையும் தீங்கு விளைவிப்பவையுமாகும்.

3. ஆகார - போகங்களின் தவறுகளையகற்ருமல், காற்று - தண்ணீர் முதலியவைகளை மட்டும் மாற்றி நோயைப் போக்க விரும்புவது, உடலைச் சுத்த நீரினுல் கழுவிய பிறகு அழுக்குத் துண்டினுல் துடைப்பதை யொக்கும். இவை யிரண்டையும் திருத்தாமல் மருந்தினுல் குணம் பெற விரும்புதல், துணியின்

அழுக்கைப் போக்கவேண்டி அதைக் கறுப்புச் சாயத்தில் தோய்ப்பதைப் போலாகும்.

4. மருந்தைத் தவிர வேறு சாஸ்திரீய சிகிச்சைகள் இருக்கின்றன ; அவற்றை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். அவை செலவின்றிச் சுலபமாகச் செய்யக்கூடியவை.

5. ஒவ்வொரு கிராமத்திலும் ஆஸ்பத்திரி இருக்கவேண்டுமென்று எண்ணுவது தவறு. பல கிராமங்களிடையே ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமானுல் இருக்கலாம். கிராமத்து வைத்தியசாலை யென்ருல், கிராம ஊழியர் புரியும் உபசாரங்களென்றே பொருள்படும்.

6. எல்லாவற்றிலும் சிறந்த உபசாரம் உபவாசமாகும். அத்துடன் 'இடை' மூழ்க்கையும் (Hip-bath), 'கதிர்' மூழ்க்கையும் (Sun-bath) சேர்த்துக்கொள்க. இதன் விதிகளையும், பிரயோகத்தையும் ஊழியர் கற்றுக்கொள்ள வேண்டும்.*

7. இதைத் தவிர, ஈர மண் பட்டியைப் பலவகை நோய்களுக்கும் காய்ச்சல்களுக்கும் உகந்த சிகிச்சையென்று கூறலாம். ஜுரவேகம் அதிகமாயிருக்கும் பொழுதும், தலைநோயுற்ற பொழுதும், வயிற்றிலோ முதுகிலோ வலியுண்டானுலும், வெளியில் புலனுகாத காயம் அல்லது வேறு காரணங்களினுல் வீக்கம் இருந்தாலும், நாசியில் ரத்தம் பெருகினுலும், சொரி, சிறங்கு முதலிய தோல்-நோய்கள் உண்டானுலும், போக்குப் போனுலும், நல்ல தூக்கம் இல்லையானுலும், விஷ ஜந்து தீண்டினுலும், கல் கட்டிகளில்லாத சலித்த மண்ணை நனைத்துத் துணியில் பரப்பிச் செய்த பட்டியை, நோயுற்ற பகுதியில் கட்டுவதும், அது உலர, உலர வேறு ஈரமான புதிய பட்டியைக் கட்டிவைத்தலும் சிறந்த இயற்கைச் சிகிச்சையாகும்.

8. ஒத்துவதற்கு அவசியமுண்டானுல் - அதாவது கொப்புளத்தைப் பழுக்கச் செய்யவும், மூச்சுவிடுவது சிரமமாயுள்ள பொழுதும், களைப்பு அல்லது குளிரினுல் சிரமமுண்டானுலும், சுடுநீரில் சிறிய கைக்குட்டையை நனைத்துப் பிழிந்து தோல் வெந்துவிடாதபடி ஒத்தினுல் நல்ல குணமுண்டாகிறது. மணல், மண், செங்கல் ஆகியவற்றைக் காய்ச்சித் துணியில் சுற்றிக்கொண்டும் எரிச்சலில்லாதவகையில் ஒத்தலாம்.

9. ஒருவர் நோயுற்றதும் அவர் படுக்கையைப் பிறருடைய

* இதைப்பற்றியறிய காந்தியடிகள் எழுதியுள்ள 'ஆரோக்கியவழி' என்ற நூலைப் படித்தல் நலம்.

திலிருந்து பிரித்துப் போடவேண்டும். அவரருகில் பிறர் குழுமு வதோ சாமான்களைச் சேர்த்துவைப்பதோ கூடாது. அதிகக் காற்ருே வெளிச்சமோ இல்லாததும், போதிய காற்று வீசுவது மான இடத்தில் அவரைப் படுக்கவைக்கவேண்டும். அவருடைய துணிகள், விரிப்பு, போர்வை முதலியவை சுத்தமா யிருத்தல் வேண்டுல். அவருடைய கம்பளம், விரிப்பு, தலையணை முதலிய வைகளை இரண்டு மூன்று நாட்களுக் கொருமுறை வெயிலி லிடவேண்டும்.

10. நோயாளிக்கு மருந்து கொடுப்பதைவிட, அவருடைய உடல், மனம், வயிறு ஆகியவைகளுக்கு ஓய்வு தருவது அவசிய மாகும். இவற்றுள் வயிற்றுக்கு ஓய்வு தருவதை நாம் அதிக மாகக் கவனிப்பதில்லை.

11. பசியில்லாமை என்ற நோயுருமல் வேறு நோயுற்றிருந் தாலும், வயிற்றுக் கோளாறு விளைவியாத நோய் எதுவும் இல்லை. ஆகையால் அவரது வயிற்றுப் பளுவைக்குறைத்தல் சிகிச்சை செய்வோருடைய முதல் வேலையாகும். இதன் பொருட்டு 'பஸ்தி' (எனிமா)வைப்பது முதல் வழியாகும். அதிக சுர மில்லையெனில், ஒன்றிரண்டு தடவை பேதியாகச் செய்யலாம். இத்துடன் ஒன்றல்லது இரண்டு வேளை உணவை நிறுத்துவதில் தீங்கொன்றுமில்லை. நோயாளி மிகவும் பலவீனமாயிருந்தால், மேலும் உபவாசம் இருக்கச் செய்தல் நலமா அல்லவா வென் பதைப் பற்றி அனுபவமுள்ளவரிடம் ஆலோசனை கேட்பது அவசியமாகும். ஆலோசனை கூற யாரேனுமிருந்தாலும் சரி, இல்லையாயினும் சரியே, ஒரு விஷயம் மட்டும் நன்கு தெரிந் திருக்க வேண்டும். அதாவது, நோயாளியின் இரத்தம் நோயின் விஷத்துடன் போர் நடத்திக்கொண்டிருக்கையில், உணவைச் சீரணிக்கும் வேலை வேறு அதற்கில்லாதிருத்தல் நலம். உணவு தந்தேயாக வேண்டுமென்ருல் சுலபமாய்ச் சீரணிப்பதாயும், உயிர் தாங்குவதற்குத் தேவையான அளவிலுமே தரவேண்டும்.

12. பசும்பால் அல்லது ஆட்டுப்பால் சுலபமாக ஜீர்ண மாகும் உணவாகும். நோயாளி உயிர் தாங்குவதற்கு 10 முதல் 20 தோலாவரையில் பால் போதுமென்று கருதப்படுகிறது.

13. ஆனல் நோயிலும் லங்கணத்திலும்கூட நோயாளிக்குச் சுத்த நீர் வேண்டிய அளவு தரவேண்டும். தண்ணீருடன் சோடா உப்பும் சிறிது உப்பும் கலக்கவேண்டும். சாதாரணமாக எலுமிச்சம்பழம் தரலாம். முறைக் காய்ச்சலில், வாந்தியும்

தலைவலியும் உண்டானால், எலுமிச்சம்பழம் அவசியம் கொடுக்க வேண்டும்.

14. முறைக்காய்ச்சலில் 'கொய்னா' கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகலாம். ஆனால் மேற்கண்ட முன்னேற்பாடுகள் செய்திருந்தால், டாக்டர் கொடுக்கும் அதே அளவில் கொடுக்கவேண்டியிராது. 'கொயினா'வை எலுமிச்சைச் சாற்றில் சோடாவுடன் உட்கொண்டால், அதனால் விளையும் தீங்கு குறையக்கூடும்.

15. காய்ச்சல் மிகவும் அதிகமாயிருந்து, அதைச் சீக்கிரத்தில் குறைக்கவேண்டியது அவசியமானால் 'ஈரப்போர்வை' முறையைக் கையாளவேண்டும். இந்த முறையை "ஆரோக்கியவழி"யைப் படித்துத் தெரிந்துகொள்ளவும்.

16. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீடிக்கும் காய்ச்சல் அல்லவாயினும் வெகு நாட்கள்வரை விடாதிருந்தால், இடத்தை மாற்றவேண்டுமென்று தெரிந்துகொள்ளவேண்டும். வேறு சீதோஷ்ணமுள்ள இடத்திற்கு நோயாளியை அழைத்தேகவேண்டும்; இதற்குப் பிரசித்தமான ஆரோக்கிய ஸ்தலங்களைத் தேடவேண்டுமென்பதல்ல.

17. மேலே கூறப்பட்ட சிகிச்சைகள் எதிர்பாராது வந்து விலகும் நோய்களுக்கேயாகும். நீடித்த பழைய ரோகங்களான க்ஷயம், குட்டம், மேகநீர் முதலியவைகளுக்கும் இம்முறையில் சிகிச்சை செய்யலாம். ஆனால் அதற்கு அனுபவசாலிகளின் ஆலோசனையும் பொறுமையும் இன்றியமையாதவை.

18. மருந்துண்ணும் பழக்கம் நல்லதல்ல. எந்தப் பழைய நோயும் மருந்தினால் தீருவதில்லை யென்றால், அது மிகையல்ல.

19. டாக்டர்கள் நோயாளிக்குச் சுலபமான சிகிச்சை முறைகளைக் கற்பித்து, மருந்துகளையே நம்பாதிருக்கும்படிப் போதிக்க வேண்டும்.

20. டாக்டர்களுக்கு மருந்துகளிடமுள்ள நம்பிக்கை, யந்திர மந்திரங்களில் மந்திரவாதிகளுக்குள்ளது போல, பெரும்பாலும் குருட்டு நம்பிக்கையே. நோயாளியைக் குணப்படுத்துவது அவருடைய இரத்தத்திலுள்ள இயற்கையான சீவசக்தியே; நோயினால் அந்தச் சக்தி முறியடிக்கப்படாதிருந்தால் நோயாளி தப்புகிறார். அதைத் தோற்காமல் காப்பதற்கு, முன்கூறிய உபசாரங்களே போதுமானவையென்று கருதவேண்டும். பின்னரும் பிழைக்கவில்லையானால், அவருடைய ஆயுள் முடிந்துவிட்ட

தென்று கருதவேண்டியதே. டாக்டர்களேயும், மந்திரவாதிகளே யும் தேடியலேந்து, பணத்தை விரயமாக்கக் கூடாது.

21. 'சோடாபை கார்ப்' (Soda-bicarb) பை மருந்தென்று கருதினல் அது, பேதிக்குக் தருவதற்காக ஆமணக்கெண்ணெ யைப் போன்ற ஏதேனும் ஒன்று, கொயினு, வெளியில் தடவு வதற்காக 'அயோடின்' (Iodine) இவைகளேத் தவிர வேறெந்த மருந்தும் கிராம ஊழியர் வைத்திருக்கவேண்டியதில்லே. இவை களேத் தவிர 'எனிமா'க் குவளேயும் அவரிடம் இருக்குமாஞல், அவருடைய மருந்துச்சாலே சம்பூர்ணமாகி விட்டதென்று கருத லாம்.

8. உணவு

1. மனிதனுக்கு மாமிச உணவு தேவையே யில்லே.

2. புலாலே மறுத்தமையால் ஹிந்துக்களின் வீழ்ச்சி யுண் டாயிற்றென்ற கருத்து தவறுனதென்பதுடன், உண்மைக்கு மாறுனதுமாகும்; ஏனெனில் ஹிந்து அரசர்களும் போர்த் தொழிலுள்ள சாதியினரும் வெகுகாலத்திற்குப் புலாலே மறுத் திருந்ததாகத் தெரியவில்லே.

3. புலாலுண்ணுத மக்கள் உடல் வலிமையிலோ, ஆரோக் கியத்திலோ, வீரத்திலோ குறைந்திருக்கிறுர்களென்று கருத ஏதும் காரணமிருப்பதாகத் தெரியவில்லே.

4. மர உணவை ஆதரித்தாலும், புலாலுண்போரை வெறுத் தல் சரியல்ல. இந்தியாவில் பல சாதியினருக்கு ஏழைமையி ஞலேயே புலாலுண்ண வேண்டியிருக்கிறது.

5. பாலும் புலால் வகையைச் சேர்ந்ததே. ஆயினும் அதில் உயிர்வதை யென்ற ஹிம்சையில்லேயென்பதை ஒப்ப வேண்டும். உள்ளத்தூய்மைக்கான முயற்சியில் பால் ஒரு தடையே.

6. ஆனல் புலாலுண்ணுத ஹிந்து மக்களுக்குப் பாலுக்குப் பதிலாக முழுப் புஷ்டி தரக்கூடிய வேறு மர உணவு தரமுடி யாது. ஆகையால் பாலுக்கு விலக்குத் தருவதைத் தவிர வேறு வழியில்லே; அதுமட்டுமல்ல, யாவருக்கும் பால் கிடைப்பதற் கான ஏற்பாடு செய்யவேண்டும்.

7. மர உணவுகளுள், பழவகையும் சமைக்காமல் உண்ணக் கூடியவையும் இயற்கைத் தன்மையுடன் இருப்பதால், சிறந்த

வையாகும். மற்ற எல்லாப் பிராணிகளும் இயற்கை உணவை அது விளையும் வகையிலேயே உட்கொள்ளுகின்றன. மனிதன் மட்டும் இதற்கு விலக்கா யிருப்பதற்குக் காரணமேதும் தெரிய வில்லை.

8. ஆயினும் இப்பொழுது மனித சமூகத்தின் பெரும் பகுதி அந்த இயற்கை நிலையிலிருந்து வீழ்ச்சியுற்று, இயற்கை யுணவினுல் உயிர்வாழ இயலாத வகையில் சமையல் தொந்த ரவைப் பெருக்கிக்கொண்டு விட்டதுடன், தாமாகவே தேர்ந்து உண்ணவேண்டியதற்குப் பதிலாக, அன்ன சாஸ்திரவல்லுனரின் ஆலோசனையைக் கேட்க வேண்டிய நிலைமை உண்டாகி யிருக்கிறது.

9. இதனுல் சமையல் பலருக்கு இன்றியமையாத தாகி விட்டது. ஆயினும் சமைத்தல் என்ருல் வேகவைத்தல், தீயில் வாட்டுதல், வறுத்தல் ஆகியவையாகவே யிருக்கவேண்டும். ஆனுல் மனிதன் இவற்றுடன் திருப்தியடைந்தானில்லை. சமை யலின் குணத்தையோ (தீமையையோ) ஏற்ற பிறகு அவன் நாவை வழிபடத் தொடங்கிப் பலவகை மசாலைகளும், சித்ரான் னங்களும் கண்டு பிடித்தான். உடலைத் தாங்கி வாழ்வதற்குரிய மருந்தென்று கருதவேண்டியதெதுவோ, அது வாழ்வின் வெகு முக்கியமான வேலையாகி விட்டதுடன் அதன் பொருட்டு வாழ்வின் அதிக நேரமும் சக்தியும் வீணுகின்றன.

10. ஆரோக்கியத்தைக் கருதும்பொழுதும், உள்ளத்தூய் மையைக் கெடுப்பது என்பதை யுணரும்பொழுதும், பொழுது வீணுவதை யுன்னும்பொழுதும், மசாலைகளும் பல்வகை வியஞ் ஜனங்களும் தீயவை, விலக்கத் தக்கவையே.

11. காய்கறிகளையும், பழங்களையும் இந்தியாவில் நாம் சாப்பிடுவதைவிட அதிகமாகச் சாப்பிடுவது அவசியமாகும். முக்கியமாக சீமைத்தக்காளி, முள்ளங்கி, வெள்ளரி முதலிய காய் கிழங்குகளையும் கீரை வகையையும் சமைக்காமலே சாப்பிட வேண்டும். உணவில் பருப்புவகைகளைவிட கீரைவகைகள், அதுவும் சமைக்காத புதிய பசுமையான கீரைகள் அதிகம் தேவையாகும்.

12. தேயிலையும், காப்பியும் புதிதாய் வந்துள்ள துர்ப்பழக் கங்கள். இத்தகைய எந்தப் பானமும் அருந்தும் பழக்கம் நமக் கிருந்ததில்லை. இந்தப் பானங்களினுல் ஏதும் பயனில்லை. இவை யிரண்டும் தீமை புரிபவை. தேயிலையுற்பத்தியில் மனித

ஹிம்சை நிறைந்திருக்கிறது. இப்பானங்கள் உணவுச் செலவை வீணுகப் பெருக்கி யிருக்கின்றன. இவைகளினுல் கிராமங்களில் பால் கிடைப்பதில்லே. தீமை விளேவிக்கும் அளவுக்குச் சர்க்கரை உபயோகிக்கப்படுகிறது.

13. தேயிலே, காப்பி, புகையிலே, பங்கி, கஞ்சா, அபின் ஆகியவற்றுள் ஏதேனு மொன்றில் பழகியவன் தனக்கு வீரிய உறுதி யுண்டென்று கூறிக்கொண்டால் நம்பக்கூடாதென்பது அனுபவமுள்ள பலரின் கருத்தாகும்.

9. தேகப்பயிற்சி

1. சிறு வயது முதல் அவசியமான அளவுக்கு உழைத்து வளர்ந்தவன் 'கோதா'விலிறங்கி விதிப்படி தேகாப்பியாசம் புரியவேண்டிய அவசியமில்லேயென்று கூறலாம்.

2. 'கோதா'வின் தேகாப்பியாசங்களெல்லாம், இருந்த விடத்தைவிட்டு நகராமல் தொழில் நடத்துவோரும், சேனேயிற் சேர்ந்துள்ளோரும், உடற்பயிற்சியை வயிற்றுப்பிழைப்பாய்க் கொண்டோருமே செய்ய வேண்டியவை.

3. 'கோதா'வின் அப்பியாசங்களினுல், ஒருவன் நீண்ட ஆயுளுடையவனுய் நோயற்று வீரத்துடன் உடலுழைப்பைச் சகிக்கக்கூடியவனுய் ஆவதாகத் தெரியவில்லே. உடலினுல் பயில் வான்களாய்த் தோன்றினுலும், கோழைகளாயும், தேகப் பயிற்சியைத் தவிர வேறெந்த வேலேயும் செய்யத் தெரியாமலும், குளிர்-சூடு தாங்க நேர்ந்தால், சோர்வுறுவோராயுமுள்ள பலரைப் பார்த்திருக்கிருேம்.

4. 'கோதா'வில் செய்யும் தேகாப்பியாசம் விகாரங்களேப் பெருக்கும் தன்மையுடையது. ஏனெனில் அதனுல் உடலில் உஷ்ணம் அதிகமாகிறது. உணவிலும் இன்பநுகர்ச்சியிலும் அதிக விருப்பம் உண்டாகிறது.

5. ஆயினும் 'கோதா'வின் தேகப்பயிற்சியை முற்றிலும் கண்டிப்பது நம் நோக்கமல்ல; மற்றப் பயிற்சிகளேப்போல் இதுவும் வரம்புக்குட்பட்டு நடைபெறவேண்டியதே.

6. கோஷ்டி-தேகாப்பியாசம் மிகவும் உபயோகமுள்ள பயிற்சியாகும்; எல்லா வாலிபர்களுக்கும் பெண்களுக்கும் அது இன்றியமையாதது.

7. சாத்வீகமான தேகாப்பியாசங்களுள், உடலின்

ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்தது உலாவுதலாகும். இதைத் தேகாப்பியாசங்களின் அரசன் என்று அழைப்பது முற்றிலும் பொருத்தமானதே.

8. இதற்கு அடுத்தாற்போல் ஆசனங்களும் பிராணுயாமமும் சாத்வீகமான தேகாப்பியாசங்களென்று கூறத்தக்கவை. ஏனெனில் இந்தத் தேகாப்பியாசங்களின் முக்கியமான நோக்கம் உடலைப் போகநுகர்ச்சிக்கு உகந்த தாக்குவதல்ல, சுத்தமாக்குவதாகும். இவைகளினுல் பல நோய்கள் குணமாகின்றன.

9. ஆனுல் இந்தத் தேகாப்பியாசங்களையே பிழைப்புக்கு வழியாக்கிக் கொள்வதும், இவற்றின் மூலமாகச் சித்திகள் பெற முயலுவதும் இவற்றைத் தவருன வழிகளில் உபயோகிப்பதாகும். உடலில் சேரும் அழுக்கை மலஜலங்களினுல் வெளியேற்றுவதுபோல, மற்ற அழுக்குகளை ஆசனம், பிராணுயாமம் ஆகியவைகளினுல் வெளியேற்றுவது இந்தத் தேகாப்பியாசங்களின் நோக்கமாகும்.

XI கல்வி

1. கல்வியின் நோக்கம்

1. सा विद्या या विमुक्तये - முக்திக்குத் தகுதிபெறச் செய்வது கல்வியாகும். மற்றவை எல்லாம் அறியாமையே.

2. ஆகையால் எது சித்தத்தைத் தூய்மைப் படுத்தவில்லையோ, மனத்தையும் புலன்களையும் அடக்கப் பயிற்சியளிக்கவில்லையோ, அச்சமின்மையும் தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதும் எதிலிருந்து உண்டாகவில்லையோ, சீவனத்திற்குரிய உபாயத்தைக் காட்டவில்லையோ, அடிமைத்தளைகளைத் தகர்த்தெறிந்து சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான துணிவும் ஆற்றலும் உண்டாக்கவில்லையோ, அந்தக் கல்வியில் எத்தனை அறிவுப்பொக்கிஷம் சேமித்துக்கிடந்தாலும் தர்க்கத் தேர்ச்சியும் பாஷைப் பயிற்சியும் பொதிந்திருந்தாலும், அது நல்ல கல்வியாகாது, அறைகுறையான கல்வியேயாகும்.

2. நாட்டுக்கு உதவாக்கல்வி

1. நூற்றில் 80-85 பேர்களின் வாழ்க்கைத் தேவைகளைக் கருதுவதை விடுத்து, ஒரு சிலரின் நன்மைகளையோ, ராஜ்யத்தின் சில இலாகாக்களின் தேவைகளையோ கருத்திற் கொண்டு அளிக்கப்படும் கல்வி தேசீயக் கல்வியாக முடியாதது மட்டுமல்ல, தவறான கல்வியாயு மிருப்பதால் அது அறியாமையேயாகும்.

2. இத்தகைய கல்வி, கற்றோருக்கும் மற்றோருக்குமிடையே ஆழ்ந்த அகழி தோண்டி, கல்விமான்களை மக்களின் தலைவராகவும் வழிகாட்டிகளாகவும் பிரதிநிதிகளாகவும் செய்வதற்கு பதிலாக, மக்களிடமிருந்து பிரிந்தவர்களாகவும், மக்களின் வாழ்க்கையையும் கருத்துக்களையும் புரிந்துகொள்ளாதவர்களாயும், அதில் ருசியில்லாதோராயும், அவர்களுடைய கட்சியை எடுத்துரைக்கத் தகுதியற்றவர்களாயும் செய்து விட்டது.

3. இந்தக் கல்வி, தன் மதிப்பைப் பெருக்கும்பொருட்டு கட்டடங்களையும் உபகரணங்களையும் புத்தகங்களையும் கானல் நீரைப்போல் தூரத்தில் கண்ணைக்கவரும் ஆசைகளையும், பகட்டுள்ள ஆடம்பரங்களையும் காட்டி, மக்களை கடனில் ஆழ்த்தியிருக்கிறது.

4. இக்கல்வி, ஜனங்களின் மனத்தில் பல பிரமைகளை உண்டாக்கி யிருக்கிறது. உதாரணமாக, எழுத்தறிவும் கல்வியும் ஒன்றே, அதின்றி கல்வியே இருக்கமுடியாதென்பது; படித்தவன் தொழிலாளியைப்போல் வாழ்வது தன் கல்வியை அவமதிப்பதாகும் என்பது; ஆங்கிலம் படித்தவனே கல்விமான் என்பது முதலியன.

5. இக்கல்வி, தர்மத்தைப் புறக்கணிக்குமாறு மக்களைச் செய்துவிட்டது; பல தலைமுறைகளாக வளர்க்கப்பெற்ற தர்மம், அடக்கம் ஆகிய நல்லியல்புகளை அழித்திருக்கிறது.

6. உள்ளத் தூய்மைக்கு உதவும் முக்கிய சாதனங்களான கடவுள், குரு, பெரியோர் ஆகியோரிடம் பக்தி; நியாயமான வாழ்க்கை நடத்துவதில் உறுதி; அடக்கம், தவம், இரண்டிலும் பற்று ஆகிய எல்லாவற்றிலும் நவீனக்கல்வி, படித்தவர்கள் மனத்தில் சந்தேகத்தை எழுப்பி அவர்களை நாஸ்திகர்களாக்க முயன்றிருக்கிறது.

7. மேலே கூறியபடி கேடுறாமல் சிலர் தப்பியிருக்கிறார்களே

யென்றால், அது கல்வியினால் அல்ல, அத்தகைய கல்வி பெற்றும் வீட்டின் உயர்ந்த சூழ்நிலையின் உதவியாலேயே தப்பியிருக்கிறார்கள்.

8. இக்கல்வியைப் பெற்றவருக்கு போகத்திலும், பொருளிலும் பற்றுப் பெருக அவை குறைந்துவிடலாகாதென்ற பயத்தினால் தெளிவாய்த் தோன்றும் கடமையைச் செய்ய அவர்கள் ஆற்றலற்றிருக்கிறார்கள்.

3. தேசீயக்கல்வி

1. இந்தியாவின் 100-இல் 85 ஜனங்கள் எத்தகைய வாழ்க்கை நடத்தவேண்டி யிருக்கிறதென்பதைக் கண்முன் கொண்டு, இந்தியாவின் தேசீயக்கல்வித் திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

2. இந்தியாவில் 100-இல் 85 பேர் நேரிடையாகவோ, அல்லாமலோ, உழவைக்கொண்டு சீவிக்கிறார்கள். ஆகையால், அவர்களுக்காக ஏற்படும் கல்வித் திட்டங்கள், அவர்களைச் சிறந்த உழவராக்கவும் உழவை யொட்டி நடைபெறும் தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி யளிக்கவும் உகந்ததாக அமைய வேண்டும்.

3. கல்வியினால் சீவனத்திற்கு வழி யுண்டாக்கவேண்டும்; ஆகவே கைத்தொழிற் பயிற்சி, கல்வியின் முக்கிய அம்சமா யிருக்கவேண்டும்.

4. மக்களின் ஜீவனோபாயத்திற்கு ஏற்பாடு செய்யாமல், பண்பாடு என்றும், கடவுள் தத்துவம் என்றும் போதனை செய்ய முயலுதல் வீணாகும்.

5. இத்தகைய கல்வி வயல்களிடையே கிராமங்களில்தான் சாத்தியமாகும், கஸ்பாக்களிலும் நகரங்களிலும் அளிக்க வியலாது.

6. மேலும், எழுதப்படிக்கத் தெரியாமல், கல்வி பெற முடியாதெனில் இந்திய மக்களுக்குக் கல்வி அளிக்கப் பல ஆண்டுகள் ஆகும்.

7. எழுத்து - படிப்பு ஆகியவற்றை எதிர்க்காமலே, ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுதல் அவசியமாகும். அதாவது, அவை இன்றியே கல்வியளிக்க இயலும், அளிக்கவும்வேண்டும்.

8. எழுதப்படிக்கத் தெரியாமல், ஒருவன் எண்ணக் கற்க

லாம், தன் தொழிலைப்பற்றிய ஆரம்ப சாஸ்திரம் தெரிந்து கொள்ளலாம்; கேட்டு மனப்பாடம் செய்துகொள்ளலாம்; சக்தி யிருந்தால் நிர்மாணமும் செய்யலாம். இதைத் தவிர, அவனுக்குச் சத்தியத்தில் பற்றிருந்தால், கடவுளைப்பற்றிய அறிவும் பெறலாம்.

9. பல புத்தகங்களைப் புரட்டிய பிறகும், நமது படிப்பாளிகளின் அறிவுப்பொக்கிஷம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இந்தப் பொருளைப் பெறுவதற்காக லட்சக்கணக்கானவர்களிடம் எழுதப்படிக்கக் கற்கும் வீண் சிரமத்தை ஏற்கும்படிச் சொல்வதைவிட, தமக்குத் தெரிந்ததை அவர்களுக்குப் பேச்சின் மூலமாகச் சொன்னால் தாம் பல வருஷங்களில் கற்றதைச் சிறிது காலத்திலேயே மக்களுக்குக் கற்பித்துவிட முடியுமென்பதைக் காண்பார்கள்.

10. இதைத்தவிர இந்தியாவின் கல்விமுறை செலவின்றி நடைபெறுவதாயிருக்க வேண்டும்.

11. ஆகையால், சில வருஷங்களிலேயே இக்கல்வியைப் பூர்த்திசெய்யும் ஆசை கொள்ளலாகாது; தொழில் செய்து சீவனம் நடத்திக்கொண்டே, ஆயுள் முழுமையும் கல்வி பெற்றுக்கொண்டிருக்க வேண்டியதே.

12. இக்கல்வி, மிகக் குறைந்த அளவுக்கே புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கும். இதன் பொருள், புத்தகங்களே கூடாதென்பதல்ல; படிப்பதைவிட, கேள்வி, நோக்கு, செயல் ஆகியவற்றின் மூலமாக அதிகப் போதனை தரப்படவேண்டும் என்பதே.

4. தொழில் மூலம் கல்வி

1. கல்வி, எழுதுதல் - படித்தல் மூலமாக ஆரம்பிக்கப் படாமல், தொழிலின் மூலமாக நடைபெறவேண்டும்.

2. தொழிலும் அதன் மூலமாக சீவனம் நடைபெறக் கூடியதா யிருக்கவேண்டும்; அதனால் செய்யப்பெறும் பொருள் மக்களின் வாழ்வில் பயன்படுவதா யிருக்கவேண்டும்.

3. இத்தகையபொருளைத் தயாரிக்கச் செய்யும்பொழுதே, அதனுடன் தொடர்புள்ள இலக்கியம், கணிதம், விஞ்ஞானம், சித்திரக்கலை, சரித்திரம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களையும், தேவையான அளவு பிள்ளைகளுக்குப் போதித்துவிட வேண்டும்.

இவ்வாறு தொழிலை போதனைக்குரிய ஒரு விஷயமாக மட்டும் கருதாது சம்பூர்ணக்கல்வி அல்லது மனத்தின் வளர்ச்சிக்கு உதவும் ஆதாரபீடமாகக் கருதவேண்டும்.

4. இவ்வாறு தொழில் மூலமாகக் கல்வி யளிக்கும் பள்ளிக் கூடம் ஆசிரியர்களின் செலவை ஏற்க முடியாதிருக்கும்வரையில், அப்பள்ளிக்கூடமோ, அதன் மாணவர்களோ நன்கு முன்னேறி விட்டதாகக் கூறமுடியாது.

5. உழவும் உடையும் இந்தியாவின் இரு தேசீயத் தொழில் களாகும். ஆகையால் ஒவ்வொரு பள்ளியிலும் இவை யிரண்டின் ஆரம்பப் போதனை நடைபெறவேண்டும்.

6. இவை இரண்டின் ஆரம்பக்கல்வி யாவருக்கும் கட்டாய மாகப் போதிக்கவேண்டும். ஏனெனில், இவைகளால் சீவனம் நடத்தாதவர்களுக்கும் பூரணமான கல்வியின் பகுதி என்ற முறையில், இவை தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகும்.

7. தச்சு, கொல்லு, சாயவேலை ஆகிய தொழில்கள், உழவு, உடை ஆகிய தொழில்களின் உதவித் தொழில்களாகவும், அவற்றின் உதவியுடனும் நடைபெறுகின்றன. ஆகையால் ஒவ்வொரு உழவனுக்கும் நெசவுக்காரனுக்கும் இவைகளைப் பற்றிய சாதாரண அறிவு இருக்கவேண்டும்.

8. கரும்பு, அவுரி, என்ணெய் வித்துக்கள் ஆகியவற்றி னாலும் அக்கம்பக்கத்திலுள்ள காடுகளில் உள்ள மரம் செடிக ளாலும் பல தொழில்கள் நடைபெறலாம். அவைகளை ஆராய்ந்து அவ்வவ்விடங்களில் போதிக்கவேண்டும்.

5. சிறுவர் கல்வி

1. சிறுவர் கல்வியை எழுத்துப் போதனையிலிருந்து தொடங்காமல், அவர்களுக்குச் சுத்தமாயிருக்கப் போதிப்பதி லிருந்து தொடங்கவேண்டும்.

2. ஆசியர் (ஆசிரியை என்பது அதிகப் பொருத்த முடையது) குழந்தைக்கு ‘கக்கா, கிக்கீ’ கற்பிப்பதற்கு அவசரப் படாமல், தன் கை, கால், மூக்கு, கண், பல், நகம் முதலியவற் றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளக் கற்பிக்கட்டும்; குளிக்கவும், துணி துவைக்கவும், துண்டினால் மூக்கு முதலியவைகளைத் துடைக்கவும் கற்பிக்கட்டும்.

3. இதன் பிறகு குழந்தைகளின் கையில் தக்ளியையும்

ராட்டையையும் தந்து, நூற்றல்வரையிலுள்ள எல்லாக் கிரியைகளையும் பொறுமையுடன் சொல்லி அவைகளில் பழக்கட்டும்.

4. இதைத் தவிர, எழுதவும் படிக்கவும் தெரியும்வரையில் குழந்தைக்கு ஒன்றும் தெரியாமலும் வைத்திருக்க வேண்டாம். கதைகளினுல் சரித்திரம், பூகோளம், ஆகியவற்றின் விஷயங்களைப் போதிக்கவும்; கதைகள் - பாட்டுக்களினுல் மத அறிவு உண்டாக்கட்டும்; நேரில் காட்டி பொருள்களின் தன்மையையும், மரம் செடிகள், பூமி, ஆகாயம் ஆகியவைகளைப் பற்றியும் போதிக்கவும்; காணும் பொருள்களைக் கொண்டு கணிதப்பயிற்சி தொடங்கவும்; இவ்வாறு எழுதவும் படிக்கவும் தெரிவதற்குமுன் பிள்ளைக்கு முன்ருவது, நான்காவது பாடத்திலுள்ள விஷயங்களைக் கற்பித்துவிடுக.

5. இதைத் தவிர எழுதக் கற்பிப்பதற்குமுன் சித்திரங்களும் எழுத்துருவங்களும் அமைக்கப் போதிக்கவேண்டும்; தமது கருத்துக்களைச் சித்திரங்களின் மூலமாக வெளியிடப் போதிக்க வேண்டும்.

6. பல தோத்திரப் பாடல்களும் சுலோகங்களும் கவிதைகளும் மனப்பாடம் செய்வித்து, சுத்தமான உச்சரிப்பு வரச் செய்யவேண்டும். பல இலக்கியப் பகுதிகளையும் பாடம் செய்விக்க வேண்டும்.

7. பிறகு பார்வைக்கு அழகாகவும் படிப்பதற்குச் சுலபமாகவும் இருக்கும்படி எழுதக் கற்பிக்க வேண்டும். இவ்வாறு எழுதப் போதிப்பதில் காலந்தாழ்த்தியதால் நஷ்டமொன்றுமுண்டாகவில்லை யென்றும், பிள்ளையின் ஆற்றல் பெருகியேயிருக்கிறதென்றும் தெரியவரும்.

6. கிராமவாசிகளின் கல்வி

1. கிராமங்களில் வசிக்கும் வயதுசென்றவர்களும் எழுத்தறிவு பெற்ற பிறகே கல்வி கற்க முடியும் என்ற தவருன எண்ணத்தை மனத்திலிருந்து அகற்ற வேண்டியது அவசியம்.

2. ஆற்றலும் உத்ஸாகமும் உள்ளவர்களுக்கு எழுத்துக்களைக் கற்பிக்க முயலுதல் நல்லதே; அவர்களுக்கு ஊக்கமளித்து முழு வசதியும் அளிக்கவேண்டும்.

3. ஆனல் வயதான பிறகு பலருக்கு எழுதப் படிக்கக்

கற்பதில் ருசியுண்டாவது கடினம். ஆகையால் இத்தகையோர் முதியோருக்கான பள்ளிக்கூடங்களுக்கு வரவியலாமலே போய் விடலாகாது.

4. கிராமங்களில் உதவும் புத்தகங்கள் குறைவு. கிராமத்தாரின் புத்தகங்கள் வாங்கும் சக்தி அதிலும் குறைவே. ஆகையால் ஓரளவுக்கு எழுதப் படிக்க வந்துவிட்டால், தானகவே அறிவைப் பெருக்கிக்கொள்ளும் ஆற்றல் வந்து விடாதோ என்ருல், அவ்விதம் வருவதாய் அனுபவத்திலிருந்து தெரியவில்லை.

5. ஆகையால் படித்தவர்கள், பிறருக்குப் படித்துக் காட்டிப் போதித்து அவர்களுக்காக உபந்நியாசங்களுக்கு ஏற்பாடு செய்தால் கிராமங்களில் படித்தவர்களுக்குத் தமது அறிவைப் பெருக்கிக்கொள்ள உள்ள வசதி படியாதோருக்கும் ஏற்படும்.

6. எழுதப்படிக்கத் தெரிவதனுல் விஷயங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் பெருகுகிறதென்று கூறமுடியாது. கேள்வியினுல் அறிவாளியான கிராமவாசி பெற்றுள்ள ஞானம் படித்தவனுடையதைவிட அதிகமாயிருப்பதும் உண்டு.

7. அறிவின் உற்பத்திஸ்தானம் புத்தகமல்ல; காட்சியும் அனுபவமும் சிந்தனுசக்தியுமேயாகும். இதை மறந்துவிடுவதால் புத்தக அறிவுக்கு நாம் அதிகப்பெருமை யளிக்கிருேம்.

7. பெண் கல்வி

1. ஆணைப்போலவே பெண்ணுக்கும் கல்வி பெற முழு உரிமையுண்டு. ஆணுக்குக் கல்வி பெறுவதற்குள்ள வசதி பெண்ணுக்கும் இருத்தல் வேண்டும்.

2. ஆணைவிட, பெண்ணின் தரமும் உரிமைகளும் குறைவே என்ற பண்டைக் கருத்தைக் களைந்தெறிய வேண்டும்.

3. ஆணைப் போலவே பெண்ணும் கல்வி பெறுவதில் தடை கூடாது; ஆயினும் நூற்றில் 90 பெண்கள் தாய்மாராகிக் குடும்ப வாழ்க்கை நடத்தவேண்டியிருக்குமென்பதைக் கருத்தில் கொண்டு பெண் கல்வித் திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

4. அதாவது உழவோ, நெசவோ செய்யாத ஆணுக்கும், நூற்றில் 85 பேருடைய தொழிலின் ஆரம்ப அறிவு இருக்க வேண்டுமென்பது போலவே, தாயாகிக் குடும்பம் நடத்த

வேண்டியிராத பெண்ணும், தாய், குடும்பத் தலைவி ஆகியோருடைய வேலைகளைப் பற்றிய கல்வி பெறவேண்டியது அவசியமாகும்.

8. மத போதனை

1. கல்வியில் மதபோதனைக்கிடமில்லையானால், அதைக் கல்வியென்ற பெயருக்கு உரிமையுள்ளதாகவே கருதவியலாது.

2. ஒவ்வொரு சிறுவன்-சிறுமிக்கும், அவன் (அவள்) பிறந்துள்ள மதத்தின் முக்கியமான நூல்களையும் மகான்கள் சாதுக்கள் ஆகியோரையும், அதன் தத்துவங்களையும் குறித்துச் சிரத்தையுடன் போதிக்கவேண்டும்.

3. இங்கு மதம் என்று கூறும்பொழுது, வைதீகம், இஸ்லாமியம், கிறிஸ்தவம், யஹூதியம், பாரசீகம், சீக்கியம், ஜைனம், பௌத்தம் என்ற முக்கிய மதங்களையே கருதவேண்டும். அவைகளின் உட்பிரிவுகள், கிளைகள் ஆகியவைகளைச் சேர்த்தலாகாது. உட்பிரிவுகளுக்கும், கிளைகளுக்கும் அவற்றிற்கென அமைந்துள்ள ஸ்தாபனங்களே போதனை அளிக்க முடியும்.

4. சிறுவனுக்கு (சிறுமிக்கு)த் தன் மதத்தைத் தவிர மற்றப் பெரிய மதங்களைப் பற்றியும், வேற்றுமையுணர்ச்சியில்லாமல் பொதுவான அறிவு உண்டாக்க முயலவேண்டும்.

5. மனிதனுடைய உடலுக்கு உணவும், உழைப்பும், ஓய்வும் தேவையாயிருப்பதுபோல அவனுடைய உள்ளத்தின் வளர்ச்சிக்கு மதச் சார்பு இன்றியமையாததாகும். ஒவ்வொரு மதமும் இவ்வாதரவு அளிக்கும் ஆற்றல் வாய்ந்ததேயாகும்; ஆகையால், யாரும் மதத்தை மாற்றிக்கொள்ளத் தேவையில்லை. ஒவ்வொரு மதமும் மனிதனால் பரப்பப்பட்டதாகையால் அவைகளில் குறைகள் இருக்கும்; குறைகள் உண்டாகிக்கொண்டுமிருக்கும்; அவைகளை மீண்டு மீண்டும் தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஆயினும் எந்த மதமும் அறவே விலக்கத்தக்கதல்ல. மதப் பயிற்சியின் பயனாக இந்தப் பயன் விளைய வேண்டுமென்பதை நாம் கவனத்திலிறுத்த வேண்டும்.

6. வெவ்வேறு மனித சமுதாயங்களில் வேறு வேறு மதங்கள் உண்டானமையால், அவைகளின் சமூக அமைப்பும், விதிகள் - கொள்கைகளும், பழக்கவழக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுபவையாக உள்ளன. ஆனால் ஒவ்வொரு

மதத்திலும் கீழே கண்டவை பொதுவாகக் காணக்கிடைக்கின்றன :

7. சத்திய உருவினனை பரம்பொருளைத் தேடுதலும், அவனிடம் அடைக்கலமாகக் கருதுதலும் ; (2) நியாயத்திற்கொத்த அடக்கமான வாழ்க்கை ; (3) பிறருக்காகக் கஷ்டங்களைப் பொறுத்தலும் சுயநலத்தைவிடப் பிறரின் நன்மையை அதிகமாகக் கருதுதலும். இந்தத் தத்துவங்களை இடையருமல் மேன்மேலும் பெருத்த அளவில் அனுசரித்தலே தார்மிக வாழ்வை வளம்பெறச் செய்தலாகும். ஆகையால் மதக்கல்வி போதனையில் இப்பகுதிகளின் முக்கியத்துவத்தையுணர்த்தி புறத்தே தோன்றும் வேற்றுமைகளைப் பொருட்படுத்தாதிருக்கக் கற்பிக்கவேண்டும்.

9. போதனைக் கருவி

1. மிக மிக உயர்ந்த கல்விக்கும் சொந்த மொழியே போதனைக் கருவியாக இருக்கவேண்டும்.

2. ஆங்கிலத்தையொத்த பெரிதும் அந்நியமானதொரு பாஷையைப் போதனைக் கருவியாக்கியதால் கல்விக்காகப்பட்டதும் படப்படுவதுமான பாடு பெரும்பாலும் வீணாகிவிட்டது, வீணாகிக்கொண்டுமிருக்கிறது.

3. ஆங்கிலம் தெரியாவிட்டால் உயர்ந்த கல்வி பெற முடியாதென்ற நிலைமை பரிதாபமானது, வெட்கப்படத்தக்கது.

4. கல்வி வீட்டிலும், கிராமங்களிலும் பரவாததற்கு ஒரு காரணம் சொந்தப் பாஷையில் போதனையில்லாததாகும்.

5. ஆங்கிலத்தைப் போதனைக் கருவியாக்கியதால் நாட்டு பாஷைகள் வளம்பெறவில்லை ; படித்தவர்களின் தாய்பாஷைப் பற்றின் விளைவாக, ஆங்கிலத்தில் எண்ணியதை ஸம்ஸ்கிருதம் அல்லது பார்ஸியில் மொழிபெயர்த்துத் தாய்பாஷையின் விகுதிகளுடன் வழங்குவதில் முடிந்திருக்கிறது. இதனுல், இந்த இலக்கியத்தினுல் பொதுமக்களிடையே வெகுவாகப் பரவவோ அவர்களை இயக்கவோ முடியவில்லை.

6. அந்நிய பாஷையைப் போதனைக் கருவியாகக்கொண்டதால் உண்டான மற்றெரு தீங்கு, கற்றவர்களில் பலருக்கு சிந்தனையும் ஆங்கிலத்திலேயே யல்லாமல், சுய பாஷையில் செய்ய முடியாமை ; இது துக்கிக்கத்தக்க நிலையாகும்.

7. கூர்ஜர வித்யா பீடத்தையொத்த சிறிய ஸ்தாபனத்தில் குஜராத்தியைப் போதனைக் கருவியாக்கியதால், குஜராத்தி பாஷை எவ்வாறு வளம்பெற்றது என்பதற்கு அப்பாஷையின் சென்ற சிலவாண்டுகளின் சரித்திரம் அத்தாட்சியாகும்.

8. லோகமான்யர் மஹாராஷ்டிர பாஷையின் மூலமாகவே தமது மாகாணத்திற்குச் சேவை புரிந்ததால், அப்பாஷை யெய்திய வளம் இவ்விஷயத்தை வலியுறுத்துகிறது.

10. ஆங்கில பாஷை

1. ஆங்கில பாஷை தெரியாவிட்டால் கல்வி பூரணமாகா தென்ற தவறான கருத்தைக் கைவிடவேண்டும்.

2. ஆங்கில பாஷையின் பரந்த இயக்கத்திலிருந்து சிறந்த இரத்தினங்களைத் தேர்ந்து தம் தம் பாஷைகளில் சேர்த்தல் ஆங்கிலம் பயின்றோரின் கடமையாகும். இந்த இரத்தினங்களை அனுபவிப்பதற்காக இலட்சக் கணக்கானவர்களுக்கு ஆங்கிலம் படிக்கும் சிரமம் தருவது கருணையற்ற செயலாகும்.

3. தொழில் புரியும்பொழுது ஆங்கிலம் தேவையாயிருப் பது உண்மை; ஆனால் இத்தகைய தொழில்களை ஒரு சிலரே செய்ய நேருகிறது. மேலும், இவற்றில் பல காரணமின்றி யும், நமது அடிமைத்தனத்தினாலுமே ஆங்கிலத்தில் நடை பெறுகின்றன. சில ஆங்கிலேய அதிகாரிகளுக்கு நாட்டுப் பாஷைகளைக் கற்பதிலுள்ள சிரமம் இல்லாதிருப்பதற்காக மக்கள்மீது ஆங்கில பாஷைச் சுமையை ஏற்றுதல் என்பது, பிரிட்டிஷ் சர்க்காருக்கு நாடு செலுத்தும் ஒருவகைக் கப்பமே யாகும்.

4. ஆங்கிலத்தைக் கட்டாயமாக்கி பிரிட்டிஷ் ஆட்சி யானது, தன் அஸ்திவாரத்தை உறுதியாக்கிக் கொண்டது; பிற பாஷையை ஏற்கச் செய்து, மக்களின் உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் அடிமைப்படுத்திவிட்டது. ஆயுதங்களைப் பறித்ததால் மக்களுக்குண்டான தீமைக்குச் சமமானதும் ஓரளவு அதிகமானதுமான தீங்கு ஆங்கிலத்தைச் சுமத்தியதால் விளைந்திருக்கிறது.

5. ஆங்கில பாஷையில் பயிற்சி யில்லாவிடில் நாட்டின் முக்கிய வேலைகளில் கலக்கவியலாதென்று கருதி அதைக் கட்

டாயப் பாடமாகச் செய்திருப்பது, கல்வி, நீதி ஆகிய இரு சாஸ்திரங்களின்படியும் மிகவும் தீங்கு விளைவிப்பதாகும்.

6. ஐரோப்பாவின் வித்தைகளைக் கற்க ஐரோப்பாவின் பாஷை யொன்றைப் பயிலுதல் இன்றியமையாததென்று கருதினுல், அதற்கென இன்று செலவாகும் அளவு நேரமும் பொருளும் தேவையேயில்லை. இந்த பாஷையறிவு அந்த பாஷையைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு இருந்தால் போதுமானது. இன்றோ, ஆங்கிலம் வரைதல் உச்சரித்தல் ஆகியவைகளில் தேர்ச்சி பெறுவதற்காக ஏற்படும் பிரயாசை, அதற்குத் தாய் பாஷையைவிட அதிகச் சிறப்பளிப்பதா யிருக்கிறது. பல வாண்டுகளாக முயன்றபிறகும் பெரும்பாலோர் அரைகுறையாக ஆங்கிலம் பேசவும் எழுதவுமே ஆற்றல்பெறமுடிந்திருக்கிறது.

7. நாம் சொந்தப் பாஷையையோ பக்கத்திய மாகாண பாஷையையோ சுத்தமாகப் பேசி எழுதவியலவில்லை யென்ருல் வெட்கப்படுவதில்லை; ஆனுல் ஆங்கிலத்தில் பிழை செய்தால் நாணுகிருேம்; பிறர் செய்யக் கண்டால் கேலி செய்கிருேம்; இதிலிருந்து அந்தப் பாஷை நம்மை எந்த அளவுக்கு மயக்கியிருக்கிறது என்பது புலனுகிறது. உண்மையில் ஆங்கிலம் நமக்கு முற்றிலும் வேற்று பாஷையாகையால் அதை உச்சரிப்பதிலும் எழுதுவதிலும் நாம் பிழை செய்வோமானுல் ஆச்சரியமொன்றுமில்லை.

8. ஆனுல் இந்த மயக்கம் காரணமாக, கல்வி கற்கும் காலத்தில் செம்பாதி அல்லது பல வருஷங்களை இப்பாஷையில் நல்ல தேர்ச்சி பெறும்பொருட்டு வீணுக்குகிருேம். மாணவனின் உழைப்பு, நேரம் ஆகிய இரண்டின் பெரும்பகுதி இவ்வகையில் வீணுகிறது.

11. பாஷையறிவு

1. திருந்திய கல்வியில் சொந்தபாஷைக்கு முதல் இடம் இருக்கவேண்டும். சொந்த பாஷையில் சுத்தமாக எழுதவும் படிக்கவும் பேசவும் தெரியாமலிருக்கையில் ஆங்கிலத்தையொத்த வேற்று பாஷையைப் போதிக்கக்கூடாது.

2. சொந்த பாஷைக்கு அடுத்தாற்போல், பொது பாஷை அல்லது ஹிந்துஸ்தானிக்கு இரண்டாவது இடம் அளிக்கப்பட வேண்டும். இதைப்பற்றிப் பின்னர் மேலும் கூறப்படும்.

3. மூன்றுவது இடம் மூலபாஷைக்குக் கிடைத்தல் வேண்டும். மூலபாஷை ஹிந்து மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதமும், முஸ்லிம் மாணவர்களுக்கு பார்ஸி அல்லது அரபியும், பார்சி மாணவர்களுக்கு பஹல்வியுமாகும். சொந்த பாஷை சொந்த மதம் இரண்டுக்கும் ஆதாரம் இந்த மூலபாஷைகளாகையால் இவைகளைக் கற்ருல் மிகவும் நன்மையுண்டு; நல்ல கல்வியறிவுடையோர் இவைகளை நன்கு பயின்றிருக்க வேண்டும்.

4. பாஷைகளைக் கற்பதில் ஆற்றலும் ஆசையும் கொண்டவர்கள் இந்தியாவின் சில மாகாண பாஷைகளைக் கற்றல் வேண்டும். முக்கியமாக ஒன்றிரண்டு திராவிட பாஷைகளைக் கற்க முயலுதல் வேண்டும். வடமொழியினடியாகப் பிறந்த ஒன்றிரண்டு பாஷைகளையும் சேர்த்துக்கொள்ளல் நலம்.

5. கல்வி நோக்கோடு கருதினுல் ஆங்கிலம் இதற்கு அடுத்தாற்போல் இடம் பெறும். ஆனுல் அனுஷ்டானத்தில் அதற்கு அதிக மதிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், அதற்கு தாய் பாஷை, தேச பாஷை, மூலபாஷை ஆகியவைகளுக்கு அடுத்த இடமே கொடுக்கப்படவேண்டும்.

12. பொது பாஷை

1. ஹிந்தி, உருது ஆகிய இரண்டின் கதம்பமான ஹிந்துஸ்தானி—தில்லி, லக்நௌ, பிரயாகை முதலிய நகரங்களின் மக்களிடையே வழங்கும் பாஷை—பொது பாஷையாகும். தென்னிந்திய மக்களைத் தவிர மற்ற எல்லாரிடையிலும் இது பல நூற்றுண்டுகளாகச் சாதாரணமாக வழங்குவது.

2. கல்வியறிவுள்ள ஒவ்வொருவரும் இதைச் சுத்தமாகப் பேசவும் எழுதவும் படிக்கவும் அறியவேண்டும்.

3. இந்தப் பாஷை நாகரி உருது ஆகிய இரு எழுத்துக்களிலும் எழுதப்படுகிறது; இந்த இரண்டு எழுத்துக்களையும் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது விரும்பத்தக்கதாகும்.

4. மாகாண பாஷையின் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்காகப் பொது பாஷையைக் கற்கும் ஆலோசனை கூறப்படவில்லை. அது நாட்டின் பொது வாழ்விலேயே பயன்படுவதாகும். ஹிந்துஸ்தானிக்குப் பொது பாஷையின் பதவி புதிதாகக் கிடைத்ததல்ல. நடைமுறையில் உள்ளதை ஏற்றதேயாகும்.

13. சரித்திரம்

1. சரித்திரப் பாட போதனை தவறான நோக்கத்துடன் செய்யப்படுகிறது. ஆகையால் சரித்திரம் என்ற பெயரால் சொல்லிக் கொடுக்கப்படும் சம்பவங்கள் உண்மையாயிருந்த போதிலும், சமூகத்தின் சென்ற கால வரலாற்றைப்பற்றி அவை தவறான எண்ணங்களை உண்டாக்குகின்றன.

2. ராஜ வம்சங்களின் குழப்பங்களும், யுத்தங்களின் வர்ணனைகளும் நாட்டின் சரித்திரமாகாது; இந்தியாவைப் போன்ற நாட்டின் சரித்திரமாகவே முடியாது. இந்நாட்டின் உடலில் எப்பொழுதேனும் வெடித்தெழும் கொப்புளங்களின் வரலாறென்றே அவை கருதப்படும். தேச வாழ்வில் போர் தினசரி நடைபெறும் காரியமல்ல; விசேஷ சம்பவமேயாகும். அதன் தினசரி வாழ்விலோ, ஒத்துப்போதல், சகோதரபாவம், ஒருவர் மற்றவரின் பொருட்டுக் கஷ்டத்தை ஏற்றல், கூட்டுறவு ஆகியவையே காணப்படுகின்றன. அவற்றினால் விளையும் முன்னேற்றத்தைச் சரித்திரம் முக்கியமல்லாதது போலவே சித்திரிக்கிறது; ஆகவே சென்ற காலத்தைப்பற்றி ஐயத்திற் கிடமான வரலாற்றையே தருகிறது.

3. இந்த முறையில் சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்போமானால், அதனுடைய வரலாறுகளுள் ஹிம்சைமயமான பூசல்களைவிட அஹிம்சை மயமான சத்தியாக்ரஹமே அதிகமாகக் கையாளப்பட்டிருப்பது தெரியவரும்.

4. ஆனால் சரித்திரப் போதனையில் உள்ள குறை இது மட்டுமல்ல; தவறான எண்ணங்களைக் கருத்தில் ஊன்ற வைக்கும் நோக்கத்துடன் தற்காலத்தில் வேண்டுமென்றே சரித்திரம் திரித்துப் போதிக்கப்படுகிறது. ஆங்கிலேயர் வருவதற்கு முந்திய காலம் மிகவும் இழிந்ததென்று கூறி, ஆங்கிலேயரின் ஆட்சியைப்பற்றி மக்களை அறியாமை - மயக்கத்தில் உழல வைப்பதற்காகச் சிறு பிராயமுதலே முயற்சி செய்யப்படுகிறது. இதில் பொய் மட்டுமின்றி, மோசடியும் கலந்திருக்கிறது.

14. போதனைக்குரிய பிற விஷயங்கள்

1. சங்கீத போதனை இந்தியாவில் வெகுவாகக் கவனிக்கப் படவில்லை. சங்கீதம் உள்ளத்தின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப உதவக்கூடிய மாபெரும் சாதனமாகும்; இவ்வகையில் ஆன்மீக வளர்ச்சியில் தூய (சாத்துவிக) இசைக்கு முக்கிய இட முண்டு. குழந்தையின் இந்த இயற்கையான ஆற்றலைத் தூய முறையில் வளர்க்கவேண்டும்.

2. கட்டுப்பாடான அணிவகுப்பு முறையில்லாமையால் புலன்களை நடத்துவதிலும் சமூக வேலைகளிலும் ஒழுங்கின் மையும் சக்திகளின் வீண் விரயமும் குழப்பமும் கூப்பாடும் பல சமயங்களில் உயிர்-பொருளுக்கு நாசமும் உண்டாகின்றன. அணிவகுப்புப் பயிற்சியினால் எழுவதற்கும் நடப்பதற்கும் வேலை செய்வதற்கும் நான்கு பேர் கூடியதும் முறைப்படி வேலை செய்யத் தொடங்கவும் பழக்கமுண்டாகும். ஆகையால் அணி வகுப்புப் போதனையைப் பள்ளிகளில் விசேஷமாகக் கவனிக்க வேண்டும்; வயதானவர்களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்க வேண்டும்.

3. இந்தியாவில் ஆயுதம் தாங்கும் உரிமை நிர்ப்பந்தமாகப் பறிக்கப்பட்டிருக்கிறது; இந்திய மக்கள் தாமாக அதைச் செய்ய வில்லை. ஆயுதம் தாங்கவும், படைப் பயிற்சி பெறவும் மக்களுக்கு உரிமையுண்டு. ஆகையால் இந்தப் பயிற்சியும் கல்வியின் முக்கியமான பகுதியாகும்.

15. ஆசிரியன்

1. ஆசிரியனுடைய நடத்தை எப்படி யிருந்தாலும் சரி, அவன் தனக்குரிய விஷயத்தில் (பாடத்தில்) வல்லவனா யிருந் தால் போதுமென்ற எண்ணம் தவறாகும்.

2. தன் விஷயத்தில் மட்டும் வல்லவனாயிருந்தும் நல்ல நடத்தையில்லாத ஆசிரியனிடம் படித்த மாணவன் அந்த விஷயத்தில் நல்ல தேர்ச்சி யடைந்திருப்பதைக் காட்டிலும், குறைந்த வல்லமையிருந்தும் நன்னடத்தையுள்ள ஆசிரிய னிடம் ஒருவன் சிறிதே கற்றிருத்தல் ஆயிரம் மடங்கு அதிகப் பயன் உடைத்து.

3. தனக்குரிய விஷயத்தைப் போதிக்கும் பொறுப்பை

மட்டும் உணர்ந்து, மாணவனுடைய நடத்தையில் தனக்குள்ள பொறுப்பை உணராத ஆசிரியனை, ஆசிரியனென்றே கூற முடியாது.

4. தலை ஆசிரியன் மாணவனுக்குப் போதிப்பதை மட்டு மல்லாமல் அவனுடைய முழு வாழ்க்கையையும் கவனித்து அவ னுடைய உள்ளத்தில் புக முயற்சி செய்யவேண்டும்.

5. இத்தகைய ஆசிரியன் மாணவர்களுக்கு யமனைப்போல் அஞ்சத் தகுந்தவனுகக் காணப் படமாட்டான்; அவன் மரியா தைக்குரியவனுக இருந்துகொண்டே தாயினும் மிக்க அண்மையி லுள்ளவனுக இருப்பான்.

6. ஆசிரியன் எப்பொழுதும் தன் ஆற்றலை விருத்தி செய் வதற்கு முயற்சி செய்துகொண்டே யிருக்கவேண்டும். தனக் குரிய விஷயத்தைப்பற்றிய புதுப்புதுச் செய்திகளை யெல்லாம் கசடறக் கற்றபின்னரே போதனை செய்யவேண்டும்.

7. அதாவது, ஆசிரியன் மாணவர்களிலெல்லாம் தலை சிறந்த மாணவனைப்போல் உழைத்துக் கற்கவேண்டும்.

8. தன் விஷயத்தை முன்னமேயே நன்ருகப் படிக்காமல் போதனை செய்யும் ஆசிரியன் மாணவனுடைய விலைமதிக்க வொண்ணுத நேரத்தை வீணுக்குகிருன்.

9. ஆசிரியன் போதனைக்குரிய சிறந்த முறையை ஆராய்ந்துகொண்டே யிருக்கவேண்டும்; ஒவ்வொரு மாணவ னுடைய இயல்பையும் அறிந்து, ஒவ்வொருவனும் போதிக்கப் படும் விஷயத்தைப் புரிந்துகொள்வதில் ருசி கொள்வதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். மாணவர்களுக்கு உண் டாகும் சந்தேகங்களை அடக்காமல் அவ்வப்பொழுது போக்க வேண்டும்.

10. அடிப்பது, திட்டுவது, அலட்சியம் செய்வது வேறு வகையில் தண்டிப்பது ஆகியவற்றைச் செய்யாமல் ஆசிரியர் களைத் தடுக்கவேண்டும்.

11. தன் வேலையை நன்ருகச் செய்ய விரும்பும் ஆசிரியன் மிகவும் பெருத்த வகுப்புக்களை நடத்த முடியாதென்பது தெளிவு.

12. நூற்றுக் கணக்கான மாணவர்களைக் கொண்ட பாட சாலைகளும் விரும்பத் தக்கவை யல்ல.

16. மாணவன்

1. மாணவனுக்கு அழகு பணிவாய் இருத்தல் மட்டுமல்ல; பணிவில்லையானால் படிப்பே வருவதில்லை.

2. மாணவன் ஆசிரியரிடம் நம்பிக்கையும், பணிவும் ஸேவாபாவமும் கொண்டிருக்கவேண்டும்; ஆசிரியர் சொல்வதெல்லாம் தனது நன்மைக்கே என்ற நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

3. ஆசிரியர் இத்தகைய நம்பிக்கைக்குத் தகுதியற்றவர் என்பது நிச்சயமானவுடன் நம்பிக்கையை விடுவதற்கு பதிலாக ஆசிரியரையே விட்டு விலகவேண்டும்.

4. மாணவன் தன் சந்தேகங்களை ஆசிரியரிடம் தெரிவித்து, அவைகளுக்குச் சமாதானம் பெறவேண்டும்.

5. ஆசிரியருக்குத் தெரிந்தவைகளையெல்லாம் ஒரே நாளில் கற்றுக்கொண்டு விடவேண்டும் என்ற அதிக ஆசை மாணவனுக்கு இருக்கக்கூடாது. பணிவுடன் ஆசிரியருடைய மனசைத் திருப்தியடையச் செய்யும் மாணவனுக்குத் தமக்குத் தெரிந்தவைகளை யெல்லாம் போதிக்கவேண்டுமென்ற ஆவல், ஆசிரியருக்குத் தானாகவே உண்டாகும். ஆசிரியருக்கு இத்தகைய ஆவல் உண்டாகும்வரையில் மாணவன் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியதே.

6. ஆனால் ஆசிரியர் ஞானத்தைச் சொரியத் தொடங்கும் பொழுது மாணவர்கள் அசாக்கிரதையாய் இருந்து சந்தர்ப்பத்தை நழுவவிடலாகாது.

17. மாணவர் இல்லம்

1. மாணவர்கள் இல்லம் என்றால் மாணவர்கள் வசிப்பதற்கும் உண்பதற்கும் வசதியுள்ள இடம் என்பதுமட்டுமல்ல.

2. மாணவர் இல்லம் பள்ளிக்கூடத்தைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது தாய் தந்தையருள்ள வீட்டின் ஸ்தானத்தை ஏற்பதாக இருக்கவேண்டும்; அதுமட்டுமல்ல, தாய்தந்தையருள்ள வீட்டில் ஏற்படாத நல்ல பழக்கங்களையுண்டாக்கவும் அதனால் முடியவேண்டும்.

3. ஆகையால் மாணவர் இல்லத்தின் தலைவர் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் அல்லது வகுப்பின் ஆசிரியரை

விட அதிக யோக்கியதை உள்ளவராக இருக்கவேண்டும். அவர் ஆசிரியருக்குரிய குணங்கள் பொருந்தியவராக இருப்பதுடன், தாய் தந்தையரின் இயல்புகளும் பெற்றிருக்கவேண்டும்.

4. அவர் மாணவர்களுடைய ஒவ்வொரு செயலேயும் அவர்களுடைய சேர்க்கைகளேயும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

5. பையன்கள் கூடுகிற இடங்களில் தெரிந்தும் மறைமுகமாகவும் குற்றங்கள் பல நடந்துகொண்டே யிருக்கின்றன. தலேவர் இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

6. மாணவர் இல்லத்தில் உணவருந்தும்பொழுது பந்தி பேதம் கூடாது.

7. கூடியவரையில் மாணவர் இல்லத்தில் வேலேக்காரர்கள் அமர்த்தாதிருத்தல் நலம்; மாணவர்கள் தம் தம் வேலேயைத் தாமே செய்யவேண்டும்.

8. ஓர் எளிய நாட்டினுல் எவ்வளவு செலவு செய்யக் கூடுமோ அவ்வளவே இல்லத்தில் செலவாகவேண்டும்.

9. மாணவர்களுக்குத் தவருமல் மிட்டாய் வகைகள் அளித்துக்கொண்டே யிருக்கும் வழக்கம் சரியானதல்ல.

10. மாணவர் இல்லங்கள் எளிமை, சிக்கனம், நற்பழக்கங்கள் ஆகியவைகளுக்கு உதாரணங்களாக விளங்கவேண்டும். மாணவர் இல்லத்தில் வசித்ததால் ஒருவன் அதிக ஆடம்பரமும் செலவும் செய்வோனுகி, கட்டுக் கடங்காமல் வாழத் தொடங்கினுல் அந்த மாணவரில்லத்தினுல் பயனில்லேயென்றே சொல்ல வேண்டும்.

18. கல்வியின் செலவு

1. படிப்பினுல் அதிகச் செலவானுல் அந்தப் படிப்புச் சரியானவகையில் நடைபெறவில்லே யென்பது தெளிவு.

2. ஆசிரியர் மாணவர் ஆகிய இருவருடைய உணவு உடைகளின் செலவு, அவர்களுடைய வேலேகளின் கூலியிலிருந்தே கிடைக்கும்படியாகப் போதனே முறை அமைய வேண்டும். பள்ளிக்கூடக் கட்டடம், போதனேக்குரிய சாதனங்கள் ஆகியவைகளின் செலவுக்கே மக்களிடம் பணம் கேட்கும்படியிருக்கவேண்டும்.

3. இன்றே இது நடைபெற முடியாது; ஏனென்றால் ஆசிரியர் மாணவர் இருவருக்கும் உழைப்புக்கு வேண்டிய போதனையோ பழக்கமோ இன்னும் ஏற்படவில்லை; ஆனால் இந்த வகையில் முயற்சி செய்யவேண்டும் என்பதில் சந்தேக மில்லை.

4. குழந்தைகளுக்குத் தம் வீட்டிலேயே கிடைக்கவேண்டிய படிப்பைத் தரும் முயற்சியில் பள்ளிக்கூடங்கள் இறங்கலாகாது. ஆகையால், தாய் தந்தையர்களைச் சீலவான்களாகச் செய்வதால் படிப்புச் செலவு குறைந்துபோகும்.

5. இவ்வாறு ஆரம்பக் கல்வியின் பெரும்பகுதி வீட்டிலேயே அளிக்கப்படவேண்டும்.

19. முடிவு

[காந்தியடிகள் தம் "ஆச்ரம வரலாறு" என்ற நூலின் கல்வியைப் பற்றிய பகுதியில் முடிவுரையாகக் கூறியிருப்பவை களை இங்கே 'கூறியது கூறல்' என்ற குற்றத்தையும் பொருட் படுத்தாமல் தருதல் உசிதமென்று தோன்றுகிறது—ஆசிரியர்.]

கல்வி விஷயத்தில் என்கருத்துக்கள் கீழே கண்டவை:

ஆரம்பப் பருவம்

1. பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் சேர்த்தே கல்வி போதிக்கவேண்டும். 8-வயது வரையில் பிள்ளைப் பருவமென்று கருதவேண்டும்.

2. அவர்களுடைய நேரத்தின் பெரும் பகுதி உடல் உழைப் பில் கழியும்படி செய்யவேண்டும். உழைத்துச் செய்யும் அந்த வேலையும் ஆசிரியருடைய பார்வையிலேயே நடைபெற வேண் டும். உடல் உழைப்பு படிப்பின் ஒரு பகுதி என்று கருதப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு மாணவ மாணவியினுடைய மனப்போக் கைத் தெரிந்து அவரவருக்குத் தகுந்த வேலைதர வேண்டும்.

4. ஒவ்வொரு வேலையையும் செய்யச் சொல்லும்பொழுது, அதன் காரணத்தை அவர்களுக்கு விளக்கவேண்டும்.

5. குழந்தை விஷயங்களைப் புரிந்துகொள்ளும் வயதடைந்தது முதல் அவனுக்கு (அவளுக்கு)ப் பொது அறிவு உண்டாகச் செய்யவேண்டும். இந்தப் போதனையை எழுத்துக் கற்பிப்பதற்கு முன்னமேயே தொடங்கி விடவேண்டும்.

6. எழுத்தறிவைச் சித்திரக்கலையின் ஒரு பகுதியாகக் கருதி முதலில் குழந்தைக்கு ரேகைக் கணிதத்தின் உருவங்களை வரையக் கற்றுக்கொடுக்கவேண்டும். விரல்கள் வசமாகி எழுத வந்தவுடன் எழுத்துக்கள் வரையக் கற்பிக்கவேண்டும். அதாவது, ஆரம்பமுதலே சுத்தமாக எழுத்துக்களை எழுதக் கற்பிக்க வேண்டும்.

7. எழுதுவதற்கு முன் படிப்பதற்குப் போதிக்கவேண்டும். அதாவது, எழுத்துக்களைச் சித்திரங்களென்று கருதி அவற்றைத் தெரிந்துகொள்ளவும் பிறகு எழுதவும் கற்கட்டும்.

8. இவ்வாறு ஆசிரியரிடமிருந்து வாய்ப்பாடமாகவே படிக்கும் குழந்தைக்கு 8-வயதுக்குள் அதன் வயதைக் கவனிக்கும் பொழுது, மிகவும் அதிகமான கல்வி வந்திருக்கவேண்டும்.

9. குழந்தைக்கு நிர்ப்பந்தமாக ஒன்றும் கற்பிக்கலாகாது.

10. அவன் (அவள்) எதைக் கற்றாலும் ஆசையுடன் கற்பது இன்றியமையாதது.

11. குழந்தைக்குப் படிப்பு விளையாட்டைப்போல் இருக்க வேண்டும். விளையாட்டும் படிப்பினுடைய இன்றியமையாத அம்சமாகும்.

12. குழந்தைகளுடைய படிப்பெல்லாம் தாய்பாஷையிலேயே நடைபெறவேண்டும்.

13. குழந்தைகளுக்கு ஹிந்தி - உருதுவின் அறிவு ராஷ்டிர பாஷை என்றவகையில் அளிக்கப்படவேண்டும். இது எழுத்தைப் போதிப்பதற்கு முன்னமேயே ஆரம்பமாகவேண்டும்.

14. மதபோதனை இன்றியமையாததாகக் கருதப்பட வேண்டும். அது புஸ்தகத்தின் மூலமாகவல்ல, ஆசிரியருடைய நடத்தை, சொல் இவற்றிலிருந்து கிடைக்கவேண்டும்.

இரண்டாவது பருவம்

15. 9-லிருந்து 16-வயது வரையில் இரண்டாவது பருவமாகும்.

16. இரண்டாவது பருவத்திலும் இறுதிவரையில் பெண்

களுக்கும் பையன்களுக்கும் சேர்த்தே போதனை செய்தல் நலம்.

17. இரண்டாவது பருவத்தில் ஹிந்துப் பிள்ளைகளுக்கு ஸம்ஸ்கிருதமும், முஸ்லிம் பிள்ளைகளுக்கு அரபி பாஷையும் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

18. இந்தப் பருவத்திலும் உடலுழைப்பு நடைபெற வேண்டியதே. எழுத்தறிவு பெறுவதற்குள்ள நேரத்தை தேவையையொட்டி அதிகமாக்கவேண்டும்.

19. இந்தப் பருவத்தில், பையனுடைய பெற்றோருக்கு நிச்சயமான தொழில் ஒன்று இருக்குமானால், அதில் அவனைப் பயிற்றி அதன் மூலமாகவே சீவிக்க விரும்பும்படியாக அவனைத் தயாரிக்கவேண்டும். இந்த விதி பெண்களுக்கல்ல.

20. 16-வயதுக்குள்ளாக பிள்ளைகளுக்கு உலக சரித்திரம், பூகோளம், வனஸ்பதி சாஸ்திரம், வானசாஸ்திரம், கணிதம், ரேகா கணிதம், பீஜகணிதம் ஆகியவை பொதுவாகத் தெரிந்துவிடவேண்டும்.

21. 16-வயதான பிள்ளைகள் தையலும், சமையலும் கற்கவேண்டும்.

மூன்றாவது பருவம்

22. 16 முதல் 25 வயது வரையில் உள்ள பருவத்தை நான் மூன்றாவது பருவமென்று கருதுகிறேன். இந்தப் பருவத்தில் ஒவ்வொரு யுவனுக்கும் யுவதிக்கும் அவர்களுடைய விருப்பப்படிப் போதனை அளிக்கவேண்டும்.

23. 9-வயதிற்குப் பிறகு தொடங்கும் கல்வி, தன் செலவைத் தானே பூர்த்தி செய்வதாய் இருக்கவேண்டும். அதாவது கல்வி பெறும் மாணவன், பாடசாலையின் செலவுக்கு உதவக்கூடியதான ஏதேனும் ஒரு தொழிலிலும் ஈடுபடவேண்டும்.

24. பாடசாலையின் ஆரம்பம் முதலே வருமானம் இருக்க வேண்டியதே; ஆனால் முதல் வருஷத்தில் முழுச் செலவுக்கும் வேண்டிய வருமானம் இராது.

25. ஆசிரியர்களுக்குப் பெருத்த சம்பளங்கள் இருக்க முடியாது; ஆனால் வயிற்றுக்குப் போதுமான பணம் கிடைக்க வேண்டும். அவர்கள் ஊழிய மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்கவேண்டும். கிடைத்தவர்களையெல்லாம் கொண்டு ஆரம்பப் போதனை நடத்தச் செய்யும் வழக்கம் சரியல்ல. எல்லா ஆசிரியர்களும் நன்னடத்தை யுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

26. பாடசாலைக்குப் பெரிய விலையுள்ள கட்டடம் தேவையில்லை.

27. ஆங்கிலம் ஒரு பாஷையைப்போல் போதிக்கப்பட வேண்டும்; பாட திட்டத்தில் அதற்கு இடம் இருக்கவேண்டும். ஹிந்துஸ்தானி தேச பாஷையாக இருப்பதுபோல் ஆங்கிலம் வெளிநாட்டு வியவகாரங்களுக்கும் வியாபாரம் செய்வதற்கும் உபயோகமா யிருக்கும்.

பெண் கல்வி

28. பெண்களுக்குப் பிரத்தியேகமாக அளிக்கவேண்டிய கல்வி எப்படி இருக்கவேண்டும், எப்பொழுது முதல் அதைத் தொடங்கவேண்டும் என்பவைகளைப்பற்றி நான் வெகுவாகச் சிந்தித்தும் எழுதியும் இருந்தும், என் கருத்துக்களுக்கு என்னால் நிச்சயமான உருவம் அளிக்கப்படவில்லை; ஆனால் ஆண்களுக்கு உள்ள வசதிகள் பெண்களுக்கு இருக்கவேண்டு மென்பதும், விசேஷ வசதிகள் தேவையானபொழுது அவைகளும் கிடைக்க வேண்டுமென்பதும் என் உறுதியான கருத்துக்களாகும்.

முதியோர் கல்வி

29. அதிக வயதுள்ள எழுத்தறிவில்லாத ஆண் - பெண் பாலாருக்கு வகுப்புக்கள் நடத்தவேண்டியதே; ஆனால் அவர்களுக்கு எழுத்தைப் போதித்தே யாகவேண்டுமென்பதை நான் ஒப்பவில்லை. அவர்களுக்குப் பேச்சின் மூலமாகவே பொது அறிவுபெற வசதி அளிக்கவேண்டும்; எழுத்தைக் கற்க விரும்புவோருக்கு அதைக் கற்பிக்க முழு வசதி யிருக்க வேண்டும்.

XII இலக்கியமும் கலையும்

1. பொது விளக்கம்

1. இலக்கியமும் கலையும் சத்தியம், நன்மை, உபயோகம் என்ற உரை கல்லில் உரைக்கப்படும்பொழுது நல்ல மாற்றுள்ளவையா யிருக்கவேண்டும்.

2. இங்கே 'சத்தியம்' என்பதை அதன் விரிந்த பொருளில் கொள்ள வேண்டும். நிகழ்ச்சிகளின் உண்மைத் தன்மை என்ற பொருளிலல்ல, உண்மைத் தத்துவம் அல்லது உண்மை இலட்சியம் என்ற பொருளில் கொள்ளவேண்டும். உதாரணமாக, அரிச்சந்திரன், இராமன் ஆகியவர்களின் கதைகள் கற்பனைகளா யிருப்பினும் சரியே, இந்தக் கதைகளிலிருந்து எழும் தத்துவமும் இலட்சியமும் சத்தியமானதாயும் நன்மை பயப்பதாயும் உபயோகமானதாயும் இருப்பதால், இந்தக் கதைகளைத் தாங்கி நிற்கும் இலக்கியம் மேலே கூறிய உரைகல் பரீட்சையில் தேறிவிடுகிறது.

3. சம்பவங்களும் வர்ணனைகளும் நடந்தவையாய், உள்ளது உள்ளபடியே சித்திரிக்கப்பட்டிருந்தாலும் அவைகளைச் சரியான இலக்கியமென்றோ கலையென்றோ கூற முடியாது. பல சம்பவங்கள் உண்மையா யிருப்பினும், நன்மை யில்லாதவையாகவோ உபயோகமில்லாதவையாகவோ தீங்கு விளைவிப்பவையாகவோ இருக்கின்றன. அவைகளை நம்முன் நிறுத்தும் இலக்கியமும் கலையும் தீங்கு செய்பவையே; (உ-ம்.) ஒரு வேசியின் வீட்டின் வர்ணனை அல்லது சித்திரம்.

4. சத்தியம், நியாயம், தர்மம் ஆகியவை இறுதியில் வெற்றி பெற்றதாகக் கூறினும், அதற்குமுன் அசத்தியம், அநீதி, அதர்மம் ஆகியவை மிகவும் அருவருக்கத்தக்க முறையில் அடிக்கடி வர்ணிக்கப்படுவதால் மக்களின் இழிந்த செயல்கள் தூண்டப்படுகின்றன. இத்தகைய இலக்கியமும் கலையும் விலக்கத்தக்கவை யென்றே கருதப்படும்.

2. இலக்கியத்தின் நடை

1. வித்வான்களோ அல்லது பரம்பரையாகப் பயிற்சி பெற்றவர்களோ மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியவையாகப் பல இலக்கிய நூல்கள் இருக்கின்றன; ஆயினும் அவை சிறப்

புள்ளவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதை இலக்கியத்தின் சிறப்பென்று கருதாது குறையென்றே மதிக்கவேண்டும். விசேஷமான காரணம் இருந்தாலல்லது, சிறந்த இலக்கியம் இயற்றும்பொழுதும் பொதுமக்கள் புரிந்து கொள்ளக்கூடிய பாஷையைக் கையாளவே ஆசிரியர் முயலவேண்டும்.

2. இந்த விதிக்குள்ள விலக்குகளிற் சில கீழே தரப்படுகின்றன :

(அ) பாஷை சுலபமாகவும் தெளிவாகவும் இருந்தும், விஷயம் புதிதாயும் வழக்கத்தில் இல்லாததாயும் கஷ்டமானதாயும் ஆழ்ந்த கருத்துக்களுள்ளதாயும் இருந்து, பிறர் உதவியின்றிப் பொதுமக்களால் புரிந்துகொள்ளக் கூடாததா யிருக்கலாம். உதாரணமாக, கீதையின் நடை சாதாரண ஸம்ஸ்கிருதப் பயிற்சியுள்ள மனிதனுக்கும் புரியக்கூடிய பாஷையிலிருந்தாலும், ஸம்ஸ்கிருதம் தெரிந்திருந்தும் சாதாரண மனிதன் அதன் கருத்தை அறிந்துகொள்ள முடியாமல் வித்வான்களுடைய விருத்தியுரைகளின் உதவியை நாடவேண்டி யிருக்கிறது. இதற்குக் காரணம், அதன் விஷயம் கஷ்டமாயும் கருத்துக்கள் கம்பீரமாயும் இருப்பதால் வெறும் பாஷையறிவினால் அதைப் புரிந்துகொள்ள முடிவதில்லை.

(ஆ) இதைப் போலவே, தர்க்கம், சட்டம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களைப் பற்றிய நூல்களில் அந்தந்த சாஸ்திரத்தின் கலைச்சொற்கள் விரவி யிருப்பதால் பொதுமக்கள் புரிந்துகொள்ளக்கூட வில்லையானால் அது அந்நூல்களுக்குக் குறையென்று கருதப்படமாட்டாது.

(இ) பொழுது போக்குக்காகக் கட்டப்படும் புதிர்கள், விடுகதைகள், கபீர்தாஸர், திருமூலர் (சித்தர்களின்) 'ரகசிய'ப் பாட்டுக்கள், தலைகிழான வசனங்கள் ஆகியவைகளின் பொருள், பெரும்பாலும் பரம்பரையிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது. இத்தகைய இலக்கியம் சிறிய அளவில் அறிவு தருவதாய் குற்றமற்றதாய் இருந்தால் அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

(ஈ) முதலிரண்டு விலக்குகளுள் அடங்கிய பகுதிகளைச் சேர்ந்தவைகளைச் சாதாரண மக்களுக்குப் புரியும் நடையில் விளக்கி வெளியிடுவது அவைகளில் பயிற்சி யுள்ளவர்களது கடமை.

3. மொழி பெயர்ப்பு

1. இதர பாஷைகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தம் பாஷைக்காரர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதும் இலக்கியத்தின் ஒரு உபயோகமுள்ள பகுதியாகும்.

2. நல்ல மொழி பெயர்ப்பில் கீழே காணும் நல்ல அம்சங்கள் இருக்கவேண்டும்.

(அ) சொந்த பாஷையிலேயே சிந்தித்து எழுதப்பட்டது போல், அது தெளிந்த இலகுவான பாஷையில் அமைந்திருக்க வேண்டும்; மூல பாஷையின் வழக்குகளையும் சொற்களையும் அறியாதவர்கள் புரிந்துகொள்ள முடியாததா யிருக்கக்கூடாது.

(ஆ) பிரயோக வழக்கு, சொற்றொடர் முதலியவைகளையும் மொழி பெயர்ப்பில் சேர்க்கவேண்டி வந்தாலும், மூலத்தின் சொல்லின் பொருளை விளக்குவதற்காகப் புதிய சொல் புனைய வேண்டி யிருந்தாலும், தமது பாஷைக்காரர்களுக்குப் புதிதான உதாரணங்கள், உருவகங்கள் அல்லது புராணக் கதைகளைக் குறிப்பிட நேர்ந்தாலும், அவைகளை விளக்கும் குறிப்புகளும் தரவேண்டும்.

(இ) மொழி பெயர்த்தவர் மூலநூலை ஆழ்ந்து படித்து அதைத் தனதாகவே செய்துகொண்டு சொந்த பாஷையில் மீண்டுமெழுதி யிருப்பதாய் தோன்றும்படியாக நூலை அமைக்க வேண்டும்.

(ஈ) மூல நூலிலுள்ள எந்தச் சிறப்பியல்புகளினால் அது புகழடைந்து தலைசிறந்ததாகக் கருதப்பட்டிருக்கிறதோ, அவை மொழி பெயர்ப்பில் இடம் பெறவில்லையானால், அந்த மொழி பெயர்ப்பு கீழ்த்தரத்தைச் சேர்ந்ததாகவே கருதப்படும்.

(உ) மூலநூலுக்குப் பதிலாக அதை ஆதாரமாகக் காட்டக் கூடிய அளவுக்கு மொழிபெயர்ப்பு நம்பகமானதாய் இருக்க வேண்டும்.

3. இதனால், சொந்தமாக எழுதுவதைவிட மொழி பெயர்ப்புச் செய்வது எப்பொழுதும் சுலபமானதல்ல. மூல நூலாசிரியருடன் முற்றிலும் கருத்தொருமையடையாமலும் ஒரே நோக்கில்லாமலும் அவருடைய உள்ளக்கிடக்கையை அறிய முடியாமலும் உள்ளவரையில், அவருடைய நூலை ஒருவர் மொழி பெயர்க்கக்கூடாது.

4. மொழிபெயர்க்கும்பொழுது பல்வேறு வகையில் பகுத்தறிவை உபயோகிக்க வேண்டியிருக்கும். சில நூல்களில் ஒரு எழுத்தைக்கூட விடாமல் மொழிபெயர்த்தல் இன்றியமையாததென கருதப்படலாம்; சிலவற்றின் சாரச்சுருக்கமே போதுமென்று கருதப்படும்; சிலவற்றையோ, தமது சமூகத்தினருக்குப் புரியும்படியான போர்வையில் தயாரிக்கவேண்டும்; வேறு பல நூல்கள் அந்தந்த பாஷைகளில் சிறப்புடன் விளங்கியபோதிலும், நமது சமூகம் முற்றிலும் வேறுபட்டிருப்பதால், நம் பாஷைகளில் அவற்றின் மொழிபெயர்ப்புக்குத் தேவையில்லாதிருக்கலாம்; சில நூல்களுக்கோ, ஒவ்வொரு எழுத்தையும் மொழிபெயர்த்த பிறகும், சாரச் சுருக்கமும் தேவையென்று கருதப்படலாம்.

4. எழுத்திலக்கணம்*

1. எழுத்திலக்கணம் இப்பொழுதுள்ள நிலையில் அதில் அராஜகம் தாண்டவமாடுகிறதென்று சொல்லவேண்டும்; இது சரியல்ல.

2. பாஷை முன்னேற்றம் அடைவதையொட்டி எழுத்து, சொல் முதலிய பகுதிகளடங்கிய அதன் இலக்கணத்திலும் சில மாறுதல்கள் உண்டாவதை நாம் புரிந்துகொள்ள முடியும்; ஆயினும் பொதுவாக வழங்கும் சொற்களின் இலக்கணம் வரையறுக்கப்பட்டுவிடவேண்டும்.

3. ஒரு சில சொற்களின் உருவத்தைப்பற்றி ஒவ்வொரு பாஷையிலும் வித்துவான்களிடையே அபிப்பிராயபேதம் இருக்கலாம். ஆனால் சாதாரண வழக்கிலுள்ள சொற்களுக்கு ஒரே வகை உருவத்தை ஏற்கும்படி வித்துவான்கள் மக்களுக்கு ஆலோசனை கூறவேண்டும்.

4. அத்தகைய ஆலோசனை அளிக்கும்பொழுது, வழக்கையும் எழுதுவதிலும் அச்சிடுவதிலும் உள்ள சௌகரியத்தையும், உச்சரிப்பு விதிகளையும், உற்பத்தியையும் கவனத்தில் கொண்டு எங்கெங்கே எது முக்கியம் என்பதைக் கவனிப்பதும் அவசியமாகும். பொது மக்கள் எழுத்தின் சிக்கலில் அகப்பட்டு வருந்தாதவகை செய்வதே நோக்கமாக இருக்கவேண்டும்.

* இது குஜராத்தி பாஷையைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டது.

5. செய்திப் பத்திரிகை

1. தினசரி, வார, மாதப்பத்திரிகைகளும், இலக்கியப்பணியின் பகுதிகளே; அவை பொது மக்களுக்கு அறிவு புகட்டுவதற்கு உதவும் பெரிய சாதனங்களாகும்.

2. ஆனால் இந்தச் சாதனம் வெகுவாகத் தவறான வகையில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்கு உண்மைச் செய்திகளையும் நல்ல ஆலோசனைகளையும் அளிப்பதற்கு பதிலாக, வேண்டுமென்றே முழுப்பொய் - அரைப் பொய்யையோ, அரை குறைச் செய்தியையோ வெளியிட்டும், உண்மையை பிழையான நோக்குடன் பிரசுரித்தும், அவர்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்லும் வேலை பத்திரிகைகளின் மூலமாகத் திட்டப்படி நடைபெறுகிறது.

3. விளம்பரங்களின் மூலமாகப் பணம் சேர்க்கும் ஆசையினால் இவை பலவகையான பொய்களையும் அநியாயங்களையும் பரப்பும் சாதனங்களாகிக் கொண்டிருக்கின்றன.

4. ஒரு மனிதனுக்கு படிப்பில் ஆசையும் ஒய்வும் இருந்தும், வம்பளந்து கொண்டிருந்து பொழுதை விரைவில் கழிப்பதற்குத் தோழரில்லாமையால் அவனது மனம் அலுத்திருக்குமானால் அவனை அப்படியே இருக்கச் செய்வதால் நஷ்டமில்லை; சிறிதுநேரம் வாளாயிருந்தபின் அவன் ஏதேனும் ஒரு வேலையில் இறங்கிவிடுவான். ஆனால் ஓய்வுநேரத்தைக் கழிப்பதற்கென்றே வெளிவரும் வார அல்லது மாதப்பத்திரிகையையோ, கதைப் புத்தகத்தையோ வைத்துக்கொண்டு உட்காருவானானால், அதனால் அவன் அடையும் மகிழ்ச்சி சிறிதே யாகும்; அதிக நேரம் வீண் வம்பிற்கு பதிலாக சோம்பலில் கழியும்; அவன் தன் மனசை இழிவான எண்ணங்களினால் அலைக்கழித்து துர்ப் பழக்கங்களால் வளர்ப்பான். வார, மாசப் பத்திரிகைகளாலும் நாவல்களினாலும் பல சிறுவர் சிறுமிகள் துர்ப்பழக்க முள்ளவராகி தீயவழியில் சென்றிருப்பது தெரிந்ததே. இத்தகைய பிரசுரங்களைத் தீக்கிரையாகத் தக்கவையென்றே கருதவேண்டும்.

5. தன்னுடையதோ, பிறரிடமிருந்து தனக்குக்கிடைத்ததோ ஆன உண்மையும் நன்மை பயப்பதும் உபயோகமானதுமான செய்தியை வெளியிட வேண்டுமென்ற உறுதியுள்ளவனே

பத்திரிகை அல்லது எழுத்துத் தொழிலில் இறங்க வேண்டும். அவன் சத்தியத்தில் உறுதியுள்ளவனுயிருந்து கொண்டு, தனக்கு விரோதமாக வரும் உண்மைச் செய்திகளையும் புகார்களையும் பிரசுரிப்பதுடன், தன் தவறுகளைத் தூயமனத்துடன் ஒப்புக் கொள்ளவேண்டும். விளம்பரங்களின் மூலமாகத் தன் செலவை ஈடுசெய்யும் ஆசை அவனுக்கு இருக்கக் கூடாது. தனது உபயோகத்தை நிலைநிறுத்தி, மக்கள் தன்னிடம் கொண்டுள்ள அன்பிலிருந்தே தனக்கு ஆகும் செலவை எடுக்கமுடியவேண்டும். இதன்பொருட்டு அவன் ஒரு சிலரின் தேவைகளை மட்டில் ஆராய்வதைவிட்டு, பொதுமக்கள் யாவருடைய தேவைகளையும் நிலைமையையும் எடுத்துரைப்பவனுக இருக்கவேண்டும்.

௬. கலை

1. இயற்கையின் வனப்பின்முன், மனிதனுல் அமைக்கப் பட்ட எந்தக் கலையின் அழகும் மதிப்பற்றதே. வானம், பூமி இவ் விரண்டின் அழகு ரூபகலாரசிகனுக்கு ஆனந்தமளிப்பதற்குப் போதுமானது. அந்தக் கலையின் இன்பத்தை அனுபவிக்கமுடி யாத ஒருவன் மனிதனுல் அமைக்கப்பட்ட கலையின் ரசிகன் என்று கருதப்பட்டால், அவன் மயக்கும் காட்சிகளைக் கலை யென்று கருதுகிறவனுகவே இருப்பான்; உண்மைக் கலையை அவன் உணர்ந்தவனே அல்ல.

2. உண்மை இலக்கியத்தைப்போல், உண்மைக்கலையும் கருத்துக்களை வெளியிட உதவும் கருவியாகும்; இலக்கியத்தின் நடையைப்பற்றிக் கூறப்பட்ட விஷயங்கள் ஓரளவு கலைக்கும் பொருந்தும்.

3. கலைக்கு நியாயம், நன்மை, உபயோகம் ஆகியவைக ளுடன் சம்பந்தமில்லையென்றும், அழகுடனேயே அதற்குத் தொடர்புண்டு என்றும் சொல்வது அழகையும் கலையையும் அறியாமையைக் குறிக்கும். சத்தியமே தலைசிறந்த கலையும் உயர்ந்த அழகும் ஆகும்; அது நியாயம், நன்மை, உபயோகம் ஆகியவை யில்லாதிருக்க முடியாது.

4. ஆகையால், மனிதவாழ்க்கையின் உபயோகமான சாத னங்களில் கலைக்கு இடமிருக்கவேண்டும். கலையின் சேர்க்கை யால் அப்பொருள்கள் அழகு பொருந்தி விளங்குவதுடன் நன்கு உபயோகப்படுபவையாகவும் இருக்கவேண்டும்.

5. எந்தக் கலையின் காரணமாக பிராணிகளிடம் அநீதி புரியப்பட்டும் அவைகள் ஹிம்சைக்கும் கொடுமைக்கும் உள்ளாக்கப்பட்டும் வருகின்றனவோ, அதில் வெளியழகு எவ்வளவு தானிருந்தபோதிலும் அது கலையாகாது, கலிபுருஷன் அல்லது சைத்தானுடைய வேறு உருவமே யாகும்.

6. எந்தக்கலை மனிதனுடைய தீய இச்சைகளைத்தூண்டி, போக ஆசையைப் பெருக்குகிறதோ, அது அசுத்தமான இலக்கியத்தின் வகுப்பிலேயே சேர்க்கப்படும்.

XIII பொது ஜன ஊழியர்

1. பொது ஜன ஊழியரின் இலட்சணம்

1. நிர்வாகத்திற்கு ஏதேனும் தொழில் செய்யவேண்டுமே என்ற எண்ணத்தினுல் அல்லாமல், மக்களுக்கு ஊழியம் புரிவதில் உள்ள ஆசையினுலேயே ஊழியம் செய்பவர் பொது ஜன ஊழியர் என்று மதிக்கப்படுவார்.

2. தம் நேரம் முழுவதையும் ஜன ஊழியத்தில் கழிப்பதால் அவ்வேலைக்கென அமைந்துள்ள ஸ்தாபனத்திலிருந்து தன் சீவனத்திற்கு ஏதேனும் பெற்றுக் கொள்வதில் குற்றமொன்று மில்லை; சரியாக வேலைகள் நடைபெறும் பொருட்டு இத்தகைய ஊழியர் தேவையாகவே இருக்கிறது.

3. ஆனுல் ஜன ஊழியருடைய ஊதிய நிர்ணயத்தின் கொள்கைகள், பிற ஊழியர்களுடையவைகளிலிருந்து வேருக இருக்க வேண்டும். அவர் தம் பொருளாதார நிலையை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு இவ்வேலையில் இறங்கவில்லை; ஆகையால் ஆனவரையில் அவருக்குத் தம் ஊதியம் பெருக வேண்டுமென்ற ஆசையோ, தன் மீது பிறரை ஆதரிக்கும் பொறுப்பு அதிகமாக வேண்டுமென்ற எண்ணமோ கூடாது. இதைத் தவிர, அவர் நேரிடையானவையும் பிற்காலத்தைப் பற்றியவையுமான சில ஆசைகளை விட்டு விட வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படலாம். சேர்த்துவைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர் தம் ஊதியத்தைத் தீர்மானிக்காமல், நெருக்கடியான காலத்தில் கடவுள் கைவிட மாட்டார் என்ற நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

4. தாம் தியாகம் செய்திருப்பதாகவோ, பொது ஜன ஊழியத்தை வாழ்வின் வேலையாகக் கொண்டிருப்பதாகவோ, செருக்குக் கொண்டிருப்பவர் ஜன ஊழியராயிருந்தும் தம் இழிந்த மனப்பான்மையைப் புலப்படுத்துகிறுர்.

5. ஜன ஊழியர் அடக்கத்தின் எல்லையைப் பிடித்து விட வேண்டும், 'பூச்சிய'மாகி வாழவேண்டும். அவர் மற்ற ஊழியர் களையும், ஊழியத்திற்குப் போக எஞ்சிய நேரத்தில் ஜன ஊழியம் செய்வோரையும் விடத் தம்மைச் சிறந்தவராக நினைக்கவோ, அவர்களைக் காட்டிலும் உயர்ந்த தரம் பெறவோ முயலலாகாது.

6. எவரும் புகழ், அதிகாரம் முதலிய தமது சுயநலத்தி லுதித்த பேராசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஜன ஊழியத்தில் இறங்கக்கூடாது. மதப் பரிபாஷையில் கூறினல், ஜன ஊழியமே ஈச்வர உபாசனை யென்ற உறுதியினுலோ, சாதாரணப் பேச்சில் சொன்னல், நமது தேச மக்களை அவர் களின் நன்மைக்கான மார்க்கத்தில் அழைத்தேகும் ஆசையி னுலோ ஈடுபட வேண்டும்.

7. ஆகையால் ஜன ஊழியர் தமது இனிமையினுலும் அடக்கத்தினுலும் மக்களின் மரியாதையையும் தோழர்களின் அன்பையும் பெறுவார்; தாம் பணி புரியுமிடத்தில் கிடைக்கும் வெற்றியின் சிறப்பைத் தம் தோழர்களுக்கு அளித்து, தாமே செய்த ஊழியத்தின் காரணமாக அவர்களுடைய அன்பைப் பெறுவார்.

8. சுயநலமின்மையும் அடக்கமும் உண்மையும் நன்னடத் தையுமுள்ள ஜன ஊழியர் செல்வாக்கில்லாதிருப்பதைக் கண்ட தில்லை; இதற்கு மாருக, நம்பிக்கைக்குப் பாத்திரமான ஜன ஊழியர், தாம் பணியாற்றுமிடத்தில் அநேகமாக ஒரு சர்வாதி காரி ஆகி விடுவதும், அவர் சொல்வதே சட்டமென்று மக்கள் நம்பிச் செய்வதுமே அனுபவமாகும். அவரிடம் யாரும் பொருமையோ அதிருப்தியோ கொள்வதில்லை; யாருக்கும் அவரால் கஷ்டமுண்டாவதாகவும் தெரிவதில்லை.

9. பொதுமக்கள், தோழர்கள், தலைவர்கள், தொண்டர் படைக்குப் புறத்துள்ள ஊழியர்கள் ஆகியோர் நன்றியில்லா தவர்களாகவோ, வேலையில் இடையூறு விளைவிப்பவர்களாகவோ, எந்த ஜன ஊழியருக்காவது அடிக்கடி தோன்றினல், அவரிடத் திலேயே ஏதோ பெரிய குறை யிருக்கிறதென்று அவர் உறுதி யாகக் கொள்ளட்டும்; ஏனெனில், சாதாரணமாக நன்றியுள்ள

வர்களா யிருப்பதுடன் ஜன ஊழியருக்குத் தாராளமாக மரியாதை செய்வதும் மக்களின் வழக்கமென்பது அனுபவ மாகும்.

10. ஜன ஊழியரிடம் கீழே காணும் குணங்கள் இருக்க வேண்டும் :

(அ) அவர் மதப்பற்றுள்ளவராக இருக்க வேண்டும். அதாவது, அவருக்குச் சத்தியாக்ரஹம், நற்செயல், நற்சொல், நன்னடத்தை ஆகியவைகளில் பூரண உறுதி யிருக்க வேண்டும். அதற்காக அவருக்கு ஊக்கமும், தவறு செய்தபொழுது அதைக் குறித்து வருத்தமும், இறுதியில் தமக்கும் மக்களுக்கும் நன்மையுண்டென்ற உறுதியும் வேண்டும்.

(ஆ) பெண்கள் அச்சமில்லாமல் அவரை அணுகும்படி யாகவும், பெண்களிடம் அவரைச் செல்ல அனுமதிப்பதில் யாருக்கும் சம்சயம் உண்டாகாதவாறும் அவருடைய நடத்தை தூயதாயிருக்க வேண்டும்.

(இ) அவருடைய பண வியவஹாரங்கள் முழுதும் தூயவை யாயிருக்க வேண்டும். பலர் பெருத்த தொகைகளின் விஷ யத்தில் நாணயமுள்ளவர்களாயும், சிறிய தொகையில் அப்படி யில்லாமலும் இருக்கிறுர்கள். வேறு பலர் சிறிய தொகை களுக்குப் பைசாவிடாமல் கணக்குக் கொடுத்தாலும், பெரிய தொகைகளில் ‘கோல்மால்’ செய்கிறுர்கள். ஜன ஊழியர் இந்த இருவகைகளிலும் சேராமல், தம் மூலமாக வரும் ஒவ்வொரு பைசாவுக்கும் சரியான கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

(ஈ) அவர் இடைவிடாது உழைப்பவரா யிருக்கவேண்டும். எவர் வீண் வம்புகளிலும், பயனில்லாத பேச்சுக்களிலும் யாரை யேனும் புகழ்தல் - நிந்தித்தலிலும் தன் பொழுதைக் கழிக் கிருரோ, அவர் மதிப்புப் பெறவே முடியாது. மக்களின் மனத் தைக் கவரும்படியாக அவருடைய உழைப்பு இருக்க வேண்டும்.

(உ) அவருக்கு மணிப்படிக் காரியம் செய்யும் பழக்கம் அவசியம் இருக்க வேண்டும்; எந்த வேலைக்கு எந்த நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதை அதில் தவருது செய்ய வேண்டும்.

(ஊ) இதன் பொருள், அவர் எப்பொழுதும் விதிகளைத் தவருமல் அனுசரித்து வர வேண்டு மென்பதாயிற்று. விடிந்தது முதல் இரவுவரையில் அவருடைய வேலைகள் கடியாரத்தின்

முள்ளைப்போல் முறைப்படி நடந்து கொண்டேயிருக்க வேண்டும்.

(எ) இதைத் தவிர தமது ஸ்தாபனத்தின் கொள்கைகளையும், விதிகளையும் ஊக்கத்துடன் அனுசரிப்பவராயும் தம் தலைவரின் கட்டளைகளைச் சரிவர நிறைவேற்றுபவராயும் இருக்க வேண்டும். கட்டளைகளை நிறைவேற்றத் தெரியாதவர், அவற்றை நிறைவேற்றச் செய்வதற்குரிய ஆற்றலை என்றும் பெற முடியாது.

(ஏ) ஜன ஊழியர் தம் உடல், குடும்பம் ஆகியவற்றின் பொறுப்பைக் கடவுளிடம் ஒப்புவித்து விட்டு அச்சமின்றி வாழ வேண்டும். ஜன ஊழியத்திற்காகத் தன் பொருள், உயிர், குடும்பம், வசதிகள், சுதந்திரம், ஆகியவைகளைத் தியாகம் செய்யும் முதல் பொறுப்பைத் தலையால் ஏற்க வேண்டும்; மேலும், அவசியம் ஏற்படும் பொழுது ஆபத்தைப் பொருட்படுத்தாமல் மக்களின் ஊழியத்தில் இறங்க வேண்டும்.

(ஐ) ஜன ஊழியர், தாம் மிகவும் சுத்தமாயிருக்க வேண்டியதே; ஆயினும் அசுத்தமானவர்களை நெருங்குவதிலும் அசுத்தத்தை அகற்றும் பணி புரிவதிலும் அருவருப்புக் கொள்ளலாகாது.

(ஒ) அவருக்குத் தினசரியைக் குறிப்பு எழுதிவரும் பழக்கம் இருக்க வேண்டும்; தினமும் தாம் செய்யும் வேலைகளை அப்படியே குறித்து வரவேண்டும்.

(ஓ) விழித்ததும் கடவுளை நினைந்து, இரவில் நாள் முழுவதும் செய்தவைகளை ஆராய்ந்து பார்த்தபின் கடவுளை நினைத்தபடியே துயில்கொள்ளும் ஜன ஊழியர், ஊழியம் செய்யச் செய்ய மேன்மையுறுவது திண்ணம்.

(ஔ) இத்தகைய ஊழியர், சிந்தனையின் பயனாகத் தாம் பிரம்மசாரியாக இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருவார்; இந்த உறுதியுண்டானது முதல் இதற்கான முயற்சியைச் செய்வார்.

2. கிராம ஊழியரின் கடமைகள்

1. கிராம ஊழியரின் முதல் வேலை, கிராமவாசிகளுக்குச் சுத்தமாயிருக்கப் போதித்தலே. இந்தப் போதனைக்குச் சொற்பொழிவுகளும் பத்திரிகைகளும் தேவையில்லை. அதாவது, இது பிரத்தியட்சமாய்ச் செய்தே போதிக்கப்பட வேண்டும்; இவ்வாறு செய்யும் பொழுதும் பொறுமை தேவையாகவே யிருக்கும். நாம் இரண்டு தினங்கள் ஊழியம் செய்தால் கிராமவாசிகள் தாமே வேலை செய்யத் தொடங்கி விடுவார்கள் என்று எண்ணி விடலாகாது.

2. கிராம ஊழியர் முதலில் கிராமவாசிகளைக்கூட்டி அவர்களுடைய கடமையை விளக்குக. பிறகு, கிராமத்திலேயே கோடரி, மண் வெட்டி, கூடை அல்லது தட்டு, துடைப்பம் ஆகியவைகளைச் சேர்த்துக் கொண்டு சுத்தி வேலையைத் தொடங்குக.

3. வழியைத் தெரிந்து கொண்டு முதலில் மண் வெட்டியினுல் மலத்தை எடுத்துக் கூடையில் சேர்த்தபின் அந்த இடத்தை மண்ணுல் மூடி விடவும்; சிறுநீர் கழித்த விடத்திலிருந்தும் மண் வெட்டியினுல் ஈரமண்ணை யெடுத்துக் கூடையிலிட்ட பிறகு, அக்கம் பக்கத்திலுள்ள சுத்த மண்ணை யெடுத்து அங்கே பரப்பி விடவும்.

4. இந்த மலஜலமெல்லாம் உழவனுக்குத் தங்கமாகும். இதை வயல்களில் இட்டால் இது சிறந்த உரமாகிறது; பயிர் வெகு நன்ருக விளைகிறது. ஆகையால் உழவனுக்குப் போதித்து எவனேனும் ஒருவனுடைய வயலில் ஏறக்குறைய 9 அங்குல ஆழத்தில் மலஜலத்தைப் புதைத்து விடவும்; இதை விட அதிக ஆழத்தில் புதைத்தலாகாது; புதைத்த பிறகு குழியை மண்ணுல் மூடிவிடவேண்டும்.

5. மலஜலத்தை அடக்கம் செய்த பிறகு, குப்பையை நீக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குப்பையில் இரண்டு வகையுண்டு: (1) சாணம், மூத்திரம், காய்கறிகளின் பட்டை, எச்சில் முதலிய உரமாகக் கூடியவை; (2) குச்சி, கல், தகரம், கந்தல் முதலியவை.

6. உரமாகக்கூடிய குப்பையைத் தனியாகச் சேர்த்து, மலஜலத்தைப் போலவே (ஆனுல் வேறு) குழிகளில் புதைக்க வேண்டும்; அல்லது குப்பைக் குழியில் சேர்க்க வேண்டும்.

7. இரண்டாவது வகைக் குப்பையை நிரப்பவேண்டிய குழிகளிலிட்டு அது நிரம்பியதும் மண்ணால் மூடிச் சமமாக்கி விட வேண்டும்; இந்தக் குப்பையிலிருந்து மரப்பட்டைகளையும், பல் குச்சிகளையும் பிரித்து உலர்த்தினால் அவைகளை அடுப் பெரிக்கலாம்.

8. குப்பைக் குழிக்கருகில் குறைந்த செலவில் கக்கூசு அமைப்பதைப் பற்றி முன்னர் ('ஆரோக்கியம்' என்ற பகுதி யில்) கூறப்பட்டுவிட்டது. இவ்வகை ஏற்பாடுள்ள இடத்தில், இவ்வாறு சேரும் மல உரத்தை உழவர்கள் பாகுபாடு செய்து கொள்ளக் கற்கும் வரையில், கிராம ஊழியர் பாதைகளைப்போல் குப்பைக்குழிகளையும் சுத்தம் செய்ய வேண்டியதே.

9. கிராமத்தின் பாதைகளை உறுதியாகவும் நன்றாகவும் இருப்பதற்கான வழி செய்வது கிராம ஊழியரின் வேலையாகும். அந்தந்த இடத்தின் நிலைமையையொட்டி, இந்த முறைகள் வெவ் வேறாக இருக்கலாம். கிராமத்தின் பெரியோர் இதற்கான ஆலோசனை கூறக்கூடும்.

10. சுத்தம் செய்யும் வேலையிலிருந்து ஒய்வு கிடைத்த உடன், கிராம ஊழியர் தேவையான உபகரணங்களுடன் சென்று கிராமத்தில் ஓடும் ராட்டைகள், வில்கள், மணைகள் ஆகியவைகளைப் பரிசோதிக்க வேண்டும். செப்பனிட வேண்டிய வைகளைச் செப்பனிட்டுத் தாமே செப்பனிடவும் கற்றுத்தர வேண்டும். புதிதாகக் கற்றவர்கள் செய்யும் வேலையைப் பரீட் சித்துத் தேவையான ஆலோசனைகள் கூறவேண்டும். கற்க விரும்புவோருக்குக் கற்பிப்பதிலும் சிறிது நேரம் செலவிட வேண்டும். இதற்காகக் கிராமத்தில் சாதாரணமாக இந்த வேலை கள் நடைபெறும் சமயத்திலேயே ஆராய்ச்சி செய்வதற்குக் கிளம்ப வேண்டும்.

11. நூற்பு, நெசவு, பிற தொழில்கள் ஆகியவை கிராம ஊழி யரின் மூலமாகவே நடைபெற்றுக் கொண்டிருக்குமானால் அதற் காகச் சமயத்தைக் குறிப்பிட்டு, தொழிலாளர்களுக்கு அந்த சமயத்திலேயே வருவதற்குப் பழக்கமுண்டாக்க வேண்டும்; அதற்குள் பொருள்களைச் சோதித்துப் பார்த்து அவைகளில் செய்யவேண்டிய திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டும்.

12. கிராம ஊழியர் நாளில் குறைந்தது ஒரு முறை கிராமத் தவருக்குச் சௌகரியமான சமயத்தில் அவர்களைக் கூட்டி, கோஷ்டிப் பிரார்த்தனை செய்க. அது மக்களுக்குப் புரியும்

பாஷையில் இருக்கட்டும். கிராம ஊழியருக்கு இசையில் சரியான பயிற்சியிருத்தல் விரும்பத்தக்கதாகும். அவருக்குப் பாடவராவிட்டால் பாடக்கூடிய கிராமத்தவரைக் கொண்டு கீர்த்தனங்கள், நாமாவளிகள் ஆகியவைகளைப் பாடச் செய்து, மற்றவர்களையும் சேர்ந்து பாடும்படிச் செய்க. பல கிராமங்களில் பஜனை கோஷ்டிகளுண்டு. அவைகளுக்குப் புதிய நல்ல பாட்டுக்களைக் கற்பித்து அவற்றைப் பிரார்த்தனைகளில் பயன்படுத்துக.

13. பிரார்த்தனைக்கு அடுத்தாற்போல், சமாசாரப் பத்திரிகையிலிருந்து உபயோகமான செய்திகளையும் நல்ல கட்டுரைகளையும் நூல்களையும் மதக்கிரந்தங்களையும் கதைகளையும் படிக்கவோ சொல்லவோ வேண்டும்.

14. கிராம ஊழியர் கீழே காணும் குறிப்புக்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும் :

(அ) கிராமத்தில் கட்சிகள் இருந்தால், தாம் எந்தக் கட்சியிலும் சேராமல் நடுநிலைமை தாங்கி எல்லோருக்கும் ஒரே வகையான ஊழியம் செய்வதோடு, எல்லாருடனும் ஒரே வகை நட்புக்கொண்டு தம்மால் முடிந்தால் கட்சிகளைப் போக்க முயலுக.

(ஆ) சாதாரணமாக, பட்சண வகைகளைத் தின்னத் தரும் இடங்களுக்கு அழைக்கப்பட்டால் அந்த அழைப்புக்களை கிராம ஊழியர் ஏற்கவேண்டாம். கிராம வாசிகள் கிராம ஊழியரிடம் தாம் கொண்டுள்ள அன்பைப் புலப்படுத்துவதற்காக ஏதேனும் காரணத்தைச் சொல்லி அவரை அழைக்கிறார்கள் ; கிராம ஊழியரும் அவர்களுக்கு வருத்தம் உண்டாகக் கூடாதே என்ற எண்ணத்தினால் அவைகளை ஏற்கத் தொடங்குகிறார். ஆனால், இதனால் பல கிராம ஊழியர்களுக்கு நாக்கு நீளமாகி, இத்தகைய வீடுகளையும் சந்தர்ப்பங்களையும் தேடுவதுடன், விருந்துகளைக் கோரவும் தயங்குவதில்லை. நல்ல தசையிலுள்ளவர்களென்று கருதப்படும் கிராம வாசிகளும் தம் சக்திக்கு அதிகமாகவே இந்தச் செலவுகள் செய்கிறார்களென்பதையும், விருந்தாளிகளுக்குச் சாதாரண உணவே அளிக்கும் வழக்க முண்டாக்குவது அவசியமென்பதையும் கிராம ஊழியர் நினைவில் வைக்கவேண்டும். இதனால் விருந்துகளுக்காக வரும் அழைப்புக்களைக் கிராம ஊழியர் ஏற்கக் கூடாது ; எங்கேனும் ஏற்க நேர்ந்தால், சாதாரணமாகப் பட்சணங்கள் உண்ணுகிறவரா யிருந்தாலும், சாதாரண

உணவை மட்டும் உட்கொண்டு விசேஷ உணவைத் தொடாதிருந்துவிட வேண்டும்

(இ) மிகமிக ஏழையும் தமது (ஊழியரது) சௌகரியத்திற்காக ஓடியாடி விசேஷ ஏற்பாடு செய்ய வேண்டியிராத வகையில் கிராம ஊழியர் சாதாரண உணவு கொள்ளப் பழகவேண்டும்.

(ஈ) கிராம ஊழியர் அடக்கமும், தவமும், விரதமும் நிரம்பிய வாழ்க்கை நடத்த வேண்டும். ஆனால் கிராம ஊழியம் புரிய விரும்புவோர் கிராம நிலைமையைக் கவனித்து விரதம் மேற்கொள்ள வேண்டும்; இல்லையானால் விரதமே மனம் போன போக்காகி கிராம வாசிகளுக்குத் தொந்தரவு தருவதாகிவிடும். உதாரணமாக, ஒரு கிராம ஊழியர் சர்க்கரை சாப்பிடுவதில்லையென்ற விரதமேற்று, பாலுடன் அருந்தத் தேன் கேட்பதும்; தேயிலைப் பானத்திற்குப் பதிலாகக் காப்பி அல்லது வேறு காரசாரமான கஷாயம் வேண்டுமென்பதும், மேலே கூறிய தவறான விரதங்களாகும்.

XIV ஸ்தாபனங்கள்

1. ஸ்தாபனத்தின் வெற்றி

1. எந்த ஸ்தாபனத்தின் வெற்றியும் கீழே காணும் நிபந்தனைகளைப் பொறுத்திருக்கிறது :

(அ) ஸ்தாபனத்தின் இலக்கில் மிகவும் உண்மையான உறுதியும், அதை நிறைவேற்றுவதற்கான உத்ஸாகமும் இருத்தல்.

(ஆ) ஸ்தாபனத்தின் விதிகளை மேலெழுந்தவாரியாக அனுசரிப்பதோடல்லாமல், அதன் உட்கருத்தையும் பின்பற்றுதல்.

(இ) ஸ்தாபனத்தின் நிர்வாகி, அங்கத்தினர், ஊழியர் ஆகிய உறுப்பினரிடையே சகோதர பாவமும் கருத்தொருமையும் இருத்தல்.

2. இம்மூன்றினுள் ஒரு நிபந்தனை நிறைவேற்றப்படாதிருந்தாலும், இதர வசதிகள் இருப்பினும், ஸ்தாபனம் உயிருள்ளதாய் இராது.

2. ஸ்தாபனத்தின் நிர்வாகி

1. ஸ்தாபனத்தின் நிர்வாகியையே அதன் உயிர் என்று கூறலாம்.

2. இலக்கில் அவருக்குள்ள உறுதி, உத்ஸாகம், விதிகளை அனுசரித்தல், மற்ற அங்கத்தினருடன் பழகுதல், சொந்த முயற்சி ஆகிய இவை யெல்லாவற்றையும் பெரிதும் பொறுத்திருக்கிறது ஸ்தாபனத்தின் வெற்றி.

3. நிர்வாகி தன் அதிகாரத்தில் செருக்கோ, மற்ற அங்கத்தினரிடம் அலட்சியமோ அவமரியாதையோ கொண்டால், அதனுல் ஸ்தாபனத்திற்குத் தீங்கு விளையும்.

4. சிறந்த சேனைத் தலைவன் கட்டுப்பாட்டை வற்புறுத்துவதில் பிடிவாதமும் கடுமையும் காட்டினுலும், தன் வீரர்களின் அன்பைப்பெற முயன்று அவர்களது பெருமையில் கருத்துடனிருப்பதுபோல ஸ்தாபனத்தின் நிர்வாகியும் இருக்கவேண்டும்.

5. ஸ்தாபனத்தின் சிறு விஷயங்களிலும் நிர்வாகி கவனம் செலுத்த வேண்டும். அந்த ஸ்தாபனத்திலுள்ள மக்கள், பிராணிகள் ஆகியோரின் சுகதுக்கங்களைக் குழந்தைகளைத் தாய் கவனிப்பதைப்போல் கவனித்து வரவேண்டும்.

6. நிர்வாகி, அவசியம் உண்டானபொழுது தம் அதிகாரத்தை உபயோகிக்கட்டும்; ஆயினும், தம் பார்வையில் உள்ளவர்களைச் சகோதரர்களாகவோ, தமக்குச் சமமாகவோ தான் கருதவேண்டும். மிகவும் சிறிய மனிதனையும் தம் நண்பனுகவே கருதவேண்டும். தாம் நிர்வாகியா யிருப்பது தம்முடைய விசேஷ ஆற்றலினுலல்ல, தம்மிடம் தோழர்களுக்குள்ள விசேஷ அன்பு அல்லது மரியாதையினுலேயே என்று கருத வேண்டும்.

7. இதனுல் அவர் மிகச் சிறிய மனிதனுடைய குறிப்பையும் மரியாதையுடன் கேட்பார்; உசிதமானுல் அதை யேற்கத் தயாராயிருப்பார். சரியில்லாதபொழுது அதன் காரணத்தையும் விளக்க முயலுவார்.

8. நிர்வாகி தம் காதில் விழுவதையெல்லாம் நம்பக் கூடாது; அவர் யாரைக்குறித்தும் அவசரப்பட்டு விரோதமான கருத்துக் கொள்ளலாகாது; பொறுத்துப்பார்த்து, தெளிவான ஆதாரங்களில்லாதவரையில் விரோத எண்ணம் கொள்ளலாகாது.

9. நிர்வாகி தம் கீழ் வேலைசெய்வோரில் யாரிடமும் தனியன்பு காட்டலாகாது; யாருக்கும் பட்சபாதம் செய்யக்கூடாது; ஒருவனை மட்டம் தட்டுவதற்காக, மற்றொருவனைத் தூக்கி வைக்கக்கூடாது.

10. விதிகளைச் சரிவர அனுசரிக்கச் செய்யும்பொருட்டு நடத்தையிலோ, பேச்சிலோ கடுமை காட்டுவதோ தண்டனை விதிப்பதோ அவசியமில்லை. இது அவசியம் என்று கருதும் நிர்வாகி தம் தகுதியின்மையையே புலப்படுத்துகிறார்.

3. ஸ்தாபனத்தின் அங்கத்தினர்

1. எந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினரிடையே சகோதர உணர்ச்சியும், மரியாதையும் இல்லையோ, அது அதிகக்காலத்திற்குச் சக்தியுடன் விளங்காது. அதனுள் கிளைகளும் கட்சிகளும் தலையெடுக்கும்; அதன் அங்கத்தினர் ஸ்தாபனத்தின் இலக்கை மறந்து தம்முள் சண்டை பூசலிடத் தொடங்குவார்கள்.

2. எந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினர், தமக்கு மேலுள்ளவர்களின் கட்டளையை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றச் சித்தமாயில்லையோ, அது அதிக காலத்திற்கு ஆற்றலுடன் விளங்க இயலாது. அதில் சோம்பலும், தாமதமும் புகும்; அங்கத்தினர் ஏமாற்றமடைவர்.

3. நிர்வாகிக்கும் அங்கத்தினருக்குமிடையே வெளிப்பார்வைக்கு மட்டுமல்லாது, உள்ள வொருமையும் வேண்டும். அதாவது, அங்கத்தினர் நிர்வாகியின் விருப்பம் அல்லது கட்டளையை அனுசரித்தால்மட்டும் போதாது; அந்த விருப்பம் அல்லது கட்டளையின் பொருத்தத்தை அவர்கள் ஒப்பினால், அவர்கள் அவற்றைத் தாமே தீர்மானித்திருப்பதுபோல் நடந்துகொள்ளவேண்டும்.

4. ஏதேனும் விதி அல்லது கட்டளை சரியாவென்ற விஷயத்தில் அங்கத்தினருக்குச் சமாதான மில்லாதபொழுது, நிர்வாகியுடன் கலந்து விஷயத்தைத் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். சந்தேகம் தீரும்வரையில் சமாதானமாகிவிட்டதாக நிர்வாகியை எண்ணவிடலாகாது.

5. இத்தகைய விதியோ, கட்டளையோ, சத்தியம், தர்மம் ஆகிய இரண்டுடனும் முரண்படாதவரையில் நடைமுறையில் சரியல்லவென்று தோன்றினாலும், அதன் அவசியம் நிலைநாட்

டப்படாத பொழுதும் அதை நிறைவேற்ற வேண்டியதே. அது சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் முரணுகவிருந்தால், ஸ்தாபனத்தைவிட்டு விலகவும் தயாராயிருக்க வேண்டும்.

6. விதி அல்லது கட்டளை சத்தியம் - தர்மத்திற்கு விரோதமாயில்லாதிருந்தும் தனது பலவீனத்தினுல் அதை நிறைவேற்றுவதில் சிரமம் தோன்றினுலும், ஸ்தாபனத்தின் நலத்தைக்கருதி அங்கத்தினர் அதிலிருந்து விலகுவதே விரும்பத்தக்கதென்று கருதப்படும்.

7. அங்கத்தினரிடையே அபிப்பிராயபேதம் உண்டானுலும், ஒருவருடைய நடத்தையில் சம்சயமெழ, அதனுல் தமக்கு அதிருப்தியோ துக்கமோ நேர்ந்தாலும், ஒருவருடைய நேர்மையைக் குறித்துச் சங்கை யுண்டானுலும்—இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தப்பட்ட மனிதருடன் விட்டுப்பேசிச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதனுல் சமாதான முண்டாகாமல், அவரைப்பற்றிய தம் சந்தேகம் அப்படியே இருந்தாலும், அதிக உறுதியானுலும், அதைத் தமது மேலதிகாரிக்குத் தெரிவித்து உசிதமான நடவடிக்கையின் பொறுப்பை அவர்மீது போட்டுவிடவேண்டும்.

8. சம்பந்தப்பட்ட மனிதரிடம் நேரில் கேட்டுச் சமாதானம் செய்துகொள்ள முயலாமல், அதைப்பற்றி மேலதிகாரியிடமோ பிறரிடமோ சொல்வதோ, அடுத்த அதிகாரிக்குச் சொல்லாமலே தலைமை அதிகாரியிடம் தெரிவிப்பதோ சரியல்ல.

9. தன் மனத்தில் யாரைப்பற்றியேனும் இவ்வாறு ஏதேனும் கல்மஷ முண்டானுல், உடனே அதைப் போக்க முயலாமல் மனத்தில் வைத்திருப்பதும், மேலதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டிய சமயம் வந்தபொழுதும் தெரிவியாமையும், ஸ்தாபனத்தில் கறைபடரவிடுவதாகும்.

10. எந்த ஸ்தாபனத்தில், அங்கத்தினரின் குற்றங்களைப் பற்றி அவர்களிடையே 'குசுகுசெ'ன்று பேச்சு நடைபெற்றுலும் அதிகாரிகளின் காதுக்கு எட்டுவதில்லையோ, சம்பந்தப்பட்டவருடன் விட்டுப் பேசப்படுவது மில்லையோ, அது ஆற்றலுடன் விளங்க வியலாது ; அதில் பாவமும், அகந்தையும், பொய்யும், வீணை நாணமும் புகுந்து அதன் உயிரை அழித்து விடும்.

4. ஸ்தாபனத்தின் பொருள் நிர்வாகம்

1. எந்த உண்மையான வேலையும் பணமுடையினால் தடைப்பட்டதை நாம் கண்டதில்லை.

2. மூலதனம் சேர்த்து அதன் வட்டியைக்கொண்டு செலவு செய்யும் முறை விரும்பத்தக்கதல்ல. எந்த ஸ்தாபனம் மக்களுக்கு உபயோகமா யிருக்கிறதோ அதை நடத்துவதற்குப் பணமும் கிடைக்கும் என்ற உறுதி அதன் நிர்வாகிகளுக்கு இருக்கவேண்டும்.

3. அந்த ஸ்தாபனத்தின் உபயோகத்தில் மக்களுக்கு நம்பிக்கை யுண்டாகும்வரையில், நிர்வாகிகள் அதிகமாக உழைக்கவேண்டி யிருக்குமென்பது உண்மையே; ஆனால் அந்த உழைப்பை அவர்களுடைய தவமாகவும் ஊழியத்தின் பகுதி யாகவுமே கருதவேண்டும்.

4. இதன்பிறகு ஏராளமான உதவி வந்துகுவிந்து கொண்டே யிருப்பதால், பல ஸ்தாபனங்கள் உயிரற்ற நிலையி லிருப்பதற்கு, அவற்றிடமுள்ள அதிகப் பணமே காரணமா யிருக்கிறது. இதனால் ஆதர்ச ஸ்தாபனங்கள் பணச்சுழலில் சிக்கவே கூடாது.

5. சாதாரணமாக, பொதுப் பணத்தினால் நடக்கும் ஸ்தாபனங்களில் சிக்கனத்தில் போதுமான கவனம் செலுத் தப்படுவதில்லை. இது பெரிய குற்றமாகும். இந்தியாவைப் போன்ற ஏழை நாட்டிற்கு ஊழியம் செய்யும் ஸ்தாபனங்கள் செட்டாக நடைபெறவேண்டும்.

6. ஸ்தாபனத்தின் கணக்குகளைச் சரியாகவும் புரியும்படி யாகவும் வைத்திருப்பதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு சல்லிக் காசுக்கும் லேவாதேவிக்காரர்களைப்போல் கணக்கு எழுதுவதுடன், அதிகாரம்பெற்ற கணக்குப் பரிசோத கரைக் கொண்டு அதைச் சோதிக்கச் செய்துவரவேண்டும்.

ஆதாரக்கல்விப் பள்ளிகளுக்குப் பயன்படும் எமது பிற நூல்கள்

கதர் சாஸ்திரம்

		விலை ரூ. அ.
பருத்திப் பிரசினை	...	0 6
நரம்பு செய்தல்	...	0 8
பட்டைபோட சுலப வழி	...	0 4
கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை	...	1 0
நூற்புக் கலையின் நுணுக்கங்கள் (3-ஆம் பதிப்பு)	...	(அச்சில்)
கைராட்டை—அதன் சரித்திரமும் புத்துயிரும் (2-ஆம் பதிப்பு)	...	1 8
கதர் நெசவு	...	0 8
நூற்புக் கணிதம்—கிருஷ்ணதாஸ் காந்தி		
முதல் பாகம் (3-ஆம் பதிப்பு)	...	0 6
இரண்டாம் பாகம்	...	0 8
மூன்றும் ,,	...	0 14
நான்காம் ,,	...	1 0

சம்பூர்ண கிராம சேவை நூல்கள்

மலஜல சுத்தி—வல்லபஸ்வாமி	...	0 8
துப்புரவு விஞ்ஞானம்—தீரேந்திர மஜும்தார்	...	0 8
சுயம்பூர்ண கிராமம்	...	0 5
புக்கர் வாஷிங்டன்—வ. வே. சு. ஐயர்	...	0 8
எமர்சனின் தன்னம்பிக்கை —வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்பு	...	0 12
கீதைப் பேருரைகள்—விநோபா பாவே		
(இரண்டாம் பதிப்பு) சாதா பைண்டு	...	1 0
காலிகோ ,,	...	2 8

கிடைக்குமிடம் :

சர்வோதயப் பிரசுராலயம்

சீனிவாசபுரம் : : தஞ்சாவூர்

எமது காந்தீய–சர்வோதய இலக்கியம்

மகாத்மா காந்தி எழுதியவை

	விலை ரூ. அ.
சர்வோதயம்—ரஸ்கினின் Unto this Last-இன் சாரம் (3-ஆம் பதிப்பு) ...	0 5
ஆசிரம வாழ்க்கை ...	1 4
ராம நாமம் (2-ஆம் பதிப்பு) ...	0 12
நீதி தர்மம் (2-ஆம் பதிப்பு) ...	0 4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் (3-ஆம் பதிப்பு) ...	0 4
சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் ...	1 0
ராட்டை—தத்துவ விளக்கம் ...	1 4
கீதா போதனை ...	0 12
காந்திஜியின் சுயசரிதம் (சுருக்கம்) ...	2 0
காந்தி ஆசிரம பஜனாவளி ...	0 8

அன்னை கஸ்தூரிபாவின் சரித்திரம்

எமது பா—முதல் பாகம்—வனமாலா பரீக் ...	1 4
,, இரண்டாம் பாகம்—சுசீலா நையர் ...	1 4

காந்திஜியைப் பற்றியவை

காந்திக் காட்சிகள்—காகா காலேல்கர் ...	1 4
பாபூ—என் தாய்—மனு காந்தி (2-ஆம் பதிப்பு)...	0 12
பாப்பாவின் காந்தி–ஜுகத்ராம்வே (2-ஆம் பதிப்பு)...	0 12

தத்துவ நூல்கள்

காந்தியும் மார்க்ஸும்–மஷ்ரூவாலா—விநோபாஜியின் முன்னுரையுடன் ...	1 4
தக்ளியால் நூற்பது எப்படி? ...	0 8
காந்தீயப் பொருளாதாரம்—ஜே. சி. குமரப்பா ...	1 4

கிடைக்குமிடம் :

சர்வோதயப் பிரசுராலயம்

சீனிவாசபுரம் : : தஞ்சாவூர்